# பெரியார் பல்கலைக்கழகம்

NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)

State University - NIRF Rank 56 - State Public University Rank 25

Salem-636011, Tamilnadu, India

## தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மையம்

## இளங்கலைத் தமிழ்

இரண்டாமாண்டு மூன்றாம் பருவம்

# படைப்பிலக்கியம்

**2024 – ஆம் கல்வியாண்டு முதல் பயிலும்**

**மாணவர்களுக்குரிய பாடநூல்**

**Prepared By:**

**Centre for Distance and Online Education (CDOE)**

**Periyar University, Salem – 11.**

# படைப்பிலக்கியம்

| அலகு | பாடத்திட்ட விளக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | **செய்யுள் நலம் பாராட்டுதல்** : கொடுக்கப்பட்டுள்ள செய்யுளின் கருத்தை எழுதுதல் - அணிகளைக் கண்டறிதல் - எதுகை மோனை இயைபு முரண் உணர்ந்து இன்புறுதல் - சொல்லாட்சித்திறனை வளர்த்தல். . | 5-26 |
| 2. | **கவிதை இலக்கணம்** : மரபு, புதுக்கவிதை - பாடுபொருள் உத்திகள் - கவிதைக்கான சூழலை உருவாக்கிப் படைக்கத் தூண்டுதல். | 27-61 |
| 3. | **சிறுகதை இலக்கணம்** : சிறுகதை வகைகள் - உத்திகள் - மாந்தர்கள் - கருப்பொருள் -சிறுகதைக்கான கருவைத் தந்து படைக்கத் தூண்டுதல். | 62-102 |
| 4. | **நாடக இலக்கணம்** : பல்வேறு நாடக வகைகள் - அரங்கம் - காட்சியமைப்பு - மாந்தர்கள் - உத்தி - கதைக்கோப்பு - கரு - அரங்க அமைப்பு வகை - களம் - திரை - ஒளி - ஒலி போல்வன - ஓரங்க நாடகங்களைப் படைக்கத் தூண்டுதல். | 103-117 |
| 5. | **கட்டுரை இலக்கணம்** : பலவகைக் கட்டுரைகள் - மொழிநடை - கட்டுரை அமைப்பு - பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதத் தூண்டுதல்- துணுக்குகள் - நகைச்சுவைகள் - உரையாடல்கள் - இதழ்களுக்கு எழுதத் தூண்டுதல். | 118-155 |

**பாட அறிமுகம்**

தமிழரின் தொன்மையை உலகெங்கும் அறியச்செய்வதே தமிழில் இயற்றப்பட்டுள்ள இலக்கியங்களாகும். இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி. இது காலத்திற்கேற்ப பாடுபொருளைக் கொண்டுள்ளது. அவ்வகையில் சங்ககாலம் காதலையும் வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. சங்கம் மருவிய காலம் அறத்தைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளது. காப்பியங்கள் சமயத்தையும் சிற்றிலக்கியங்கள் பல்வேறு வகையான பாடுபொருளையும் கொண்டுள்ளது.

தற்கால இலக்கியங்கள் என்று அறியக்கூடிய கவிதை, சிறுகதை, நாடகம் போன்றவை படைப்பிலங்கியங்களாக அமைகின்றன. இவை சமூகச் சிக்கல்களையும், தொன்மை, புதுமை, வாழ்க்கை அனுபவங்கள், கற்பனைகள், புனைவுகள் என எல்லையில்லாப் பரப்பைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. படைப்பிலக்கியங்களின் கரு, அமைப்பு, பயன், சமூகத்தாக்கம் போன்றவற்றை இப்பாடப்பகுதி விளக்கும் முகமாக அமைகின்றது.

# அலகு – 1

**நோக்கங்கள்**

- ❖ செய்யுள் உறுப்புக்களை மாணவர்கள் அறிந்து கொள்ளுதல்.
- ❖ தமிழின் தொன்மையான அணி இலக்கண நூல்களின் அறிமுகத்தை மாணவர்கள் அறிந்து கொள்ளுதல்.
- ❖ எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகியவற்றை செய்யுளில் பொருத்திப் பார்த்தல்.
- ❖ பல்வேறு துறைசார்ந்த மேடைப்பேச்சுக்குரிய சொல்லாட்சித் திறனை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்தல்.

## அலகில் இடம்பெறுபவை

**செய்யுள் நலம் பாராட்டுதல்** : கொடுக்கப்பட்டுள்ள செய்யுளின் கருத்தை எழுதுதல் - அணிகளைக் கண்டறிதல் - எதுகை மோனை இயைபு முரண் உணர்ந்து இன்புறுதல் - சொல்லாட்சித்திறனை வளர்த்தல்.

## செய்யுள் நலம் பாராட்டுதல்

### சான்று

“மொழி வாழ்த்து தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே!
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!”

– கா.நமச்சிவாயர்

### கருத்துரை

தேனைவிட இனிமையான செந்தமிழ் மொழியே! தென்னாடு பெருமை பெற விளங்கும் தென் மொழியே! உடம்பில் ஒளிவிட்டு விளங்குகிற உயர்ந்த மொழியே! உணர்வுக்கு உணர்வு தந்து ஒளிரும் தமிழ் மொழியே!

சிறப்பினால் வானத்தைவிட உயர்ந்த வண்டமிழ் மொழியே! மனிதர்களுக்கு இரண்டு விழிகளாக விளங்கும் நல்ல மொழியே! தானாகவே சிறப்புற்று விளங்கும் தனித்தமிழ் மொழியே! இனியும் தழைத்து இனிது உயர்வாயாக.

**மையக்கருத்து**

தமிழ் மொழி இனிமையும், பெருமையும் உடையது. அதன் சிறப்பினால் இனியும் தழைத்து இனிது உயரும்.

**சொல் நயம்**

“ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே“ என்ற பாடலடியில் சொல்நயம் மிகுந்து வந்துள்ளது.

**பொருள் நயம்**

“வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே! மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே” ஆகியவை ஆழமான பொருள் உடையன. கவிதையின் மையக் கருத்துக்கு அழகு சேர்ப்பன.

**சந்த நயம்**

‘‘சந்தம் செந்தமிழுக்கே சொந்தம்’’ என்பார்கள். வல்லோசையும் மெல்லோசையும் சேருமிடத்தில் சந்தநயம் பிறக்கிறது. “ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே! உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே” என்ற கவிதை வரிகளில் இனிமையான சந்தநயம் பயந்து வந்துள்ளது.

**தொடை நயம்**

“தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்” என்பார்கள். இப்பாடலில் மோனை, எதுகை, இயைபு ஆகிய தொடை நயங்கள் பயந்து வந்துள்ளன.

**மோனை நயம்**

முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை நயம் ஆகும். “படைக்கு அழகு யானை பாடலுக்கு அழகு மோனை” என்பதற்கு ஏற்ப இப்பாடலில்,

தே நினும்
தெ ன்னாடு
தி கழுந்தேன்
தா னனி
த னித்தமிழ்
த ழைத்தினி

த ண்டமிழ்

ஊ னினும்

உ ணர்வினுக்

ஒ ளிர்வுறும்

ஒ ண்டமிழ்

ஒ ளிர்தமிழ்

வா நினும்

வ ண்டமிழ்

மா ந்தருக்

வ யங்குநன் - என்ற இடங்களில் மோனை நயம் பயந்து வந்துள்ளது.

**எதுகை நயம்**

முதலெழுத்து அளவொத்து, இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை நயம் ஆகும்.

தே னி னும்

ஊ னி னும்

வா னி னும்

உ ண ர்வினுக்

கு ண ர்வதாய் - என்ற இடங்களில் எதுகை நயம் பயந்து வந்துள்ளது.

**இயைபு நயம்**

பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ இயைந்து வருவது இயைபு நயம் ஆகும். **மொழியே** என்ற இடங்களில் இயைபு நயம் பயந்து வந்துள்ளது.

**அணி நயம்**

“அணி இல்லாத கவிதை பணி இல்லாத வனிதை’’ என்பார்கள். இப்பாடலில், கவிஞர்,“தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே! தென்னாடு விளங்குறத் திகழுந்தேன் மொழியே!” என்று தமிழ் மொழியின் இயல்பைப் பாடுகிறார். எனவே, இது “இயல்பு நவிற்சி அணி’’ ஆகும்.

**பா வகை**

ஒவ்வோர் அடியிலும் எட்டு சீர்கள் வந்துள்ளதால், “எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்'' ஆகும்.

## கொடுக்கப்பட்டுள்ள செய்யுளின் கருத்தை எழுதுதல்

தமிழ் இலக்கணத்தில் செய்யுள் என்பது இன்றியமையாத ஒன்றாக காணப்படுகிறது. செய்யுள் ஒன்று எவ்வாறு அமைய வேண்டுமென யாப்பு கூறுகிறது. அதாவது யாப்பு இலக்கணத்தின் விதிகளுக்கு அமைவாகவே செய்யுள் ஒன்று உருவாகிறது.

- செய்யுள்
- செய்யுள் வகைகள்
- வெண்பா
- ஆசிரியப்பா
- கலிப்பா
- வஞ்சிப்பா

## அணி

- உயர்வு நவிற்சி அணி
- உருவக அணி
- உவமை அணி
- பின்வருநிலை அணி
- வேற்றுப்பொருள் வைப்பணி
- வேற்றுமை அணி
- பிறிதுமொழிதல்அணி
- தற்குறிப்பேற்ற அணி
- சிலேடை அணி
- சுவை அணி

## செய்யுள்

செய்யுள் என்பது எடுத்துக்கொண்ட பொருள் விளங்கச் சுருக்கமாகச் செய்யப்படுவது ஆகும். செய்யப்படுவதனால், இது செய்யுள் எனப்படுகின்றது.

## செய்யுள் வகைகள்

செய்யுள், பா என்னும் சொல்லாலும் வழங்கப்படுகின்றது. பாக்கள் நான்கு வகைகளாக உள்ளன. அவையாவன,

- வெண்பா
- ஆசிரியப்பா
- கலிப்பா
- வஞ்சிப்பா

## வெண்பா

வெண்பா என்பது ஒவ்வொரு பாடலும் இரண்டு முதல் பன்னிரண்டு அடிகள் வரை கொண்டிருக்கும். வெண்பாக்களுக்கான யாப்பிலக்கணம் ஒரு கட்டுக்கோப்பான இடம் சாரா இலக்கணம் ஆகும். இது தமிழ் செய்யுள் மரபில் பழைமையான வெண்பா ஆகும்.

## ஆசிரியப்பா

ஆசிரியப்பா என்பது, தமிழின் யாப்பியலில் சொல்லப்படும் பாவகைகளுள் ஒன்று. இது அகவலோசையைக் கொண்டு அமைவது. ஆசிரியத்தளை எனப்படும் தளை வகையே இப்பாவுக்கு உரியது.

## கலிப்பா

கலிப்பா என்பது தமிழில் உள்ள செய்யுள் வகைகளுள் ஒன்று. இன்று கிடைக்கும் பழந்தமிழ் நூல்களுள் கலித்தொகை மட்டுமே கலிப்பாவினால் ஆன நூல் ஆகும். இதைவிடக் கலம்பகம் எனப்படும் நூல் வகையில் முதற் செய்யுளாகவும் கலிப்பாக்கள் காணப்படுகின்றன.

## வஞ்சிப்பா

வஞ்சிப்பா என்பது தமிழ் யாப்பிலக்கணம் கூறும் பாவகைகளுள் ஒன்று. பாவகைகளுக்கு அடிப்படையான ஓசை வகைகளுள், தூங்கலோசையே வஞ்சிப்பாவுக்கு அடிப்படையாகும். இவற்றை தவிர, சிறப்பானதாகக் கருதப்படாத மருட்பா என்னும் பாவகையையும் சேர்த்து பாக்கள் ஐந்து வகை எனக் கொள்வாரும் உளர்.

### செய்யுளியல்

தமிழ் இலக்கணத்திலே செய்யுள்களுக்கான இலக்கணங்களை விளக்கும் பகுதி செய்யுளியல் எனப்படுகின்றது. இன்று கிடைப்பவற்றுள் மிகப் பழைய தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் செய்யுள் இலக்கணம் பற்றி அதன் பொருளதிகாரத்தில் விரிவாகப் பேசுகிறது. தொல்காப்பியம் பின்வரும் 34 செய்யுள் உறுப்புக்களைப் பற்றி விளக்குகிறது.

- மாத்திரை
- எழுத்து
- அசை
- சீர்
- அடி
- யாப்பு
- மரபு
- தூக்கு
- தொடை
- நோக்கு
- பா
- அளவியல்
- திணை
- கைகோள்
- கண்டோர்
- கேட்போர்
- இடம்
- காலம்
- பயன்
- மெய்ப்பாடு
- எச்சம்
- முன்னம்
- பொருள்
- துறை
- மாட்டு
- வண்ணம்

- அம்மை
- அழகு
- தொன்மை
- தோல்
- விருந்து
- இயைபு
- புலன்
- இழை

## செய்யுள் விகாரங்கள்

செய்யுளில் அசை, சீர், தளை, அடி, தொடை முதலியவற்றின் இலக்கணம் நோக்கிச் சில இடங்களில் சொற்கள் விகாரப்படுவது உண்டு. இவ்விகாரங்கள் செய்யுள் இலக்கணத்தை நிறைவு செய்தற்பொருட்டு வருவதால் செய்யுள் விகாரங்கள் எனப்படுகின்றன. செய்யுள் விகாரங்கள் மொத்தம் ஒன்பது வகைப்படும். அவையாவன,

- வலித்தல் விகாரம்
- மெலித்தல் விகாரம்
- நீட்டல் விகாரம்
- குறுக்கல் விகாரம்
- விரித்தல் விகாரம்
- தொகுத்தல் விகாரம்
- முதற்குறை
- இடைக்குறை
- கடைக்குறை,

என்பவை ஆகும்.

## அணி

செய்யுளுக்கு அழகு செய்து நிற்பது அணி எனப்படும். இது பல வகைப்படும். அவையாவன,

## உயர்வு நவிற்சி அணி

“வானத்தில் மிகத் தாழ்ந்து செல்லும் மேகம் இம்மலையுச்சியில் படிகிறது.” – இம்மலை மேக மண்டலத்தை முட்டுகிறது என்று மிகைப்படக் கூறாமல், உள்ளதை

உள்ளவாறு கூறியதனால் இது தன்மை நவிற்சி அணி எனப்படும்.இது **இயல்பு நவிற்சி** என்றும் கூறப்படும். இதற்கு மாறுபட்டது உயர்வு நவிற்சியணி.

**உருவக அணி**

முகமதி – இது “முகம் ஆகிய மதி”என விரியும். இவ்வாறு உவமேயம் முன்னும் உவமானம் பின்னும் வரும்படி அமைவது உருவக அணி எனப்படும்.

**உவமை அணி**

மதிபோன்ற வட்டமுகம் – இதில், மதி – உவமை முகம் – பொருள் (உவமேயம்) வட்டம் – பொதுத் தன்மை, போன்ற – உவம உருபு. இவ்வாறு உவமை, பொருள், பொதுத் தன்மை, உவம உருபு என்னும் நான்கும் அமையும்படி அல்லது மூன்று அமையும்படி, அல்லது உவமையும் பொருளும் அமையும்படி கூறுவது உவமை அணியாகும்.

**பின்வருநிலை அணி**

ஒரு செய்யுளில் முன்வந்த சொல்லும் பொருளும் தனித்தனியேனும் கூடியேனும் பல இடங்களில் பின்வருமாயின், அது பின்வரு நிலையணி எனப்படும்.

**வேற்றுப்பொருள் வைப்பணி**

அனுமன் கடல் கடந்தான், பெரியோர்க்கு அரியது யாது? – இதில் பெரியோர்க்கு அரியது யாது என்பது உலகறிந்த பொதுப் பொருள் அநுமன் கடல் கடந்தான் என்பது சிறப்புப் பொருள். இவ்வாறு ஒன்றைக் கூறத் தொடங்கிப் பின்னர் அது முடித்தற்கு உலகம் அறிந்த வலிமை உடைய வேறொரு பொருளை வைத்து மொழிவது வேற்றுப் பொருள் வைப்பணி எனப்படும்.

**வேற்றுமை அணி**

“சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றள விலின்ப நிறைப்பவற்றுள் – ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு.”

இச்செய்யுளில் முன் இரண்டு அடிகளால் வெளிப்படையாக இரு பொருளுக்கு ஒப்புமை கூறி, பின்பு, ஒன்று மாதர் நோக்கு," ஒன்று "கூத்தன்றன் வாக்கு"என அவ்விரு பொருள்களுக்கும் வேறுபாடு கூறப்பட்டது. ஆதலால் இது வேற்றுமையணி எனப்படும்.

கூற்றினாலாவது, குறிப்பினலாவது, ஒப்புடைய இரு பொருள்களை ஒரு பொருளாக வைத்து, அவற்றைத் தம்முள் வேற்றுமைப்படச் சொல்வது வேற்றுமையணி எனப்படும்.

### பிறிதுமொழிதல் அணி

"எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்." – நாகம் சிறிது விழித்தெழ எலிப்பகை அழிந்துவிடும் என்பது இதன் கருத்து.

இதனை வீரனொருவன் கூறும்போது இதன் பொருள் "தான் எழுந்த மாத்திரத்தில் வீரர் அல்லாதார் பலர் அழிவர்" என்பதை மறைத்து, அதனை வெளிப்படுத்ததுவதற்குப் பொருத்தமான மேற்சொல்லப்பட்ட செய்தியைக் கூறுகிறான்.

இவ்வாறு ஒருவன் தான் கருதிய பொருளை மறைத்து, அதனை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற பிறிதொன்றைச் சொல்லுதல் பிறிது மொழிதல் அணி எனப்படும்.

### தற்குறிப்பேற்ற அணி

திரௌபதியை மணக்கச் சென்ற பாண்டவர் காட்டு வழியே போனபோது,"திரௌபதியின் திருமணத்திற்கு அரசர் எல்லோரும் வந்துவிட்டனர். நீங்கள் விரைந்து வாருங்கள்." என்று சொல்வன போலக் குயில்கள் கூவின.

காட்டில் குயில் கூவுதல் இயற்கை. அந்த இயற்கை நிகழ்ச்சியில், புலவன் தன் குறிப்பை ஏற்றிக் கூறியிருத்தல் காண்க. இங்ஙனம் புலவன் தன் கருத்தைப் புகுத்திக் கூறுதல் தற்குறிப்பேற்ற அணியாகும்.

### சிலேடை அணி

சிலேடை – தழுவுதல் உடையது பல பொருள்கள் இணைந்து நிற்பது. உச்சரித்தற்கண் ஒரு வடிவாக நின்ற சொற்றொடர், பல பொருள் உடையதாக வருவது சிலேடை ஆகும்.

**சுவை அணி**

வீரம், அச்சம், இழிப்பு (இளிவரல்), வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை (இவை தண்டியலங்கார ஆசிரியர் தரும் பெயர்கள்) என்று சுவை எட்டு வகைப்படும்.

இவற்றைத் தொல்காப்பியர் முறையே பெருமிதம், அச்சம், இளிவரல், மருட்கை, உவகை, அழுகை, வெகுளி, நகை என்பர். செய்யுளில் இச்சுவைகள் பயின்று வரின் அது சுவை அணியாகும்.

**அணிகளைக் கண்டறிதல்**

ஐந்திலக்கணம் கூறும் இலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியதாகத் திகழ்வது வீரசோழியம். எனினும் இதற்கு முற்பட்ட காலத்திலேயே அணிஇலக்கண வளர்ச்சி சிறப்புற்றிருந்தமையைத் திவாகர நிகண்டினால் அறிகிறோம். திவாகர நிகண்டில் பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியில் 28 பொருள் அணிகளும் 21 சொல்லணிகளும் சுட்டப் பட்டுள்ளன. எனவே, தொல் காப்பியத்துக்கும் வீர சோழியத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் அணி இலக்கணம் கூறும் நூல்கள் இருந்துள்ளமையை அறிய முடிகிறது. எனினும் அவை கிடைக்கப்பெறாத நிலையில் கிடைத்துள்ளனவாகிய வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகியன பற்றிக் காண்போம்.

**வீரசோழியம்**

தமிழில் கிடைக்கப்பெறும் ஐந்திலக்கண நூல்களுள் முதன்மையானது இது. வீரராசேந்திர சோழனின் வேண்டுகோளுக்கு இணங்கப் புத்தமித்திரரால் பாடப்பெற்றது. இந்நூலில் அணி இலக்கணம் அலங்காரப் படலம் எனக் குறிக்கப்படுகிறது. தொல்காப்பியத்தையும் காவியாதரிசம் என்னும் வடமொழி நூலையும் அடியொற்றி எழுதப்பட்டது. இந்நூல், 35 பொருள் அணிகளையும், 2 சொல்லணிகளையும் பற்றிக் குறிப்பிடுகிறது. காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டு ஆகும்.

**இலக்கண விளக்கம்**

இந்நூல் திருவாரூர் வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்டது. இதன் கருத்துகள் பெரும்பாலும் முன்னூல்களில் கூறப்பட்டவற்றின் தொகுப்பாகவே உள்ளன. தொல்காப்பியக் கருத்துகள் கால மாற்றத்திற்கேற்ப, சுருக்கியும் பெருக்கியும் கூறப்படுதலின் இதனைக் குட்டித் தொல்காப்பியம் எனவும் கூறுவர். அணி இலக்கணப் பகுதி பெரும்பாலும் தண்டியலங்காரத்தை ஒட்டியதாகும். இதில் 35 பொருள்

அணிகளும், 2 சொல்லணிகளும் இடம் பெற்றுள்ளன. காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாகும்.

### தொன்னூல் விளக்கம்

இந்நூல் இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவர் என்பவரால் இயற்றப்பட்டது. இது ஐந்திலக்கணக் கருத்துகளை விரித்துரைக்கும் நூல் ஆகும். இதில் 30 பொருள்அணிகளும், 30 சொல்லணிகளும் கூறப்பெற்றுள்ளன இந்நூல், தற்குறிப்பேற்ற அணியை “ஊகாஞ்சித அணி” எனச் சுட்டுகின்றது. விடையில் வினா அணி, வினாவில் விடை அணி போன்ற புதிய அணிகளும் இடம் பெற்றுள்ளன. இதன் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு ஆகும்.

### முத்து வீரியம்

இந்நூல் உறையூர் முத்துவீர உபாத்தியாயரால் இயற்றப்பட்டது. இதில் பொருளணிகள் 58, சொல்லணிகள் 14 என அணிகள் இடம் பெற்றுள்ளன. காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டு ஆகும்.

### சுவாமிநாதம்

இந்நூல் சாமிகவிராசர் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இதில் அணி இலக்கணப் பகுதி, அணி அதிகாரம் எனப் பெயர் பெற்றுள்ளது. இப்பகுதி,

1.பொருள் அணி மரபு,

2.சொல்லணிமரபு,

3.அமைதிமரபு

என மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்நூலில் 31 பொருள் அணிகளும், 23 சொல்லணிகளும் இடம் பெற்றுள்ளன. அமைதி மரபுப் பகுதி, சில வழுவமைதிகளை எடுத்துரைக்கின்றது. இதன் காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

### அறுவகை இலக்கணம்

இந்நூல் திருவாமாத்தூர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றியதாகும். நூல் இது. இந்நூலின் ஐந்தாவது இயலாக அணி இலக்கணம் விளங்குகிறது. இப்பகுதி உவமை, உடைமை, கற்பனை, நிகழ்ச்சி, ஆக்கம் ஆகிய ஐவகைப் பாகுபாடுகளைக் கொண்டுள்ளது. காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டு ஆகும்.

இவ்வாறு அணி இலக்கணத்தைத் தம் ஒரு கூறாகக் கொண்டு திகழும் இலக்கண நூல்கள், சிறப்புற அணிகளைப் பற்றி எடுத்துரைக்கின்றன.

### எதுகை, மோனை, இயைபு, முரண் உணர்ந்து இன்புறுதல்

#### எதுகை

''தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்''

இக்குறட்பாவில் இரண்டடிகளில் முதற்சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்துள்ளது. முதலெழுத்து அளவொத்திருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

இப்பாடலில் எதுகை அடிதோறும் வந்ததால் இ∴து அடியெதுகையாகும் (அளவொத்திருத்தல் மாத்திரை அளவில் ஒத்திருத்தல் ஆகும்.)

இதே போன்று ஓரடியில் சீர்கள் தோறும் எதுகையை பெற்று வருவது சீர் எதுகையாகும்.

(எ.கா) சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க

எதுகைத் தொடையும், 1.அடி எதுகை, 2.இணை எதுகை, 3.பொழிப்பு எதுகை, 4.ஒருஉ எதுகை, 5.கூழை எதுகை, 6.மேற்கதுவாய் எதுகை, 7.கீழ்க்கதுவாய் எதுகை, 8.முற்றெதுகை என எட்டு வகைப்படும்.

#### அடி எதுகை

அடிதோறும் வரும் முதற்சீரின் முதலெழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகை ஆகும்.

(எ.கா) கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

#### இணை எதுகை

ஓரடியில் முதலிரு சீர்களிலும் (1, 2) வரும் எதுகை இணை எதுகை எனப்படும்.

(எ.கா) பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பற
செய்யாமை செய்யாமை நன்று.

#### பொழிப்பு எதுகை

ஓரடியில் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் (1, 3) வரும் எதுகை பொழிப்பு எதுகை எனப்படும்

எ.கா தோன்றின் புகழோடு தோன்றுக அ∴திலார்
தோன்றிலன் தோன்றாமை நன்று.

**ஒரூஉ எதுகை**

ஓரடியில் முதல்சீரிலும் நான்காம் சீரிலும் (1, 4) வரும் எதுகை ஒரூஉ எதுகை எனப்படும்.

(எ.கா) துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

**கூழை எதுகை**

ஓரடியில் முதல் மூன்று சீர்களிலும் (1, 2, 3) வரும் எதுகை கூழை எதுகை எனப்படும்.

(எ.கா) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்று பற்று விடற்கு.

**மேற்கதுவாய் எதுகை**

ஓரடியில் முதல் சீர், மூன்றாம் சீர், நான்காம் சீர்களில் (1, 3, 4) வரும் எதுகை மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

(எ.கா) அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

**கீழ்க்கதுவாய் எதுகை**

ஓரடியில் முதல் சீர், இரண்டாம் சீர், நான்காம் சீர்களில் (1, 2, 4) வரும் எதுகை கீழ்க்கதுவாய் எதுகை எனப்படும்.

(எ.கா) ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

**முற்று எதுகை**

ஓரடியிலுள்ள நான்கு சீர்களிலும் (1, 2, 3, 4) வரும் எதுகை முற்று எதுகை எனப்படும்.

(எ.கா) துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை

**மோனை**

செய்யுளில் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும். (மோனை – முதன்மை)

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்த பின்
தன்நேஞ்சே தன்னைச் சுடும்

இக்குறட்பாவில் முதலடியின் முதலெழுத்தும் (த) இரண்டாமடியின் முதலெழுத்தும் (த) ஒன்றி வந்துள்ளன.

இவ்வாறு அடிகளில் முதல் எழுத்து ஒன்றி வருவது அடிமோனையாகும்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு

இத்தொடரில் உள்ள நான்கு சீர்களிலும் முதலெத்து (து) ஒன்றாக வந்துள்ளன. இவ்வாறு சீர்கள்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது சீர்மோனை எனப்படும். சீர்மோனையை "வழிமோனை" என்றும் வழங்குவர்.

**இனமோனை**

மோனைக்கு முதலெழுத்தேயன்றி, அதற்குரிய இனவெழுத்தும் ஒன்றி வரும். இதனை "இனமோனை என்றும், கிளைமோனை" என்றும் வழங்குவர். இனைமோனையாக வரும் எழுத்துக்கள்:

**உயிரெழுத்து**

1. அ, ஆ, ஐ, ஔ ஓரினம்
2. இ, ஈ, எ, ஏ ஓரினம்
3. உ, ஊ, ஒ, ஓ ஓரினம்

**உயிர்மெய்யெழுத்து**

1. ஞ, ந ஓரினம்
2. ம, வ ஓரினம்
3. த, ச ஓரினம் (மெய்யெழுத்துக்களுள் அவற்றின் வர்க்க எழுத்துகளும் வரும்)

சில எடுத்துக்காட்டுகள்

மனத்தொடு வாய்மை மொழியின் – ம, வா

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும் – இ, எ சாதனத்தோடு

தச்சர் – சா, த

மாநதி வருந்தித் தேடி – மா, வ

ஐந்துவித்தான் ஆற்றல் அகல் விசும்பு ளார்கோமான் – ஐ, ஆ, அ ஔவிய

நெஞ்சத்தான் ஆக்கமும் – ஔ, ஆ

**அடிமோனை**

அடிதோறும் வரும் முதற்சீரின் முதலெழுத்து ஒன்றி வருவது அடி மோனை ஆகும்.

(எ.கா) உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

**இணை மோனை**

ஓரடியில் முதலிரு சீர்களிலும் (1, 2) வரும் மோனை இணை மோனை எனப்படும்.

(எ.கா) கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

**பொழிப்பு மோனை**

ஓரடியில் முதல்சீரிலும் மூன்றாம் சீரிலும் (1, 3) வரும் மோனை பொழிப்பு மோனை எனப்படும்.

(எ.கா) புனையா ஓவியம் போல நிற்றலும்

**ஒரூஉ மோனை**

ஓரடியில் முதல்சீரிலும் நான்காம் சீரிலும் (1, 4) வரும் மோனை ஒரூஉ மோனை எனப்படும்.

(எ.கா) பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் மெனின்

**கூழை மோனை**

ஓரடியில் முதல் மூன்று சீர்களிலும் (1, 2, 3) வரும் மோனை கூழை மோனை எனப்படும்.

(எ.கா) தானம் தவமிரண்டும் தங்கா வியனலுகம்
வானம் வழங்கா தெனின்

**மேற்கதுவாய் மோனை**

ஓரடியில் முதல் சீர், மூன்றாம் சீர், நான்காம் சீர்களில் (1, 3, 4) வரும் மோனை மேற்கதுவாய் மோனை எனப்படும்.

(எ.கா) வானின்று உலகம் வழங்கி வருவதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

### கீழ்க்கதுவாய் மோனை

ஓரடியில் முதல் சீர், இரண்டாம் சீர், நான்காம் சீர்களில் (1, 2, 4) வரும் மோனை கீழ்க்கதுவாய் மோனை எனப்படும்.

(எ.கா) இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

### முற்று மோனை

ஓரடியிலுள்ள நான்கு சீர்களிலும் (1, 2, 3, 4) வரும் மோனை முற்று மோனை எனப்படும்.

(எ.கா) பெற்றோர்பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

### இயைபுத் தொடை

செய்யுளின் அடிகளிலும் சீர்களிலும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றி வருவது இயைபுத் தொடை ஆகும்.

கொண்டல் கோபுரம்
அண்டையில் கூடும்
கொடிகள் வானம்
படிதர மூடும்
கண்ட பேரண்டத் தண்டலை நாடும்
கனக முன்றில்
அனம் விளை யாடும்

மேற்கண்ட பாடலடிகளின் இறுதியில் ஒரே ஒலி தரும் கூடும், மூடும், நாடும், ஆடும் எனும் எனும் சொற்கள் அமைந்துள்ளன. இவ்வாறு அமைவது இயைபுத் தொடை ஆகும்.

### முரண்

அடிகளிலோ சீர்களிலே சொல்லோ, பொருளோ முரண்பட்டு (மாறுபட்டு) அமைவது முரண் தொடை ஆகும்.

எ.கா.தொடை முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

இத்தொடரில் முன், பின் என்னும் முரண்பட்ட சொற்கள் அமைந்துள்ளன.

முரண் தொடை 1.அடி முரண், 2.இணை முரண், 3.பொழிப்பு முரண், 4.ஒரூஉ முரண், 5.கூழை முரண், 6.மேற்கதுவாய் முரண், 7.கீழ்க்கதுவாய் முரண், 8.முற்று முரண் என எட்டு வகைப்படும்.

### அடி முரண்

அடிதோறும் முதற்சொல் முரண்படத் தொடுப்பது அடி முரண் ஆகும்.

(எ.கா) கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மாற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

### இணை முரண்

ஓரடியில் முதலிரு சீர்களிலும் (1, 2) முரண் அமைவது இணை முரண் எனப்படும்.

(எ.கா) பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

### பொழிப்பு முரண்

ஓரடியில் முதல்சீரிலும் மூன்றாம் சீரிலும் (1, 3) முரண் அமைவது பொழிப்பு முரண் எனப்படும்.

(எ.கா) செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

### ஒரூஉ முரண்

ஓரடியில் முதல்சீரிலும் நான்காம் சீரிலும் (1, 4) முரண் அமைவது ஒரூஉ முரண் எனப்படும்.

(எ.கா) புறந்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

### கூழை முரண்

ஓரடியில் முதல் மூன்று சீர்களிலும் (1, 2, 3) முரண் அமைவது கூழை முரண் எனப்படும்.

(எ.கா) கருமிடற்றன் செஞ்சடையன் வெண்ணீற்றவன்

**மேற்கதுவாய் முரண்**

ஓரடியில் முதல் சீர், மூன்றாம் சீர், நான்காம் சீர்களில் (1, 3, 4) முரண் அமைவது மேற்கதுவாய் முரண் எனப்படும்.

(எ.கா) வெண்வளைத் தோளும் சேயரிக் கருங்கனும்

**கீழ்க்கதுவாய் முரண்**

ஓரடியில் முதல் சீர், இரண்டாம் சீர், நான்காம் சீர்களில் (1, 2, 4) முரண் அமைவது கீழ்க்கதுவாய் முரண் எனப்படும்.

(எ.கா) இருக்கை நிலையும் ஏந்தெழில் இயக்கமும்
உயிரினும் ஓம்பப் படும்.

**முற்று முரண்**

ஓரடியிலுள்ள நான்கு சீர்களிலும் (1, 2, 3, 4) முரண் அமைவது முற்று முரண் எனப்படும்.

(எ.கா) துவர்வாயத் தீஞ்சொலும் உவந்தெனன் முனியாது

**சொல்லாட்சித் திறனை வளர்த்தல்**

சொல்லாட்சிக் கலை (Rhetoric) என்பது மொழியைச் சிறப்பான முறையில் வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் கலையாகும். இது லோகோஸ் (logos), பத்தோஸ் (pathos) மற்றும் எத்தோஸ் (ethos) என்ற மூன்று பார்வையாளர் முறையீடுகள் உட்படுத்தப்படுகின்றன. அதே போல் சொல்லாட்சிக் கலையின் ஐந்து விதிகளும் உட்படுத்தப்படுகின்றன, அவை:

கண்டுபிடிப்பு அல்லது கண்டறிதல், ஏற்பாடு, பாணி, நினைவு மற்றும் பேச்சுமுறை ஆகியவை ஆகும். இலக்கணம் மற்றும் பகுத்தறிவு அல்லது பேச்சுவழக்கு ஆகியவற்றுடன் சொல்லாட்சிக் கலை என்பது சொற்பொழிவின் மூன்று பழமையான கலைகளில் ஒன்றாகும்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பண்டைய கிரேக்கத்தில் இருந்து பொது பேச்சாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மேற்கத்தியக் கல்வியின் முக்கியப் பகுதியாக இது உள்ளது.

விவாதங்களில் பார்வையாளர்களின் நகர்வுக்கும் நடவடிக்கைக்கும் இதில் பயிற்சியளிக்கப்படுகிறது.

சொல்லாட்சிக் கலையை மையப்படுத்திய வரையறைகளின் பெரும்பகுதி அரிஸ்டாட்டிலின் விவாதத் தலைப்புகள் பலவற்றுள் இடம்பெற்றுள்ளன. “ரெட்டோரிக்” (rhetoric) இந்தச் சொல்லானது பேசு, சொல் என்று பொருள்படும் என்னும் சொல்லிலிருந்து உருவான, “பேசப்பட்ட சொல் அல்லது பேச்சு” என்று பொருள்படும் தொடர்புடைய (rhêma) என்னும் சொல்லிலிருந்து உருவான பேச்சாளர் என்னும் பொருள்படும் என்னும் சொல்லிலிருந்து உருவான “பேச்சு தொடர்பான” எனப் பொருள்படும் கிரேக்கச் சொல்லான என்பதிலிருந்து உருவானதாகும். விரிவாக சிந்திக்கையில் சொல்லாட்சிக் கலை மனித சொற்பொழிவில் அக்கறை கொள்கிறது.

ரோமானிய மேலவையில் சிசரோ கேட்டிலினை வெளிப்படையாய்ப் பழித்துரைக்கிறார். சொல்லாட்சிக் கலை பற்றிய சமகாலத்திய ஆய்வுகள் பண்டைய கால விசயங்களைக் காட்டிலும் செயல்துறைகளில் மிகவும் பல்வேறு வகைகளை உரைக்கின்றன. நீதிமன்றங்கள் மற்றும் கூட்டங்கள் போன்ற பொதுவிடங்கள் மற்றும் நிறுவனங்களில் சிறப்பாக இணங்கவைப்பதற்கு பேச்சாளர்களுக்கு உன்னதமான முறையில் சொல்லாட்சிக் கலை பயிற்சியளிக்கப்படுகையில் சமகாலத்திய சொல்லாட்சிக் கலையில் மனித சொற்பொழிவு விளைவு விசாரணை செய்யப்படுகிறது.

சொல்லாட்சிக் கலைஞர்கள் பல்வேறு வகையான துறைகளில் சொற்பொழிவுகளை ஆராய்ந்துள்ளனர். மிகவும் பாரம்பரியமான துறைகளான அரசியல் மற்றும் சட்டத்துடன் ஒருங்கிணைந்து இயற்கை மற்றும் சமூக அறிவியல்கள், நுண்கலை, சமயம், இதழியல், கட்டுக்கதை, வரலாறு, நிலப்படக்கலை மற்றும் கட்டடக்கலை போன்றவையும் இதில் அடங்கும்பொது மக்கள் தொடர்புகள், சட்டமன்ற உறுப்பினரின் ஆதரவை நாடுதல், சட்டம், சந்தையிடுதல், தொழில்சார்ந்த மற்றும் தொழில்நுட்ப எழுத்து மற்றும் விளம்பரங்கள் போன்றவை சொல்லாட்சிக் கலை சார்ந்த தொழில்புரிபவர்களுக்கு நவீன தொழில்முறைகளாக உள்ளன.

## தொகுப்புரை

- செய்யுள் என்பது தொன்மையான இலக்கண வகையாகும். இலக்கண வடிவில் செய்யுள் இயற்றுதல் என்பது செய்யுள் உறுப்புக்களான கருத்து, சொல்நயம், சந்தநயம், தொடைநயம் முதலியவற்றைக் கொண்டு எழுதுவதாகும்.
- 34 செய்யுளியல் உறுப்புகளும் 9விகாரங்களும் பல வகையான அணிகளுமே செய்யுளுக்கு அடிப்படையாகும்.
- அணியின் இலக்கணம் அணிவகைகளைச் செய்யுளில் பொருத்திப் பார்த்தல், எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகிய உறுப்புக்களையும் அவற்றின் வகைகளையும் செய்யுளில் கண்டறிதலும் விளக்கப்பட்டுள்ளது.
- நுண்கலை, சமயம், இதழியல், கதை, வரலாறு, அரசியல், சட்டம் போன்ற சமூக நிகழ்வுகளில் சொற்களை கையாளும் திறனை வளர்ப்பதையும் விவரிக்கின்றது.

**தன்மதிப்பீட்டு வினாக்கள்:**

1. முதலெழுத்து ஒன்றி வருவது
   அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) முரண்
   விடை: ஆ

2. பா எத்தனை வகைப்படும்?
   அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4 விடை: ஈ

3.செய்யுள் விகாரங்கள் எத்தனை?

அ) 7 ஆ) 8 இ) 9 ஈ) 10 விடை: இ

4.ஒரு அடியில் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது.

அ) ஒரூஉ எதுகை ஆ) கூழை எதுகை
இ) பொழிப்பு எதுகை ஈ) இணை எதுகை விடை: இ

5.அடிகளிலோ, சீர்களிலோ சொல் அல்லது பொருள் மாறுபட்டு வருவது.

அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) முரண் விடை: ஈ

**குறுவினாக்கள்**

1. செய்யுள் நலம் பாராட்டல் - விளக்குக.
2. அணி என்றால் என்ன? உவமை அணியை எ.காட்டுடன் விவரி.
3. ஐந்திலக்கணம் கூறும் இலக்கண நூல்கள் யாவை?
4. மோனையின் வகைகள் யாவை?
5. முரணின் வகைகள் யாவை?

**நெடுவினாக்கள்**

1. வேற்றுமை அணி – வேற்றுப்பொருள் வைப்பணி – வேறுபடுத்துக.
2. தற்குறிப்பேற்ற அணி – சிலேடை அணி எ.கா. உடன் விளக்குக.
3. எதுகையின் வகைகளை எ.கா. உடன் விளக்கு.
4. இயைபு தொடையை விளக்குக.
5. சொல்லாட்சித் திறன் - வரையறுக்க.

**பார்வை நூல்கள்**

1.கா.பட்டாபிராமன்-மொழிப்பயன்பாடு, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

2.மு.சுதந்திரமுத்து- படைப்புகள், சுவடு பதிப்பகம், சென்னை-24.

3.திருக்குறள் - பரிமேலழகர் உரை, கௌரா பதிப்பகம், திருச்சி.

**இணையதள முகவரி**

1.Tamil Heritage Foundation –www.tamilheritage.org<http:// tamilheritage.org>

2.Project Madurai-www.projectmadurai.org.

# அலகு - 2

## நோக்கங்கள்

- ❖ கவிதையின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு போன்றவற்றை மாணவர்கள் அறிய செய்தல்.
- ❖ மரபுக்கவிதை மற்றும் புதுக்கவிதையின் தோற்றம், வளர்ச்சி,நோக்கம் ஆகியவற்றை மாணவர்களுக்குக் கற்ப்பித்தல்.
- ❖ பல்வேறு மரபுக்கவிதை படைப்பாளர்களின் நூல்களும், புதுக்கவிதை படைப்பாளர்களின் நூல்களும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல்.
- ❖ கவிதைக்கான பல்வேறு பாடுபொருள் உத்திகளை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுதல்.
- ❖ மாணவர்களைத் தமிழக அளவிலான போட்டித் தேர்வுகளுக்குத் தயார் செய்தல்.

## அறிமுகம்

கவிதை (Poiesis) என்பது அழகியல் உணர்ச்சியுடைய, ஓசை சந்தத்துடன் கூடிய அல்லது ஒத்திசை பண்புச் சொற்களால் கோர்க்கப்பட்ட ஓர் எழுத்து இலக்கியக் கலை வடிவம் ஆகும். மேலும், மொழியில் உள்ள ஒலியன் அழகியல், ஒலிக் குறியீடுகள், மற்றும் சந்தம் (Metre) ஆகியவற்றுடன் இடம், இயல்பான பொருள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டுவதாகக் கவிதை உள்ளது. உணர்ச்சி, கற்பனை, கருத்துக்களை வெளிப்படுத்தவும் தூண்டவும் கவிதை உதவுகின்றது.

## கவிதைத் தோற்றம்

கவிதையினைக் கத்தோலிக்க சுமேரிய காவியத்தோடு ஒப்பிடும் ஒரு போக்கு உள்ளது. தொடக்கத்தில் கவிதைகளுக்கு, சீனா போன்ற நாட்டுப்புற பாடல்களிலிருந்தும் அல்லது சமஸ்கிருத வேதங்கள், சௌராட்டிரிய கத்தாஸ் மற்றும் ஹோமரிக் புராணங்கள், இலியட் மற்றும் ஒடிஸி ஆகிய வாய்வழித் தொன்மங்களைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருந்தன.

அரிஸ்டாட்டிலின் கவிதையியல் போன்று கவிதையை வரையறுக்க, சொல்லாட்சிக் கலை, நாடகம், பாடல் மற்றும் நகைச்சுவை ஆகியவற்றில் பேச்சுக்களைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்து வந்தது. பிறகு, போன்மை, வடிவம் மற்றும் அசை முதலான அம்சங்கள் காரணமாக அப் பழங்கால முயற்சிகள் தேக்கமுற்றன.

மேலும், 20 ஆம் நூற்றாண்டின் மத்தியில் இருந்து கவிதையானது இசைக் கோர்ப்பிற்கேற்ப மிகவும் பொருந்தக்கூடிய தகவல்களின்படி, கற்பனைச் செய்திகள், எழுத்துரு வடிவங்கள் ஆகியவற்றைக் கொண்டு விளங்க ஆரம்பித்தது.

"காட்டுவாசி ஒருவன் கொட்டிய பாறையில் கவிதை தோன்றியிருக்க வேண்டும்'' என்பார் எமர்சன். "கவிதை மந்திர மொழிகளிலும் சடங்குச் சொற்களிலும் வாய்மொழிப்பாடல்களாகத் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்கிறது வாழ்வியல் களஞ்சியம். கவிதை முதலில் இசைப்பாடலாகத் தோன்றிருக்க வேண்டும் என்ற கருத்திற்கு வலிமை சேர்க்கும் விதமாகச் சங்க இலக்கியத்தில் பாணன், பாடினி, விறலி போன்றோர்களின் குறிப்புகள் கிடைக்கின்றன. தமிழ்க் கவிதைத் தோற்றத்தில் பரிபாடல், பத்துப்பாட்டு ஆகியன எட்டுத்தொகையின் அகவற்பாவிற்கு முந்தைய வடிவம் என்ற கருத்தும் உண்டு.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற திணைகளுக்குப் பண் வடிவங்கள் இருந்துள்ளன. கவிதை முதலில் வாய்மொழிப் பாடலாக இருந்தது என்பது ஆய்வாளர்களின் கருத்து. எனவே கவிதையின் தோற்றமும் முதலில் பொருளற்ற இசை குறிப்புகளில் இருந்து இசைப் பாடல்கள் தோன்றிருக்க வேண்டும். கல்வி புலவர்களின்உடமைப்பொருளான போது இசையின் ஒரு பிரிவாய் ஒலி நயத்துடன் கூடிய அகவற்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா போன்ற யாப்பு வடிவமும் தோன்றின. கல்வி மக்களின் உடைமைப் பொருளாகும் போது உரைநடை இலக்கியம் மற்றும் உரைநடைச்சார்ந்த புதுக்கவிதை பிறந்தது எனலாம்.

நூற்பா செய்யுள், விருத்தம், பண், கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ ஆகியன ஒரு இனம் சார்ந்தது என்றாலும் அதன் முகங்கள் வேறானது. காலத்திற்குக் காலம் மொழி தம்மை புதுப்பித்துக்கொள்வது போல் கவிதையியலும் தன்னை வளர்த்துக் கொள்கிறது.

**வரலாறு**

அறிஞர்களுள் சிலர் கவிதைக்கலையினால் முன் கல்வியறிவு வளர்வதாக நம்புகின்றனர். எனினும், வேறுசிலர், கவிதைக்கு முன் எழுத்துப் பயிற்சி தேவையில்லை என எடுத்துரைக்கின்றனர்.

பழைமையான எஞ்சிய காவிய கவிதை மரபானது, கி.மு.மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, சுமேரியர் மெசபடோமியாவில் (இன்றைய ஈராக்) க்யூனிபார்ம் என்கிற சுமேரிய எழுத்துக்களால் களிமண் கட்டிகளில் எழுதிய கில்கமேஷ் காப்பியத்திலிருந்து தொடங்குகிறது. பின்னர், பாப்பிரஸ் என்னும் காய்ந்த மூங்கில்களில் எழுதிவைத்தனர்.

கி.மு.2000-த்தில் எழுதிவைக்கப்பட்ட எழுத்துக்கள் அரச குடும்பத்தில் ஓர் ஆண்டில் நிகழ்ந்த திருமணம் சார்ந்த சடங்குகளை விவரிப்பதாகக் காணப்படுகிறது. மேலும், இனான்னா (Inanna) என்கிற தேவதையுடனான இனவிருத்தி மற்றும் செழிப்புக்கான கவிதை உலகின் பழமையான காதல் கவிதையாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டு: எகிப்திய ஸிநுஹே (The story of Sinuhe) காப்பியம் கவிதை (கி.மு.1800). இலியட் (Iliad) மற்றும் ஒடிஸி (Odyssey) போன்ற கிரேக்க காவியங்கள், கேத்திக் அவஸ்டா (Gathic Avesta) மற்றும் யாஸ்னா (Yasna) என்னும் அவெஸ்தான் நூல்கள், வெர்ஜிலின் எனேயிட் (Aeneid) உள்ளிட்ட ரோமன்நாட்டுக் காவியங்கள் மற்றும் இராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகிய இந்திய காவியங்கள் ஆகியவை பழங்காலத்தில் தோன்றிய காப்பியங்களாவனவாகும்.

வரலாற்றுக்கு முந்தைய பண்டைய சமூகங்களில் எளிதாக நினைவில் நிறுத்திக்கொள்ளவும், வாய்மொழியாகப் பரவச் செய்யவும் உதவிடும் கருவியாகக் காப்பியம் திகழ்ந்ததை ஒடிஸி, கத்தாஸ் மற்றும் இந்திய வேதங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

### பண்டைய சீனக் கவிதைகள்

நாட்டுப்புற பாடல்கள் வடிவங்களிலும் கவிதை வளரத் தொடங்கியது. வாய்மொழிப் பாடல்கள் (செவ்வியல் கவிதைகள்) என்கிற பண்டைக்கால சீனக் கவிதைத் தொகுப்புகளின்தொடக்க வரிகளில் இவற்றைக் காணமுடியும்.

கிரேக்க, இலத்தீன் மொழிகளின் கவிதை ஈடுபாட்டைத் தொடர்ந்து ஆங்கில இலக்கியம் சாசரின் காலத்தில்தான் (கி.பி.1340-1400) வளர்ச்சி அடைந்தது. அவருக்கு முன்பே கவிதைகள் எழுதப்பட்டிருந்தாலும், ஜியோ∴ப்ரே சாசர் (Geoffrey Chaucer), கவிதையைப் பொதுமக்களின் இலக்கியமாக மாற்றினார். சாசர் பிறப்பால் ஆங்கிலேயர் ஆவார். பிரான்ஸிலும் இத்தாலியிலும் பணிபுரிந்த காரணத்தால் அவருடைய கவிதைகளில் அவற்றின் செல்வாக்கு மிகுந்து காணப்பட்டன. . அகச் செய்யுட்கள் (Lyrics) அதிகம் எழுதப்பட்டன. இத்தாலியில் புகழ்பெற்ற விடா (ஏனைய(1489-1566) இலத்தீன் மொழியில் கவிதைகள் பல எழுதியுள்ளார். கி.பி.1527 ஆம் ஆண்டில் இவருடைய கவிதைக்கலையைப் பற்றிய நூல் வெளியாயிற்று.

### வில்லியம் ஷேக்ஸ்பியர்

பதினேழாம் நூற்றாண்டை ஆங்கில இலக்கிய உலகம், கரோலின் காலம் (Caroline Age) என்றழைக்கின்றனர். ஜான் மில்டன், பாய்லோ (Boileau 1636-1711),

பென் ஜான்சன் (Ben Johnson 1572-1637), தாமஸ் காம்பியன் (Thomas Campion 1575-1620) போன்றோர் இக்கால கட்டத்தைச் சேர்ந்தவராவர். இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் கா.ஃ.பி விடுதிகள் (Coffee Houses) உருவாகின. ஜான் டிரைடன்ஸ (John Dryden 1631-1700) என்பார் இக்காலக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவராவார்.

கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டை கா.ஃ.பி விடுதிகளின் காலமாகக் குறிப்பிடுகின்றனர். இலண்டன் நகரில் மட்டும் ஏறத்தாழ மூவாயிரம் கா.ஃ.பி விடுதிகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவ்விடுதிகளில் மேல்தட்டு, நடுத்தட்டு மக்களிடையே இலக்கியம் தொடர்பான செய்திகள், கா.ஃ.பியுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இக்காலத்தில்தான் ஆங்கிலப் பேரகராதியினை உருவாக்கிய சாமுவேல் ஜான்சன் (1709-1784), பாஸ்வெல், ஆலிவர் கோல்ஸ்மித் (1730-1774), கதே (Goethe 1749-1832), பிளேக் (Blake 1757-1827), வேர்ட்ஸ் வொர்த், வில்லியம் வேர்ட்ஸ் வொர்த் (1770-1850, கோல்ட்ரிஜ், ஜான் கீட்ஸ் (1798-1821), ஷெல்லி (1792-1822), லார்ட் பைரன் (1788-1824) முதலான புகழ்பெற்ற கவிஞர்கள் வாழ்ந்து வந்தனர். இக்காலத்தில் வசன கவிதைகள் உருவாகின. ஜேல்லியின் கவிதைகள் சோக எண்ணங்களின் எதிரொலி என்பர்.

**மகாகவி சுப்பிரமணிய பாரதி**

**பாரதிதாசன்**

தமிழ்நாட்டில் வாழ்ந்த கவிஞர்களில் சுப்பிரமணிய பாரதி (1882 – 1921) மிக முக்கியமானவராவார். இவர் மகாகவி என்றும், தேசியப் போராட்டக் காலத்தில் பல தேசிய உணர்வுள்ள கவிதைகளைப் படைத்ததனால் தேசியக்கவி என்றும் அழைக்கப்பட்டார்.

''இவர்கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி, நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்'' என்று கூறியிருக்கிறார்.

பாரதிதாசன் (1891-1964) என்பவர் இன்னுமொரு தமிழ்க் கவிஞர் ஆவார். இவர் புரட்சிக்கவி மற்றும் பாவேந்தர் எனவும் அழைக்கப்பட்டார். கவிதை உருவாக்கத்திற்கான நான்கு அடிப்படைகள்:

- சமுதாயத் தேவைகள்
- இலக்கு

- கவிதைக்குரிய மூலப்பொருள், சொற்கள்
- உத்திகளும் வழிமுறைகளும்.

**கவிதைப் படைப்பின் வகைகள்**

ஓவியர் போன்ற பிற கலைஞரைப் போலக் கவிஞனும் போன்மை முறையைப் பின்பற்றி மானிட வாழ்க்கையைப் படைக்கிறான். இதனை அவன் மூவகையாகப் படைக்கலாம். அதாவது வாழ்க்கை நிகழ்ச்சிகள் எப்படியிருந்தனவோ அல்லது இருக்கின்றனவோ அப்படியே படைப்பது ஒருவகை எப்படியிருப்பனவாகக் கருதப்பட்டனவோ அல்லது காணப்பட்டனவோ அவ்வாறே படைப்பது மற்றொருவகை எப்படியிருக்க வேண்டுமென்று கவிஞன் கருதுகிறானோ அவ்வகையில் படைப்பது மூன்றாவது வகை.

**கவிதையின் நடை**

கவிதையின் நடையென்பது மொழியமைப்பின் ஒரு கூறு அல்லது ஒரு பகுதி சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. தொடர்புபட்ட பல கூறுகளின் ஒன்றிணைந்த செயல்பாடு அது.சிறப்பான சில தேவைகளையும் சூழல்களையும் ஒட்டிச், சில சமயங்களில் வெவ்வேறு கூறுகளில் அது, தன்னைப் பிரத்தியேகமாக அடையாளம் காட்டிக் கொள்கிறது. ஆனால், பொதுவாகக் கவிதைமொழியின் தளம் ஒரு ஒட்டுமொத்தமான நிலையில் அமைவதாகும்.

**கவிதையின் பாடுபொருள்கள்**

- சுற்றுப்புறச் சூழல் சீர்கேடுகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள்.
- உலகமயமாக்கல்
- தனியார் மயம்
- நுகரவுக் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுச் சீரழிவுகள்
- காதல் மற்றும் குடும்ப உறவுகள்.
- விளிம்புநிலை
- மக்கள்
- பெண்கள்
- தலித்துகள்
- எழுச்சியும் எதிர்வினைகளும்
- அதிகார அரசியல் மற்றும் அறிவுரைகள்

- அடிமைத்தனம்
- லஞ்சம்
- அரச பயங்கரவாதப் போக்குகள்.
- அடிப்படை வாதங்கள் மற்றும் எதிர்ப்புகள்.
- மாறிவரும் வாழ்க்கை முறைகள்.
- மொழிப்பற்று.
- அரசியல் விழிப்புணர்வு.
- தேர்தல் நடைமுறைகள்.
- நவீன அறிவு ஜீவனமும் அதன் இயலாமையும்.

**மரபு, புதுக்கவிதை**

மரபுக்கவிதை காலத்தால் முந்தியது. பல்வேறு இலக்கிய நூல்களாக இருபது நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தழைத்து விளங்கும் சிறப்புடையது.

புதுக்கவிதை, கடந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிச் செழிக்கத் தொடங்கியது. இக்கவிதைகளின் தோற்றம், பெயர்க்காரணம், நோக்கம், நூல்கள், படைப்பாளர்கள், வளர்ச்சி, இன்றைய நிலை ஆகியன குறித்து இங்குக் காண்போம்.

**மரபுக்கவிதை தோற்றம்**

நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகவும் தொன்மையானதாக விளங்குவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்நூல் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப் பெறுகின்றது. இதற்கும் முந்தையனவாக இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன. அவ்விலக்கண நூல்கள் “எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவது போல”இலக்கியத்திலிருந்து இலக்கண நூல்கள் ஏற்படுகின்றன என்னும் விதிக்கு இணங்க, தமக்கு முற்பட்ட இலக்கியங்களைக் கொண்டு இலக்கணம் வகுத்தனவாகும்.

இலக்கண நூல்களில் செய்யுள் தொடர்பான எழுத்து, சொல், அகம்-புறம் என்னும் பாடுபொருள் குறித்த செய்திகள், யாப்பு, அணி ஆகியன பற்றிய வரையறைகள் இடம் பெற்றிருக்கும். எனவே இவற்றைக் கருதிப் பார்க்கும்போது, செய்யுள் என்னும் கவிதை வடிவம் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுக்காலத் தொன்மையுடையது என உறுதிபடக் கூறலாம்.வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகியன குறித்த இலக்கணங்களைத் தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது.

இறையனார் களவியல் உரையில் மறைந்து போன சங்க நூல்களின் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. முதுகுருகு, முதுநாரை, களரியாவிரை ஆகிய தலைச்சங்க நூல்களும், கலி, குருகு, வியாழமாலையகவல், வெண்டாளி ஆகிய இடைச் சங்க நூல்களும் அடங்கும். சிற்றிசை, பேரிசை என்பன கடைச்சங்கத்தில் இருந்து மறைந்தவற்றுள் அடங்கும். "மறைந்துபோன தமிழ்நூல்கள்" என மயிலை சீனிவேங்கடசாமி, இவ்வகை நூல்கள் குறித்துத் தனியொரு நூலே எழுதியுள்ளார். அவற்றின் வழி மரபுக்கவிதையின் தொன்மையை நன்கு அறியலாம்.

தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும் சூழ்கலை வாணர்களும் - இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய் எனப் பாரதியார் பாடும் பாடல், மரபுக்கவிதையின் காலத் தொன்மைக்கும் பொருந்தக் கூடியதாகும்.

### புதுக்கவிதை - தோற்றம்

பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை தமிழ் இலக்கிய வடிவம் என்பது செய்யுள் வடிவமாகவே இருந்தது. இந்நூற்றாண்டில் மேலைநாட்டில் பழைய யாப்பு உருவத்திலிருந்து விலகி, இயைபுத் தொடை (Rhyme) முதலியன இன்றி உரைநடைச் சாயலில் புதிய கவிஞர்கள் கவிதை படைக்கத் தொடங்கினர். 1892இல் அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன் புல்லின் இலைகள் என்ற தலைப்பில் வெளியிட்ட பன்னிரண்டு கவிதைகளைக் கொண்ட தொகுப்பு, யாப்பு மரபைப் புறக்கணித்து ∴ப்ரீவெர்ஸ் (Free verse) என்னும் வசன கவிதையாக அமைந்தது. அவர்தம் பாடுபொருளும் பிறர் இதுவரையில் பேசாப் பொருளாக அமைந்தது. இவரை அடியொற்றி எமர்சன், கார்ல் சான்ட்பெர்க், லின்ட்ஸே, வாலெஸ் ஸ்டீவன்ஸன், ஸ்டீவன் கிரேன், அமி லோவல் போன்ற எண்ணற்ற கவிஞர்கள் வசன கவிதை படைக்கலாயினர். பிரெஞ்சு நாட்டிலும், ரிம்பாடு என்னும் இளங்கவிஞர்,

1886ஆம் ஆண்டு ஒளி வெள்ளம் என்னும் தலைப்பில் வெர்ஸ் லிப்ரே என்ற கட்டற்ற கவிதைகளைப் படைத்தார். இவரையடுத்து 1889-இல் வியல் கிரிப்பின் என்பவர் கட்டற்ற கவிதை என்ற அறிவிப்புடன் தம் கவிதைகளை வெளியிட்டார்.

இத்தாலி, ஸ்பானிஷ், செர்மன், ருஷ்ய மொழிகளின் இலக்கண மரபுகளிலும் நெகிழ்ச்சியும் மாற்றமும் ஏற்படத் தொடங்கின. பிரெஞ்சு நாட்டினரின் சர்ரியலிசம், இத்தாலியக் கவிஞர்களின் ப்யுச்சரிசம், ஜெர்மானியரின் எக்ஸ்பிரஷனிசம் என்பன அவ்வந்நாடுகளின் மரபுக்கவிதை நிலை கடந்து வசன கவிதைகளைத் தோற்றுவிக்கலாயின. விட்மனின் பாடலில் எதுகை, மோனை, தளை எதுவுமே இருக்காது, வசன நடை போலவே இருக்கும். ‘‘கவிதையைப் பொருளில் காட்ட

வேண்டுமே யொழியச் சொல்லடுக்கில் காட்டுவது பயனில்லை எனக்கருதி, வசன நடையிலேயே அவர் எழுதிவிட்டார்'' என்பார் மகாகவி பாரதியார்.

மரபுக் கவிதையில் வல்லவரும் தம் பல்வேறு பாடல்களை அதிலேயே படைத்தவருமாகிய பாரதியார் வசன கவிதையில் விருப்புற்றவராகத் தாமும் ***காட்சிகள்*** என்னும் தலைப்பில் பல வசன கவிதைகளைப் படைத்துள்ளார். பாரதியைத் தொடர்ந்து ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன் போன்றோர் புதுக்கவிதை படைக்கலாயினர். புதுக்கவிதைகள், பத்திரிகைகளில் வெளியிடப் பெற்றுப் படிப்படியாகச் செல்வாக்குப் பெற்றன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**பெயர்க்காரணம்**

தமிழ்க் கவிதைகளை மரபுக்கவிதை, புதுக்கவிதை என்பன போன்ற பெயர்களில் குறிப்பிடுகிறோம். அதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

**மரபுக் கவிதை – பெயர்க்காரணம்**

தொன்று தொட்டு வரும் தன்மையுடையது என்பதை மரபு என்னும் சொல் உணர்த்தி நிற்கின்றது. இனிய ஓசை நயம் அமைந்த பாடல்களைக் கேட்டுப் பழகியவர், அதே ஓசையில் பாடல் புனைய முயன்று, பிறர் படிக்கவும், இவ்வாறே புதியன படைக்கவும் பாடல் அமைப்பை எழுத்து, அசை, சீர் என அமைத்து ஒழுங்குபடுத்தியிருத்தல் வேண்டும். இவ்வாறு யாப்பிலக்கணம் தோன்ற, அடுத்தடுத்து வந்தவர் அம்மரபு மாறாமல் கவி படைக்கத் தொடங்கினர்.

பாக்களையடுத்துப் பாவினங்களும், அவற்றையடுத்துக் கும்மி, சிந்து போன்றனவும் தோன்றின. இவ்வாறுதான் பாடப்படவேண்டும் என்னும் வரையறை இருப்பதால் சிதறாத வடிவமாகப் பாதுகாக்கப் பெற்றுக் காலந்தோறும் இம்முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. பாடுபொருளும் உத்திகளும் புதியனவாயினும் மரபு இலக்கணத்தின்படி படைக்கப்படுதலின் இவை மரபுக்கவிதை எனப்படுகின்றன.

**புதுக்கவிதை**

ஆசிரியப்பா, வெண்பா, விருத்தம், சிந்து எனக் காலந்தோறும் யாப்பு வடிவங்கள் செல்வாக்குப் பெற்றுவந்தன. மேனாட்டுத் தாக்கத்தால் உரைநடை செல்வாக்குப் பெற்ற நிலையில், யாப்பிலக்கணத்திற்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்குச் சுதந்திரமான எழுத்துருவம் கொடுக்கும் இப்படைப்பு முயற்சி, வசன கவிதை என்றே அழைக்கப்பட்டது. பின்னர், யாப்பில்லாக் கவிதை, இலகு கவிதை, கட்டிலடங்காக் கவிதை போன்ற பெயர்களை அவ்வப்போது பெற்று வரலாயிற்று.

பழக்கத்தில் உள்ள நிலையிலிருந்து சிறிதளவோ முற்றிலுமோ மாறுபட்டுத் தோன்றுவது புதுமை எனப்படும்.

வழிவழியாக மரபு கெடாது யாப்பிலக்கணத்தோடு பொருந்தி வரும் கவிதைகளிலிருந்து மாறுபடும் கவிதைப் படைப்புதான் புதுக்கவிதை ஆகும். புதுக்கவிதைகள் உருவத்தால் மட்டுமன்றி, உள்ளடக்கம், உத்திமுறைகள் ஆகியவற்றாலும் புதுமையுடையனவாகும்.

இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி
இவையெதுவும் இல்லாத
கருத்துக்கள் தம்மைத்தாமே
ஆளக் கற்றுக்கொண்ட
புதிய மக்களாட்சி முறையே

புதுக்கவிதை (ஊர்வலம்) என மேத்தா கூறும் புதுக்கவிதை, புதுக்கவிதையின் இலக்கணத்தையும் இயல்பையும் புலப்படுத்தும். இதனை, சாலை இளந்திரையன் உரை வீச்சு எனக் கூறுவார்.

## மரபுக்கவிதையின் நோக்கம்

மரபுக்கவிதை, சங்க காலத்தில் மன்னர்களோடு தொடர்புடையதாக இருந்தது. மன்னர்களின் வீரம், வெற்றி, கொடை, ஆட்சிச் சிறப்பு ஆகியவற்றைப் புகழ்வதாகவும், துணிச்சலுடன் புலவர்கள் அறிவுறுத்துவதாகவும் அமைந்தன. அரசவையிலோ, சங்கம் போன்ற தமிழ் அவைகளிலோ ஒன்று குழுமிய புலவர்கள் அகப்பொருள் பாடி இன்புறுத்துவதாகவும் அறிவுறுத்துவதாகவும் அமைந்தன.

இடைக்காலத்தில் பக்தி இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகப் பாடுபொருள் இறைவனைப் பற்றியதாகவும், திருத்தலங்களின் (கோயில் உள்ள ஊர்) சிறப்பை உணர்த்துவதாகவும் அமைந்தது. சித்தர் இலக்கியம், தத்துவம், மருத்துவம், அரசர்களையும் குறுநில மன்னர்களையும் மகிழ்வுறுத்தும் சிற்றிலக்கியங்கள் என அடுத்தடுத்த காலங்களில் பாடுபொருள்கள் அமைந்தன.

கவியரங்கம், வரையறுக்கப்பட்ட தலைப்பு, இயற்கை, சமூக அவலம் என இன்றைய நிலையில் மரபுக்கவிதையின் பயன்பாடு அமைகின்றது.

எனவே, மரபுக்கவிதை தொழிலுக்கு உரியதாகவும், அறிவுறுத்துவதாகவும், இன்புறுத்துவதாகவும் அமைந்து வரும் நிலையை அறிகின்றோம்.

### புதுக்கவிதையின் நோக்கம்

புதுக்கவிதையைத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள் மிகச் சிலரே. பலர் சமுதாய அவலம் கண்டு அவ்வப்போது கவிதைகள் புனைபவராக உள்ளனர். தனிமனித உணர்வுகளைப் பாடுவதும், நாட்டுப்பற்று, மொழியுணர்வு, பொதுவுடைமை, அநீதியை எதிர்த்தல், பெண்ணுரிமை, தலித்தியம், பகுத்தறிவு என்பனவற்றைப் பாடுதலும் இன்றைய புதுக்கவிதைகளின் நோக்கங்களாக உள்ளன.

மரபுக்கவிதை இயற்றுவது என்பது, பெரும்பாலும் அடித்தட்டு மக்களிடத்தில் இடம் பெறாததாகவே இருந்து வந்துள்ளது. புதுக்கவிதையைப் பொறுத்தவரை பெண்கள், அடித்தட்டு மக்கள், தொழிலாளிகள் எனப் பலரும் படைப்பாளராகி விடுவதனால், தங்களின் உண்மை நிலையையும், வாழ்வியல் சிக்கல்களையும், தாங்கள் எதிர்நோக்கும் தீர்வுகளையும் தெளிவாகஎடுத்துக் கூற வல்லவர்களாய் அமைகின்றனர். அவர்தம் புதுக்கவிதைப் படைப்புகளும் அவர்களின் மனநிலையையும் வாழ்வியலையும் படிப்பவருக்கு நன்கு உணர்த்துவனவாகின்றன.

### படைப்பாளர்களும் நூல்களும்

இவ்வாறு இரு வகையாகப் பிரிக்கப்பட்ட கவிதைகளைப் படைத்தவர்கள் பற்றியும், அவர்களது நூல்களைப் பற்றியும் இனிக் காணலாம்.

### மரபுக் கவிதை படைப்பாளர்களும் நூல்களும்

சங்க இலக்கியம், காப்பியங்கள், நீதி நூல்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தனிப்பாடல்கள் என்னும் யாவும் மரபுக் கவிதைகளால் ஆனவையே ஆகும். பாரதியார் காலந்தொட்டு வரும் மரபுக்கவிதை படைப்பாளர்களும் அவர்தம் படைப்புகளும் குறிப்பிடத்தக்க சிறப்புடையனவேயாகும்.

(1) பாரதியார் - பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு

(2) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை - ஆசியசோதி, மருமக்கள்வழி மான்மியம்.

(3) நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை - தமிழன் இதயம், கவிதாஞ்சலி

(4) பாரதிதாசன் - பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, குடும்பவிளக்கு, அழகின் சிரிப்பு.

(5) கண்ணதாசன் - இயேசு காவியம், மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி.

(6) சுத்தானந்த பாரதியார் - பாரதசக்தி மகாகாவியம், தமிழ்த் திருப்பாவை.

(7) சுரதா - சிரிப்பின் நிழல், தேன்மழை, துறைமுகம்.

(8) அழ.வள்ளியப்பா - மலரும் உள்ளம், பாட்டிலே காந்தி

(9) வாணிதாசன் - கொடி முல்லை.

(10) வைரமுத்து - வைகறை மேகங்கள்.

**புதுக்கவிதை படைப்பாளர்களும் நூல்களும்**

பாரதியார் தொடங்கிப் புதுக்கவிதைக் கவிஞர் பலர் நல்ல பல படைப்புகளை நல்கியுள்ளனர்.

(1) பாரதியார் - வசன கவிதை.

(2) ந.பிச்சமூர்த்தி - காட்டு வாத்து, வழித்துணை.

(3) அப்துல் ரகுமான் - பால்வீதி, சுட்டுவிரல்.

(4) வாலி - அவதார புருஷன், பாண்டவர் பூமி.

(5) மீரா - கனவுகள்+ கற்பனைகள் = காகிதங்கள்.

(6) நா.காமராசன் - கறுப்பு மலர்கள், நாவல்பழம்.

(7) மேத்தா - கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம்.

(8) வைரமுத்து - இன்னொரு தேசிய கீதம், திருத்தி எழுதிய தீர்ப்புகள், கொடிமரத்தின் வேர்கள்.

(9) சிற்பி - சர்ப்ப யாகம்.

(10) அறிவுமதி - நட்புக்காலம்.

**வளர்ச்சி வரலாறு**

எண்ணத்தை அழகாக எடுத்துச் சொல்வது கவிதை. சொல்வதையும் அழகிய வகையில் சொல்லப் பயன்படுவது பா வடிவங்களாகும். காலந்தோறும் மாறிய பா, பாவினம் பற்றி இனி விளக்கப்படுகிறது.

**மரபுக் கவிதை வளர்ச்சி**

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மரபுக்கவிதையின் வடிவம் இன்றும் நிலைபெற்று வருகின்றது. இலக்கியம் என்றாலே அது மரபுக்கவிதைதான் என்று விளங்கிய கால கட்டங்களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் காண முடிகின்றது. முதலில் தோன்றியது, மிகுந்த கட்டுப்பாடு இல்லாததாகிய ஆசிரியப்பாவாகும் வரவர ஓசை நலம் கருதியும் செப்பமான நிலையை எண்ணியும் சிற்சில கட்டுப்பாடுகள் தோன்றியிருக்கும்.

ஆசிரியப்பாவை அடுத்து அதனோடொத்த இயல்புடைய வஞ்சிப்பா தோன்றியதெனலாம். அடுத்து, குறள் வெண்பா உள்ளிட்ட பலவகை வெண்பாக்களும், பிறகு மருட்பாவும், அதன் பிறகு கலிப்பாவும், பரிபாடலும் தோன்றியிருத்தல் வேண்டும். அடுத்து வந்த காலத்தில் விருத்தப்பா, தாழிசை, துறை என்பன பயன்பாட்டிலமைந்தன என்பார் அ.கி.பரந்தாமனார்.

யாப்பிலக்கணம் குறித்து அகத்தியம், அவிநயம், காக்கைபாடினியம், கையனார் யாப்பியல், சங்க யாப்பு, பல்காயம், பனம்பாரம், பெரிய பம்மம், மயேச்சுரர் யாப்பு, மாபுராணம், வாய்ப்பியம், யாப்பருங்கலம் எனப் பல்வேறு இலக்கண நூல்கள் காலந்தோறும் தோன்றி வந்துள்ளன. இந்நூல்கள் தொல்காப்பியக் காலம் சார்ந்தும், காரிகைக்கு முன்னரும் தோன்றியனவாகும். காரிகைக்குப் பின், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம், அறுவகை இலக்கணம் என்னும் நூல்களும் யாப்பிலக்கணம் உரைப்பனவாய் அமைந்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டிலும் யாப்பிலக்கண வழிகாட்டி நூல்கள் பல தோன்றியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன:

(1) புலவர் குழந்தை - யாப்பதிகாரம், தொடையதிகாரம் (உரை)

(2) அ.கி.பரந்தாமனார் - கவிஞராக (உரைநடை)

(3) கி.வா.ஜகந்நாதன் - கவி பாடலாம் (உரைநடை)

(4) த.சரவணத் தமிழன் - யாப்பு நூல் (நூற்பா)

(5) ச.பாலசுந்தரம் - தென்னூல் (நூற்பா)

(6) இரா.திருமுருகன் - சிந்துப் பாவியல் (நூற்பா)

சங்க இலக்கியத்தில் அகவலும், நீதி இலக்கியத்தில் வெண்பாவும், பிற்காலக் காப்பியங்களில் விருத்தமும், குறவஞ்சி, பள்ளு முதலியவற்றில் சிந்துப் பாடலுமாக மரபுக்கவிதை வடிவம் சிறந்து வந்துள்ளது.

## புதுக்கவிதையின் வளர்ச்சி

கி.பி.1930-1945 காலகட்டத்தில் மணிக்கொடிக் குழுவினர், பாரதியாரை அடுத்துப் புதுக்கவிதை இயற்றியவர்களாவர். அவர்களுள் கு.ப.இராசகோபாலன், ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மணிக்கொடி இதழின் காலகட்டத்திலேயே ஜெயபாரதி, சூறாவளி, கிராம ஊழியன், கலாமோகினி போன்ற இதழ்களிலும் புதுக்கவிதைகள் பல இடம் பெற்றன.

கி.பி.1950-1970 ஆண்டுகளில் இரண்டாம் நிலை வளர்ச்சி அமைந்தது என்பார் ந.சுப்புரெட்டியார். எழுத்து, இலக்கிய வட்டம், நடை போன்ற இதழ்களில் புதுக்கவிதைகள் வெளிவந்தன. 1962-ஆம் ஆண்டு புதுக்கவிதை வரலாற்றில்

சிறப்புடையதாகும். எழுபதுகளில் தாமரை, கசடதபற, வானம்பாடி போன்ற இதழ்களில் புதுக்கவிதைகள் வெளியிடப் பெற்றுச் சிறப்புற்றன. புள்ளி, வெள்ளம், உதயம், கதம்பம், ரசிகன், நீ, அலைகள், ஐ என்னும் புதுக்கவிதைச் சிறு தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

புதுக்கவிதை நூல்கள் பலவும் எழுபதுகள் தொடங்கி வெளிவரலாயின. அவற்றுள் சில:

(1) ந.பிச்சமூர்த்தி - காட்டுவாத்து

(2) வேணுகோபாலன் - கோடை வயல்

(3) வைத்தீஸ்வரன் - உதய நிழல்

(4) நா.காமராசன் - கறுப்பு மலர்கள்

(5) இன்குலாப் - இன்குலாப் கவிதைகள்

(6) ஞானக்கூத்தன் - அன்று வேறு கிழமை

(7) கலாப்ரியா - தீர்த்த யாத்திரை

(8) சி.சு.செல்லப்பா - புதுக்குரல்கள்

(9) தமிழன்பன் - தோணி வருகிறது

(10) வல்லிக்கண்ணன் - அமர வேதனை

(11) ப.கங்கை கொண்டான் - கூட்டுப் புழுக்கள்

(12) சி.மணி - வரும் போகும்.

புதுக்கவிதை,ஈழத்திலும் மறுமலர்ச்சி, பாரதி,ஈழகேசரி,மல்லிகை, க-வி-தை போன்ற இதழ்களில் சிறப்புற வளர்ந்து வந்துள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

புதுக்கவிதை குறித்த செய்திகளையும் தெளிவினையும் புலப்படுத்தி வரன்முறைப் படுத்திய பெருமை திறனாய்வு நூல்களுக்கு உண்டு. இவை ஒரு வகையில் மரபுவழி யாப்பிலக்கண நூல்களை ஒத்தன எனலாம்.

“புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்” என்பது வல்லிக்கண்ணன் எழுதியது. புதுக்கவிதை போக்கும் நோக்கும் என்னும் நூல் ந.சுப்புரெட்டியாரால் எழுதப்பட்டது. புதுக்கவிதை - ஒரு புதுப்பார்வை என்பது கவிஞர் பாலாவின் படைப்பு. புதுக்கவிதை வளர்ச்சிக்கு இத்தகு நூல்களும் பெரும்பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிலை பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின் மொழியமைப்பிலும், வெளியிடும் பாங்கிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. அவற்றை விரிவாகக் காணலாம்.

மரபுக்கவிதை நற்றமிழ், தெளிதமிழ், வெல்லும் தூயதமிழ் போன்ற இலக்கிய இதழ்களில் வல்லமை படைத்த மரபுக் கவிஞர்களின் படைப்புகளும், போட்டிக்

கவிதைகள் பலவும் இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கவியரங்குகளில் மரபுக் கவிதைகள் சிறப்பிடம் பெறுகின்றன.

பாரதியார் பிள்ளைத்தமிழ், காமராசர் பிள்ளைத்தமிழ், சிவாஜிகணேசன் பிள்ளைத்தமிழ் என்பன போன்ற மரபுவழி இலக்கியங்கள் இன்றும் படைக்கப் பெற்று வருகின்றன. மருதூர் அரங்கராசனின் யாப்பறிந்து பாப்புனைய என்னும் நூல் இன்றைய நிலையில் மரபுக்கவிதை படைப்பவர்க்கு ஏற்ற வகையில் இயற்றப் பெற்றுள்ளது.

புதுக்கவிதை உயர்நிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் உட்படப் பலரும் எளிதில் எழுதுவதாகப் புதுக்கவிதை விளங்குகின்றது. பெண்ணியம், தலித்தியம் என்பன போன்றகொள்கைவாதிகளும், கவியரங்கம் நிகழ்த்துவோரும், சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரும் புதுக்கவிதை நூல்களை வெளியீடு செய்யும் வழக்கத்தைத் தொடர்ந்து காணமுடிகின்றது. நாளிதழ்கள், வார இதழ்கள், பல்வேறு மாத இதழ்கள், தை, நறுமுகை போன்ற காலாண்டிதழ்கள் எனப் பல வகை இதழ்களிலும் புதுக்கவிதைகள் சிறப்பிடம் பெறக்காண்கிறோம்.

ஹைக்கூ (துளிப்பா), சென்ரியு (நகைத் துளிப்பா), லிமரைக்கூ (இயைபுத் துளிப்பா) என்னும் வகைகளும் புதுக்கவிதையின் சாராம்சமாய் நாளும் தழைத்து வருகின்றன.

## பாடுபொருள் உத்திகள்

ஒரு கவிதையை முழுமையாக அறிந்து கொள்ள அதன் இரண்டு நிலைகள் குறித்து நோக்க வேண்டும். ஒன்று பாடு பொருள், மற்றொன்று பாடலின் வடிவம். இவை இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பன. ஆயினும் இரண்டாகப் பார்ப்பது தேவை. இதன் மூலம் பாடலின் இயல்புகளை அறிய முடியும். பாடலின் பொருளுக்கேற்ப அதன் வடிவமும் மாறுபடுகின்றது. பாரதி இவை இரண்டிலும் புதுமை படைத்துப் புதுயுகக் கவிஞராக விளங்குகிறார். பாடுபொருளின் வழியில் பாரதியின் தனித்தன்மை துலங்கும் வகையினை பின்வருமாறு கூறலாம்.

பாடு பொருள் என்பது கவிதையின் கருவாக அமையும் கருத்து தகவல் செய்தி ஆகும். இந்தக் கரு தன் அனுபவ வெளியீடாகவோ அல்லது பிறர் அனுபவ வெளியீடாகவோ விளங்கும். ஒரு நாடும் அந்த நாட்டில் வாழும் மக்களும் அமைதியாகவும் சிறப்பாகவும் வாழ வேண்டும். இவை இரண்டும் இல்லாத காலத்தில் பிறந்த பாரதியின் உள்ளத்தில் விடுதலை உணர்வு எழுந்தது. அடிமைகளாக வாழ்கின்றோம் என்னும் உணர்வு கூட பாரத நாட்டு மக்களுக்கு அன்று ஏற்படவில்லை. நாட்டு மக்களின் நிலை கண்டு வருந்திய பாரதி விடுதலை உணர்வு கொண்ட பாடல்கள் பல பாடியிருக்கின்றார்.

**உத்திகள்:**

கொள்வோன் கொள்வகை அறிந்து, சொல்ல வரும் கருத்தையும் படைப்போன் பெற வேண்டிய உணர்ச்சியையும் கருத்தில் கொண்டு பாடலியற்றும் முறைகளே உத்திகள் எனப்படும்.

மரபுக்கவிதைகளில் காலங்காலமாகப் பொருள்கோள் முறையும், அணியிலக்கணங்களும் சிறந்த உத்திகளாகப் பயன்படுத்தப் பெற்று வந்துள்ளன.

புதுக்கவிதைகளில் பொருள்கோள் வகைகள் இடம் பெறுவதில்லை. அணியிலக்கணக் கூறுகள் பலவற்றைக் காண முடிகின்றது. பொருளை நேரடியாக அணுகுதல், தேவையற்ற ஒரு சொல்லைக் கூடப் பயன்படுத்தாமல் இருத்தல், கடினமான யாப்பு முறைகளை விட்டொழித்து இசையின் எளிமையைப் பின்பற்றுதல் ஆகியன புதுக்கவிதைக்கான சிறந்த உத்திகள் என்பர்.

இருவகைக் கவிதைகளையும் ஒப்பிடும் நிலையில் உவமை, உருவகம், முரண், அங்கதம், சிலேடை, பிறிதுமொழிதல், தற்குறிப்பேற்றம், தொன்மம், உரையாடற்பாங்கு, இருண்மை ஆகியவற்றின் அடிப்படையில் கவிதைகள் அமைதல் வேண்டும்.

**உவமை, உருவகம், படிமம்**

**உவமை**

**மரபுக்கவிதையில் உவமை**

தெரிந்த பொருளைக் கொண்டு, தெரியாத பொருளைப் புரியவைப்பதற்காக உவமை தோன்றியது. பின்னர் அணிநயத்தின் பொருட்டும் பயன்படுத்தப்படலானது. அணிகளுக்கெல்லாம் தாயாக விளங்குவது உவமையணியே ஆகும். உவமவியலை மட்டும் தொல்காப்பியர் படைத்துள்ளமையும் இதனை உணர்த்தும்.

நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் - பூக்குழலாய் !
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம் (நன்னெறி)

எனவரும் சிவப்பிரகாசரின் பாடலை, பிரிந்து சேர்ந்த நட்பின் உறுதிக்குலைவுக்கு, நெல்லின் உமி பிரிந்து சேர்தல் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

### புதுக்கவிதையில் உவமை

புதுக்கவிதைகளிலும் உவமைக்கென்று தனியிடம் உண்டு. கோடை மேகம் சேர்த்து வைத்திருக்கும் மழைத்துளி, ஒரு கருமி, பஞ்சத்தில் காக்கும் பணப்பையின் காசுகள் போன்றது என்கிறார் வைரமுத்து.

ஓர் உலோபி
பஞ்சத்தில் காக்கும்
பணப்பையைப் போல்
கோடைமேகம்

என்னும் அக்கவிதையில் கோடைகால மேகமாவது மழையைச் சிந்திவிடுகிறது. கருமி தன் காசுகளைத் தருவதேயில்லை என்னும் கருத்தும் புலனாகின்றது.

### உருவகம்

மரபுக்கவிதை உவமையும் பொருளும் ஏதோ ஒரு பகுதி மட்டும் ஒப்புடையனவல்ல, முழுமையும் ஒன்றானவை என்பதாக அமைவது உருவகம் ஆகும். உவமையினும் செறிவும் நெருக்கமும்உடையது உருவகம். “சிவபெருமான், வேதமாகிய உணவை வெறுத்து, தேவார மூவர்தம் திருப்பாடல் ஆகிய உணவுக்கு உழலும் செவியுடையவன்” என்கிறார் சிவப்பிரகாசர்.

வேத உணவு வெறுத்துப் புகழ்மூவர்
ஓதுதமிழ் ஊணுக்கு உழல்செவியான்

(திருவெங்கை உலா)

என வரும் கண்ணியில் இக்கருத்து இடம்பெறுகின்றது.

### புதுக்கவிதையில் உருவகம்

புதுக்கவிதைகளிலும் உருவகங்கள் இடம்பெறக் காண்கிறோம். ரோஜாவைப் பாத்திகட்டி, நட்டு, நீர்பாய்ச்சி மலர வைத்தாலும், மலரைப் பறிக்கும்போது வளர்த்தவரையே முள்ளால் கீறி வடுப்படுத்துவதும் உண்டு. தொழிலாளர்களின் நிலைமையை ரோஜாவோடு உருவகப்படுத்துகின்றார் இன்குலாப்.

தொழிற்சாலைப் பாத்திகளில்
வியர்வைநீர் ஊற்றி
இயந்திர ரோஜாக்களை
மலரவைத்தோம்
இருந்தும்
வறுமை முட்கள்
கீறிய வடுக்களே
பாடுபட்டதற்குக் கிடைத்த

பரிசுப் புத்தகங்கள்

என்பதில்,

- தொழிற்சாலை - பாத்தி
- வியர்வை - நீர்
- இயந்திரம் - ரோஜா
- வறுமை - முள்
- வடுக்கள் - பரிசு நூல்கள்

என உருவகம் அமைகின்றது. புதுக்கவிதையில் படிமம் என்பதாக உருவக வடிவம் செறிவாக அமைதலைக் காணமுடிகின்றது.

**படிமம்**

உணர்வும் அறிவும் இணைந்து உருவாக்கும் மனக்காட்சியே படிமம் ஆகும். "புலன் உணர்வுகளோடும் மன உணர்வுகளோடும் தொடர்புகொண்ட காட்சிப் பொருள், கருத்துப் பொருள் ஆகியவற்றின் மனஉருக் காட்சி நிலையே படிமம்" என்பார் சி.சு.செல்லப்பா.

காலக் கிழவி
கண்ணுறங்கப் போகுமுன்
தன்
பொக்கைவாய் கழுவிக்
கழற்றிவைத்த பல்செட்டோ? (வாலி)

எனப் பிறைநிலவு குறித்து வரும் கவிதை இவ்வகையினது.

**முரண்**

சொல்லாலோ, பொருளாலோ, சொற்பொருளாலோ முரண்பட அமைவது முரண் எனப்படும். இதனைத் தொடை வகையுள் ஒன்றாக யாப்பிலக்கணம் கூறும், அணிவகையுள் ஒன்றாக அணியிலக்கணம் கூறும்.

**மரபுக்கவிதையில் முரண்**

"கடல், குளிர்ந்த சந்திரனின் கதிர்கண்டு பொங்கும் வெப்பமான சூரியனின் கதிர்கண்டால் பொங்காது அதுபோல உலகினர் இன்சொல் பேசுவோரைக் கண்டால் மனமகிழ்வர் வன்சொல் பேசுவோரைக் கண்டால் மனமகிழார்" என்கிறார் சிவப்பிரகாசர்.

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்

வன்சொலால் என்றும் மகிழாதே- பொன்செய்
அதிர்வளையாய் பொங்காது அழல்கதிரால் தண்என்
கதிர்வரவால் பொங்கும் கடல் (நன்னெறி)

என்னும் பாடலில் இன்சொல் வன்சொல், பொங்காது பொங்கும் என முரண் சொற்களும் பொருள்களும் அமைந்துள்ளமையைக் காணலாம்.

### புதுக்கவிதையில் முரண்

புதுக்கவிதைகளிலும் முரண் உத்தி அமைந்து, கவிதைக்குப் பெருமை சேர்க்கின்றது.

படித்திருந்தாலாவது
பரவாயில்லை என்று
பாமரப்பெண் சிந்திக்க,
படிக்காமலிருந்தாலாவது
பரவாயில்லை என்று
படித்தபெண் சிந்திக்க,
பெண்கள் இங்கே தவிப்புத் தீவுகள்

என்னும் பொன்மணி வைரமுத்துவின் கவிதையில், படித்திருந்தால் படிக்காமலிருந்தால், பாமரப் பெண் படித்த பெண் என முரண்பாடுகள் அமையக் காண்கிறோம். „இக்கரைக்கு அக்கரை பச்சை" என்னும் பழமொழிச் சாயலினது இது.

### அங்கதம்

அங்கதம் என்பது நகைச்சுவையும், புலமை நுட்பமும், திறனாய்வு நோக்கும் கொண்ட ஓர் இலக்கிய உத்தி. இது மக்கட் சமுதாய மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. தீங்கையும், அறிவின்மையையும் கண்டனம் செய்வது மனிதகுலக் குற்றம் கண்டு சினம்கொண்டு சிரிப்பது. தொல்காப்பியரும் அங்கதம் குறித்துக் குறிப்பிட்டுள்ளார்.

எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்புமொழி என்ப

என்பது தொல்காப்பியம்.

### மரபுக்கவிதையில் அங்கதம்

ஔவையார், தொண்டைமானின் படைக்கலக் கொட்டிலில் புதியனவாகவும், அதியமானின் படைக்கலக் கொட்டிலில் வடிவம் சிதைந்து பழையனவாகவும்

படைக்கலன்கள் இருந்தனவாகத் தூது சென்ற இடத்தில் தொண்டைமானிடம் தெரிவிக்கிறார்.

இவ்வே
பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய்யணிந்து,
கடியுடை வியல்நக ரவ்வே அவ்வே,
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ ! . . .

எனவரும் அப்புறநானூற்றுப் பாடல், “அதியமான் பல போர்கள் கண்ட திறமுடையவன், தொண்டைமானாகிய நீ போர்களைக் காணாதவன், அவனை நீ வெல்வது அரிது” என்பதான பொருளை அங்கதமாகக் கொண்டிருக்கின்றது.

**புதுக்கவிதையில் அங்கதம்**

அங்கதம் புதுக்கவிதையில் சிறப்புறப் பயன்படுத்தப் பெறுகின்றது. ஈரோடு தமிழன்பன், அரசியல்வாதிகள் மனிதநேயமின்றி இருத்தலைக் குறித்துக் கூறும் கவிதை இத்தகையது.

எங்கள் ஊரில்
ஒருவர் ஊராட்சி உறுப்பினரானார்
ஒன்றியத் தலைவரானார்
சட்டமன்ற
உறுப்பினரானார்
அமைச்சரானார்
அயல்நாட்டுத் தூதரானார்
இறுதிவரை ஒருமுறைகூட
மனிதராகாமலே
மரணமானார்

என்பது அக்கவிதை.

**சிலேடை**

ஒருவகைச் சொற்றொடர், பலவகைப் பொருள்களைத் தருவதாக அமைவது சிலேடை ஆகும்.

**மரபுக்கவிதையில் சிலேடை**

காளமேகப் புலவர் சிலேடை பாடுவதில் சிறந்து விளங்குகின்றார். அவர் பாடிய பாம்புக்கும் எள்ளுக்குமான சிலேடை வருமாறு:

ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேஇரையும்
மூடித் திறக்கின் முகம்காட்டும் - ஓடிமண்டை
பற்றின் பரபரென்னும் பாரில்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம்பு எள்ளெனவே ஓது.

இப்பாடலில்,

- குடத்தடைதல் - பாம்புக் கூடை எண்ணெய்க்குடம்
- இரைதல் - உஸ் என்னும் ஓசை செக்கு ஓசை
- முகம் காட்டல் - பாம்பு முகம் பார்ப்பவர் முகம்
- மண்டை பற்றல் - விடம் தலைக்கேறல் தலையில் பரவுதல்
- பிண்ணாக்கு - பிளவுபட்ட நாக்கு எள்ளுப் பிண்ணாக்கு (பிள் ு நாக்கு)

என்பனவாகப் பொருள் அமையும்.

**புதுக்கவிதையில் சிலேடை**

சிலேடைகள் புதுக்கவிதையில் அரிதாகவே காணப்படுகின்றன.

என்னை
எவரெஸ்டாகப் பார்க்கும்
இந்த ஊரின் பார்வையில்
என் வீழ்ச்சி
மிகப் பெரிய வீழ்ச்சியே
எனினும்
இது இயல்பானது
தடுக்க முடியாதது . . . . . . என் வீழ்ச்சி
நீர்வீழ்ச்சியே

என்னும் மீராவின் கவிதையில் „நீர் வீழ்ச்சி - நீர் மேலிருந்து கீழ்விழுதல் அருவி" எனப் பொருளமைந்தது. வீழ்தல் நீருக்கு இயல்பானது தானே !

**பிறிதுமொழிதல்**

சொல்ல வந்ததை நேரடியாகச் சொல்லாமல், வேறொரு கருத்தைக் கொண்டு பெறவைத்தல் பிறிதுமொழிதல் எனப்படும்.

### மரபுக்கவிதையில் பிறிதுமொழிதல்

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

என்னும் திருக்குறளில் பிறிதுமொழிதல் இடம்பெற்றுள்ளது. குறளின் பொருள், "மிக மென்மையானவையே ஆயினும் மயிலிறகுகளை அளவுக்கதிகமாய் ஏற்றினால் வண்டியின்அச்சு முறிந்துவிடும் என்பதாகும். எளியவர்களே யாயினும் பல பகைவர்கள் ஏற்பட்டால், ஆற்றல் படைத்த ஒருவரும் அவர்களால் தோல்வியுற நேரலாம்" என்னும் கருத்தை விளக்க வந்தது இக்குறட்பா.

### புதுக்கவிதையில் பிறிதுமொழிதல்

புதுக்கவிதையில் "குறியீடு" எனக் குறிக்கப் பெறுவது இது எனலாம். குறியீடு என்பது ஒரு பொருளுக்குப் பதிலாக மற்றொரு பொருளைப் பதிலியாகக் காட்டுவதாகும். காட்டப்படும் பொருள் ஒன்றாகவும், உணர்த்தப்படும் பொருள் ஒன்றாகவும் அமைந்து மறைமுகமாகப் படைப்பாளர், வாசகருக்கு உணர்த்த விரும்பிய பொருளினை உணர்த்தவல்லது குறியீடு.

அஞ்சு விரலும்
ஒன்றுபோலிராது
என்பது உண்மைதான்
அதற்காக நடுவிரல் மட்டும்
நாலடி வளர்ந்தால்
நறுக்காமலிருக்க முடியுமா?

என்னும் மு.கு.ஜகந்நாத ராஜாவின் கவிதையில், நடுவிரல்- களையப்பட வேண்டிய தீமையைச் சுட்டி நிற்கின்றது.

### தற்குறிப்பேற்றம்

இயல்பாக உள்ள பொருளின்மீதோ, இயல்பாக இயங்கும் பொருளின்மீதோ கவிஞன் தானாக ஒரு கருத்தை ஏற்றிக் கூறுதல் தற்குறிப்பேற்றம் ஆகும்.

### மரபுக்கவிதையில் தற்குறிப்பேற்றம்

நட்சத்திரங்களைக் குறித்துச் சிவப்பிரகாசர் பாடும் பாடல் பின்வருமாறு:

கடல்முரசம் ஆர்ப்பக் கதிர்க்கயிற்றால் ஏறி
அடைமதி விண்கழைநின்று ஆடக் - கொடைமருவும்

எங்கள் சிவஞான ஏந்தல் இறைத்தமணி
தங்கியவே தாரகைகள் தாம்

இப்பாடல், கடலாகிய முரசு முழங்க, கதிராகிய கயிற்றில் ஏறி, வானமாகிய மூங்கிலில் நின்று ஆடக்கூடிய சந்திரனாகிய கூத்தாடிக்குச் சிவஞானி (சிவப்பிரகாசரின் குருநாதர்) வாரி வழங்கிய பொற்காசுகளே நட்சத்திரங்களாகும் என்பதாகப் பொருள் தருகின்றது.

### புதுக்கவிதையில் தற்குறிப்பேற்றம்

கடிகார முட்களைக் கொண்டு, சமுதாய ஏற்றத்தாழ்வைச் சுட்டுகின்றார் மு.மேத்தா.

ஏ, கடிகாரமே
பேச்சை நிறுத்தாத
பெரிய மனிதனே !
குதிக்கும் உன்னுடைய
கால்களில் ஒன்று ஏன்
குட்டையாய் இருக்கிறது?
காலங்கள்தோறும்
இருந்துவருகிற
ஏற்றத் தாழ்வை
எடுத்துக் காட்டவோ?

என்னும் கவிதையில் சிறிய முள், பெரிய முள் பேதம் - சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வைச் சுட்ட அமைந்ததாகக் கவிஞர் தம் கருத்தை ஏற்றியுரைக்கின்றார்.

### தொன்மம்

புராண இதிகாச வரலாறுகளை உடன்பாட்டு நிலையிலோ எதிர்மறைநிலையிலோ, உள்ளவாறோ மாற்றியோ எடுத்துரைப்பது தொன்மம் ஆகும்.

### மரபுக்கவிதையில் தொன்மம்

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்இனி(து) ஏனையவர் பேசுற்ற
இன்சொல் பிறிதென்க - ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ, நன்னுதால்! ஒண்கருப்பு வில்லோன்
மலரோ விருப்பு (நன்னெறி)

என்னும் பாடலில், சாக்கிய நாயனார் சிவலிங்கத்தின்முன் வழிபடும் நோக்கத்தோடு கல் எறிந்தது விருப்பத்திற்குரியதாயிற்று. "மன்மதன் மலரம்புகளை வீசினான் எனினும் சிவபெருமானின் தவத்தைக் கலைக்க வீசப்பட்டதாதலின் வெறுப்புக்குரியதாயிற்று" எனப் புராண வரலாற்று நிகழ்வுகள் சுட்டப் பெறுகின்றன.

### புதுக்கவிதையில் தொன்மம்

தொன்மக் குறியீடு என்பதாக இது புதுக்கவிதையில் சுட்டப்பெறுகின்றது. இன்றைய அரசியல் உலகில் சுயநலம் கருதி அடிக்கடி கட்சித்தாவல் செய்யும் அரசியல்வாதிகளின் செயல்களை,

தாயங்களில் - சகுனி
வெற்றிச் சரிதத்தின் அத்தியாயங்கள்
வளர்க்க வளர்க்க . . .
மாயக் கண்ணன்
கட்சி மாறுகிறான்

எனப் பாரதக்கதையை மாற்றியமைத்துள்ளார் ஈரோடு தமிழன்பன்.

### உரையாடற்பாங்கு

உரைநடையில் அமையும் நாடகம், நாவல் ஆகியவற்றில் மட்டுமன்றிச் செய்யுளிலும் உரைநடை அமைவதுண்டு. கலித்தொகை, சிலப்பதிகார வழக்குரை காதை, காப்பியங்கள், தனிப் பாடல்கள் எனப் பலவற்றில் உரையாடற்பாங்கு மரபுக்கவிதையில் அமைந்துள்ளமையைக் காண்கிறோம்.

### மரபுக்கவிதையில் உரையாடற்பாங்கு

சிவப்பிரகாசர், தம் இளவல்களுக்கு மணம் செய்வித்து வாழ்த்தியபோது பாடிய தனிப்பாடல் வருமாறு:

அரனவ னிடத்திலே ஐங்கரன் வந்துதான்
ஐயஎன் செவியை மிகவும்
ஆறுமுகன் கிள்ளினான் என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே அண்ணன்என் சென்னியில்
விளங்குகண் எண்ணினன் என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ அப்படி
விகடம் ஏன்செய் தாய்என

மருவும்என் கைந்நீள முழம்அளந் தான் என்ன
மயிலவன் நகைத்து நிற்க
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கி நின் மைந்தரைப்
பாராய் எனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டம்
பமாப் பெற்ற கன்னி
கணபதியை அருகழைத்து அகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக்காக்கவே

இதில் விநாயகனுக்கும் முருகனுக்குமிடையிலான விளையாட்டுச் சண்டையும் முறையீடுகளும் இடம் பெற்றுள்ளன.

**புதுக்கவிதையில் உரையாடற்பாங்கு**

அரசியல்வாதியிடம் நிருபர் பேட்டியெடுப்பதாய் ஈரோடு தமிழன்பன் கவிதை வழங்குகிறார்.

தாங்கள் தவறாது
படிக்கும் பத்திரிகை எது?"
படிப்பது வழக்கமில்லை
பத்திரிகைகளுக்குச் செய்தி
வழங்குவது வழக்கம்
"தாங்கள் அரசியல்துறவு
பூணுவதாக
எண்ணம் உண்டா?"
இல்லை. . .
அரசியல்வாதிகளை
அநாதைகளாக்கமாட்டேன் நான்

**இருண்மை**

இருண்மை (Obscurity) என்பது, கவிஞனுக்கும் வாசகனுக்கும் இடையில் கருத்துப் பரிவர்த்தனை முழுமையாக நடைபெறாத நிலையைச் சுட்டுவதாகும். இதற்கு வாசகனும் காரணம் கவிஞனின் சோதனை முயற்சியும் காரணம். புரியாததுபோல் இருந்து படிக்கப் படிக்கப் புரியத் தொடங்கும் படிமுறைப் புரிதலை உடையது இது.

**மரபுக்கவிதையில் இருண்மை**

மரபுக்கவிதையின் பொருள், அகராதி கொண்டு புரிந்துகொள்ளத்தக்கதாக உள்ளதே தவிரப் புரியாமல் இல்லை. எனினும், குழூஉக்குறியாகப் பல்வேறு சொற்களைச் சித்தர்கள் கலைச் சொற்களாகக் கொண்டு பாடி வைத்துள்ளனர்.

**புதுக்கவிதையில் இருண்மை**

பொருளைச் சொல்ல விரும்பாமல், உணர்த்த விரும்பும் இருண்மை உத்தி புதுக்கவிதைகளிலேயே மிகுதியும் கையாளப் பெறுகிறது. மாடர்ன் ஆர்ட் போன்றது இது எனலாம்.

நிஜம் நிஜத்தை நிஜமாக
நிஜமாக நிஜம் நிஜத்தை
நிஜத்தை நிஜமாக நிஜம்
நிஜமும் நிஜமும் நிஜமாக
நிஜமோ நிஜமே நிஜம்
நிஜம் நிஜம் நிஜம்.

என்னும் ஆத்மாநாமின் கவிதை இத்தகையது. இவ்வாறு உத்திமுறைகள் இருவகைக் கவிதைகளிலும் சிறந்து விளங்கக் காண்கிறோம்.

**நாடும் மொழியும்**

பாரதியார் பாடல்களில் பாரத நாட்டின் பாரம்பரியப் பெருமை,அந்நியர் எதிர்ப்பு, தாயின் மணிக்கொடி, சுதந்திரத்தின் பெருமை, தமிழ் மொழி, தமிழ்நாடு முதலிய கருத்துகள் பாடுபொருளாய் விளங்குகின்றன. இந்தப் பாடல்கள் பாரத நாட்டு மக்களிடம் நாட்டின் நிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தின.

ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு அந்நிய நாட்டவர் பலர் இந்தியாவின் மீது படையெடுத்திருந்தனர். அப்போதெல்லாம் பாரத நாட்டு மக்கள் அவர்களை வெளியேற்ற ஒன்று திரண்டு எழவில்லை. ஆனால் ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை பெற வேண்டும்என்ற உணர்வு அவர்களிடம் மேலோங்கியிருந்தது. இதைக் கண்ட பாரதி அவர்களுக்கு நாட்டுப் பற்றை வளர்க்கும் வண்ணம் தேசியப் பாடல்கள் பல பாடியிருக்கிறார். தம் தாய் நாட்டின் பெருமைக்காகக் கவிதையைக் காணிக்கையாகப் படைத்த பாரதியார், தாய் நாடு உயர வேண்டுமெனில் தாய் நாட்டின் அங்கமாக விளங்கும் பல்வேறு மொழிகள், மாநிலங்கள் ஆகியவை வளம் பெற வேண்டும் என்று கருதியிருக்கிறார்.

தாய்மொழி என்பது மதர் டங் (mother tongue) என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். தாய்மொழி என்னும் சொல்லுக்கு “வீட்டு வார்த்தை”என்ற தூய

தமிழ்ச் சொல்லைப் போகின்ற பாரதம் என்னும் பாடலில் பாரதி கூறியிருப்பதைக் காணலாம். இங்ஙனம் தமிழ் உணர்வையும் தேசிய உணர்வையும் இணைத்து,

**செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்**
**தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே (செந்தமிழ் நாடு - 1)**

என்று தமிழோடு தேசியத்தையும், நாட்டையும் போற்றுகிறார்.

### தேசியத் தலைவர்களும் பிற நாடுகளும்

பாரதியார் இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட தேசபக்தத் தலைவர்களைப் பாடுபொருளாகக் கொண்டு பாடல்கள் பாடியிருக்கிறார். மேலும் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட இத்தாலி நாட்டு மாஜினியைப் பற்றி பாடியுள்ளார். மக்கள் புரட்சி நடைபெற்ற பெல்ஜியம், உருசியா போன்ற நாடுகளும் அவருக்குப் பாடுபொருளாக ஆயின.

### சமுதாய முன்னேற்றம்

பாரதியார், பாரத சமுதாயத்தில் காணப்பட்ட குறைகளைக் கண்டு வருந்தி, சமுதாய ஒற்றுமையின்மைக்குக் காரணம் சாதி சமய வேறுபாடு என்று உணர்ந்தார். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கோட்பாட்டைத் தம் பாடல்கள் வழி உணர்த்துகிறார். இயற்கையின் அழகைப் பாடினார், ஆற்றலைப் போற்றினார், உழைப்பைப் புகழ்ந்தார். மூட நம்பிக்கையைவெறுத்தார். தீண்டாமையை ஒழிக்க ஆறில் ஒரு பங்கு என்னும் கதை எழுதினார். இறை உணர்வைப் போற்றினார். தொழிலை மதித்தார். மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி காட்டும் பாடல்கள் பாடிக் குவித்தார். பாரதி போல் வேறு எந்தக் கவிஞரும் முதன்முதலாகப் பல வகையான பாடுபொருள்களைக் கொண்ட பாடல்கள் பாடவில்லை. பாரதியார் பாடல்களின் பாடுபொருள் அவருடைய புதுமை உள்ளத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது.

### பெண்கள் முன்னேற்றம்

பாரதியார் இந்திய சமுதாயத்தில் உள்ள சீர்கேடுகளைக் களைந்தால் மட்டுமே இந்தியா முன்னேற்றம் அடையும் என்று கருதினார். சமுதாயம் முன்னேற வேண்டுமென்றால் மக்கள் தொகையில் சரி பாதியாக இருக்கும் பெண்கள் முன்னேற வேண்டும் என்று அவர்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தினார் பாரதி. ஆகவே,

பெண்ணுக்கு விடுதலையும் வாழ்வும் வேண்டும் என்று பாடியிருக்கிறார். பெண் விடுதலையை மையக் கருத்தாகக் கொண்டு பாரதி பாடிய,

**பெண்ணுக்கு விடுதலை நீரில்லை என்றால்**

**பின்னிந்த உலகினிலே வாழ்க்கை யில்லை (பாரதி அறுபத்தாறு, பெண் விடுதலை - 45)**

என்னும் பாடல் பெண்ணுக்கு விடுதலை இல்லை என்று சொன்னால் இந்த உலகத்தில் வாழ்க்கையே இல்லை என்று காட்டுகிறது.

இந்தியாவில் மட்டுமன்றிக் கடல் கடந்து அடிமைப்பட்டு வாழும் பெண்களின் விடுதலைக்காகவும் பாரதி பாடியிருக்கிறார். ஆங்கிலேயர் "பிஜி தீவி"ல் உள்ள கரும்புத் தோட்டத்தில் வேலை செய்ய இந்தியப் பெண்களை அழைத்துச் சென்றனர். அங்கு அவர்களை அடிமைப்படுத்தியது மட்டுமன்றி போகப்பெருளாகவும் பயன்படுத்திய கொடுமையை,

**....................................... செக்கு**

**மாடுகள் போலுழைத்து ஏங்குகின்றார்**

**நெஞ்சம் குமுறுகிறார் - கற்பு**

**நீங்கிடச் செய்யும் கொடுமையிலே (கரும்புத் தோட்டத்திலே - 4)**

என்று பாடி அவர்கள் விடுதலை பெறக் குரல் கொடுக்கிறார் பாரதி.

## திரையிட்டு முகம் மறைத்தல்

இஸ்லாமியர் வரவால் இந்தியப் பெண்கள் திரையிட்டு முகத்தை மறைக்கும் பழக்கத்தைப் பாரதியார் சிறிதளவும் விரும்பவில்லை. தேவையற்ற பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்ற எண்ணத்தில்,

தில்லித் துருக்கர் செய்த வழக்கமடி - பெண்கள்
திரையிட்டு முகமலர் மறைத்து வைத்தல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
பண்டை
ஆரியப் பெண்களுக்குத் திரைகள் உண்டோ? (கண்ணம்மா என் காதலி, 18-1, 2)

என்று பாடி, இந்திய நாட்டுப் பெண்கள் இந்தியப் பண்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இது பாரதியாரின் சுதேச உணர்வை வெளிப்படுத்துகின்றது.

**பெண் விடுதலை பெறும் வழி**

பெண் விடுதலை பெற சாத்வீக முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று விரும்பினார் பாரதி. பெண்ணுக்கு அநீதி இழைப்பவர் யார்? ஆண்கள். அந்த ஆண்கள் பெண்களுக்கு அண்ணன், தம்பி, தந்தை, மாமன், மைத்துனன், கணவன், காதலன் என்னும் உறவுகளால் கட்டுண்டிருக்கிறார்கள். அவர்களை ஆயுதங்களால் எதிர்க்க இயலாது.

எனவே சாத்வீக முறைப்படி ஆண்களுக்குப் புத்திவரும்படி செய்ய வேண்டுமென்று பாரதி எடுத்துரைக்கிறார். தென் ஆப்ரிக்காவில் இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயத்தை மகாத்மா காந்தி நியாயத்தால் வெல்ல நினைத்த அதே முறையைத் தான் பெண்கள் கையாள வேண்டும் என்கிறார் பாரதி.

**பண்பாட்டைப் பேணுதல்**

ஐரோப்பாவில் மனிதர்கள் தாங்கள் விரும்பியவருடன் வாழலாம் என்று கூறும் விடுதலைக் காதலை (free - love) வன்மையாகக் கண்டிக்கிறார் பாரதி. இந்தியப் பண்பாட்டிற்கு ஒவ்வாத பழக்கங்களை விட்டு விடக் கூறுகிறார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பாரத நாட்டு மக்களால் கட்டிக் காக்கப்பட்டு வருவது இந்திய நாட்டுப் பண்பாடு.

அதுவே இந்திய நாட்டின் சமூக மூலதனம் (social capital) ஆகும். அந்தச் சமூக மூலதனம் குறைந்தால் கலாச்சாரச் சீரழிவு ஏற்படும்.ஆகவே. சமூக மூலதனத்தைக் காக்கும் எண்ணத்தில் விடுதலைக் காதலைக் கண்டித்துப் பாடுகிறார் பாரதி. தனி மனிதன் உயர்ந்தால் சமுதாயம் உயரும். சமுதாயம் உயர்ந்தால் நாடு உயரும். ஆகவே,

காதலிலே விடுதலை யென்று ஆங்கோர் கொள்கை
கடுகி வளர்ந்திடு மென்பார் யூரோப்பாவில் . . .
வீரமிலா மனிதர் சொலும் வார்த்தை கண்டீர்
விடுதலையாம் காதலெனிற் பொய்மைக் காதல்! . .
ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையும் கற்பழிந் திடாதோ?

(பாரதி அறுபத்தாறு , 55-56)

என்று காதலிலே விடுதலை என்ற போக்கைக் கண்டிக்கிறார் பாரதி. இல்லற வாழ்க்கையின் உயர்வை எக்காரணம் கொண்டும் அவர் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை என்பதை இப்பாடல் காட்டுகிறது.

**குழந்தைகள் - எதிர்கால வித்துகள் - சமுதாயச் சிற்பிகள்**

இன்றைய குழந்தைகள் எதிர்காலத் தலைவர்கள். மனித வாழ்வில் குழந்தைப் பருவமே மிக முக்கியமானது. இவ்வுண்மையை உணர்ந்து, குழந்தைகள் முறையாக வளர்க்கப்பட்டால் நாட்டிற்கு நன்மை பயக்கும். பாப்பாப் பாட்டுத் தமிழ் இலக்கியத்தில் புதுத்துறை. பாரதியாருக்கு முன்பு யாரும் குழந்தைப் பாடல் பாடவில்லை. குழந்தைகளின் உள்ளம் எதையும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் உள்ளதாகும். பெற்றோரும் மற்றவரும் கூறும் நல்ல கருத்துகள் அவர்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதியும். எனவே, குழந்தைகளின் மனம் கொள்ளும் வகையில் அறிவுரை கூறுகிறார் பாரதி. குழந்தையை அச்சுறுத்தியோ, கட்டுப்படுத்தியோ ஒன்றைக் கூறினால் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆகவே, குழந்தையின் மனவியல் (psychology) அறிந்த பாரதி, பாப்பாவை அன்போடு அழைத்து,

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

(பாப்பா பாட்டு - 1)

(வையாதே, ஏசாதே, பழித்துரைக்காதே)என்று பாடியிருக்கிறார்.

இதில் சோம்பியிருத்தல் ஆகாது, யாரையும் வசை சொல்லக் கூடாது, நாய், பசு போன்ற விலங்குகளிடம் அன்பு காட்ட வேண்டும், பாடம் படிக்க வேண்டும், பொய் சொல்லக் கூடாது, தாய் நாட்டுப் பற்று வேண்டும், சாதி வேறுபாடு கூடாது, ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றெல்லாம் குழந்தைகளுக்கு அறிவுரை கூறுகிறார். பாரதிக்குப் பெருமை சேர்த்த பாடல்களுள் ஒன்று சிறுவர்க்கு ஏற்ற எளிய சொற்களில் பாடலை இயற்றியிருப்பதாகும்.

கவிதைக்கான சூழலை உருவாக்கிப் படைக்கத் துண்டுதல் கவிதை என்பது இலக்கியப் படைப்பின் ஒரு வடிவமாகும், இதன் மூலம் உணர்வுகள், நிகழ்வுகள், கருத்துக்கள் மற்றும் உண்மைகள் கூட வெளிப்படுத்தப்படுகின்றன. பல்வேறு வகையான கவிதைகள் உள்ளன, இது தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு அனுப்பப்படும் கலை. இது குகை மனிதர்களின் சகாப்தத்தைப் போலவே செல்கிறது.

கதைசொல்லிகள் தங்கள் கதைகளை கவிதைப் பாடல்களாகப் பாடினர், அங்கு அவர்கள் நடந்த நிகழ்வுகளைப் பற்றி சொன்னார்கள் அல்லது சில சமயங்களில் எதிர்காலத்தைப் பற்றியும் பேசினார்கள். சரணங்கள், ஜோடி, ஹைக்கூ, காவியங்கள், கதைகள் போன்ற கவிதைகளில் வரிகளின் தொகுப்பாகக் கருதப்படும் இடைநிறுத்தங்களுடன் அவர்கள் பாடினர்.

கவிதையும் மக்களை அவர்களின் கற்பனைகளால் மாற்றப்பட்ட உலகத்திற்கு அழைத்துச் சென்றது. மொழிகள் வளர்ந்த போது, பல்வேறு நாகரிகங்களைச் சேர்ந்த அறிஞர்கள் மற்றும் கவிஞர்கள் மன்னர்கள், ராணிகள் மற்றும் அவர்களின் ராஜ்யங்களைப் பற்றி எழுதியுள்ளனர், இது அந்தக் காலத்தில் என்ன நடந்தது என்பதைப் பற்றிய நுண்ணறிவை நமக்கு வழங்குகிறது.

"கவிதை என்பது ஒரு உணர்ச்சி தன் எண்ணத்தைக் கண்டுபிடித்து, சிந்தனை வார்த்தைகளைக் கண்டடைவது"

கவிதை பற்றிய சில சுவாரஸ்யமான உண்மைகள் இங்கே தரப்பட்டுள்ளது.

### உலகின் மிக நீளமான கவிதை

இந்திய இதிகாசமான மகாபாரதம் உலகின் மிக நீளமான கவிதை. இது சுமார் 20,000 வசன வரிகளையும், 1.8 மில்லியன் சொற்களையும் கொண்டுள்ளது. இந்த இந்திய காவியம் 600 ஆண்டுகளுக்கும் மேலாக எழுதப்பட்டதாக மக்கள் நம்புகிறார்கள், ஏனெனில் இது கிமு 400 இல் தேதியிட்டதாக நம்பப்படுகிறது. மகாபாரதம் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட ஒரு பழங்கால காவியம். இது பாண்டவர்கள் மற்றும் கௌரவர்கள் ஆகிய இரு குடும்பங்களின் கதையையும் அவர்களின் போராட்டங்களையும் கூறுகிறது.

### உலக கவிதை தினம்

மார்ச் 21 உலக கவிதை தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் கவிஞர்கள் மற்றும் கவிதைகள் இலக்கியப் படைப்புகளுக்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டி கௌரவிக்கப்படுகின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட சிறந்த கவிதைகள் நினைவுகூரப்படுகின்றன. நம் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த கவிதைகள் உலகம் முழுவதும் பகிரப்படுகின்றன, மேலும் நம் எண்ணங்களை அழகான வார்த்தைகளால் செதுக்கப்பட்ட காகிதமாக மாற்றுவது ஒரு பரிசு. எனவே, கவிதைகள் பெரும்பாலும் சமூக ஊடகங்களில் பகிரப்படுகின்றன, அவை ஒரு நபரின் தனிப்பட்ட அனுபவங்களைத் தொடுகின்றன.

### பழமையான காவியக் கவிதை

கில்காமேஷ் என்பது மிகப் பழமையான காவியமாகும், இது கிமு 3 ஆம் ஆண்டு மெசபடோமியாவில் உள்ள உருக்கின் ஆட்சியாளரைப் பற்றியது. கில்காமேஷ் ஒரு பகுதி மனிதனாகவும், கடவுளின் ஒரு பகுதியாகவும் அறியப்பட்டான். அவருடைய ஆட்சி மற்றும் ராஜ்யத்தைப் பற்றி கவிதை பேசுகிறது. இந்த காவியம்

அக்காடியன் மொழியில் சின்-லேகி-உன்னின்னி என்று அழைக்கப்படும் எழுத்தாளரால் எழுதப்பட்டது.

பிரபல சீனக் கவிஞர், லி-போ சந்திரனின் பிரதிபலிப்பை அடைய முயன்றபோது இறந்தார். அலைந்து திரிவதற்கும் குடிப்பழக்கத்திற்கும் பெயர் பெற்ற சீனக் கவிஞர் நீதிமன்ற வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு பல கவிதைகளை எழுதியுள்ளார். ஆனால் அவர் அடிக்கடி குடிபோதையில் இருந்ததாகவும், வெளிப்படையாகப் பேசுவதாகவும் இருந்தது, இதனால் அவர் நீதிமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அவர் குடிபோதையில் மூழ்கி இறந்தபோது தனது கேனோவில் இருந்து சந்திரனின் பிரதிபலிப்பை அடைய முயன்றதாக புராணங்கள் நம்புகின்றன.

**கவிதைகளின் வகைகள்**

கவிதைகள் வரிகளின் வரிசையில் எழுதப்படுகின்றன, ஒவ்வொன்றும் ஒரு வகை. ஒவ்வொரு சரணத்திலும் பயன்படுத்தப்படும் வரிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் சுமார் 15 வகையான கவிதைகள் உள்ளன. இந்த 15 வகைகள் வெற்று வசனம், ரைம் கவிதை, கதை கவிதை, சொனட், ஹைக்கூ, இலவச வசனம், காவியங்கள், எலிஜிஸ், பாடல் கவிதை, லிமெரிக், ஓட், ஆயர் கவிதை, வில்லனெல்ல், தனிப்பாடல் மற்றும் பாலாட்.இந்திய ஷேக்ஸ்பியர் மற்றும் இந்தியக் கவிஞர்களின் இளவரசர் இந்தியாவில் சமஸ்கிருதத்தின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவரான காளிதாசர் இந்திய ஷேக்ஸ்பியர் என்றும் இந்தியக் கவிஞர்களின் இளவரசர் என்றும் அறியப்படுகிறார். இவரது நாடகங்கள் மற்றும் கவிதைகள் பெரும்பாலும் வேதங்கள், மகாபாரதம், ராமாயணம் மற்றும் புராணங்களை அடிப்படையாகக் கொண்டவை. 5ஆம் நூற்றாண்டில் பிறந்தவர். அவரது புகழ்பெற்ற படைப்பான மேகதூதம் 120 சரணங்களைக் கொண்ட கவிதை. இது முதன்மையாக ஒரு காதல் கவிதை. கவிஞர் காளிதாசனின் இந்திய நிலப்பரப்பு, புவியியல், அந்தக் காலத்தில் பின்பற்றப்பட்ட கலாச்சாரம் பற்றிய ஆழமான அறிவையும் கவிதை காட்டுகிறது.

அமைதிக்கான நோபல் பரிசை வென்ற முதல் ஆசியர் ரவீந்திரநாத் தாகூர். 1913 ஆம் ஆண்டு தனது கீதாஞ்சலி என்ற படைப்பிற்காக முதல் ஆசிய அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். அது ஒரு கவிதைத் தொகுப்பு. அவர் பல பிரபலமான கவிதைகளை முதன்மையாக பெங்காலியில் எழுதியுள்ளார். நமது இந்திய தேசிய கீதத்தை முதலில் பெங்காலி மொழியில் எழுதிய கவிஞர் அவர். பின்னர் இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டது. கவிதை என்பது உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஒரு வடிவம். கவிதைகள் பொதுவாக உணர்ச்சிகளின் வெளிப்பாடு. ஒரு தனிமனிதன் அல்லது ஒரு கவிஞரால் உணரப்படும்

மற்றும் கவனிக்கப்படும் எண்ணங்கள் மற்றும் உணர்வுகள் வார்த்தைகளில் வைக்கப்படுகின்றன, சூழ்நிலை, செயல்முறை, பார்வை அல்லது சில நேரங்களில் ஒரு உள் உணர்வை விவரிக்கின்றன. ஒரு கவிதையில் எதையும் எழுதலாம், ஆனால் அதுவே தனித்து நிற்கிறது. அது உண்மையிலேயே ஒரு மாற்றத்தைக் கொண்டுவருகிறது, வாசகனை உணரவும், கவிதையின் பின்னால் உள்ள எண்ணங்களை அடையாளம் காணவும் செய்கிறது.

கவிதை வரலாற்றை உயிர்ப்பிக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு என்ன நடந்தது மற்றும் நாகரிகங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பது பற்றி இன்று நாம் நிறைய அறிவோம். அந்தத் தகவல்கள் அனைத்தும் நம்மைச் சென்றடைந்ததற்குக் காரணம், பண்டைய காலங்களிலிருந்து அறிஞர்கள் எழுதிய இலக்கியங்கள்தான். பண்டைய இலக்கியங்களில் பெரும்பாலானவை கவிதை வடிவில் எழுதப்பட்டுள்ளன. இந்தக் கவிதைகள் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பல சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வில் உள்ளன.

கவிதைகள் கற்பனையாகவும் இருக்கலாம் என்றாலும், சில உண்மைகள் மற்ற ஆதாரங்களில் இருந்தும் உண்மைகளை உறுதிப்படுத்த ஆழமாக ஆராயப்படுகின்றன. அறிவியலைத் தொடர்புகொள்ள கவிதை உதவுகிறது ஒவ்வொருவரும் ஏதோவொன்றில் நிபுணத்துவம் பெற்றவர்கள் மற்றும் அவர்களின் அறிவு ஆழமாக இருக்கலாம். கவிதை என்பது ஒரு பெரிய பார்வையாளர்களை சென்றடைவதற்கான ஒரு வடிவமாகும், மேலும் விஞ்ஞானிகள், அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்கள் கவிதைகளை எழுதினர், இதன் மூலம் அவர்கள் அறிவியலின் பல்வேறு உண்மைகளைப் பற்றி சாமானியர்களுக்குத்தெரிவிக்கின்றனர்.

உதாரணமாக, நிகழும் சுற்றுச்சூழல் மாற்றங்கள் மற்றும் நமது வளங்களை நாம் எவ்வாறு சேமிக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்த கவிஞர்கள் எழுதிய பல்வேறு கவிதைகள் உள்ளன.

1953 இல் ஜேன் ஹிர்ஷ்ஃபீல்ட் எழுதிய புவி வெப்பமடைதல் பற்றிய அத்தகைய ஒரு பகுதி இங்கே உள்ளது.

"தனது கப்பல், முதலில் ஆஸ்திரேலியாவுக்கு வந்தபோது, குக் எழுதினார. பூர்வீகவாசிகள் மேலே பார்க்காமல் மீன்பிடிப்பதைத் தொடர்ந்தனர். மிகப் பெரியது புரிந்துகொள்ள முடியாதது என்று பயப்பட முடியவில்லை.

இலக்கிய உலகில், கவிதை எப்போதும் வார்த்தைகள் மற்றும் உணர்வுகள் இணைந்த வெளிப்பாடாக இருந்து வருகிறது. சமீபத்திய அரசியலமைப்பின்படி இந்தியா

22 மொழிகளைக் கொண்ட நாடாக இருப்பதால் கவிதையில் ஆர்வம் உள்ளவர்கள் வெவ்வேறு மொழிகளில் கவிதைகளை ரசித்துள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21 ஆம் தேதி சர்வதேச கவிதை தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளில், அனைத்து சிறந்த கவிஞர்களும் அவர்களின் கவிதைகளும் அங்கீகரிக்கப்பட்டு விருதுகள் மற்றும் பரிசுகளுடன் பாராட்டப்படுகின்றன. புதிய வளரும் கவிஞர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

உலகெங்கிலும் உள்ள மக்கள் தங்கள் கவிதைகளையோ அல்லது வேறு யாரோ அல்லது பிரபல கவிஞரோ எழுதிய தங்களுக்குப் பிடித்த கவிதைகளையோ பகிர்ந்து கொள்கிறார்கள். உங்களுக்குப் பிடித்தமான கவிதை இருக்கிறதா, அது நிறைய அர்த்தம் மற்றும் உங்கள் உணர்வுகளுக்கு மிகவும் நெருக்கமான ஒன்று? கருத்துகளில் பகிர்ந்து கொள்ளுங்கள், நாமும் ரசித்து பாராட்டுவோம்.

### தொகுப்புரை

- கவிதை என்பது அழகியல் உணர்ச்சியுடைய கற்பனை கருத்துக்களை வெளிப்படுத்துவதாகும். 19ம் நூற்றாண்டிற்குப் பிறகு கவிதை பல பரிமாணங்களில் வளர்ந்து வந்துள்ளது.
- மேலை நாடுகளில் கவிதையின் தோற்றம், வளர்ச்சி தமிழில் பாரதியார், பாரதிதாசனால் வளர்த்தெடுக்கப்பட்ட கவிதைகளின் பல்வேறு சமூகத் தாக்கங்கள் விளக்கப்பட்டுள்ளன.
- புதுக்கவிதையின் தோற்றம், வளர்ச்சி, பாடுபொருள் உத்திகள், அவற்றில் சமுதாய முன்னேற்றம், பெண் விடுதலை, பண்பாட்டைப் பேணுதல், குழந்தை வளர்ப்பு முறைகள் எல்லாவற்றையும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**தன்மதிப்பீட்டு வினாக்கள்:**

1. "புல்லின் இதழ்கள்" என்ற கவிதைத் தொகுப்பினை வெளியிட்டவர்
   அ) ரிம்பாடு ஆ) ஸ்டீபன் இ) வால்ட் விட்மன் ஈ) எமர்சன்
   விடை: இ
2. மருமக்கள் வழி மான்மியம் நூலின் ஆசிரியர்
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கண்ணதாசன் ஈ) கவிமணி
   விடை: ஈ
3. பாரதியின் புதுக்கவிதை நூல் எது?
   அ) வசன கவிதை ஆ) பாஞ்சாலி சபதம்
   இ) கண்ணன் பாட்டு ஈ) குயில்பாட்டு விடை: அ
4. நகைத் துளிப்பா என்பது
   அ) ஹைக்கூ ஆ) லிமரைக்கூ இ) சென்ரியு ஈ) ரைம்
   விடை: இ
5. உலக கவிதை தினம்
   அ) மார்ச் - 20 ஆ) மார்ச் - 21 இ) மார்ச் - 22 ஈ) மார்ச் - 23
   விடை: ஆ

**குறுவினாக்கள்**

1. கவிதையின் தோற்றம் - வரையறு.
2. கவிதையின் பாடுபொருள்கள் யாவை?
3. தமிழில் புதுக்கவிதையின் தோற்றம் பற்றி விவரி.
4. மரபுக்கவிதை படைப்பாளர்கள் யாவர்?
5. நுமக்குத் தெரிந்த புதுக்கவிதை கவிஞர்கள் யாவர்?

**நெடுவினாக்கள்**

1. கவிதைக்கான இலக்கணம் கூறுக.
2. மரபுக்கவிதை - புதுக்கவிதை வேறுபடுத்து.
3. கவிதைக்கான சமூக கருப்பொருள்களை விவரி.
4. பாரதியாரின் கவிதை நடையினை ஆராய்க.
5. புதுக்கவிதையில் சமூகச் சிக்கல்களை ஆராய்க.

**பார்வை நூல்கள்**

1.அ.கி.பரந்தாமனார்- நல்ல தமிழ் எழுத வேண்டுமா? பாரி நிலையம், சென்னை-18.

2.ந.சுப்புரெட்டியா- தமிழ் பயிற்றும் முறை, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.

3.வல்லிக்கண்ணன்- புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை.

**இணையதள முகவரி**

1.Tamil Virtual University Library.www.tamilvu.org/library http://www.virtualvu.org/library

# அலகு - 3

**நோக்கம்:**

- ❖ சிறுகதையின் அறிமுகம் மற்றும் சிறுகதையின் தோற்றம் பற்றி மாணவர்கள் அறியச் செய்தல்.
- ❖ சிறுகதைகளின் வழி சமூகச் சிக்கல்களை ஆசிரியர்கள் வெளிப்படுத்திய திறனை மாணவர்களுக்குத் தெரிவித்தல்.
- ❖ சிறுகதைகளுக்கு தலைப்பிடும் முறையைக் கற்றுத்தருதல்.
- ❖ மாநில அளவிலானப் போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார் செய்தல்.

**அறிமுகம்**

இருபதாம் நூற்றாண்டின் புதுமலர்க் கொத்து நவீனங்கள் அதில் பூத்த மணமலர்களே சிறுகதையும், நாவல்களும், ஆகும். நாட்டுமக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளும், கற்பனை நிகழ்ச்சிகளுமே சிறுகதைகளாகவும், நாவல்களாகவும் மலர்ச்சி பெறுகின்றன. மேல்நாட்டார் தொடர்பால் இச்சிறுகதை இலக்கியம் நம் நாட்டில் சிறப்புற்றியிருப்பினும், நம் பழந்தமிழ் இலக்கியப் பாடல்கள் சிறுகதையின் இலக்கணம் பொருந்த அமைந்துள்ளன.

அப்பாடல்களின் பொருள் சிறுகதை ஒன்றினையே அமைத்துக் காட்டும் இயல்புடையன. அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, குறுந்தொகை, பரிபாடல் இவ்விலக்கியத்தில் காணப்படும் நிகழ்ச்சிகள் அழகிய சிறுகதையை நினைவூட்டக் கூடியவை. பழந்தமிழ் இலக்கியத்தின் சுவையான காட்சிகள் சிறந்த சிறுகதைக்கு எடுத்துக்காட்டாகும்.

எது சிறுகதை? என்ற கேள்விக்கு இப்படிப் பதிலளித்து விடலாம். முதலும் முடிவும் தெரிந்து கொள்ள முடியாத இந்த வாழ்க்கையின் ஒரு சின்னஞ்சிறு காட்சியோ, மின்னல் போன்ற நிகழ்ச்சியோ, மெல்லிய அசைவோ, சூறாவளியின் சுழற்சியோ, நீர்க்குமிழியின் வட்டமோ இப்படி ஏதாயினும் ஓர் அணுவின் சலனமே சிறுகதை, தினந்தோறும் நமது வாழ்வில் எத்தனை எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பொதுவாக மற்றவர்கள் காணத்தவறும் ஒன்றைக் கண்டாலும் உணரமுடியாத ஒன்றை உணர்ந்தாலும் வெளிப்படுத்த முடியாத ஒன்றைச் சிறுகதைக் கலைஞன் அனுபவித்து உணர்ந்து வெளிப்படுத்துகிறான். அளவில் மிகச் சிறிய கதையாக இருக்கலாம். பெரியதாகவும் இருக்கலாம்.

கதாபாத்திரங்கள் ஒன்றோ, பலவோ இருக்கலாம். கதை நடக்கும் காலம் கூட ஐந்து நிமிடமோ, ஒரு நாளோ, ஒன்பதாண்டுகளோ இருக்கலாம். ஆனால் கதையைப் படித்து முடித்த பின்பு ஒரே ஒரு உணர்ச்சி மட்டும் படிப்பவர் நெஞ்சில் நிறைய

வேண்டும். எழுதி முடித்த கதைக்குப் பின்னேயும் முன்னேயும் உள்ள எழுதாத கதைகள் படிப்போர் உள்ளத்தில் விரிய வேண்டும். இதில் வெற்றி பெற்றுவிட்டால் அ∴து அருமையான சிறுகதைச் சித்திரம் என்பதில் ஐயமில்லை. முழுமையான வாழ்வையோ வாழ்வின் பல கோணங்களையோ எதிர்பார்ப்பதற்கில்லை. பல்வேறு மனப்பண்புள்ள பாத்திரங்களின் உணர்ச்சி, அறிவு போராட்டமன்று. அதன் நிலைக்களம் வாழ்க்கையின் ஒரே ஒரு கோணம்.

வாழ்க்கை வெள்ளத்தின் ஒரே ஒரு களிப்பு, உணர்ச்சிப் பெருக்கின் ஒரே ஒரு திருப்பம், இவற்றுள் ஒன்று போதும், சிறுகதைக்கு. வீட்டுக்குள்ளே இருந்துகொண்டே நாம் சன்னல் வழியே வெளி உலகைப் பார்ப்பதில்லையா? அந்த சன்னல் வழிக் காட்சியே கதையின் வித்து. அந்தக் காட்சியில் அற்புதமான கற்பனை வண்ணங்களைத் தீட்டிக் கொடுக்கிறான் கலைஞன்.

கதைகள் எப்போது எங்கே பிறந்தன? கதை கேட்கும் ஆசை எப்போது எங்கெல்லாம் தோன்றியதோ, அதையடுத்தே அவை பிறந்திருக்க வேண்டும். வாழ்க்கை கதைகளால் உயர்ந்திருக்கிறது. மதங்கள் கதைகளால் வந்திருக்கின்றன, மனிதப் பண்புகள் கதைகளினால் மெருகேறியிருக்கின்றன. அரிச்சந்திரன் கதைகளில் ஈடுபாடு கொண்டு விளங்கினார் மகான் காந்தி. உரக்கதையால் தீரனாகத் திகழ்ந்தார் சிவாஜி. ஏசுநாதர் நீதிக்கதைகள்,ஈசாப் கதைகள், பஞ்ச தந்திரக்கதைகள் வேதாளக் கதைகள், புத்தர் நீதிக்கதைகள் இப்படிப் பலப்பலக் கதைகள் படிப்பினையே அடிப்படையாகக் கொண்டு தோன்றி இருக்கின்றன.

ஆனால் இவை உயர்ந்த குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் சிறந்த சிறுகதைகள் என்று சொல்ல முடியாதவை. படிப்பினைகளைத் தவிர உணர்ச்சி அழகும், கற்பனை மெருகும் சொல் நயமும், கவிதைப் பூக்களும் சிறுகதைகளுக்கு முற்றிலும் தேவை. மறுமலர்ச்சிக் காலம் என்று சொல்லப்படுகிற காலத்தில் தோன்றிய சிறுகதைகளுக்கும், பழந்தமிழ் அகத்துறைக் காட்சிகளுக்கும் தொடர்பில்லை. அதுபோலவே பழங்கால நீதிக்கதைகளுக்கும் இன்றைய சிறு கதைகட்கும் பொங்கி எழுந்த வெள்ளம்போல கரைபுரண்டு வந்த ஆங்கிலத்தின் மோதலால் நமக்கேற்பட்ட புது விழிப்பின் திவலைகள் நம்முடைய சிறுகதைகள். ஆரம்பகாலச் சிறுகதைகள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

- சிறிதும் பிறமொழிக் கலப்படமற்ற சொந்தக் கற்பனைகள்.
- பிறநாட்டுக் கதைகளைச் சிதைத்தும் உருமாற்றியும் எழுதப்பெற்றதலைப்புக் கதைகள்.
- முற்றிலும் மொழி பெயர்ப்புகள்

**சமூக சீர்திருத்தம்**

சமூக சீர்திருத்தத்தினை நோக்கமாகக் கொண்டு பல சிறுகதை ஆசிரியர்கள் கதைகள் புனைந்துள்ளனர். நாட்டில் வாழும் மக்கள் பொது அறிவு பெற்று சமத்துவமாகப் பிணக்குகள், பூசல்கள் இல்லாமல் வாழ்வதற்கு இக்கதைகள் உதவ முடியும்.

**தனிமனிதச் சிக்கல்கள்**

தனி மனிதன் ஒருவன் தன் மனதில் நடத்தும் போராட்டங்களைப் பல சிறுகதைகள் விளக்குகின்றன. நிகழ்ச்சிகளையோ, பாத்திரங்களையோ மோதவிடாமல் ஏதாவது ஒரு பாத்திரம் அல்லது ஒரு சூழலின் மையத்தை அரங்கமாக வைத்துக்கொண்டு மனத்தின் போராட்டங்களைச் சித்தரிக்கின்றன. சமூகக் கட்டுப்பாட்டாலும் சூழ்நிலைகளாலும் மனிதனுக்குள் மறைந்து கிடக்கும் உணர்ச்சிகளைத் தத்துவ அடிப்படையில் விளக்கும் கதைகளும் இவ்வகையைச் சாரும்.

அகிலனின் பூச்சாண்டி, கு.ப.ராவின் விடியுமா? கலையன்பனின் நடந்தது வேறு, க.நா. சுப்பிரமணியத்தின் மனோதத்துவம், சூடாமணியின் சுமைகள், லெட்சுமியின் பரீட்சைக் காட்சிகள், ஜெயகாந்தனின் டிரெடில்,புதுமைப்பித்தனின் மனநிழல், வாசவனின் குடியிருக்க ஒரு கோயில் நீலபத்மநாபனின் திரிபுவனபுரம், தூரனின் குழந்தை மருந்து போன்றவை இத்தரத்தன.

க.நா. சுப்பிரமணியத்தின் மனோதத்துவம் என்ற கதையில் எதிர் வீட்டுக்காரன் நடு இரவில் வானொலி வைக்கிறான். இதை எச்சரிக்கிறான் ஒருவன், எச்சரித்தும் கேளாமல் போகவே அவனைக் கொன்று விடுகிறான். அதன் பின்னரும் ரேடியோ ஒலி அவனுக்கு கேட்கிறது. எனவே மனோதத்துவ நிபுணரிடம் சென்று, இரவு நேரங்களில் காதில் மட்டும் ரேடியோ ஒலிக்கத் தொடங்குகிறது; காதில் ஒலிக்கிற ரேடியோ உண்மையில் ரேடியோ அல்ல. கற்பனையில் உள்ள ரேடியோ தான். அதாவது, ‘‘உலகில் இல்லாத ஒரு ரேடியோ என் காதில் வந்து பாடுகிறது’’ என்று கூறுகிறான். இதில் கொலை செய்தவன் ஒருவனின் மனத்தை படம் பிடித்துக் காட்டுகின்றார்.

நாரண துரைக்கண்ணனின், சந்தேகம் என்ற கதையைச் சமூக கொடுமையாக்காமல் தனிமனிதனின் பலவீனமாகக் காட்டியுள்ளார் ஆசிரியர். அஞ்சுகத்தின் தூய அன்புள்ளத்தையும் அவள் கணவன் குருநாதப்பிள்ளையின் அர்த்தமற்ற சந்தேகத்தையும் மையமாகக் கொண்டு எழுந்தது இக்கதை.

‘‘அஞ்சுகம் தேம்பி அழுத குரல் தாமோதரனின் செவிகளை விட்டு நீங்கவில்லை. இது படிப்போர் நெஞ்சில் அஞ்சுகத்தின் தூய உள்ளம் பதிகிறது. படிப்பவர்களின் உள்ளத்தில் ‘‘அத்தூய உள்ளத்துக்கும் துன்பம் இழைக்கப்படுகிறது

ஏன்?''என்ற கேள்வி எழும்புகிறது. படிப்பவர்களைக் குருநாதப்பிள்ளையாகாமல் தடுக்க வேண்டுமென்பதே ஆசிரியரின் ஆவல்.

**பெண்கள் நிலை**

சிறுகதை இலக்கியமாகத் தோன்றி வளர்ந்த காலத்திலும் பெண்கள் நிலை மிகவும் இழிவான நிலையில்தானிருந்தது. கைம்மைக் கொடுமை, குழந்தை மணம், பொருந்தா மணம், வரதட்சிணைக் கொடுமை முதலியவற்றால் பெண்கள் சமுதாயம் மிகவும் துயருற்றது. சமுதாயத்தில் புரையோடிக் கிடந்த சீர்கேடுகளை விளக்கப் பல கதைகள் எழுந்தன.

**குழந்தை மணம்**

குழந்தை மணம் நம் சமூகத்தில் பரவியிருந்த சிர்கேடுகளில் ஒன்று. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் இந்த வழக்கம் சமுதாயத்தில் மிகுதியும் காணப்பட்டது. ஐந்து வயதுக் குழந்தைகளை அறியாப்பருவத்தில் திருமணம் செய்து வைத்தல் அக்காலப் பெற்றோருக்கு மிக்க மகிழ்ச்சி. பின்னர் பல புரட்சிகள் மூலம் இக்கொடுமை நம் சமுதாயத்தை விட்டு அகன்றது. இப்புரட்சிக்கு உறுதுணையாய் நின்றவை சிறுகதைகளாகும்.

வ.வே.சு. ஐயரின் ''குளத்தங்கரை அரசமரம்'' குழந்தை மணத்தை எதிர்த்துப் பேசுகிறது. நாகராஜனுக்கும், ருக்மணிக்கும் சிறுவயதிலேயே திருமணம் நடந்துவிடுகிறது. பிறகு ஏற்பட்ட சம்பந்திச் சண்டையால் நாகராஜனுக்கும், வேறொரு பெண்ணை மணம் முடிக்கும் ஏற்பாடு நடக்கிறது. பெற்றோரின் கைப்பாவையாகிவிட்ட நாகராஜன் ருக்மணியைத் தன் உடைமையாக்கிக் கொள்ள முடியாமல் தவிக்கிறான். நாகராஜனின் கோழைத்தனத்தால் ருக்மணி குளத்தில் விழுந்து இறந்து விடுகிறாள். குழந்தை மணத்தின் கொடுமையைக் கண்டனம் செய்யும் குரல் இதில் எதிரொலிக்கிறது.

புதுமைப்பித்தன், ஆண்மை''என்ற கதையில் குழந்தை மணத்தின் கொடுமையைக் கேலியாகச் சித்தரித்துள்ளார். சீனிவாசனுக்கு கலியாணமானது நினைவில் இல்லை. ஏனென்றால் அது பெப்பர்மின்ட் கலியாணம், சீனிவாசனின் பெற்றோர்கள் பெரியவர்களாகியும், குழந்தைப் பருவம் நீங்காப் பொம்மைக் கலியாணம் செய்ய ஆசைப்பட்டார்கள்.

வெறும் மரப்பொம்மையை விடத் தங்கள் நாலு வயதுக் குழந்தை சீமாச்சு மேல் என்று பட்டது. பிறகு என்ன? பெண் கிடைக்காமலா போய்விடும். ஆத்தூர்ப் பண்ணை ஐயர் மகள் ருக்மணிக்கு இரண்டு வயது. ஆக கலியாணம் தடபுடல்; பெற்றோர் மடியிலிருந்தபடியே மருமான் சீனிவாசனுக்கும் ருக்மணி அம்மாளுக்கும்

திருமணம் நடந்தது; இக்கதையின் மூலம் அக்கால பெற்றோர்களின் மனநிலை, சீர்வரிசை, சம்பந்திச் சண்டை முதலியவற்றையும் விளக்கிச் சொல்கிறார்.

திருமணம் என்றால் குலப்பெருமை கிளத்தும் கனகாம்பரம் என்ற உண்மையை வெளியிடுகின்றார். ஆசிரியர் பொம்மைக் கலியாணம் செய்யப்பட்ட பெண் வேறொருவனைக் காதலித்து கடைசியாகப் பிரம்ம சமாஜத்தில் கலியாணம் செய்து கொள்வது தான் நாவல். வழக்கப்படி சுவாரஸ்யமான முடிவு அப்போது தான் கதாசிரியனும் வாசகர்களே என ஆரம்பித்துக் குழந்தை மணத்தின் கொடுமைகளைப் பற்றி வியாசம் எழுத முடியும் என்ற இரு உண்மைகளைப் புதுமைப்பித்தன் தெளிவுபடுத்துகிறார்.

**விதவைக் கொடுமை**

சமுதாயத்தில் கைம்பெண்களின் நிலைமை பரிதாபமான நிலையிலிருந்தது, சங்க காலத்திலிருந்தே கைம்பெண்களுக்கு உடன் கட்டையேறுதல் அல்லது கைம்மை நோன்பு நோற்றல் போன்ற கொடிய சட்டங்களை விதித்திருந்தன. சமுதாயத்தில் பெண்கள் இவ்வகைப் பழக்கங்களால் அவதியுற்றனர். பிற்காலத்தில் உடன்கட்டை ஏறுதல் தடுக்கப்பட்டாலும், கைம்பெண்களுக்கு மறுவாழ்வளிக்கச் சமுதாயம் முன் வரவில்லை. அந்நிலைகளை மாற்றியமைக்க, மகளிரின் நிலைகளைப் பற்றி பல்வேறு கோணங்களில் விளக்கிக் கதைகள் எழுதினர்.

புதுமைப்பித்தனின் வழி, வாடா மல்லிகை, தனுஷ்கோடியில் விதவை விமலா, ராஜநாராயணனின் சாவு, சத்தியமூர்த்தியின் பலிபீடம், கு.ப.ரா வின் உயிரின் அழைப்பு, தி.ஜ.ர வின் ராஜத்தின் கூந்தல், பி. எஸ். ராமையாவின் மலரும் மணமும், அண்ணாதுரையின் பேரன் பங்களூரில், போன்ற கதைகள் விதவைகளின் துயரைப் பறைசாற்றுகின்றன. புதுமைபித்தனின் வழி என்ற கதையில் அலமு என்ற பெண் விதவையாகிறாள். அவள் கணவன் இறந்த பதினாறு நாட்களும் இவளைப் பிணம் போல அழும் இயந்திரமாகக் கிடத்திச் சுற்றி இருந்து அழுதார்கள். அவள் உயிரப் பிணம் என்ற கருத்தை உணர்த்தவே முடியவில்லை. துயர்தாளாது அவள் கண்கலங்கி, வதங்கிச் சாவினை வரவேற்கும்போது இந்த இரக்கத்தை அந்தப் பிரம்மாவின் மூஞ்சியில் பூசிடுங்கோ! குழியை அடைக்காதீர்கள் என அரற்றி உயிர் விடுகிறாள். ‘‘பிரம்மாவின் மூஞ்சியில் வாரியடிக்க வேண்டும், நியாயமும் சமூக தர்மமும் இருக்கும்போது’’ என்று கதையை முடிக்கிறார் ஆசிரியர்.

கி.ராஜநாராயணனின் ‘‘சாவு’’ என்ற கதையில் விதவை ஜக்கம்மாவுக்குச் செய்யும் சோகச் சடங்குகளை விவரிக்கிறார் ஆசிரியர். பதினோராவது நாள் சர்வ

அலங்காரங்களும் பண்ணி ஜக்கம்மாவை வீட்டினுள்ளிருந்து முற்றத்துக்கு அழைத்துக்கொண்டு வருகிறார்கள். தரையில் வட்டமான பெரிய சௌகு. அதன் மேல் குவிக்கப்பட்டுள்ளன. கம்மபுல் அம்பாசம் அதன்மேல் எருமைத்தோலினால் முறுக்கப்பட்ட உழவு வடங்கள் இரண்டு வைத்திருக்கிறார்கள்.

கைகள் நிறைய புது வளையல்கள், மஞ்சள் பூசிக் கழுவிய முகத்தின் நெற்றியில் தெரியும் சிவப்புக் குங்குமம், கண்களிலிருந்து மாலை மாலையாய் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்கிறது. அவளை எவ்வளவு அழகுபடுத்த முடியுமோ அவ்வளவும் செய்திருக்கிறார்கள். இது அவளுடைய சுமங்கலியின் கடைசிக் கோலம். ‘‘விடை பெற்றுப்போக சுமங்கலியின் அதி தேவதையே வந்து நிற்கிறாள்’’ என்று விளக்குகிறார் ஆசிரியர்.

**வரதட்சணைக் கொடுமை**

‘‘மணத்தின் போது வரதட்சணையை ஒரு நிதியாகக் கொள்ளும் இளைஞன் அவனது கல்வியையும் நாட்டையும் பெண்மையையும் பழிப்பவனாகிறான்’’ என்று காந்தியடிகள் கூறியுள்ளார். தமிழ்ச் சமுதாயத்தில் திருமணம் என்பது தன் புனிதத் தன்மையை இழந்து கேவலமான வணிக நிலைக்கும் மாறிவிட்டது. வரதட்சணைமுறை வாழ்வில் இடம் பெற்றதால் எத்தனையோ பெண்களின் வாழ்வு காட்டில் காய்ந்த நிலவாய்ப் பயனின்றி ஒழிந்தது. பெண்ணைப் பெற்றுவிட்டப் பெற்றோர் துயரக் கடலில் மூழ்கினர். விலைபேசிக் கொள்ளும் இச்சமூகக் கொடுமை எழுத்தாளர்களின் நெஞ்சில் உணர்வைத் தூண்டிற்று.

சி.சு. செல்லப்பனின் ‘‘மஞ்சள்காணி’’ என்ற கதை வரதட்சணைப் பிரச்சனையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. வரதட்சணை விகிதம் மற்ற பண்டங்களைப்போல உயர்ந்துகொண்டே போவதை இக்கதை விளக்குகிறது. தேவனின் ‘‘சுந்தரம்மாவின் ஆவி’’ என்ற கதையில் கலியாணம் செய்வது அத்தனை சங்கடமான விஷயமாகப் போய்விட்டது. வீட்டுக்குப் பெரியவர்கள் கட்டாயம் ஜாதகப் பொருத்தம் பார்க்க வேண்டும் என்கிறார்கள். ஜோதிடர் நூறு ஜாதகத்திற்கு இரண்டு தான் பொருந்துகிறது என்றார்.

அந்த இரண்டு இடத்தையும் போய்ப்பார்த்தால் ஒன்று உச்சாணிக் கிளைமேல் போய் உட்கார்ந்திருக்கிறார்கள், அல்லது நமக்கு ஏற்ற இடமாக இல்லை. இதையும் தாண்டினால் பையனுக்குப் பெண் பிடித்திருக்க வேண்டும். இதையும் சிரமப்பட்டு தாண்டியால் வரதட்சணை! அடக்கொடுமையே பெண்ணைப் பெற்றவன்

இடுப்பை ஒடிக்க ஏற்பட்ட கோடாலிக்கு வரதட்சணை என்று பெயரா? என்று கூறுகின்றனர். இக்கொடுமை நின்றால்தான் நம் சமுதாயம் உருப்படும்.

**பொருந்தா மணம்**

வயது கடந்த முதியவர்கள் இளம் பெண்களை மணந்து கொள்ளும் வழக்கம் சில ஆண்டுகளுக்கு முன் சர்வ சாதாரணமாக இருந்து வந்தது. இவ்வழக்கத்தை ஒரு சமுதாய குற்றமாக எழுத்தாளர்கள் கருதித் தம் கதைகளில் கண்டனம் செய்தனர். கல்கியின் சர்மாவின் புணர்விவாகம், இராதா மணாளனின் மண்ணாய்ப் போகவே, செயகாந்தனின் பேதைப் பருவம், கு.ப.ரா வின் எவன் பிறந்திருக்கின்றானோ, புதுமைப்பித்தனின் கல்யாணி முதலியன இவ்வகைகளைச் சார்ந்தவை. பொருந்தா மணத்தின்சீர்கேடுகளை உருவகமாக விளக்குகிறது.

சங்கு சுப்பிரமணியனின் ‘‘வேதாளம் சொன்ன கதை’’ இரண்டு மரங்களுக்கு உயிர் கொடுத்து, அங்கு அதிநுட்பமான மனித உணர்ச்சிகளைக் கொட்டுகிறார். ஒரு கிழ அரசமரம், வருடம் ஆக ஆக கோடிக்கணக்கான இலைகள் உதிர அந்த அரசமரம் கிழப்பருவமடைந்தது. சக்தி குறையக்குறைய கிழ அரசுக்கு மனசஞ்சலம் அதிகரித்தது. ஐயோ! என்றைக்காவது பலமான ஓர் காற்று வீசினால் நான் பூமியில் வீழ்ந்து சாவேனே! அவ்வாறு பூமியில் விழாமல் தடுக்கப் பக்கத்தில் ஒரு துணையாவது இருக்கலாகாதா பிள்ளையாரப்பா! என்று விக்னேஸ்வரரிடம் முறையிட்டது.

உயர் குல அரசமரத்திற்கும் சின்னஞ்சிறிய வேம்புவிற்கும் திருமணம் நடத்த நிச்சயிக்கிறார் தசகோடி ராம சவுக்கார். வேம்பு நல்ல அழகி. அந்த சாதியிலே அவ்வளவு அழகாக யாரும் இருந்ததில்லை. மகா முரடனான மந்திரவாதியும் கூட வேம்பின் இலையை நாடி வரமாட்டான். அப்படிப்பட்ட அழகுச் சிறுமியின் தலையெழுத்தோ வென்னமோ அவளை அந்தப் படுகிழவனான அரச மரத்துக்குக் கட்டுவிடுவதென்று தசகோடி ராமசவுக்கார் நிச்சயம் செய்துவிட்டான். குழந்தை வேம்புவுக்கு என்ன தெரியும்? அவள் பாப்பா தானே! சிறு செடியான வேம்புவைப் பறித்துக் கீழே மரத்தினருகே நடுகிறார்கள். திருமணம் நடக்கின்றது.

குழந்தை வேம்புவை கொட்டோடும் முழக்கோடும் அந்தக் கிழ அரச மரத்தினருகே கொண்டுபோய் நட்டார்கள். மந்திரத்தைத் தொணதொண வென்று சபித்தார்கள். தாலியும் கட்டப்பட்டு விட்டது. இவைகளை வேடிக்கையென வேம்பு பார்த்துக்கொண்டிருந்தாள். அவளும் அந்த கிழமரமும் தான் பாக்கி. அருகே தண்ணீர் குடிக்க அவளது பிரியமான வாய்க்காலைக் காணவில்லை.

இளம் வேம்புக்கும், கிழட்டு அரசமரத்திற்கும் நடக்கும் உரையாடல் உள்ளத்தை உருக்குவதாக அமைந்துள்ளது.

‘‘தாத்தா தண்ணீர் எங்கே குடிப்பது?’’

‘‘இந்தா! தாத்தா கீத்தாவென்று நீ என்னைச் சொல்லக் கூடாது.’’

‘‘நீ என்ன சொன்னாலென்ன? நீ பேசும் ஒவ்வொரு பேச்சும் எனக்குத் தித்திப்பாயிருக்கிறது’’ என்ன தாத்தா கேலி செய்கிறீர்கள்? நூனாவது தித்திக்கவாவது? நான் வேம்பு தானே, என்று கூறிற்று. அதற்குக் கலியாணம் பிடிக்கவில்லை.

‘‘கொட்டோடும் முழக்கோடும் என்ன செய்தார்கள் தாத்தா? அதற்குப் பெயர் என்ன? அதற்குக் கல்யாணம் என்று பெயர்!’’ கல்யாணம் என்றால் இனிமேல் நீ இங்கேயே என்னோடயே இருக்கவேணும்.

நான் தான் உனக்குப் புருஷன். நீ எனக்குப் பொண்டாட்டி. மனித சாதியில் உள்ள இந்த அழகான வழக்கம் மரச்சாதியில் நமக்கு மட்டும் தான் உண்டு. ஆலமரத்திற்கில்லை! அத்திமரத்திற்கில்லை! என்றடுக்கியது அரசமரம். வேம்புவிற்கு தூக்கிவாரிப்போட்டது. ‘‘ஏன் தாத்தா! நீங்கள் செத்துப்போனாக் கூட நான் இங்கேயே இருக்கணுமா’’ என்று கேட்டது.சாவு என்றவுடன் கிழவனுக்குத் திடுக்கிட்டது.

சீ எருக்கஞ்செடியே கல்யாணத்திலே என்னப் பேச்சு பேசுகின்றாய்? புல்லுலிக் கொத்தே! உன் வாயை அடக்கியாள வேண்டும்‘‘ என்றது கிழம். வேம்புவிற்கு மனம் பிளந்துவிட்டது. இந்தக் கிழவனோடு வாழ்வா, மாட்டவே மாட்டேன். பச்சைக் குழந்தை என்னை எருக்கச்செடி என்றும் புல்லுலி என்றும் திட்டுகிறான் என்று வருந்துகிறாள்.

எப்படியாவது கிழவனை விட்டு விலக வேண்டும் என்பது அவள் ஒரே எண்ணம். ஒருநாள், பெரிய சூறை, பெரிய பெரிய மரங்களெல்லாம் திமு திமுவென விழும்போது இந்தக் கிழப்பயல் எம்மாத்திரம், தடாலென விழுந்துவிட்டான். பாவம் தன்னந்தனியாக அந்தக் குளக்கரையிலேயே வெகு வருஷ காலம் வேம்பு சீவித்திருந்தாள். பொருந்தா மணத்தினால் பெண்கள் படும் துயரை விளக்க இக்கதை தக்க சான்றாகும்.

**மூடநம்பிக்கைகள்**

மனிதனுக்குச் சில பொருட்கள் விளங்காவிட்டால் அச்சமடைகிறான். அறியாமையினால் எழுந்த இத்தகைய நம்பிக்கை மூடநம்பிக்கை எனப்படும். இம்மூடநம்பிக்கைகளை மையமாக வைத்து பல கதைகள் எழுதப்பட்டன. இவற்றைக் கேலி செய்து எழுதி இக்குறைபாடுகள் கொண்ட மனிதர்களைக் கதாபாத்திரங்களாக

உலவவிட்டால் யாவரும் அக்கதைகளைப் படித்துச் சிரிப்பார்கள். குறைபாடுகள் உள்ளவர்களும் அந்தச்சிரிப்பில் கலந்து நகைக்கிறார்கள். கதையைப் படித்து முடித்ததும் அவற்றைப்பற்றிச் சிந்தித்து சீர்திருத்த வாய்ப்பு ஏற்படுகின்றது.

ரா.கி.ரங்கராஜனின் கன்னி, கு.அழகிரிசாமியின் அக்கினி கவசம், கல்யாணியின் நம்பிக்கை, ந.பிச்சமூர்த்தியின் வேப்ப மரம், கோவி. மணிசேகரனின் ரேகை, ஜெயகாந்தனின் அபாயம், அகிலனின் சரசியின் சாதகம், அண்ணாதுரையின் பலாபலன் போன்ற கதைகள் இவ்வியல்புடையனவாகும்.

ரா.கி.ரங்கராஜன் ''கன்னி'' என்ற கதையில் இளம்பெண் வேதாவின் வாழ்க்கை, அவளது குடும்பத்தினரின் மூடநம்பிக்கைகளால் கானல் நீராகவே போய்விடுகிறது. மூடநம்பிக்கைகளும் கண்மூடித்தனங்களும் மலிந்த இச்சமுதாயம் பெண்ணுலகிற்கு இழைத்துள்ள கொடுமைகள் இக்கதை மூலம் விளக்கப்படுகின்றன. ந.பிச்சமூர்த்தியின் ''வேப்பமரம்'' என்ற கதையில் வேப்ப மரத்திலிருந்து பால் வடிவதைக் கண்டு மக்கள் தெய்வமாக வழிபடுகின்றனர். தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வழிபடுகின்றனர். மிகுந்த பக்தியுடன் பாலைக் கொண்டு சென்று பல நோய்கள் குணமாவதாகக் கூறுகின்றனர்.

**சாதிக் கொடுமை**

சாதிக்கட்சிகள் இன்று தலைதூக்கி வருவதும், தேர்தலின்போது பேயாட்டம் போடுவதும் கண்கூடாகப்பார்க்கமுடிகிறது.

''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாடுகிறோம்.

ஆனால் இப்படி பாடுகிறவர்களும் பிரச்சாரம் செய்பவர்களும், சாதிப் பிரிவினையை மனத்துள் வைத்துள்ளனர் என்பது யாவரும் அறிந்தது. வேறு எதற்கும் சாதி தேவையில்லாவிட்டாலும் தேர்தலுக்கும் திருமணத்திற்கும் தேவைப்படுகின்றது. ஆனால் சாதியின் கொடுமையைச் சமுதாய அளவில் மட்டும் நோக்காமல், தனி மனிதனின் வாழ்க்கை அளவில் நோக்கி ஓரளவு வெற்றி கண்டவன் எழுத்தாளன் தான்.

சாதியைச் சமுதாயப் பிரச்சினையாக நோக்க மறுக்கும் மனிதன் அது தன் வாழ்வில் குறுக்கிடும்போது அதைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குகிறான். அந்தச் சிந்தனையைத் தூண்டிய பெருமை எழுத்தாளனுக்கு உண்டு. சிற்பியின் ''கோயில் பூனை'' என்ற கதையில் உள்ளத்தால் கபடமில்லாதவனுக்கு உதை கொடுக்கப்படுவதையும், உருத்திராட்சப்பூனை ஒன்று உல்லாச பவனி வருவதையும், சித்தரித்து உள்ளார்.

**தீண்டாமை**

தீண்டாமை என்பது இந்து சாத்திரத்திலுள்ள கறை. ஒரு சொட்டு நஞ்சு, ஒரு கலப்பாலுக்குக் கேடு சூழ்வதுபோலத் தீண்டாமை என்பதால் இந்து மதத்திற்குக்

கேடு சூழ்ந்திருக்கிறது என்கிறார் காந்தியடிகள். இந்து சமூகத்தில் சில வகுப்பினர் மற்றவர்களால் தீண்டத் தகாதவர்களாகவும் நெருங்கத் தகாதவர்களாகவும் கருதப்பட்டும், நடத்தப்பட்டும் வந்த வழக்கமே தீண்டாமையாகும்.

தீண்டாத வகுப்பிலுள்ள ஒருவனைத் தொட்டுவிட்ட தீட்டைப் போக்குவதற்கு ஒரு முஸ்லீமைத் தொடுவது என்ற பழக்கமும் வழக்கத்திலிருந்தது. தீண்டாத மக்களுக்கு ஒரு வழியிலா துன்பம்? அந்தோ! கிணறு முதல் அடுப்பு வரைத் துன்பம். தீண்டாமையின் கொடுமைகளை விளக்கிச் சிறுகதைகள் எழுதியவர்களுள் முக்கியமானவர்கள் கல்கி, இராஜாஜி போன்றவர்கள்.

கல்கியின் விஷமந்திரம், ராஜாஜியின் முகுந்தன் அறியாக் கொடுமை ஜகதீச சாஸ்திரிகள் கனவு போன்றவை இவ்வகையில் எழுதப்பட்டன. ராஜாஜியின் ‘‘முகுந்தன்’’ என்ற கதையில் சீதம்மாளின் மகனை அரிசனனான சின்னானும் மாரியும் காப்பாற்றுகின்றனர். ஆனால் வீட்டிற்குள் நுழைந்த சிறுவர்களைப் பறையர்கள் என்று அவள் அடிக்கின்றாள். ‘‘நீயும் உன் குரங்கும் நாசமாக போக. இந்த பறத்தீட்டு எப்படி நீங்கி நான் நற்கதி அடையப் போகிறேன். ஐயோ! நிழல் பட்டாலும் தீட்டாயிற்றே ஹே! ஈஸ்வரா! என்மேல் கருணை வைத்துக் காப்பாற்று சுவாமி!’’ எனக் கத்தினாள்.

ஏழைத் தீண்டாதாரின் துயரம் இதுதான். உலகத்திலே புண்ணிய பூமியும் தர்மம் என்பதற்குப் பிறப்பிடமானதும் நமது பாரத தேசம். ஆனால் நீசர் என்று பெயரிட்டுச் சிலரை ஒதுக்கி வைக்கிறோமே, அக்கொடிய வழக்கத்தின் வெப்பத்தில் நமது தர்மம், தெய்வபக்தி,நல்லொழுக்கம் எல்லாம் எரிந்து சாம்பலாகி வருகின்றன! என்று தம் கருத்தைக் கூறுகிறார் ஆசிரியர். இக்கதை தீண்டாமையின் கொடுமையை விளக்குகிறது.

**வறுமைக் கொடுமை**

எந்த ஒரு கலைஞன் தன் படைப்பில் தன் காலத்துச் சமுதாயத்திலுள்ள வறுமைத் துயரில் முற்றிலும் ஆழ்ந்த மக்கள் கூட்டத்தைக் காட்டுகிறானோ அவனே பரபரப்பாகப் பேசப்படுபவன் என்பது சிறுகதைத் திறனாய்வாளராகக் கருதப்படும் ஐரிஷ் அறிஞர் பிராங் ஒகானர் என்பவரின் கருத்து. இன்றைய சமுதாயத்தின் ஒழுக்கம் நேர்மை ஆகிய அறவழிகளைச் சீர்குலைக்கும் புல்லுருவிகளுள் ஒன்று வறுமையாகும். மக்களை வறுமை வாட்டும்போது அவர்கள் இழிந்தச் செயல்களைச் செய்வதற்கும் தயங்குவதில்லை. தற்காலச் சமுதாயத்தில் தங்கள் குழந்தைகளையும், குடும்பத்தையும் காப்பாற்ற முடியாமல் இழிநிலைக்குள்ளாகும் பெண்கள் பலர் இக்கொடுமைகளைக் கதைகள் மூலம் விளக்கி வருகின்றனர்.

அகிலனின் பசி, கோயில் விளக்கு, ஏழைப்பிள்ளையார் காசுமரம், வ.சுப்பிரமணியத்தின் எச்சில், ஆர்.சூடாமணியனின் மறுபுறம், ஜெயகாந்தனின் ஒருபிடி சோறு, செகசிற்பியனின் பிறவிக்கடல் தாண்டி, புதுமைப்பித்தனின் தனி ஒருவனுக்கு போன்றவை வறுமையின் கொடுமையை விளக்குபவை. சோமுவின் ''ஆறுமாத விடுதலை'' என்ற கதையில் நொண்டிப்பிச்சைக்காரன் ஒருவன் வறுமையின் கொடுமையால் வாடுகிறான் அவனுக்குத் திருடன் என்ற பட்டமும் அளித்து ஆறுமாதச் சிறைதண்டனையும் அளிக்கின்றனர். அவனுடைய வயிற்றிலே சிறை புகுந்திருந்த பட்டினிக்கு இனி ஆறுமாதம் விடுதலை என்று விளக்குகின்றார்.

**கலை வாழ்க்கை**

கலை மனிதனின் இன்றியமையாப் பொருளாய் வாழ்வோடு கலந்து விளங்குகின்றது. நம் நாட்டில் பலவகைக் கலைகளைப் பார்க்கின்றோம், கேட்கின்றோம், அனுபவிக்கின்றோம். இக்கலைகளின் உன்னத நிலையையும் அழகையும் அதில் ஈடுபாடு கொண்டவர்களால் உணர்த்தப்படும்போது அதன் மேன்மையை உணர்கிறோம். நம்நாட்டில் எத்தனையோ தெய்வக் கோயில்கள் எழும்பியுள்ளன. ஒவ்வொன்றும், ஒவ்வொரு கதையினைப் பின்னணியாகக் கொண்டவை என்பது பலரும் அறிந்த ஒன்று.

சிற்பக் கலை, நாட்டியக் கலை, இசைக் கலை, ஓவியக் கலை, சமையற் கலை, நெய்தற் கலை போன்ற கலை உணர்ந்த கலைஞர்களின் வாழ்வினையும் அக்கலைகளின் மேன்மையினையும் விளக்கும் கதைகள் ஏராளமாக நம் தமிழில் உண்டு. பாடகர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிற்பிகள் சம்பந்தப்பட்டவை, நாட்டியம் சம்பந்தப்பட்டவை, ஓவியம் சம்பந்தப்பட்டவை இப்படிக் கலைத் தொடர்பான கதைகளைக் கதாசிரியர்கள் எழுதினார்கள்.

ஜெகசிற்பியனின் பொய்க்கால் குதிரை, கணபதியின் உடைந்த சிலை, ஓவியத்தின் பார்வை, பாலசுப்பிரமணியன் எஸ். சிதம்பரத்தின் புதைந்த சிற்பம், கல்கியின் வீணை பவானி, கலையன்பனின் அழகின் அடிமை போன்ற கதைகள் கலை சம்பந்தப்பட்டவை.

**நாட்டுப்புற விழாத்தொடர்**

மக்கள் அன்றாட வேலையில் அலுத்துப்போய் உணர்வு குன்றிய வேளையில் அவர்களைச் சுறுசுறுப்பாக்கி ஊக்கப்படுத்துவது ஊர்ப்பொது திருவிழாக்கள். வீட்டில் கொண்டாடும் விழாக்களும் கோயில் திருவிழாக்களும் மக்களை மகிழ்விப்பனவாகும். தமிழர்களின் விழாக்கள் எண்ணிலடங்காதவை.

ஒவ்வொரு முழுநிலா நாளும் தமிழனுக்குக் கொண்டாட்டமான நாட்கள், மாதந்தோறும் விழாக்கள் கொண்டாடியவன் தமிழன்.

தை மாதத்தில் பொங்கல் விழாக்கள் கொண்டாடுவதும் ஜல்லிக்கட்டு போன்றவை நடத்தி மகிழ்தலும் இன்று வழக்கத்தில் இருந்து வரும் விழாக்களாகும். தீ மிதித்தலும், முளைப்பாலிகை திருவிழா கொண்டாடுதலும், காவடி எடுத்தாடுதலும் நாட்டுப்புற மக்கள் கொண்டாடும் விழாக்களாகும். தேர்த்திருவிழாக்களும், பெரிய திருவிழாக்களும், திருக்கோயில் திருவிழாக்களும், மக்கள் மனநிறைவு பெறவும் மகிழ்வடையவும் விழாக்கள் எடுத்து மகிழ்கின்றனர். இத்தகைய விழாக்கள் தொடர்பாகவும் சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. ஊரின் சிறப்பும், அவ்வூரின் விழாக்கோலங்களும் கலை நிகழ்ச்சிகளும் அழியா ஓவியமாகச் சிறுகதை ஆசிரியனால் வரையப்படுகின்றன.

விழாக்காலங்களில் ஏற்படும் காதலன், காதலி செய்திகளும், விழாக்காலங்களில் ஏற்படும் சிறுசம்பவங்களுமே கதைக்குக் கருவாக அமைகின்றன. குழந்தைகள் தொடர்பான விழாக்களுடன் குழந்தைகள் மன நிலையைத் தொடர்புபடுத்தி எழுதிய கதைகளும் உண்டு.

உதாரணமாகத் தீபாவளி, நவராத்திரிக் கொலு, கண்ணன் பிறப்பு போன்றவை பழங்கால முதலே கொண்டாடப்பட்டு வருகின்றன. 28 நாட்கள் இந்திர விழா நடந்த செய்தியை நாம் சிலப்பதிகாரத்தின் வாயிலாக உணர்கிறோம். ஆடிப்பெருக்கில் மக்கள் ஆற்றின் அழகை ரசித்து மகிழும் சிறப்பையும் கதைகளாக வடித்து உள்ளனர் கதாசிரியர்கள்.

எம். பி. சுப்பிரமணியத்தின் ரதோற்சவம், பூவை எஸ். ஆறுமுகத்தின் வேனில் விழா, பி.ஸ்ரீ யின் பதினெட்டாம் பெருக்கு, டி.கே. ஜெயராமனின் கொலுவும் குழந்தையும் போன்றவை விழாத் தொடர்பாக எழுதப்பட்ட சிறுகதைகள்.

இவ்வாறு சமூகச் சீர்திருத்தம், கலை வாழ்க்கை, நாட்டுப்புற விழாத் தொடர்பாகச் சிறுகதை எழுதுமாறு கேட்பின் தமிழ் பயிலும் மாணவர்கள் தங்கள் கற்பனைக்கு மெருகிட்டுச் சிறப்பான கதைக் கருவினைக்கொண்டு முதலும் முடிவும் சிறப்புற அமையும் வண்ணம் சிறுகதை எழுதுதல் வேண்டும். பல சிறுகதை ஆசிரியர்களின் சிறுகதைகளைப் படித்து வடிவம், அமைப்பு முதலியவற்றில் பயிற்சி பெறுதல் அவசியம்.

**சிறுகதை – தொழிலாளர் உலகம், அங்கதச் சுவை, தூயகாதல், வீரம் பற்றியவை**

தமிழ் பயிலும் மாணவர்கள் சொந்தமாகக் கதைகள், கட்டுரைகள், பாடல்கள் இவைகள் இயற்றும் திறமை கொண்டவர்களாக விளங்க வேண்டும். பல பாடல்களைப் படித்துப் பாடல் பயிற்சி பெறுவதைப்போலப் பல சிறுகதைகளைப்

பயிலும் பழக்கத்தால் சிறுகதைகள் எழுதும் திறமை பெறலாம். சிறுகதை ஏன் தோன்றுகிறது? எனின் வாசகருக்குத் தோன்றுகிறது. எப்படித் தோன்றுகிறது? என்றால் கதையை எழுதும் போது அல்லது சொல்லும்போது ஆசிரியனுக்கு ஓர் ஆனந்தம் உண்டாகிறதே, அந்த ஆனந்தத்தின் மயமாக அது தோன்றுகிறது. கற்பனா சக்தி என்பது படித்து வருகிற சக்தி இல்லை. படிப்பினால் மொழியறிவு வளரும். கலைஞானம் விருத்தியாகும். மூளையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கற்பனை என்பது தனித்திறன். கற்பனை என்ற இயல்பான ஆற்றல் இருந்தாலொழிய படிப்பு பயன்படாது. கலை உலகிலே கற்பனையும் இருந்து நல்ல படிப்பும் இருப்பின் நல்ல படைப்புகளுக்குக் குறைவில்லை.

**தொழிலாளர் உலகம்**

இன்றைய நாட்டுப் பிரச்சனைகளுள் ஒன்று தொழிலாளர் நிலை, வேலை இல்லாத் திண்டாட்டம் நாட்டு மக்களைப் பாதிக்கின்றது. மக்கட் பெருக்கத்தால் ஏற்படும் விளைவுகள், வேலை கிடைக்காதவர்கள் போதிய ஊதியம் பெறாமல் வருந்துதல் வேலை கிடைத்தும் நிலையற்ற நிலை. இப்படி பலவகையான சிக்கல்கள் தொழிலாளர்களுக்கிடையே காணக் கிடக்கின்றன. இன்றைய சமுதாய வாழ்வில் பெரும் சிக்கல்களாக இருந்து வரும் பொருளாதாரப் போராட்டத்தையும், வறுமையையும், பற்றாக்குறையையும் அதனால் மக்கள் படும் அவதியையும் பல கதைகள் சித்தரிக்கின்றன.

பாடுபட்டு அறியாதவன் பாட்டாளியின் துயரத்தைப் பற்றியும், சேற்றில் இறங்கி அறியாதவன் உழவனுடைய துன்பத்தைப் பற்றியும், என்னதான் கண்ணீரில் தோய்த்துக் கொண்டு எழுதினாலும் பயனில்லை. அந்தக் கதையில் மற்ற எல்லாச் சிறுகதை லட்சணங்களும் இருக்கலாம், உள்ளத்தை ஊடுறுவித் தைக்கும்படியான இதயம் ஒன்றிய ஈடுபாடு இருப்பதில்லை. அப்படிப்பட்ட உண்மை ஒளி வீசும் ஏழை எளியவர்களிடையே இருந்தும் உழைப்பாளி மக்களிடையே இருந்தும் எழுத்தாளர்கள் உருவாக வேண்டும்.

பண முதலைகளாகத் தம் தொழிற்சாலையை மேம்படுத்த பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர்களைத் துன்புறுத்துவதையும், சிலர் நல்ல மனதுடன் தன் லாபத்திலும் பங்கு கொடுத்து தொழிலாளர்களை மதிப்பதையும் உலகில் காணமுடிகின்றது. தொழிலாளர் உலகம் தம்முடைய குறிக்கோளை அடைவதற்காக வேலைநிறுத்தம் போன்ற சமூக விரோதச் செயல்களில் இறங்க வேண்டியுள்ளது.

இத்தகைய பல கதைச் சுருக்கங்களைக் கொண்டு கதாசிரியர்கள் தொழிலாளர் உலகம் பற்றிக் கதைகள் புனைந்துள்ளனர். பெரும் தொழிற்சாலைகளில் எத்தனையோ பேர்வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். அவர்கள் பற்றிய சம்பவங்கள் சிறுகதைகளாக உருப்பெறுகின்றன. வறுமையால் வாடும் தொழிலாளியின் குடும்பம் பற்றிய செய்திகள் சிறுகதையின் கருவாக மையம் கொள்கின்றன. தொழிலாளர்கள் பற்றிய பலவகையான செய்திகள் தொழிலாளர் உலகமாகச் சிறுகதை உருவம் பெறுகின்றன.

**அங்கதச் சுவை**

சமுதாயத்திலே உள்ள மனித முரண்பாடுகளையும், ஊழல்களையும், வாழ்வின் குறைபாடுகளையும் மக்களுக்கு உணர்த்துவதற்காக நேருக்கு நேர் சொற்பொழிவுகள் செய்யலாம். அறிவூட்டும் கட்டுரைகள் எழுதலாம். சீர்திருத்தக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்காகப் பல பொதுக் கூட்டங்கள் கூட்டி அறிவுரை வழங்கலாம். என்றாலும் மனத்திலே சுருக்கென்று தைக்கும்படி ஒரு வழியைக் கையாள்வது எப்படி? தவறு செய்கிற மனிதனுக்குத் தன் தவறு உள்ளத்திலே தைத்துவிட்டால் அவன் திருந்துவதற்கு விரைவான். ஆனால் நேரிலே நின்று அவனை பழித்தால் வீம்பு ஏற்படும் அல்லது கலகம் உண்டாகும். எனவே சொல்லாமல் சொல்லித் தைக்காமல் தைக்கும்படிச் செய்ய வேண்டும்.

இந்த அருமையான செயலுக்குச் சிறுகதைக் கருவி நீண்டகாலமாக நன்கு பயன்பட்டு வருகிறது. குறைபாடுகளை நையாண்டி செய்து எழுதி அந்தக் குறைபாடுகள் கொண்ட மனிதர்களைக் கதாபாத்திரங்களாக உருவகங்கள் அமைத்து உலவவிட்டால் எல்லோரும் அந்தக்கதைகளைப் படித்துச் சிரிப்பார்கள். சிரிக்கும்போதே குறைபாடுகள் உள்ளவர்களும் அந்தச் சிரிப்பிலே கலந்து நகைக்கிறார்கள். கதையைப் படித்து முடித்ததும் தன்னையறியாமல் தன்னையே பார்த்துத் தானே சிரித்துக்கொள்ளக்கூடிய ஒரு சுவையனுபவம் உண்டாகிறது. நாளடைவில் இந்த சுவையனுபவமே ஓர் ஆசானாக நின்று தன்னைத்தான் சீர்திருத்திக் கொள்கிறது. இது ஒரு நுட்பமான மனத் தத்துவம்.

இந்தத் தத்துவத்திற்கு முழு இடம் தந்து பேசுகின்ற கதைகளே அங்கதக் கதைகள் அல்லது நையாண்டிக் கதைகள். அவற்றைப் படிக்கும்போது சிரிப்பு வரும். ஆனால் அந்தச் சிரிப்பு சமுதாயத்தை நோக்கி மட்டும்தானா? இல்லை தன்னையும் நோக்கித் தான். இத்தகைய அங்கதக் கதைகள் கிரேக்க நாட்டிலும் மற்றும் சில மேலை நாடுகளிலும் இருப்பது போலவே வடமொழியிலும் தமிழ் மொழியிலும்,

நூற்றுக்கணக்கில் வழங்கி வந்துள்ளன. நம் நாட்டு வில்லுப் பாட்டுக்களிலும் பாட்டிமார்க்கதைகளிலும் இத்தகைய அங்கதக் கதைகள் ஏராளம் இடம் பெற்றுள்ளன.

**காதற்சுவை**

மேனாட்டில் இடைக்காலத்தில் காதலைப் பெரிதாக போற்றி ஏற்றினார்கள். அக்காலத்தில் ஓர் அழகியப் பெண்மணியின் காதலைப் பெறுவதற்காக வாலிபர்கள் வீர செயலை ஆற்றுவார்கள். காதலை அவ்வாறு போற்றியதால் தான் காதலே இல்லாமல் இருப்பதைக் காட்டிலும் காதலித்து இறந்தாலும் மேல் என்ற பழமொழி ஏற்பட்டது. நம்நாட்டுச் சரித்திரத்திலும் இத்தகைய நிகழ்ச்சிகளைக் காணலாம். கதைகளில் வரும் காதலுக்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு காணப்படுகிறது.

தமிழ்ச் சிறுகதைகளில் மிகுதியான இடத்தைப் பெற்றவை காதற் கதைகளாகும். இவை முழுமையாக வெற்றி பெற்றுவிட்டன என்று கூறமுடியாது.

வ.வே.சு. ஐயரின் காங்கேயன், கமலவிஜயன், அகிலனின் நிலவினிலே, காதல் பிறந்த கதை, ந.பிச்சமூர்த்தியின் மீனலோசனை, கு.ப.ராவின் நூருன்னிசா, தி.ஜ.ராவின் அந்திவேளை, லட்சுமியின் முதல் வகுப்பு டிக்கெட், எல்லார்வியின் பொன்மலர், ஏசுவின் காதல், என்ன டிபன் பாச்சா, த.நா. குமாரசாமியின் சந்திரமதி, சிற்பியின் காதல்பலி, ராதா மணாளனின் பூக்குடலை, தூரனின் சாரதாவின் காதல், செஜகாந்தனின் லவ் பண்ணுங்கோ சார், அழகிரிசாமியின் அழகின் விலை, கற்பக விருட்சம் போன்றவை காதலைப் பற்றிய கதைகளாகும்.

கோமகளின், ‘‘கானல் நீர்’’ என்ற கதையில் இரு காதலர்கள் ஒரு பூங்காவில் இருந்து பொழுதுபோக்குவதை மறைந்திருந்து காண்கிறார் ஒருவர். தம் இளமையில் அதுபோல் காதல் கொண்டு பழகி மணந்து கொள்ளாமல் தம் பெற்றோரின் விருப்பப்படி ஒருத்தியை மணந்து கொண்ட முறையான வாழ்வை நினைத்து வருந்துகிறார். அதனால் வாழ்க்கையில் பெறத்தக்க ஒரு பேற்றை இழந்துவிட்டதாக நோகிறார்.

பலநாள் அந்தக் காட்சியைக் கண்டு அவர்களின் காதலைப் போற்றுகிறார். வாழ்த்துகிறார். ஆனால் அவனுக்கும் வேறொருத்திக்கும் திருமணம் ஆகிறது. பூங்காவில் நிகழ்ந்த காதல் முறிந்ததோ என ஐயுறுகிறார். திருமணம் நிகழ்ந்த சில வாரம் கழித்து பூங்காவிற்குச் செல்லும்போது மறுபடியும் பழைய இருவரையும் அதே நிலையில் காண்கிறார். தாம் காதல் என நம்பியது கானல் நீராய்ப் போனதை எண்ணி வெறுப்படைகிறார். காதலைத் தவிர மனிதன் மனத்தை முற்றிலும் வசப்படுத்தக்கூடிய

சிறந்த உணர்ச்சிகள் வேறு எவ்வளவோ இருக்கின்றன. இவைகளை நன்கு ஆராய்ந்து அறிந்து ஆசிரியர்கள் சுவையான கதைகள் எழுதமுடியும் என்பது உறுதி.

**ஒரு காதல் கதை**

நல்ல நகரம் ஒன்று, கோவிலும், குளமும், தேர்வீதிகளும் உள்ள ஊர். கோவிலில் ஏதோ ஒரு பெரிய திருவிழா நடக்கிறது. மயிலையில் நடைபெறும் அறுபத்து மூவர் திருவிழாவைப் போல என வைத்துக் கொள்ளலாம். நாட்டுப்புறத்திலுள்ள ஓர் இளைஞன் திருவிழாவைக் காண வந்திருக்கிறான். பேரழகி ஒருத்தி தேரோடும் வீதியில் ஒய்யாரமாய் நடைபயின்று சென்று கொண்டிருக்கிறாள். அவள் கோவிலை நோக்கித்தான் போகிறாள்.

வாழ்க்கையில் அந்த இளைஞனும் பலரை சந்தித்ததுண்டு. ஆனால் இந்த அழகியின் உருவமே தனிதான்! இப்படிப்பட்ட ஓர் அழகியை இதற்கு முன் அவன் கண்டதில்லை. இளைஞன் மனம் அவன் வசமில்லை. அழகியோ கோவிலுக்குச் செல்லுகிறாள். இளைஞன் பின் தொடருகிறான். அழகிக்குப் புரிகிறது இளைஞன் வரும் வரவு. ஒரு சிறு நையாண்டி செய்கிறாள். நாட்டுப்புறத்தான் மயக்கத்தில் நிற்கிறான் என்பது புரிந்து, விந்தை, வேடிக்கை புரிகிறாள்.

அந்த அழகி, ''இளைஞரே! கோபுர வாசலிலே நில்லும் நான் உள்ளே போய்ச் சுவாமி தரிசனம் செய்து விட்டு வந்து விடுகிறேன்'' என்று சொல்லிச் செல்கிறாள. கீழ்க்கோபுர வாசலிலே நுழைந்தவள் அப்படியே மேலைக்கோபுர வாசல் வழியாகச் சென்றுவிடுகிறாள். இளைஞன் நிற்கின்றான். நின்று பார்க்கிறான். சென்ற அழகி சென்றவள் தான் திரும்பக்காணோம். உள்ளே கோவிலுக்குள்ளிருந்து பலர் திரும்பி வருகிறார்கள்.

''ஐயா! இந்தப் பக்கமாக ஒரு பெண்ணழகி சென்றாளா?''

என்று கேட்டான். இல்லை என்ற மறுமொழி வருகிறது.

இளைஞனை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டே பெயரைச் சொல்லி விரிவாக விசாரணை நடத்தலாம் என்றாலோ ''உன் பெயரென்ன'' என்று அவளைக் கேட்க மறந்துவிட்டான். பாவம் என்ன செய்வது. பாடல் வருகிறது, இளைஞனுடைய பேச்சாகவே வருகிறது பாடல்.

''இல்லென்பார் தாம் அவரை''

அவர் என்று குறிப்பிடுவது பெண்ணைக் குறிப்பிடுகிற மரியாதைப் பேச்சு. ஒரு பழைய தமிழ். கோவிலுக்கு உள்ளிருந்து வருகிற மனிதர்கள் யாரைக்கேட்டாலும் அந்த அம்மாளைக் காணவில்லை. இல்லை இல்லை என்றே சொல்கிறார்கள்.

''இல்லென்பர் தாம் அவரை யாம் அவர்தம் பேர் அறியோம்''

சரி கொஞ்சம் விசாரணை செய்யலாம் என்றாலோ நமக்கு அந்தப் பெண்ணின் பெயர் தெரியாது. பெயர் தெரியாதே தவிர அடையாளம் நன்றாகவே தெரியும். எப்படி எனில்,

''பல் ஒன்று செவ்வாம்பல் முல்லையையும் பாரித்து''

செவ்வாம்பல் என்னும் மலரை எடுத்து இதழ்கள் என்று இருகூறாக வைத்துக் கொண்டு, நடுவில் முல்லை மொட்டுகளோ என்னும் பற்களுடன்,

''கொல் என்று காமனையும் கண்காட்டிக்
கோபுரக்கீழ் நில்லென்று போனார்''
என் இந்தச் செவ்வாம்பல் இதழ்களும்,
முல்லைப் பற்களுமே போதுமே,

இவற்றுக்கும் மேலாக மன்மதனை அழைத்து இவனை அப்படியே கொல்வாயாக! என்பதாக ஒரு கட்டளையும் இட்டாள். எப்படி? கண்சாடையிலேயே இந்த வேலை. மன்மதனுக்குக் கட்டளை. மன்மதனை அழைத்து என்னைக் கொல்லும்படி உத்தரவு பிறப்பித்துவிட்டு என்னிடம் என்ன சொன்னாள் அந்த அழகி,

கோபுரத்தின் கீழ் நில் வந்து விடுகிறேன் என்று சொல்லிப் போனாள்.

''நெஞ்சை விட்டுப் போகாரே''அவ்வளவுதான்!

கீழ்க்கோபுர வாசல்வழியே நுழைந்தவள் மேலை கோபுர வாசல் வழியே புறப்பட்டுப் போய்விட்டாள். ஆனால் கோபுர வாசல் வழியே சென்று விட்டாளே தவிர இந்த நெஞ்சக் கோபுரத்துக்குள் நுழைந்தவள் வெளியே செல்லவில்லை, என்ற நான்கு வரிகளாகிய ஒரு சிறு பாடல் சொல்லும் காதல் கதை சிறப்புடையது. அது சொல்கிற கதையோ காதல் என்ற உணர்ச்சி, எந்த மொழியில், எந்தக் காலத்தில் எந்த நாட்டில்,எத்தகைய சூழ்நிலையில் நிகழ்ந்தாலும் அதனுடைய அடிப்படையான ஆழத்தைத் தொட்டு நின்று பேசக்கூடிய பண்பும், எழிலும் நிரம்பிய ஒரு கதையாக அமைந்திருக்கிறது.

இப்பாடல் கதாபாத்திரம் நம்முன் வந்து தனது சோகக் காதலின் கதையைச் சொல்கிற நாடகப் பேச்சு! சிறுகதை என்றால் நூறு – நூறு நிகழ்ச்சிகளும் ஆயிரம் - ஆயிரம் சிக்கல்களும் இருந்தால் தானா, ஒரு சிறு நிகழ்ச்சி, ஒரு சின்னஞ்சிறிய சம்பவம், ஒரு பாத்திரப் படைப்பு.

ஒரே ஒரு பாத்திரத்தின் ஒரே வினாடியின் கொந்தளிப்பு எல்லாமே ஒரு வகையில் ஒரு சிறுகதைதான். சிறுகதை என்ற கலையின் தோற்றத்திற்கே ஆதாரம் அது பிறக்குமிடம். இப்பாடலில் கண்டதுபோல் ஒரு சிறுநிகழ்ச்சி அல்லது உணர்ச்சியின் ஒரு சிறு கழிப்புத்தான் ஆதாரம்! இதை வைத்துக் கொண்டு இதை

அடிக்கல்லாக நாட்டி இதன் மீது பெரிய மாடமாளிகைகளை எழுப்புவது தான் கதைக்கலைத் தோற்றம் ஆகும்.

இப்படிப்பட்டதொரு மையக் கருத்துதான் ஒரு புள்ளியை மையமாகக் கொண்டு ஒரு வட்டம் சுழல்வதைப் போலச் சின்னஞ்சிறு நிகழ்ச்சியை, புள்ளியைச் சுற்றிப் பற்றிச்சுழல்கிறது சிறுகதை. ஆழ்ந்து யோசிப்போமோனால் நம்முடைய தமிழ் மொழியிலுள்ள நாடகப் பண்போடு கூடிய ஒவ்வொரு தனிப்பாடலுமே இவ்வகையான ஒரு சிறுகதைதான். வசனத்தில் அமைவதற்குப் பதிலாகக் கவிதையிலே அமைந்துள்ள சிறுகதை விந்து அல்லது தோற்றம் எனலாம். நாவல் என்ற நெடுங்கதையாகக் காப்பியத்திற்கு ஒப்பிட்டால், சிறுகதை என்ற கலைப்படைப்பை ஒரு தனிப்பாடலுக்கு ஒப்பிடலாம்.

தோற்றம், கருத்தமைப்பு, வடிவம், எல்லாவற்றிலும் தனிப்பாடலுக்கும், சிறுகதைக்கும் அத்தனை இணைப்பு இருக்கிறது. புகழ்பெற்ற ஒரு ஆங்கில ஆசிரியர் ஹென்றி வாரன் ''சிறுகதை என்பது தனிப்படலே'' என்று கூறி, தமது இலக்கணத்தைப் பல ஆங்கில ஆதாரங்களோடு விரிவான முறையிலே விளக்குகிறார். அதற்குக் காரணம் நிகழ்ச்சியின் மையப்புள்ளி என்ற ஒன்று தனிப்பாடலுக்கு இருப்பது போலவே, ஒரு சிறுகதைக்கும் இருக்க வேண்டியுள்ளது. பொருளைக் கையாளும் முறையில் சொற்கட்டு, சொற் செறிவு இரண்டும் நுட்பமாக வேண்டி இருப்பதோடு, வடிவத்தில் ஒரு தனிப்பாடலைப் போலவே ஒரு சிறுகதையும், ஒருமைப்பாடும், உருவ அழகும், அணிகளும், கொண்டு நிகழ வேண்டும். உரைநடையில் இந்த அழகுகள் எப்படிக் கதை நிகழ்ச்சியாகிய பொருளிலும், நிகழ்ச்சியின் உருவமாகிய வடிவத்திலும் ஆற்றலோடு வெளியாகின்றன என்பதைக் கதைப் பொருளிலும், வடிவத்திலும் உணரலாம்.

**வீரம்**

தமிழ் மக்கள் வீரவாழ்வு வாழ்ந்தவர்கள், புறப்புண்ணுக்கு அஞ்சியவர்கள், விழுப்புண்களை மகிழ்ந்து ஏற்றுக் கொண்டவர்கள். எட்டுத்தொகை நூல்களில் புறநானூற்றுப் பாடலும் ஒரு சிறுகதையை உள்ளடக்கியது என்று கொண்டால் மிகையாகாது. தமிழ்நாட்டு வீரர்களின் வீர சாகசச் செயல்களைப் பற்றி பலவாறு நாம் இன்று அறிய முடிகிறது. பழங்கால வரலாறு வீரத்திற்கே முதலிடம் அளித்ததை எடுத்தியம்புகின்றது. போர் முறைகளும் போராடும் திறமையும், மிகுதியும் பெற்று வாழ்ந்தவர்கள் தமிழர்கள்.

பள்ளிப்படை வீடுகளும், வீரக்கற்களும் பழந்தமிழரின் வீர வாழ்வைப் பறைசாற்றுவனவாகும். ஒரு வீரப் பெண் போரில் புறப்புண்பட்டான் தன் மகன் என்றுகேள்வியுற்று விரிந்த கூந்தலுடன்ஈ கையில் வாளொன்று ஏந்திப் போர்க்களம்

சென்று பிணங்களைப் பார்த்து என் மகன் புறப்புண்பட்டு மாண்டிருப்பின் அவன் பாலுண்ட மார்பை அறுத்தெறிவேன் என்று சூளுரைத்துக் கடைசியில் தன்மகன் விழிப்புண்பட்டு மாண்டதைக் கண்டு மன மகிழ்ந்தாள் அந்த வீரத்தாய். இதிலிருந்து பழந்தமிழரின் வீரம் புலப்படுகிறது.

இன்னொருத்தி முதல் நாள் போரில் தன் தந்தை வெற்றி பெற்று வீரப் புண்பட்டு இறந்தான் என்று கருதாது, இரண்டாம் நாள் தன் கணவனும் போரில் வீரப்புண்பட்டு இறந்தான் என்பதையும் கொள்ளாது, மூன்றாம் நாள் போருக்குத் தன் இளம் சிறுவனை அணிபூட்டி வேல் கொடுத்துப் போருக்கு அனுப்பிய வீர மரபு நம் தமிழர் மரபு. வரலாற்றுப் போர்களைப் பின்னணியாகக் கொண்டு சரித்திரச் சிறுகதைகள் பின்னப்பட்டுள்ளன.

கதாசிரியர்கள் சரித்திரச் சிறுகதைகளையும், சரித்திர நாவல்களையும் நம் தமிழகத்தில் படைத்து அளித்துள்ளனர். வரலாற்றை எலும்புக் கூடாக வைத்துக் கொண்டு அதில் தசையைப் பொதிந்து இரத்தத்தை ஓடவிட்டு நரம்பை முறுக்கி உயிர்கள் ஓசை ஒலிக்கும்படி செய்வது மிகவும் திறமையோடு செய்ய வேண்டிய வேலைகளாகும்.

அறிஞர் அண்ணாவின் தஞ்சை வீழ்ச்சி என்ற கதை வெங்கண்ணா என்ற வேதியர் தமிழ்நாட்டை மராட்டிய மன்னர்களுக்குக் காட்டிக் கொடுத்த இரண்டகச் செயலை, வரலாற்று உண்மையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது.

''தஞ்சையின் வீழ்ச்சி'' அழகுத் தமிழில் இனிய நடையில் எழுதப்படுகிறது.

மராட்டிய அரசு அமைந்தது தமிழகத்தில்! இமயத்தில் இலச்சினையைப் பொறித்த வீரன் வாழ்ந்த தமிழகம், கனக விசயர் தலையில் கல்லேற்றிச் சுமக்கச் செய்த தமிழகம், கடாரம் கொண்ட தமிழகம். மராட்டியரின் ஆட்சிக்கு இடமளித்துத் தாழ்நிலை பெற்றது எப்படி? வெங்கண்ணா என்னும் வேதியன் என்பது எவ்வளவு பேருக்குத் தெரியும்! தெரிந்த சிலர் கூறினாலும் எவ்வளவு பேருடைய செவியில் வீழ்ந்து சிந்தனையைக் கிளறுகிறது! பிறந்தது தமிழகத்தில், வாழ்ந்தது தமிழகத்தில், பழகியது தமிழருடன், பேசியது தமிழ்மொழி, எனினும் தமிழகத்தின் பூந்தோட்டத்தை மராட்டியருக்குக் காட்டிக் கொடுத்தான் கயவன்! அன்னிய ஆதிக்கத்தைப் புகுத்தினான். பொன்னும் பொருளும் போக, போக்கியமும், மானியமும், பட்டயமும் பெற்றான். பேணிராசை தந்திருக்கும் தமிழரின் தன்மானமோ அழிந்து பட்டது. தஞ்சை வீழ்ந்தது.

எழுத்தாளனது படைப்புகளுக்குப் பகை புலனாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சனைகளாகும். எழுத்தினால் ஒரு பரம்பரையின், தேசத்தின் போக்கை மாற்ற முடியும் என்பது உண்மையாகும். பிரஞ்சுப் புரட்சியும், ரஷியப் புரட்சியும் பேனா முனையில் உருவானவையாகும். மனிதாபிமானமும் தீமைகளை அசத்தியதை அகழ்ந்து பார்க்கும்படி தூண்டவும் கூடிய சக்தி பேனா முனைக்கு இருக்கிறது.

**சிறுகதையின் தலைப்பு**

சிறுகதை சிறப்படைவதற்குச் சிறந்த தலைப்பு, தொடக்கம், மனத்தினின்று அகலாத பாத்திரங்கள், நேர்த்தியான கதைப் பின்னல், நுட்பமாகக் கதைக் கூறல், சிறந்த முடிவு இவை இன்றியமையாதவை. சிறந்த சிறுகதைக்குச் சிறப்பான பெயர் இன்றியமையாதது. பொருத்தமான பெயரும் அதன் கவர்ச்சியுமே படிப்பவனுக்கு முதலில் அறிமுகமாகின்றன. சிறுகதையின் தலைப்புகள் கவர்ச்சியுடனும் கதையின் உள்ளீட்டுச் சுவை குன்றாத முறையிலும் அமைதல் வேண்டும். சிறுகதை தலைப்பு நான்கு வகையாக அமையும்.

(1) கதையின் தொடக்கத்தை வைத்து தலைப்பு அமைதல்.

(2) கூறும் பொருளை வைத்துத் தலைப்பு அமைதல்.

(3) இன்றியமையா பாத்திரத்தின் பெயரை வைத்துத் தலைப்பு அமைத்தல்.

(4) முடிவை வைத்துத் தலைப்பு அமைத்தல்.

**(1) தொடக்கமே தலைப்பாய் அமைதல்**

சிறுகதையின் தொடக்கம் உணர்ச்சி மிக்க வகையில் ஏற்றதாக அமைந்திருப்பின் அதனையே தலைப்பாக அமைத்து விடுவர். ஜெயகாந்தனின் போனவருஷம், பொங்கலப்போகி, ராஜநாராயணனின் கதவு, ந.பிச்சமூர்த்தியின் வெங்கலப் பானையின் கதை, கி. வா. ஜகந்நாதனின் மார்ச் - 3, சூடாமணியின் இரண்டாவது தந்தை போன்றவை இவ்வகைத் தலைப்புகளைக் கொண்டவையாகும்.

**(2) பொருளே தலைப்பாய் அமைதல்**

சில கதைகள் ஏதாவது சிக்கல்களை வைத்து புனையப்பட்டிருக்கும். இக்கதைகளுக்கு அவற்றின் பொருளை வைத்து தலைப்பு அமைப்பர். இத்தலைப்பு கவர்ச்சியாயும், தலைப்பை பார்த்த உடனேயே கதையை ஓரளவாவது புரிந்து கொள்ளும் வகையிலும் அமைந்திருக்கும். விந்தனின் பசிப்பிரச்சனையை, அகிலனின் படியரிசி, சுந்தரராமசாமியின் பொறுக்கி வர்க்கம், ஜெகசிற்பியனின் இருட்டறையில்

உள்ளதடா உலகம், ஜெயகாந்தனின் அக்கினிப்பிரவேசம், சாத்தானும் வேதம் ஓதட்டும் போன்றவை இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

**(3) பாத்திரப் பண்பே தலைப்பாய் அமைதல்**

இத்தகைய கதைகள் ஒரு பாத்திரத்தின் பண்பை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டிருக்கும். இக்கதைகளில் பாத்திரப் படைப்பின் மூலம் சிறப்பு ஏற்பட்டிருக்கலாம். இக்கதைகளுக்கு அப்பாத்திரத்தின் பெயரையே தலைப்பாக அமைப்பர் ஆர்.வி.யின் பூக்காரி செங்கம், லட்சுமியின் மேரி செல்வம், சூடாமணியின் வீராயி, ந.பிச்சமூர்த்தியின் மோகினி, புதுமைப்பித்தனின் திருக்குறள் குமரேசப்பிள்ளை, ராஜாஜியின் கூனிசுந்தரி, ல.ச.ராவின் சாவித்திரி, வ.ரா.வின் மாட்டுத்தரகு மாணிக்கம் போன்றவை பாத்திரத்தின் பெயரையே தலைப்பாகக் கொண்டவையாகும்.

**(4) முடிவை வைத்து தலைப்பு அமைதல்**

முடிவை வைத்து சிறுகதைகளுக்குத் தலைப்புகள் இடப்பட்டுள்ளன. இத்தகைய கதைகளின் தலைப்பை பார்த்த உடனேயே அவற்றின் போக்கையும் முடிவையும் அறிந்துகொள்ளலாம். கு.ப.ராவின் படுத்த படுக்கையில், நா. பார்த்தசாரதியின் ஊமைப்பேச்சு, வேட்கை, ஜெயகாந்தனின் வேலை கொடுத்தவன், ராசாவந்துட்டாரு, பொறுக்கி, புதுமைப்பித்தனின் திண்ணைப் பேர்வழி, சோமுவின் மங்களம் போன்றவை முடிவை வைத்துப் பெயரிடப்பட்டவை.

இவ்வாறு சிறுகதைகள் பலவகையில் இன்று எழுத்தாளர்களால் எழுதப்படுகின்றன. அவை உணர்வு வழிக்கதைகள், அங்கதக்கதைகள், குடும்பக் கதைகள், குறிக்கோள் கதைகள், வரலாற்றுச் சிறுகதைகள், வருணனைக் கதைகள், தத்துவக் கதைகள், இயல்புநடைக் கதைகள், மனப்பின்னற் கதைகள், வினாக் கதைகள், நீதிக் கதைகள். ஆகவே சிறுகதைகளை அவற்றின் பொருள் வைப்பு முறையைக் கொண்டு பார்க்கும்போது எத்தனை வகை அவற்றில் இருக்கின்றன என்பதை அறியலாம். பெரும்பாலான கதைகள் குறிப்பிட்ட இந்த வகைகளில் ஏதாவது ஒன்றில் அடங்கிவிடும்.

இந்த வகைகளில் அடங்காத ஏதேனும் ஒரு சில கதைகள் இருக்குமானால் அவை பெரும்பாலும் தங்கள் வடிவங்களால் மாறுபடுமேயன்றி ஏறத்தாழ இத்தகைய பட்டியலில் ஏதேனும் ஒன்றின் கீழ் வந்து விடும். நல்ல சிறுகதைக்கு அடையாளம் ஒன்றே. அதைப்படித்து முடிக்கும்போது நல்லவர்களுடைய மனத்தில் மகிழ்ச்சி தோன்றி உள்ளம் பூரிக்கும்.

## சிறுகதை

படைப்பிலக்கியம் தமிழிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். இக்காலப் படைப்பிலக்கியங்களுள் சிறந்த ஒன்றாகவும் கருதப்படுவது சிறுகதையையாகும். சிறுகதை வளர்ச்சிக்குரிய மூல ஊற்று – அடிப்படைக் காரணம் - மக்களின் கதை கேட்கும் ஆர்வத்திலே அமைந்து கிடக்கிறதென்பர்.

''உடைமை பற்றிய உணர்வு மனிதனிடத்தில் மிக ஆழமாக வேரூன்றியிருப்பது போலவே கதை கேட்கும் ஆர்வமும் மிக அழகாக வேரூன்றியிருப்பது, வரலாறு தொடங்கிய காலம் முதலே ஒருவர் கதை சொல்வதைக் கேட்பதற்காகவே பலரும் நெருப்பைச் சுற்றிய கூட்டமாக உட்காரும் பழக்கமோ, பொதுவிடத்தில் ஒன்றாக அமரும் பழக்கமோ இருந்திருக்கின்றது'' என்று சாமர்செட்மாம் கூறிச் செல்வது ஈண்டு இயல்புடன் சிந்தித்தற்குரியது.

மக்களின் ஆர்வத்தினை நிறைவு செய்யும் வகையிலே அவர்களை மாண்புறுத்தியும் இன்புறுத்தியும் துணை செய்யும் இலக்கியப் படைப்புகளிலே சிறுகதை மிகவும் பயன்படுவதால் அதனைப் பற்றிய நுண் கூறுகளைத் தெரிந்து கொள்ளுதல் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும். சிறுகதைகளைப் பற்றிய போதிய விளக்கங்கள் பாடவழிகாட்டியுள் வந்துள்ளன. மேலும் சில குறிப்புக்கள் தெளிவிற்காகவும் சிறுகதையெழும் முனைப்பிற்காகவும் உத்திகளாகத் தரப்படுகின்றன.

### சிறுகதையெழுதுகையில் பின்பற்ற வேண்டிய செய்திகள்

1). சிறுகதையின் தொடக்கம் நல்ல விறுவிறுப்பாக அமைந்து, அதன் தொடர்ச்சி நெகிழ்ச்சியின்றி இயங்கி உச்ச நிலையையடைந்து, முடியும் வரையில் படிப்போரின் முழு நாட்டத்தினையும் ஒருமுகப் படுத்திச் செல்வதாக இருத்தல் வேண்டும். கதை நிகழ்ச்சிகளில் தொய்வு ஏற்படா வகையில், படிப்பவர்க்குச் சோர்வு ஏற்படாவண்ணம் சிறுகதை அமைப்பு இருத்தல் வேண்டும்.

2). சிறுகதையில் உணர்ச்சியோட்டம் நிகழ்ச்சிப் பின்னல்கட்கிடையே இழையோடி நிற்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். உலகில் நாளும் போர், பூசல்கள், திருமணங்கள், கொலைகள், திருவிழாக்கள், திருட்டுகள், மோசடிகள், ஊடல்கள், கூடல்கள், ஏமாற்றங்கள், கொடுமைகள், தியாகங்கள், பாசவுணர்வுகள், பக்திநிலைகள், யோகங்கள் முதலிய பலவும் பல்வேறு சூழல்களில் நடைபெறுவதைக் காணலாம். இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் பின்னணியில் மக்களின் உணர்ச்சிகள் தாம் காரணங்களாக அமைந்திருத்தலை உணரலாம். ஊன்றிச் சிந்தித்தால் உணர்ச்சியும் நிகழ்ச்சியும் சங்கிலித் தொடர்போல நிகழ்வதைக் காணலாம். சில வேளைகளில் ஒரு நிகழ்ச்சியே மற்றொரு நிகழ்ச்சிக்கோ, தொடரான பல நிகழ்ச்சிக்கோ காரணமாக அமைவதையும் அறியலாம்.

நிகழ்ச்சி தொடர்ச்சிகளைச் சித்தரித்து ஒரு கதையாக எழுதுகையில் அவற்றின் மூல நிகழ்ச்சிக்கு வித்தாகிய உணர்ச்சியே கதையின் உயிர்நாடியாக அமையும். எழுத்தாளர்கள் தாம் எழுதும் கதையில் இன்ன உணர்ச்சி தான் உயிர் நாடியாய்த் துடிக்க வேண்டுமென்பதை முதலில் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். உணர்ச்சிகள் முக்கியமாக ஒன்பது வகைப்படும் என்று கூறுவார்கள்.

(1) காதல்,

(2) வீரம்,

(3) சோகம்,

(4) நகை,

(5) வியப்பு,

(6) வெறுப்பு,

(7) அச்சம்,

(8) சாந்தம்,

(9) கருணை என்பனவாகும்.

இவற்றைத் தவிர, இன்னும் எண்ணிறந்த நுணுக்கமான உணர்ச்சிகள் மனிதனது இதயத்தில் தினந்தோறும் எழுகின்றன. இவற்றில் ஏதேனும் ஓர் உணர்ச்சியானது பொங்கித் ததும்பும் ஓர் ரஸமான சம்பவம் அல்லது சம்பவத் தொடரே உங்கள் கற்பனையில் அமைத்துக் கொள்ளுங்கள். அதற்கு அழகான சொற்றொடர்களால் உருவம் கொடுங்கள். அதுதான் ஓர் உயிர்த்துடிப்புள்ள சிறுகதை என்று சேஷத்திரிசர்மா கூறிச் செல்வது நினைவில் கொள்ளுதற்குரியது.

3) சிறுகதைக்குரிய பொருண்மை இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்ற வரையறையில்லை. அது குண்டூசி முதல் குமரிமுனை வரையில் எதுவும் அமையலாம் என்றாலும் சிறுகதைப்பொருள் குறிப்பிட்ட வரையறைக்குள் திறம்பட விளங்குதற்குரியதாய், அதே வேளையில் படிப்பவர்களுக்கு ஆர்வத்தைத் கிளர்ந்தெழச் செய்யக் கூடியதாய் இருத்தல் வேண்டும். சிறுகதை எழுதி முடித்தபின் அதன்கண் விளக்கியுள்ளதை விடச் சிறப்பாக விளக்க இயலாது என்ற உணர்வு படிப்பவர்களிடையே ஏற்பட வேண்டும்.

கதையின் கருப்பொருள் எளியதாக மக்களது நம்பிக்கையை உயர்த்துவதாக அமைந்து சமுதாயத்தின் தேவையான பகுதியைச் சுட்டிய நிலையில் வாழ்க்கையின் நன்மையை அறத்தினை வலியுறுத்துவதாக அமைந்தால் உலகுக்கு நல்லது. பொழுதுபோக்கு நிலையைத் தாண்டி மக்களுக்குப் பயன்படும் வகையில்

அமையும் அவ்வாறான பொருண்மை என்றுமே போற்றப்படும். கல்கி, அகிலன் போன்றோர் சிறுகதைகளில் இத்தகைய பொருண்மையமைந்திருத்தலைக் காணலாம்.

4) சிறுகதையில் வரும் கதை மாந்தர்கள் - பாத்திரங்கள் - பல்வேறு நாட்டினராக, பல்வேறு மொழியினராக, பல்வேறு கொள்கைக் கோட்பாடுடையவர்களாக இருக்கலாம். சமூகத்திலே பல்வேறு படிகளிலும் இருப்போருக்கிடையே கதை நிகழ்ச்சிப்போக்கு ஓர் ஒருமையை – நிறைவைக் கொண்டியங்குதல் வேண்டும்.

5) சிறுகதைகளில் பயன்படுத்தப்படும் மொழிநடை எளிமையுடையதாக இருத்தல் நல்லது. சமுதாயத்திலுள்ள பல்வேறு நிலையினரும் படித்துப் பயன்கொள்ள எளிய வாய்ப்பினைத் தரும் இலக்கியக் கருவி இதுவாதலின், எளிய மொழி நடையில் எழுத்தாளர்கள் மனம் பதித்தல் வேண்டும். பல்லையுடைக்கும் திரிச்சொற்களுடன் கூடிய தனித்தமிழ் நடை பண்டித நடை சிறுகதைக்குக் கைக்கொடுத்து உதவாது என்பது திண்ணம். அதற்காக இழிவழக்குடன் கூடிய கொச்சை நடையும் ஆகாது. வில்லியம் ஹேஸ்லிட் என்பவர் கூறியாங்கு ஒரு பழகிய நடை, சிறுகதைகளில் கையாளப் பெற்றால் எழுத்தாளரின் படைப்பிலக்கிய வெற்றி எளிதாகக் கிட்டும்.

6) சிறுகதைகளின் எதிர்பார்ப்பு நிலை மிகச் சிறப்பான கூறாகவும் தேவையாகவும் கருதப்படும். கதையைப் படிப்போர் அடுத்து என்ன நிகழுமோ என்றும் எவ்வாறு நிகழ்ச்சிகள் இயைபுடன் விளக்கப்படுமோ என்றும் ஆர்வத்தோடு எதிர்பார்க்குமாறு கதையமைப்பு இருத்தல் வேண்டும் கதைத்தலைவன் தன் குறிக்கோளில் வெற்றிக் கொள்ளானாவ அதற்குரிய சூழல்கள் அமையாமல் எதிர்நீச்சல் அடித்துத் தோல்வி கொள்வானா? என்று படிப்பவருள்ளத்தில் கேள்விகள் ஒன்றன் பின் ஒன்றாக எழும் வண்ணம் ஆர்வம் விழைவுணர்வு கதையினிறுதி வரையில் நிலைத்திருத்தல் வேண்டும்.

7) சிறுகதைகளில் சிலவேளைகளில் முரண் தவிர்க்கவியலாத நிலையில் அமைய வேண்டிவரும். பொதுவாக இது நன்மைக்கும் தீமைக்கும் ஏற்படும் மோதலினின்றும் தோற்றுவிப்பதாக அமையும் தனிமையிலிருக்கும்போது உள்ளப் போராட்டச் சூழலிலும் இ∴து அமையும். சிறந்த எழுத்தாளர்கள் முரண்களையமைத்துப் படிப்பவர்களை நன்கு சிந்திக்கச் செய்வர்.

8) சிறுகதையமைப்பிற்குரிய ஒருமைப்பாடு இயைபுடன் அமைந்திருத்தல் வேண்டும். அந்த ஒருமைப்பாடாவது தூண்டுணர்ச்சி செயல்நோக்கம் செயல்

ஆகியவற்றின் ஒருமைப்பாட்டையுணர்த்தும், மேலும் உணர்ச்சிப்பதிவின் ஒருமைப்பாடும் இதனுள் இயையும், அமைப்பு முறையைப் பொறுத்தவரையில் கதை கோப்பு ˙கதை பாத்திரப் படைப்பு கதை உணர்ச்சி பதிவுக்கதை ஆகிய மூவகையுடன் எழுத்தாளரின் திறமைக்கேற்பக் கதை கவர்ச்சியினைப் பெறும்.

9) சிறுகதையுடன் கற்பனையின் தேவையைக் குறைத்து மதிப்பிடுதல் கூடாது. ஒருவர் சிறுகதை எழுத்தாளராகப் பெயர்பெற வேண்டுமென்றால், தாய்மொழியிலும் பிறமொழிகளிலும் வெளியான சிறுகதைகளைப் பற்றி நிரம்பத் தெரிந்திருத்தல் நல்லது. நல்ல இலக்கியப் பயிற்சியுடனும், உலகியலனுபவத்துடனும் சிந்தனையாற்றலைப் படிப்படியே வளர்த்துக் கொண்டு புதுமையான கதைக் கோப்பினை உருவாக்கப் பழகுதல் வேண்டும். அந்நிலையில் ஒருவரது அடி மனத்தில் புதைந்து கிடக்கும் கற்பனைப் பண்பு – நீறுபூத்த நெருப்பைப் போல்மறைந்து கிடக்கும் கற்பனைக்கூறு வெளிப்பட்டுச் சிறக்கும். கற்பனா சக்தி பயிற்சியால் பெறப்படுவதன்று. அது ஒருவரது உள்ளத்தில் இயற்கையாக அமைந்திருக்க வேண்டிய பண்பு. இந்தப் பண்புதான் சாதாரண எழுத்தாளனிடமிருந்து மேதாவியைப் பிரித்துக் காட்டுவது என்றும் அறிஞர்கள் கூறுவர்.

கதையெழுதுவதற்கு கற்பனையாற்றல் மிகவும் தேவையென்றாலும், அதற்காக அ∴து ஒருவரது விடாமுயற்சியால் ஒவ்வொருவரும், நம்பிக்கை கொண்டு கற்பனையாற்றலை வளர்த்துக் கொள்ளலாம். ‘‘உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ’’ என்ற பட்டினத்தார் திருவாக்கினை நினைவில் கொள்ளவேண்டும். சிறுகதை ஏதாவதொரு பயனை வழங்கவல்லதாகவும் முடிவினை வழங்கவல்லதாகவும் அமைந்து கதை நிகழ்ச்சிகளும் கதை மாந்தர்களும் அந்த ஒரு பயனுக்கேற்பப் பயன்படும் வகையில் அமைய வேண்டும்

**சிறுகதை வகைகள் உத்திகள்**

சிறுகதைகளை மூன்றாக வகைப்படுத்துவார் ஸ்டீவன்சன் என்ற அறிஞர்.

(1) கருவால் வந்த கதை (The Story of Plot)

(2) பாத்திரத்தால், அதன் குணநலன்களால் உருவான கதை (The Story of Character)

(3) பாத்திரங்களின் உணர்வுகளை மட்டும் முக்கியத்துவப்படுத்தும் கதை (The Story of Impression)

இவை தவிர, நிகழ்ச்சியால் சிறக்கும் கதை என்ற வகையையும் இணைத்துக் கொள்ளலாம்.

**கருக்கதை**

சிறந்த சிறுகதை ஆசிரியர்களான மாப்பசான், ஆண்டன் செகாவ், ஓ ஹென்றி போன்றவர்கள் கதைக்கருவினால் சிறந்த கதைகளைப் படைத்துள்ளனர். சின்னஞ்சிறிய கதைக்குள் ருசிகரமான கதைக்கருவைப் பதித்து இவர்கள் கதை சொல்கின்றனர். புதுமைப்பித்தன் கருவினால் சிறக்கும் பல கதைகளைப் படைத்துள்ளார்.

சங்குத்தேவனின் தர்மம் என்னும் கதை இதற்கு நல்ல சான்றாகும். முறுக்குப் பாட்டி முத்தாச்சி என்ற கிழவி தன் ஒரே மகளுக்குக் கல்யாணம் செய்வதற்காகத் தங்கத்தில் காதணி செய்து மடியில் கட்டிக் கொண்டு, காட்டில் தனிவழி நடந்து செல்கிறாள். சங்குத் தேவன் என்ற பெயர் பெற்ற வழிப்பறித் திருடனின் பயம் அவளை ஆட்டி வைக்கிறது. வழியில் அந்தத் திருடனே அவளோடு நடந்து வருகிறான். கிழவிக்கு அவனை யாரென்று தெரியவில்லை. வழித்துணை என்று நம்பி அவனிடமே சங்குத்தேவனைத் திட்டுகிறாள். தன் மடிக்கனத்தையும், மகள் கல்யாணத்தையும் சொல்லுகிறாள். திருடன் பத்திரமாக அவளை ஊர் எல்லை வரையில் கொண்டு வந்து விட்டு, அவளிடம் ஒருபணப்பையைக் கொடுக்கிறான். கிழவி அவன் பெயரைக் கேட்கிறாள்.

சங்குத்தேவன் என்று பதில் வருகிறது. இக்கதையில் ஓஹென்றியின் கதையில் வருவது போலக் கதையின் கடைசிப் பகுதியில் வாசகர்கள் வியக்கக்கூடிய ஒரு முடிவு வருகிறது. கெட்டவன் எல்லா நேரங்களிலும் கெட்டவனாக இருக்க மாட்டான் என்ற கதைக் கருவைக் கொண்டு உருவாக்கப்பட்ட இச்சிறுகதை வாசகர்களுக்குச் சுவைதரும் விதத்தில் படைக்கப்பட்டுள்ளது.

**பாத்திரக் கதை**

புதுமைப்பித்தனுடைய பொன்னகரம் என்ற கதை அம்மாளு என்ற பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கதையாகும். அம்மாளு சாதாரண ஏழைக் கூலித் தொழிலாளி, அவள் கணவன் குதிரை வண்டி ஓட்டுபவன். அவன் அடிபட்டு மூச்சுப் பேச்சில்லாமல் கிடந்தபோது அவனுக்குப் பால் கஞ்சி ஊற்றுவதற்காக அவள் தன் கற்பை விலை பேசுகிறாள். கற்பு என்பது பாதுகாத்துப் போற்றக் கூடிய ஒன்று என்ற மேல்தட்டு வர்க்கத்தின் நம்பிக்கைகளை அறியாத அம்மாளு கணவனுக்காகச் செய்த காரியத்தைப் பற்றிப் பேசுவது பொன்னகரம் கதையாகும். மூன்று பக்கங்களில் அமைந்த இதில் அம்மாளு இல்லாவிட்டால் கதை

இல்லை. அவளே, அவள் செய்கையே கதையை உருவாக்கியிருக்கிறது என்று பார்க்கும் போது இக்கதை பாத்திரத்தால் சிறந்த கதை என்றே கூற வேண்டும்.

கதைகளைப் படைக்கும் நெறிகளில் ஜெயகாந்தன் பாத்திர உருவாக்கத்திலேயே அதிகக் கவனம் செலுத்துகிறார். அவர் படைத்த பாத்திரங்கள் வாழ்க்கையில் நம் கண்முன்னால் காண்பவராவார்கள்.

ஜெயகாந்தனின் படைப்புகளில் அவர்கள் தாம் வாழும் சூழலிலிருந்து அப்படியே எழுந்து வந்து இயங்குகிறார்கள், உறவாடுகிறார்கள், பேசுகிறார்கள், சிந்திக்கிறார்கள், கோபப்படுகிறார்கள், ˙சிரிக்கிறார்கள் அழுகிறார்கள். ஒரு தாயைப் போலத் தம் பாத்திரங்களோடு ஜெயகாந்தன் ஒன்றி நிற்கின்றார். ஜெயகாந்தனைப் போன்றுதான் தி.ஜானகிராமனும் பாத்திரங்களை உருவாக்குவதில் சிறந்து விளங்குகின்றார்.

**நிகழ்ச்சிக் கதை**

அமெரிக்க எழுத்தாளர் எட்கர் ஆலன்போ, ஹெமிங்வே, இங்கிலாந்தைச் சேர்ந்த ஜாக்கப்ஸ் போன்றவர்கள் கதையம்சம் இல்லாமல் சுவையான நிகழ்ச்சியை மட்டும்அடிப்படையாகக் கொண்டு கதைகள் படைத்துப் புகழ்பெற்றனர்.

புதுமைப்பித்தன் இவ்வகைக் கதையையும் படைத்துள்ளார். நினைவுப் பாதை என்ற கதையில் கதையம்சம் என்ற ஒன்று இல்லை. இழவு வீட்டில், இரண்டாவது நாள் விடிவெள்ளி கிளம்பும் நேரத்தில் தொடங்கி, சுமார் இரண்டே நாழிகைகளுக்குள் நடக்கும் நிகழ்ச்சிகளைச் சொல்லி, நான்கே பக்கங்களுக்குள் கதையை முடித்துவிடுகிறார் புதுமைப்பித்தன். மேலெழுந்தவாறு பார்த்தால் திடீரென்று தொடங்கித் திடீரென்று முடிவுபெற்ற கதைபோல் தோன்றும். ஆனால் ஆழ்ந்து நோக்கினால் படிப்பவரின் மனப்பக்குவத்திற்குத் தகுந்தாற்போல், நிகழ்ச்சிகளுக்குப் பின்னே உள்ள மறைமுகமான கதை, படிப்பவரின் உள்ளத்தில் வளர்ந்து கொண்டே போகும். இக்கதையின் முழு உருவம் சிந்திக்கச் சிந்திக்கப் புலனாகும் விதத்தில் அமைந்துள்ளது. அதாவது தலையும் காலும் இல்லாத முண்டம் போன்ற ஓர் ஓவியத்தை வரைந்து, அதற்கு முன்னும் பின்னும் உள்ள அழகுகளைக் கற்பனையால் கண்டு மகிழச் செய்வதே இந்த வகைக் கதையின் நோக்கம்.

**உணர்ச்சிக் கதை**

காதல், பசி, கோபம், துக்கம், நகைச்சுவை, விரகதாபம் என்று ஏதாவது ஓர் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு சில கதைகள்

படைக்கப்படுகின்றன. புதுமைப்பித்தனின் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் என்ற சிறுகதையில் நகைச்சுவை உணர்வு மேலோங்கி இருக்கின்றது.

கல்கியின் பெரும்பான்மையான சிறுகதைகளில் நகைச்சுவையுணர்வே மேலோங்கி இருக்கும். புதுமைப்பித்தனின் வாடாமல்லி கதை, அதன் நாயகி சரசுவின் தன்னுணர்ச்சியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. விரகதாபமா அல்லது சுய இரக்கமா அவ்வுணர்ச்சி எது என்பதை வாசகர்களின் கருத்திற்கே விட்டுவிடுகிறார்.

கல்யாணி என்ற கதையில், கல்யாணியின் விரகதாபத்தை மையப்படுத்திப் பேசியுள்ளார் புதுமைப்பித்தன். ஜெயகாந்தன் வாய்ச்சொற்கள் என்ற கதையில் கண்ணில்லாத இருவரின் காதல் உணர்ச்சியைக் கதைப்படுத்தியுள்ளார்.

“அந்த இரவு சம்பவத்திற்குப் பின் பகலும் இரவும் கண்ணப்பனைப் பற்றிய நினைவுகளிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள் ருக்குமணி. மானசீகமாய் அவன் குரலையும் பாட்டையும் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தாள்.வாழ்க்கை முழுதும் அவன் பாடிக்கொண்டே இருக்க, பக்கத்தில் உட்கார்ந்து தான் கேட்டுக் கொண்டே இருப்பதைக் காட்டிலும் உலகத்தில் வேறு ஒரு இன்பம் இருப்பதாக அவளால் நம்ப முடியவில்லை”

கு.ப.ரா.வின் கதைகள் காம உணர்வின் உளவியல் பக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன.

இவ்வாறு, மனித உணர்வுகளை முக்கியத்துவப் படுத்தி எழுதித் தமக்கென்று முத்திரை பதித்த எழுத்தாளர்களும் உள்ளனர்.

**சிறுகதையில் உத்திகள்**

இலக்கியத்தில் உணர்ச்சியைக் கருத்தாக மாற்ற உதவும் வடிவங்கள் அனைத்தும் உத்திகள் எனப்படுகின்றன. சிறுகதை, ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் திறம்பட அமையச் சில உத்திகள் பின்பற்றப்படுகின்றன. சிறந்த உத்திகள் மூலமே சிறுகதைகள் புதுமை படைக்கின்றன. உத்திகள் படைப்பாளரின் தனித்தன்மையைக் காட்டுவதாயுள்ளன. இந்த உத்திகள் அனைத்தும் கதையமைப்பு, கதைமாந்தர்கள் மூலமே வெளிப்படுகின்றன. சிறுகதையில் உத்திகளைக் கீழ்க்காணும் முறைகளில் வெளிப்படுத்தலாம். அவையாவன:

- குறிப்புமொழி
- எதுகை, மோனை பொருந்த அமைந்த சொற்றொடர் அமைப்பு
- முந்தைய நிகழ்ச்சிகளைச் சான்று காட்டுதல்
- சுருங்கக் கூறல்
- கதை கூறல் முறை

- அறிவு நிலை சார்ந்த சொற்களைப் பயன்படுத்தல்
- நனவோடை முறை
- சிறுகதைகளுக்குப் பெயரிடல் (தலைப்பு)
- சிறந்த கதைமாந்தர்

சிறுகதை இலக்கியப் படைப்பு மனத்தில் நின்று நிலைப்பதற்கு அதில் இடம்பெறும் உத்திகளும் காரணமாகின்றன. உத்திகளின் மூலம் செய்திகளை எளிதாக உணரச் செய்யலாம். உத்திகள் விரிந்த சிந்தனைக்கு வழிவகுக்கின்றன. இப்பகுதியின் மூலம் படைப்பிலக்கியத்தின் ஆக்கத்திற்கு உத்திகள் துணை நிற்பதை அறியலாம்.

**மொழிநடை**

சிறுகதைகளில் மொழிநடை எளிமையாய் இருத்தல் வேண்டும். சமுதாயத்தில் உள்ள பல்வேறு நிலையினரும் படித்து, பயன் கொள்ளும் இலக்கியம் இது. எனவே எளிய மொழிநடையின் மூலம் மட்டுமே படைப்பாளர்கள் வாசகர்களின் மனத்தில் கருத்துகளைப் பதிக்க வேண்டும். தனித்தமிழ் நடை, பண்டித நடை ஆகியவை சிறுகதைக்குக் கை கொடுக்காது. அதற்காக இழிவழக்குடன் கூடிய நடையும் உதவாது.

ஒரு பழகிய நடையுடன் கூடிய பேச்சு வழக்கு சிறுகதைகளில் இடம்பெறல் வேண்டும். இதன் மூலமே படைப்பாளனின் படைப்பிலக்கியம் வெற்றி பெற இயலும். இன்று சிறுகதைகளை விரும்பிப் படிப்பவர்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது. இதற்குக் காரணம், வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் மொழிநடையில் சிறுகதைகள் அமைந்துள்ளதே ஆகும். எனவே சிறுகதையின் மொழிநடை, உடன் இருந்து பேசுபவர்களைப் போல் அமைதல் வேண்டும்.

பொருள் புரியாத, கடினமான மொழிநடை கண்டிப்பாகத் தவிர்க்கப்படல் வேண்டும். அனைவரும் விரும்பிப் படிக்கும் ஒரு பொதுவான நடையை உடையதாகச் சிறுகதைகள் அமைதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டுமே உரிய மொழிநடை அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிப்பதாக இராது.

எனவே அனைவருக்கும் பொதுவான ஒரு எளிய நடையே சிறுகதைப் படைப்பிலக்கியத்திற்குத் தேவையானதாகிறது. படைப்பாளன் தனக்கென்று ஒரு மொழிநடையைப் பின்பற்றும்போது அது அவனுக்குரிய தனிநடை அழகாகிறது. இந்தத் தனி நடையழகு குறிப்பிட்ட ஆசிரியருக்கே உரியதாகி, அவருடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துகிறது.

இலக்கிய உரைநடைக்கு ஒரு வழிகாட்டிபோல் அமைந்த திரு.வி.கலியாண சுந்தரனாரின் நடை குறிப்பிடத்தக்கது. „கண்டிக்குச் செல்லும் வழி நெடுக இயற்கை அன்னையின் திருவோலக்கமன்றி வேறென்ன இருக்கிறது? எங்ஙனும் மலைகள், மலைத்தொடர்கள், மலைச் சூழல்கள் எங்ஙனும் சோலைகள், சாலைகள், கொடிகள், பைங்கூழ்கள் எங்ஙனும் அருவிகள், ஆறுகள், நீர்நிலைகள். இவை யாவும் ஒன்றோடொன்று கலந்து அளிக்கும் காட்சி அன்றோ கடவுள் காட்சி 1

தமிழை மக்களின் மொழியென்று உணர்ந்து கொண்டு, அதைத் தமது நடை வளத்தால் சிறக்கச் செய்தவர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி. „ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளைப்போல் அந்தச் சாலை எங்கே ஆரம்பமாகிறது. எங்கே முடிவாகிறது என்று தெரிந்து கொள்ள முடியாததாயிருந்தது. தபால்சாவடியின் தூணிலே தொங்கவிடப்பட்டிருந்த தபால்பெட்டி திக்கற்ற அநாதைபோல் பரிதாபத் தோற்றமளித்தது.‟ மேற்கண்ட எடுத்துக்காட்டுகளின் மூலம் மொழியின் தனி நடை அழகினை அறியலாம்.

**கூற்று**

சிறுகதையின் பொருண்மையே சிறந்த கூற்று முறைக்கு அடிப்படையாகிறது. இந்தப் பொருண்மையானது செய்திகளினால் உருவாகிறது. கூற்று என்பது சிறுகதை உரைக்கும் செய்திகளைப் பற்றியதாகும். படைப்பாளர் செய்திகளைத் தாமே கூறுவது போன்றும் அமைக்கலாம் அல்லது பிறர் வாயிலாகக் கூறுவது போன்றும் அமைக்கலாம்.

பொதுவாக, கூற்று முறை பிறர் கூற்றாக அமையும் போதுதான் அது செய்திமுறைப் பொருத்தமும், இலக்கியச் சிறப்பும் உடையதாகிறது. சிறுகதையில் கதைமாந்தர்கள் கூற்றுக்கு உரியவர்களாகின்றனர். சிறுகதையில் குறைந்த கதைமாந்தர்கள் இடம்பெறுவதால் அனைவருமே கூற்றுக்கு உரியவராகின்றனர். இத்தகைய கூற்றுகள் எளிய நடையில் அமைதல் வேண்டும். குறைந்த, பொருள் பொதிந்த, சுருக்கமான உரையாடல்களாக இவை அமைதல் வேண்டும்.

**கூற்றுகளின் வகைகள்**

- தன் கூற்று
- அயல் கூற்று
- பிறர் நினைப்பதை வாங்கிக் கூறல்
- தன் அனுபவங்களைச் செய்திகளாகக் கூறல்
- உரைநடை வடிவிலான கூற்று
- கடிதங்கள் வாயிலான கூற்று

- காட்சிகளின் வழியான கூற்று
- இயல்பான கூற்று
- கருத்துகளின் வெளிப்பாடான கூற்று

இதன் மூலம் கூற்றுகளின் வகைகளை அறியலாம்.

**நனவோடை முறை**

நனவோடை முறை என்பது வாசகர்களைச் சுண்டியிழுக்கும் ஒரு உத்தியாகவே கருதப்படுகிறது. புதினங்களிலும், சிறுகதைகளிலும், கவிதைகளிலும் காலம், இடம்ஆகியவற்றின் பின்னணியில் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்திக் கூறாமல், உள்மனத்தின் எண்ணங்களை அலையாகக் கிளப்பிவிட்ட நிலையில் அவற்றிற்குச் சொல்வடிவம் தந்தால் அதனை நனவோடை முறை என்று கூறலாம்.

“நனவோடை” உத்தியைப் படைப்பாளன் கையாளும்போது சொல்லாட்சி நுட்பம் உடையதாக அமையும். நனவோடை உத்தியை, “கவர்ச்சித் திறன் சொல்லாட்சி’’ என்றும் குறிப்பிடலாம். இந்த நனவோடை முறை என்பதை, பாத்திரத்தின் நினைவுப் பாதையில் மேல் மன எண்ணத்தின் செயல்பாடாகவும், பாத்திரத்தின் அடிமன எண்ணத்தின் செயல்பாடாகவும் கொள்ளலாம்.

இம்முறையில் கதை மாந்தர்களின் மனம் பற்றிய பல்வேறு உண்மைகளை அறிந்து கொள்ளலாம். கதை மாந்தர்களின் நிறை, குறைகளை இம்முறையில் இனம் காண முடிகிறது. கதைமாந்தர்களின் உண்மைத் தன்மையை ஒப்பீடு செய்து அறிந்து கொள்ளவும் உதவுகிறது.

சில சிறுகதைகள் முற்றிலும் நனவோடை முறையிலேயே அமைந்திருப்பதையும் காண முடிகிறது. இங்ஙனம் சிறுகதைகளில் நனவோடை உத்தி என்பது புதுமைக்கு உரியதாகச் சிறப்புப் பெறுகிறது. நனவோடை உத்தியைப் பயன்படுத்தித் தமிழில் சிறுகதை படைத்தோரில் மௌனி, லா.ச.ராமாமிர்தம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**மாந்தர்கள்**

சிறுகதை, புதினம் இரண்டிலுமே அவற்றின் சிறப்புக்கு ஒரு வகையில் காரணமாவது ஆசிரியர் படைக்கும் கதைமாந்தர்கள் ஆவர். இவர்கள் படைப்பாளியின் கற்பனையிலே படைக்கப்பட்டாலும் உயிருள்ளவர் போல் அழியாச் சித்திரமாய் உள்ளத்திலே பதிந்து விடுகிறார்கள்.

ஆர்.சூடாமணியின் பல சிறுகதைகளில் கதைமாந்தர் தமக்கே உரிய சிறப்புக் குணங்களினால் சிறந்து நிற்கின்றனர். படைப்புக் கலைஞர்கள் தாம் பார்க்கின்ற மனிதர்கள், அவர்கள் நடை, உடை, பாவனைகள், மற்றவர் சொல்லக்

கேட்டு அறியும் அனுபவங்கள், தம்மைப் பாதித்த மற்றவர்களின் இயல்புகள், குணங்கள், சிறப்புகள் இவற்றை எல்லாம் கலை உணர்வோடு தக்க இடத்தில் பொருத்தும் போது சிறந்த கதை மாந்தர்கள் உருவாகின்றனர்.

**சிறுவர்கள் குழந்தைகள்**

சூடாமணியின் சிறுகதைப் படைப்புகளில் பலவகையான கதைமாந்தர்கள் சிறப்பிடம் பெற்று நம் நினைவில் நிற்கின்றனர். ஆசிரியர் குழந்தைகள், சிறுவர்கள் மனநிலையை நன்கு உணர்ந்தவராய்த் தாம் இருப்பதையும், அவர்கள் எப்படிப்பட்ட மனநிலையையும் மாற்றி மனத்தை லேசாகவும், மகிழ்ச்சியாகவும் ஆக்கும் இயல்பு படைத்தவர்கள் என்பதையும் தம் படைப்புகளில் அழகாக காட்டுகிறார்.

**சுதந்திரம்**

குழந்தைப் பருவத்தில் இருக்கும் சுதந்திரம் வளர வளரப் பறிபோய் விடுகிறது, என்ற உண்மையை உணர்ந்த ஒரு பெண்ணை நடன விநாயகர் (கல்கி - 1996) கதையில் பார்க்கிறோம். தான் இழந்த சுதந்திரத்தின் அருமையை அப்போது உணர்கிறாள் நந்தினி. குழந்தை, சுதந்திரம் ஒரே பொருளில் இரண்டு சொற்கள், என்று தான் இழந்த சுதந்திரத்தைச் சிறுமியிடம் காணும்போது ஆற்றாமையால் வருந்துகிறாள் நந்தினி.

**தனிமை**

பக்கத்து வீட்டுக் குழந்தைகள் பள்ளி விட்டு வந்தவுடன் தாயுடன் இருக்க. தன் தாய் அலுவலகம் செல்வதால் தான் மட்டும் தனியே இருக்கும் சூழ்நிலையை வெறுக்கும் சிறுவன் பிரபுவின் மனநிலையை விளக்குவது விட்டுட்டு விட்டுட்டு (கல்கி - 1997) .

தனியாக இருப்பதை வெறுத்த சிறுவன் பிரபு அதன் எதிரொலியாக சிகரெட் பிடிக்கிறான். அதை எதிர்த்த பெற்றோரிடம் தனியாக உக்காந்து எனக்குப் போரடிக்கிறது ஸ்கூல்லேருந்து வந்தா வீட்ல அம்மா கிடையாது. வேற யாரும் கிடையாது. எத்தனை நேரம் ராஜு வீட்டுலே போய் உட்கார்ந்திருக்கிறது. அவன் அம்மா எத்தனை நல்ல ஆன்ட்டி. ராஜுவை விட்டுப் போறதே இல்லை. நீதான் என்னை விட்டுட்டு விட்டுட்டுப் போயிடறயே? அப்புறம் நான் என்ன பண்ணா உனக்கென்ன" (பக். 136, சூடாமணி கதைகள்).

பெற்றோரிடம் இருக்க வேண்டும் என்ற ஆதங்கம், பக்கத்து வீட்டாரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் சமூகச் சூழல் எவ்வளவு ஆழமாகச் சிறுவர்களிடம் பதிந்து கிடக்கிறது என்பதையே சிறுவனின் பேச்சில் சுட்டிக் காட்டுகிறார் சூடாமணி.

**பெண்கள்**

பெண்களின் பிரச்சினைகள், அவர்தம் சிறப்பியல்புகள் இவர் சிறுகதைகளில் கருப்பொருள்கள் ஆகின்றன.

**உறுதி**

எதற்கெடுத்தாலும் சந்தேகப்படும் கணவனால் பெண்படும் துன்பத்தைப் படம் பிடிக்கிறது நாய் சிறுகதை (தினமணி கதிர் - 1988). நாள்தோறும் தன் சந்தேகப் பார்வையாலும் கேள்விகளாலும் மனைவியைத் துளைத்து எடுக்கிறான் கணவன். ‘‘இப்படிச் சாக்கடையாய் இருக்கிறதே உங்க மனசு?” என்கிறாள் மனைவி.

‘‘என் உத்தரவு இல்லாம நீ எவன் கூடவும் பேசக் கூடாது, என் உத்தரவு இல்லாம நீ வாசப் பக்கமே வரக்கூடாது” என்று சொல்ல,‘‘உன் உத்தரவு இல்லாம நான் மூச்சு விடலாமா? இல்லே அதையும் உன்னைக் கேட்டுக்கிட்டுதான் செய்யணுமா?’’ என்று வெறுப்பும் இகழ்ச்சியும் மேலிடும் தீக்கோளமாய் மனைவி பதில் சொல்கிறாள். எத்துன்பத்தையும் எதிர் கொள்ளும் உறுதியான மனநிலை கொண்ட பெண்ணை இங்குக் காண்கிறோம்.

**குற்ற உணர்வு**

இன்றைய காலக் கட்டத்தில் பெண்கள் வெளியே அலுவல் பார்ப்பது தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது. குடும்பத்தில் பெண்ணுக்குரிய கடமைகளாகச் சமுதாயம் நினைத்திருப்பதை மாற்றாமல் இருக்கிறது. இதனால் ஸ்வாதி என்ற பெண்ணுக்கு ஏற்படும் குற்ற உணர்வையும் இன்னல்களையும் எடுத்துரைப்பது விட்டுட்டு, விட்டுட்டு சிறுகதை.

**நேர்மையும் துணிச்சலும்**

அலுவலகம் செல்லும் இளம்பெண் பானுவின் பாத்திரப் படைப்பும், மானேஜர் கார்த்திகேயன் மனைவி விமலாவின் பாத்திரப் படைப்பும் சிறப்பாக அமைவது ‘‘பத்தாயிரம் ரூபாய் பட்டுப் புடவை’’ சிறுகதை (கல்கி. 1997). மணமான மானேஜர் கார்த்திகேயன் தன் அலுவலக ஸ்டெனோ பானுவை விரும்புவதும் அவளை அடையத் துடிப்பதும் அதற்கான விலையாகப் பத்தாயிரம் ரூபாய்ப் பட்டுப்புடவையைப் பரிசளிப்பதாகச் சொல்வதும், அவளுக்குச் சினத்தையும் அவமானத்தையும் ஏற்படுத்துகிறது. இதை மறுத்தால் நீ வேலையை இழக்க வேண்டியிருக்கும் என்று அச்சுறுத்துகிறான்.

கார்த்திகேயனிடம் பணியவும் கூடாது வேலையும் நிலைக்க வேண்டும் என்று துணிவுடன் செயலாற்றுகிறாள் பானு. திட்டமிட்டபடி ஓட்டலுக்கு வரும் கார்த்திகேயன் அங்குத் தன் மனைவியைப் பார்த்துத் திடுக்கிடுகிறான். பானு தன்

மனைவியைச் சந்தித்து எல்லா விவரமும் கூறியுள்ளதை அறிகிறான். விமலா கார்த்திகேயனிடம்,

"உங்க எண்ணம் பலிக்கவில்லை என்று கோபத்தில் இந்தப் பெண்ணை நீங்க வேலையை விட்டு நீக்கினாலோ அல்லது மறுபடியும் இவங்க கிட்ட வம்பு பண்ணினாலோ, உங்க நடத்தையைப் பற்றி நானே தில்லியில் உங்க எம்.டிக்குத் தெரிவிப்பேன், இது மிரட்டல் இல்லை" என்று எச்சரிக்கிறாள். தன் கணவனாக இருந்தாலும் தவறுகளைச் சுட்டிக் காட்டுகின்ற, அத்தகையவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கவும் தயாராகின்ற நேர்மையான பெண்ணாக விமலாவைப் படைத்துள்ளார் சூடாமணி.

**தன்மானம்**

ராஜாமணி பதினெட்டு வயதில் திருமணமாகி 21 வயதில் கணவனால் கைவிடப்பட்டவள். 51 வயது வரை தன் வாழ்க்கையைச் சிரமப்பட்டுக் கழித்தவள். பெற்ற குழந்தையை இழந்து, தந்தையை இழந்து, கணவனாலும் கைவிடப்பட்டு, சமையல் வேலை செய்து காலம் கழித்தவள். அவள் இறந்தபோது வீட்டுச் சொந்தக்காரர் மருமகன் கொள்ளி போடுகிறான்.

அப்போது ஒருவர், ராஜாமணியின் கணவர், அவனுக்கு நன்றி சொல்கிறார். ராஜாமணி என்ற அந்தப் பெண்ணின் தன்மானம், மரியாதை, கம்பீரம் அனைத்தையும் உணர வைக்கிறார் ஆசிரியர். இதுவரை யாரிடமும் சொல்லாத உண்மைகளை ராஜாமணியின் கணவர் சொல்கிறார். கணவனுக்காக அவள் மூன்றாண்டுகள் அவனுக்கும் சேர்த்து உணவு சமைத்து விட்டுக் காத்துக் கிடந்தாள். அந்த ஏமாற்றம் தந்த துயரம், விரக்தி இவற்றுக்கிடையே முப்பதாவது வயதில் அவளுடைய கணவன் அவளைத் தேடி வந்தபோது அவனைப் புறக்கணிக்க வைத்தது. அவள் கணவனுடன் சென்று வசதியாய் இருந்திருக்கலாம்.

தன் மனத்துக்குச் சரி என்று தோன்றியதற்கேற்ப முடிவெடுத்து ஏற்றுக் கொண்ட வாழ்க்கை என்பதை மரியாதைக்குரிய, கம்பீரமான அவளுடைய அந்தரங்க பொக்கிஷமாய் வைத்திருந்தாள். அவள் இறந்தபோது அவள் கணவன் தெரிவித்த பின்னரே வாசகர்க்கு உணர்த்தும் உத்தியில் ஒரு பெண்ணின் மனஉறுதி சாம்பலுக்குள் இருக்கும் தீக்கங்குபோல வெளிப்பட்டதை உணர்த்துகின்றார் சூடாமணி. (சாம்பலுக்குள், தினமணி மகளிர் மலர். 1997).

**முதியவர்கள்**

கூட்டுக் குடும்பமுறை மாறிவரும் சூழ்நிலையில் வீட்டு முதியவர்கள் படும் துன்பங்களைக் காட்டுவது நண்பர் திருமலை (கல்கி - 1993) என்னும் சிறுகதையாகும்.

**பிள்ளைகள்**

மனநிலை திருமலாச்சாரி தன் நண்பரைப் பார்க்கச் சென்ற பொழுது அவர் முதியோர் இல்லத்தில் இருப்பது தெரிய வருகிறது. அவர் மகன் அவரைப் பற்றி மகா பிடிவாதக்காரர் என்றும், மற்றவர்களுடன் ஒத்துப் போவதில்லை என்றும் விமர்சிக்கிறான். ஆனால், நண்பர் செளரியோ அப்பாவி, பரம சாது.

அவரைப் பற்றிய அவர் மகன் மதிப்பீடும் முதியோர் இல்லத்திற்கு அவரை அனுப்பிய செயலும் நெஞ்சைப் பாரமாய் அழுத்த, வீடு வந்து சேர்கிறார். மருமகள் அவரை அன்போடு விசாரிக்க ‘‘நான் கொடுத்து வைத்தவன்மா’’ என்று நெகிழ்ந்து போகிறார். நாணயத்துக்கு இரு பக்கம் உண்டு என்பது போல், எல்லாப் பிள்ளைகளுமே பெற்றவர்களை முதியவர்இல்லத்துக்கு அனுப்பி வைக்கும் நன்றி கெட்டவர்கள் அல்லர், நல்ல பிள்ளைகளும் உண்டு என்ற உண்மையை உணர்த்துவது நண்பர் திருமலை கதை.

**கருப்பொருள்**

**சிறுகதைக்கான கருவைத் தந்து படைக்கத் துண்டுதல்:**

1.உரிப்பொருள்

2.கதைப் பின்னல்

3.பாத்திரப் படைப்பு

4.நோக்கு நிலை பின்னணி

5.குறியீடு

ஆகியன சிறுகதையின் இன்றியமையாக் கூறுகள் எனலாம். இவை அனைத்தும் சேர்ந்ததே சிறுகதை வடிவம் (Form) ஆகும். கருப்பொருளில் சோதனை செய்து பார்த்தவர்களுள் சிறந்தவர்களாகப் புதுமைப்பித்தனையும் ஜெயகாந்தனையும் எடுத்துக்காட்டலாம். மனத்தில் நிற்கும் கதை மாந்தர்களைப் படைப்பதில் வல்லவர்கள் என்று கல்கியையும், தி.ஜானகிராமனையும் எடுத்துக்காட்டலாம்.

சிறுகதை யாருடைய விழிவழியே நோக்கப்பட்டுக் கூறப்படுகிறது என்பது நோக்கு நிலையாகும். அரச மரமே கதை சொல்வது போல வ.வெ.சு அய்யரின் குளத்தங்கரை அரச மரம் அமைந்திருக்கிறது சிறுகதையில் வாசகர் உணரும் வண்ணம் சிலவற்றைக் குறிப்பாகப் புலப்படுத்துவர். குறிப்பாக ஒன்றைப் புலப்படுவதற்குக் கையாளப்படும் கூறு குறியீடு எனப்படும். சிறுகதைகள் எல்லாவற்றிலும் குறியீடுகள் அமைந்திருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. கனகாம்பரம்,

திரை ஆகிய இருகதைகளிலும் தலைப்பிலேயே குறியீட்டைக் கையாண்டுள்ளார் கு.ப.ரா. இனி, சூடாமணி கதைகளில் இந்தச் சிறுகதைக் கூறுகள் சூடாமணி கதைகளில் பயின்று வந்துள்ளதை பின்வருமாறு ஆராயலாம்.

**கருப்பொருள் அல்லது கதைப்பொருள்**

கூறப்படும் கதை எதைப் பற்றியது என்பது கதைப்பொருள். இதை அடிப்படையாகக் கொண்டே சிறுகதைகளைச் சமூகச் சிறுகதைகள், வரலாற்றுச் சிறுகதைகள், புராண இதிகாசச் சிறுகதைகள், அறிவியல் சிறுகதைகள் என்று வகைப்படுத்துவர். சூடாமணி பெரும்பாலும் சமூகச் சிறுகதைகளையே படைத்துள்ளார்.

தன் படைப்புகள் பற்றி "என் கதைகள் பெரும்பாலும் ஒரு சிறு வட்டத்தினுள் நிகழ்வதால் மனித உணர்ச்சிகள் மற்றும் உறவுகளை மையமாக வைத்துப் புனையப்பட்டவை" என்று கூறுகிறார். சமுதாய ஏற்றத்தாழ்வு, பொருளாதார ஏற்றத் தாழ்வு அடிப்படையில் அமைக்கப்படும் இவரது கதைகளிலும் மனிதாபிமானமே அடிநாதமாய் ஒலிக்கக் காணலாம்.

**கூட்டுக் குடும்பம்**

கூட்டுக் குடும்ப வாழ்வு அரிதாகின்ற இக்காலத்திலும் அன்பும் மனிதாபிமானமும் இருந்தால் அது சாத்தியமே என்பதை உறுதிப்படுத்தும் சிறுகதை நண்பர் திருமலை. இனிக்கும் இல்லறத்தை மேலும் இனிக்கச் செய்வன குழந்தைச் செல்வங்கள் ஆகும். ஆனால் கமலாவும் ராஜுவும் புதிய உயிரின் வருகையால் தங்களுக்கு ஏற்படப் போகும் செலவினத்தை நினைத்து அஞ்சுகின்றனர். நம் திருமணம் காதல் திருமணம் என்பதால் நமக்கு நம் பெற்றோரின் உதவி கிடைக்கவில்லை. நாம் அதுபோல் இல்லாமல் நம் குழந்தை விருப்பப்படி வாழ நாம் குறுக்கே நிற்கக் கூடாது என்று முடிவு செய்கின்றனர். நம்ம குழந்தை என்று சொல்லும்போது ஏற்படும் அதிசய உணர்வில் பரிச்சய உலகத்தை மறந்து மகிழ்ச்சியில் ஆழ்வதை விளக்குவது கமல ராஜு (புதிய பார்வை – 1997)என்ற சிறுகதையாகும்.

**பின்னணி (இடம் – காலம்)**

கதை நிகழ் இடங்களை இடப் பின்னணி என்றும் கதை நிகழ் காலங்களைக் காலப் பின்னணி என்றும் கூறலாம். புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி ஆகியோர் திருநெல்வேலியை இடப் பின்னணியாகக் கொண்டு கதை எழுதுவர். தி.ஜா. எனப்படும் தி.ஜானகிராமன் தஞ்சை மாவட்டத்தை இடப்பின்னணியாகக் கொண்டு கதை எழுதுவார். சூடாமணி குறிப்பிட்ட இடப்பின்னணியில் கதை எழுதுவதில்லை. அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதும் இல்லை. மனிதர்களின் மன உணர்வுகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பனவாக இவர் கதைகள் அமைகின்றன. கிராமப் பின்னணியில் சில கதைகள் அமைகின்றன.

**கதைக்கோப்பு**

கதைக்கோப்பு என்றும் கதைப்பின்னல் என்றும் இதனைக் கூறலாம். நாவலில் கதை பின்னப்படும் தன்மையில் இருந்துதான் நாவலின் வெற்றி முடிவு செய்யப்படுகிறது. கதை மிகச் சரியாகப் பின்னப்பட்டுவிட்டால் நிலைத்து நிற்கும் நாவலாக விளங்கும். ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி „Plot" என்ற சொல்லுக்கு நாடகம், கவிதை, நாவல் ஆகியவற்றிற்கான திட்டம் என்று கூறும். எனவே கதைத் திட்டம்தான் கதைக் கோப்பாக, கதைப் பின்னலாக அமைகிறது.

நாவலில், பல்வேறு கதை நிகழ்ச்சிகளை நாவலாசிரியர் குறிப்பிடுவார். இக்கதை நிகழ்ச்சிகளைக் காரண காரிய முறையில் ஒன்றினை அடுத்து ஒன்றை வைப்பது கதைப் பின்னலாகும். இந்த நிகழ்வுக்குப் பின், இது நிகழும் என்றும், இன்ன காரணத்தால் இந்த நிகழ்ச்சிக்குப்பின் இந்த நிகழ்ச்சி வைக்கப்பட்டுள்ளது என்றும் முறைப்படுமாறு அமைக்க வேண்டும்.

ஒரு கதை நிகழ்வைப் படிக்கும் வாசகனுக்கு அடுத்து என்ன நிகழப் போகிறது என்ற ஆர்வத்தைத் தூண்டுமாறு நிகழ்ச்சிகள் தொடர்புடன் அமைய வேண்டும். நாவலின் கதை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் சுவையாக அமைய வேண்டும். அப்போதுதான் அடுத்த நிகழ்ச்சி என்னவாக இருக்கும் என்ற சிந்தனையை உருவாக்க முடியும். இரு நிகழ்ச்சிகள் தொடர்புடையன ஆவதற்குரிய காரணமாக அமைவது கதைப்பின்னலாம்.

கதைப்பின்னல் இரு வகையாகப் பிரிக்கப்படும்.

- நெகிழ்ச்சிக் கதைப் பின்னல்
- செறிவான கதைப் பின்னல்

**நெகிழ்ச்சிக் கதைப் பின்னல்**

நெகிழ்ச்சிக் கதைப் பின்னலில் நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்பற்று இருக்கும். கதைப்பின்னல்கள் காரண, காரிய முறைப்படி அமையாமல் நெகிழ்வாக அமையும். கதை நிகழ்ச்சி சென்று கொண்டிருக்கையில் திடீரென்று ஒரு பாத்திரம் வேறொன்றை நினைத்து அதற்கேற்றவாறு செயல்படுவதாக அமையும். மு.வரதராசனாரின் நாவல்களான செந்தாமரை, கரித்துண்டு போன்ற நாவல்கள் நெகிழ்ச்சிக் கதைப்பின்னலைக் கொண்டவை.

செந்தாமரை மு.வரதராசனாரின் முதல் நாவல். இதில் ஒரு பாத்திரமாவது முழுமையானதாகப் படைக்கப்படவில்லை. சிலர் காதலை வளர்த்து வாழ்கிறார்கள். சிலர் காத்திருந்து பெறுகிறார்கள். சிலர் ஆராய்ந்து தேடி அடைகிறார்கள். செந்தாமரை நாவல் இத்தகைய மூன்று காதல் வாழ்வுகளையே சித்திரிக்கிறது. மருதப்பனும், அவனுடைய மனைவியும் காதலை வளர்த்து

வாழ்கிறார்கள். திருநாதனும் திலகமும் காத்திருந்து காதலைப் பெறுகிறார்கள். இளங்கோவும், செந்தாமரையும் ஆராய்ந்து தேடி, காதல் வாழ்க்கை வாழ்கிறார்கள்.

கதைமாந்தர் மாறி மாறிப் பேசுவது போல் செந்தாமரை நாவல் அமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் கதை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கையில் திடீரென்று இன்னொரு பாத்திரம் பேசுவது போல் கதை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே கதை ஓட்டம் நெகிழ்ச்சி அடைகிறது.

மு.வரதராசனாரின் மற்றொரு நாவல் கரித்துண்டு. இந்நாவலின் கதைத் தலைவர் ஓவியர் மோகன் கதைத் தலைவி நிர்மலா. இவர்கள் காதலித்துத் திருமணம் செய்து கொள்கின்றனர். மோகன் விபத்துக்கு உள்ளாகவே கணவன் மனைவி இருவரும் பிரிகின்றனர். நிர்மலா பம்பாய் சென்று கமலக்கண்ணன் என்பவரைச் சந்திக்கிறாள். அவரோடு சேர்ந்து வாழ்கிறாள். சென்னை வரும்போது தன் கணவன் மோகனைக் காண நேரிடுகிறது. கமலக்கண்ணனை விட்டுப் பிரிகிறாள்.

சென்னையில் ஓவியர் மோகன் முடவராய் வாழ்கிறார். வண்ணப் பொடிகளாலும், ஓவியக் கோலாலும் ஓவியம் தீட்டிய மோகன், கடைசியில் கரித்துண்டால் ஓவியம் தீட்டும் நிலைக்குத் தள்ளப்படுகிறார். சின்னக் குடிசையில் ஏழைப் பொன்னியுடன் வாழ்க்கை நடத்துகிறார். அவரிடம் இருந்த படிப்பின் செருக்கு மறைகின்றது.

கதைத் தலைவன் மோகன் ஓவியம் தீட்டுவதில் இருந்து தொடங்கிப் பின்னர்த் தன் வாயாலேயே தன் கதையைக் கூறி வருவதாகக் கதை செல்கிறது. இதில் அமையும் நிகழ்ச்சிகள், இடையில் தொடங்கி, பின்னோக்கிச் சென்று மீண்டும் முன்னோக்கிச் செல்கின்றன. மேலும் இடையிடையே அறிவுரைகளும் மு.வரதராசனாரால் கூறப்படுகின்றன.

இவ்வாறு கதை ஓட்டம் தடைப்பட்டு தடைப்பட்டு நெகிழ்வடைந்து மாறி மாறிச் செல்கின்றது. எனவே இந்நாவலும் நெகிழ்ச்சிக் கதைப் பின்னலுக்குச் சான்றாகின்றது.

**செறிவான கதைப் பின்னல்**

கட்டுக்கோப்புடன் விளங்கி, காரணகாரியத் தொடர்புடன் முழுமையான தன்மை உடையது செறிவான கதைப் பின்னலாகும். நாடக முறையில் விறுவிறுப்புடன் அமைந்த நாவல்களில் செறிவுக் கதைப் பின்னல்களைக் காணலாம்.

செறிவுக் கதைப்பின்னலில் கதை ஒரே தொடர்ச்சியாக அமையும். ஒன்றற்கு ஒன்று தொடர்புடையதாகவும், ஒன்றில் இருந்து ஏதேனும் ஒரு பகுதி கிளைத்துத் தோன்றியது போலவும் தோன்றும். இந்த நிகழ்வு, இவ்விடத்தில் இல்லையென்றால் கதை சிறக்காது என்று வாசகன் சொல்லுகின்ற அளவிற்குப் பிரிக்க

முடியாத நிலையில் நிகழ்ச்சிகள் அமைந்திருக்கும். ஒரு நிகழ்ச்சியின் முடிவு அடுத்த நிகழ்ச்சியின் தொடக்கமாக அமையும்.

ஜெயகாந்தன், எம்.வி. வெங்கட்ராம் போன்றோரின் நாவல்களில் செறிவுக் கதைப்பின்னலைக் காணலாம். ஜெயகாந்தன் அறுபதுகளில் எழுதிய அக்கினிப்பிரவேசம் என்னும் சிறுகதையின் தொடர்ச்சியாக வந்தது, சில நேரங்களில் சில மனிதர்கள் என்னும் நாவல் அதன் தொடர்ச்சியாக வந்தது, கங்கை எங்கே போகிறாள் என்ற நாவலாகும்.

கல்லூரி வாயிலில் மழைக்கு ஒதுங்கிப் பேருந்துக்குக் காத்து நின்ற கங்கா, காரில் அழைத்துச் சென்றவனிடம் ஏமாந்து தன் கற்பைப் பறிகொடுக்கிறாள். தன் அம்மாவிடம் வந்து அழுகிறாள். அம்மா, அவள் தலையில் தண்ணீரை ஊற்றி, உடலும் உள்ளமும் தூய்மையாகி விட்டதாகக் கூறுவதோடு அக்கினிப் பிரவேசம் சிறுகதை முடிக்கப் பெறுகிறது.

பின்னால், இக்கதை தன்னிடம் வந்து அழுத பெண்ணைத் தாயே அடித்துத் திட்டி, ஊரைக் கூட்டி ஒப்பாரி வைத்துச் செய்தியை வெளியே பரப்பிவிட, கங்காவின் வாழ்க்கைப் பயணம் சில நேரங்களில் சில மனிதர்கள் என்ற தலைப்பில் நாவல் ஆக்கப்பட்டது. கங்கா தன்னைக் கெடுத்த பிரபுவைத் தேடிக் கண்டுபிடிக்கிறாள்.

ஆனால் அவன் மணமாகிக் குடும்பத்துடன் வாழ்கிறான். கங்காவிற்கு நேர்ந்த களங்கத்திற்குத் தான் காரணமான குற்றத்திற்காக, பிரபு வருந்துகிறான். அவளுடன் நட்புடன் பழகுகிறான். இந்தப் புதிய உறவு சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

எனவே பிரபு அவளுக்குத் திருமணம் நடந்தால் நல்லது என நினைக்கிறான். அவளை விட்டு விலகிச் செல்கிறான். ஆனால் திருமணத்திற்கு உடன்படாமல் தனிமையில் நிற்கும் கங்கா குடிப்பழக்கத்திற்கு ஆட்படுகிறாள். சில நேரங்களில் சில மனிதர்கள் நாவல் இத்துடன்முடிவடைந்தாலும், கங்கா இதற்குப் பிறகு என்ன ஆனாள் என வாசகர்கள் அறிந்து கொள்வதற்காக கங்கை எங்கே போகிறாள்? என்ற நாவல் எழுதப்பட்டது.

இந்த இரு நாவல்களிலும் ஒவ்வொரு நிகழ்ச்சியின் முடிவும் அடுத்த நிகழ்ச்சி தொடங்குவதற்குக் காரணமாக அமைகின்றன. செறிவுக் கதைப் பின்னலுக்கு இது சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

## தொகுப்புரை

- ❖ வாழ்க்கையின் அனைத்து நிகழ்வுகளும் சிறுகதைகளின் கருப்பொருட்களே. இவற்றோடு கற்பனைகளும், புனைவுகளும் கலந்தும் வரலாம். சிறுகதைகள் வாழ்க்கையினை அழகாக்குகின்றன என்பது விளக்கப்பட்டது.
- ❖ தனிமனிதச் சிக்கல்களான பெண்கள் நிலை, குழந்தை மணம், விதவைக் கொடுமை, வறுமை, வரதட்சணைக் கொடுமைகள் அனைத்திற்கும் சிறுகதைகளின் வழி தீர்வு சொல்லப்பட்டதை அறியமுடிகின்றது.
- ❖ சிறுகதையில் தலைப்பு அமைத்தல், சிறுகதை எழுதுவதில் பின்பற்றப்படவேண்டிய விதிகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சிறுகதையில் மொழிநடை எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் அறியமுடிகின்றது.

## தன்மதிப்பீட்டு வினாக்கள்:

1. பூச்சாண்டி சிறுகதையின் ஆசிரியர் யார்?
   அ) கு.ப.ரா ஆ) அகிலன் இ) கா.நா.சு ஈ) புதுமைப்பித்தன்
   விடை: ஈ
2. குழந்தை மணத்தை எதிர்த்துப் பேசும் வ.வே.சு வின் சிறுகதை எது?
   அ) ஆண்மை ஆ) விடியுமா இ) குளத்தங்கரை அரசமரம் ஈ) மனநிழல்
   விடை: இ
3. வரதட்சணைப் பிரச்சனையை அடிப்படையாகக் கொண்ட சிறுகதை எது?
   அ) மஞ்சள்காணி ஆ) சாவு
   இ) வாடா மல்லிகை ஈ) பலிபீடம் விடை: அ
4. ‘வீராயி’ சிறுகதையின் ஆசிரியர் யார்?
   அ) ல.ச.ரா ஆ) வ.ரா இ) ஆர்.வி ஈ) சூடாமணி
   விடை: ஈ
5. பின்வருவனவற்றில் சாகித்ய அகாடமி விருதினைப்பெற்ற நூல் எது?
   அ) பொய்க்கால் குதிரை ஆ) ஓவியத்தின் பார்வை
   இ) வானம் வசப்படும் ஈ) ஒரு பிடிசோறு
   விடை: இ

## குறுவினாக்கள்

1. சிறுகதை இலக்கணம் - வரையறு.
2. சிறுகதையின் கருப்பொருள்கள் யாவை?
3. சிறுகதையில் இடம்பெறும் சமூகச் சிக்கல்கள் யாவை?
4. சிறுகதையில் பின்பற்றவேண்டிய செய்திகள் என்ன?
5. கூற்றுகளின் வகைகள் யாவை?

## நெடுவினாக்கள்

1. தனிமனித சிக்கல்களை சிறுகதையின் வழி ஆராய்க.
2. கலையின் அடிப்படையில் சிறுகதை விளக்குக.
3. சிறுகதையில் தலைப்பு அமைத்தல் முறையை விளக்குக.
4. சிறுகதைக்கான உத்திகள் யாவை?
5. சிறுகதையில் மொழிநடை – ஆராய்ந்து விளக்குக.

## பார்வை நூல்கள்

1)மு.சுதந்திர முத்து - படைப்புகள்,சுவடு பதிப்பகம்,சென்னை-24

2.கி.வா.ஜெகந்நாதன் - கவி பாடலாம்,மணிவாசகர் நூலகம்,சென்னை-1

## இணையதள முகவரி

1.Tamil universal digital library-www.ulib.prghttp://www.ulib.prg

# அலகு – 4

**நோக்கங்கள்**

- தமிழ் நாடகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை மாணவர்கள் அறியச் செய்தல்.
- நாடகங்களின் வகைகள், நாடக அரங்க அமைப்புகளைத் தெரியப்படுத்துதல்.
- மாணவர்களை ஓரங்க நாடகம் அமைக்கத் தூண்டுதல்.

**அறிமுகம்**

தமிழர் நாடகக்கலையின் தோற்றத்தினை விவரிக்கும் நூற்களில் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுவது அகத்தியம் என்னும் தலைச்சங்க காலத்து நூலாகும். நாடகம் என்பது பாட்டும், உரையும், நடிப்பும் என்பது தமிழ் மரபுவழி கூறும் இலக்கணமாக விளங்குகின்றது. சங்க காலத்தில் குணநூல், கூத்தநூல், சயந்தம் நூல், மதிவாணர் நாடகத் தமிழர், முறுவல் போன்ற நாடக நூல்கள் இருக்கப்பபெற்றன என்பதனை, சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் குறிப்பீடு குறிப்பிடத்தக்கது. மேலும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற நூற்களில் தமிழ்நாடகக்கலை பற்றிய சான்றுகள் பல உள்ளது குறிப்பிடத்தக்கது.

**தமிழ் நாடகத் தோற்றம்**

''மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே
இசையில் பிறந்தது ஆட்டத்து இயல்பே
ஆட்டம் பிறந்தது கூத்தினது அமைவே
கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே
நாட்டியம் பிறந்தது நாடக வகையே''-

(கூத்தநூல் - தோற்றுவாய்)

இறைவன் ஆடிய ஆதிக்கூத்தில், உடுக்கையிலிருந்து பிறந்தது ஓசை; ஓசையின் கழலிலிருந்து இசையின் உயிர்ப்பும், அதனின்று ஆட்டமும், ஆட்டத்திலிருந்து கூத்தின் அமைதியும் (ஒழுங்கு), அவ்வமைதியிலிருந்து நாட்டியக் கோப்பும் (ஒழுங்கு) அவ்வித ஒழுங்கிலிருந்து நாடக வகைகளும் தோன்றின எனக் கூத்த நூலில் உள்ள இப்பாடல்வரிகள் விளக்குகின்றன. இவ்வாறு பிறந்த நாடகம், தொல்காப்பியர் காலத்தில் வளர்ச்சியடைந்து புகழ்பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**பண்ணை**

‘‘பண்ணை தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப’’

தொல்காப்பியரின் மெய்ப்பட்டியலில் உள்ள முதலாம் நெறியாகும் இப்பாடல் வரிகள். பண்ணை எனக் குறிக்கப்பட்டுள்ளது விளையாட்டு ஆகும். உள்ளத்தில் உவகையூட்டுதலின் காரணத்தினால் நாடகம் பண்ணையென அழைக்கப்பெற்றது. தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய ,,நச்சினார்க்கினியர்‘‘ கூறும் பின்வரும் உரை விளக்கத்தினால் ,,பண்ணை‘‘ என்னும் சொல்லின் மெய்ப்பொருளினை அறியலாம்.

**பாடல்கள்**

‘‘நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்’’

எனத் தொல்காப்பியர் தனது வாழ்நாளினிலும் முற்பட்ட இலக்கிய மரபினைப் பற்றி விளக்குகையில் ‘‘பாடல் சார்ந்த’’ எனப் பொருள்படும் ‘‘பாடல் சான்ற’’ எனக் கூறுகின்றார். இவ்வரியில் குறிப்பிட்டதனை ஆராய்ந்தால் தொல்காப்பியர் வாழ்ந்ததற்கு முற்பட்ட காலகட்டங்களிலேயே தமிழில் நாடகமும், நாடகங்களில் பாடல்களும் இடம்பெற்றிருந்ததும் என்பதனை அறியலாம்.

**சுவைகள்**

நாடக வழக்கினைப் பற்றி தொல்காப்பியம் கூறும் நூற்பாவானது
‘‘நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பா லெட்டாம் மெய்ப்பா டென்பர்’’

நாடக வழக்கென்பது சுவைபட வருவதையெல்லாம் ஓரிடத்தில் வந்தனவாகத் தொகுத்துக் கூறுதலென விளக்குகின்றது. இவ்வரிகள், மேலும் இச்சுவைகள் தோன்றும் நிலைக்களன்கள் (பொருள்கள்) மூலம் முப்பத்திரண்டு சுவைகள் அடங்கும். இப்பொருள்கள் இரண்டு வகைப்படும் அவையாவன பொருளின் தன்மையை மட்டும் உணர்த்தி, வடிவம் உணர்த்தப்படாதது ஒன்றாகும். மற்றொன்று பொருளின் தன்மையினையும் உணர்த்தி வடிவத்தினையும் உணர்த்துவதாகும்.

இவ்விருவகையில் பொருளின் தன்மையினை மட்டும் உணர்த்தி வடிவம் உணர்த்தப்படாதனவை: காமம், வெகுளி (சினம்), மயக்கம், இன்பம், துன்பம் முதலியனவாகும்.

வடிவங்கள் இல்லாத இப்பொருள்களை, பொறிகளின் வாயிலாக மனங்கொள்வதற்கு மெய்ப்பாடுகள் காரணமாக அமைகின்றது. இம்மெய்ப்பாடானது

கண்ணீர், மெய்மயிர் சிலிர்த்தல், வியர்வுதல், நடுக்கம் முதலியன புறக்குறிகள் கொண்டு ஒருவரது அகவுணர்வுகளை ஆழ்ந்து ஆராயாமலே, காண்போர்க்கு புலனாகும் தன்மையே மெய்ப்பாடு எனப்படும்.

இவ்வகைச் சுவைகளே நடிப்பின் இன்றியமையாக் கூறுகளாக உலகின் அனைத்து நாடுகளிலும் அனைத்து மொழி நாடகம், திரைப்படம் போன்ற கலை வடிவங்களிலும் கருதப்படுகின்றன. மேலும் இத்தகு நாடகச் சுவைகளினைப் பற்றித் தொல்காப்பியர் அவர் காலத்தில் குறிப்பிட்டுள்ளதனால் அவருக்கு முற்பட்ட காலத்திலேயே தமிழர் நாடகக் கலை பிரசித்தி பெற்றிருக்க வேண்டுமென்பதுமாகக் கருதப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

**பல்வேறு நாடக வகைகள்:**

**நாடகமும் கூத்தும்**

உலக நாடகங்களை ஆராய்ச்சி செய்தவர்கள் இருபெரும் பிரிவுகளில் நாடகங்களை அடக்கிக் காட்டுவர். அவை,

1. இன்பியல் நாடகங்கள்
2. துன்பியல் நாடகங்கள்

மகிழ்ச்சியான நிலையில் நாடகம் முடிவுற்றால் இன்பியல் நாடகம் என்றும், துயர முடிவைக் கொண்டிருந்தால் துன்பியல் நாடகம் என்றும் நாடகங்களைப் பிரித்துக் காட்டினர். தமிழ் நாடகங்களிலும் பிற இந்திய மொழி நாடகங்களிலும் துன்பியல் முடிவு என்பது விரும்பி ஏற்றுக் கொண்ட ஒன்று அன்று. இந்திய நாடகங்கள் பெரும்பாலும் இன்பியல் முடிவைக் கொண்டவையாகவே இருக்கும். இருபதாம் நூற்றாண்டில் மேனாட்டு நாடகச் செல்வாக்கு இந்தியாவில் ஏற்பட்ட பின்னர்தான் துன்பியல் முடிவுகள் நாடகங்களில் பரவின.

**பழைய நாடக வகைகள்**

பழைய தமிழ் நாடகங்களும் இருபதாம் நூற்றாண்டு நாடகங்களும் வேறு வகையான பிரிவுகளைக் கொண்டிருந்தன. தமிழ் நாடகங்களைப் பொறுத்தவரையில் பழந்தமிழ் உரையாசிரியர்கள் பின்வருமாறு வகைப்படுத்தினர். அவை,

- வேத்தியல்
- பொதுவியல்

அரசர்களும் அரசர்களை ஒத்த பெரியவர்களும் காணும் நாடக வகை வேத்தியல் வகை நாடகமாகும். பொதுமக்கள் காண்பதற்குரிய நாடக வகை பொதுவியல். இந்த நாடகம் அல்லது கூத்து வகைகளை இன்னும் நுட்பமாகச் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பகுத்துக் காட்டுகிறார்.

- வசைக் கூத்து-புகழ்க் கூத்து

- வரிக் கூத்து-வரிசாந்திக் கூத்து
- சாந்திக் கூத்து-விநோதக் கூத்து
- ஆரியக் கூத்து-தமிழ்க் கூத்து
- இயல்புக் கூத்து-தேசிக்கூத்து

என்பன அடியார்க்கு நல்லார் வகைப்படுத்தும் பத்துக் கூத்து வகைகள்.

**இருபதாம் நூற்றாண்டு நாடக வகைகள்**

மேடை நாடகமே தம் வாழ்வின் பெரும்பணி என்று செயல்பட்டவர் அவ்வை தி.க.சண்முகம். அவர், மேடை நாடகங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் எனக் கூறுகிறார். ‘‘தமிழ் நாடகங்களைப் பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம்.

- புராண நாடகம்,
- பக்தி இலக்கிய நாடகம்,
- வரலாற்று நாடகம்,
- கற்பனை நாடகம்,
- பக்தி இலக்கிய நாடகம்,
- சமுதாய நாடகம்,
- சமுதாயச் சீர்திருத்த நாடகம்,
- தேசிய நாடகம்,
- நகைச்சுவை நாடகம்

என நாடகங்களை பலவகைப்படுத்திப் பார்க்க வேண்டும். இந்த நாடகங்களோடு பிரச்சார நாடகம் என்னும் ஒரு பிரிவையும் சேர்த்துக் கொள்ளலாம்’’ என்று கூறுகிறார்.

1. **புராண நாடகம்**

சிவலீலா, கிருஷ்ணலீலா, சக்திலீலா, மகாபாரதம் போன்றவை புராண இதிகாச நாடகங்கள்.

2. **வரலாற்று நாடகம்**

இராஜராஜ சோழன், வீரபாண்டிய கட்டபொம்மன், தஞ்சை நாயக்கர் தாழ்வு, இமயத்தில் நாம் போன்றவை வரலாற்று நாடகங்கள்.

3. **கற்பனை நாடகம்**

இரண்டு நண்பர்கள், லீலாவதி, சுலோசனா, வேதாள உலகம் போன்றவை கற்பனை நாடகங்கள்.

**4. பக்தி நாடகம்**

நந்தனார், சிறுத்தொண்டர், பிரகலாதன், மார்க்கண்டேயர் போன்றவை பக்தி நாடகங்கள்.

**5. சமுதாய நாடகம்**

உயிரோவியம், வேலைக்காரி, நாலுவேலி நிலம், டம்பாச்சாரி விலாசம் போன்றவை சமுதாய நாடகங்கள்.

**6. சீர்திருத்த நாடகம்**

அந்தமான் கைதி, இரத்தக் கண்ணீர், இழந்த காதல், வாழ்வில் இன்பம் போன்றவை சமுதாயச் சீர்திருத்த நாடகங்கள்.

**7. நகைச்சுவை நாடகம்**

சபாபதி, பிரசிடெண்ட் பஞ்சாட்சரம், துப்பறியும் சாம்பு, ஒரு சொந்த வீடு வாடகை வீடாகிறது போன்றவை நகைச்சுவை நாடகங்கள்.

**8. பிரச்சார நாடகம்**

பதிபக்தி, ஐம்பதும் அறுபதும், விலங்கு மனிதன், காகிதப்பூ போன்றவை பிரசார நாடகங்கள்.

**இலக்கிய நாடக வகைகள்**

மேடையில் நடிக்கப்பெறும் நாடகங்களை வகைப்படுத்துவதைப் போல் இலக்கியமாக எழுதப்பெறும் நாடகங்களை இருவகையில் பிரிக்கலாம். அவை,

1) உரைநடை நாடகங்கள்
2) செய்யுள் நாடகங்கள்

இந்த இருவகை நாடகங்களும் நடிப்பதற்கும் படிப்பதற்குமாக எழுதப்படும் நாடகங்களாகும்.

காட்சி அமைப்பையும் காண்போரையும் மனத்துள் கொள்ளாமல் மொழிநடைக்கும் கருத்துக்கும் மட்டுமே முன்னுரிமை தந்து எழுதப் பெறும் நாடகங்களை அரங்கேற்ற முடியாது. இவற்றைப் படித்து மட்டுமே இன்புறலாம்.

மொழிநடைக்கும் முதன்மை தந்து, காட்சி அமைப்பையும் முன்னிறுத்தி எழுதப்படும் நாடகங்களைக் கண்டு மகிழ்வதுடன் கற்றும் மகிழலாம்.

**அரங்கம்**

கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் தோற்றம் பெற்ற சிலப்பதிகாரத்தில் நாடக அரங்கத்தின் அளவுகளைப் பற்றி இப்பாடல் வரிகள் விளக்குகின்றன.

“நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோலளவு இருப்பத்து நால்விர லாக
எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து

ஒருகோல் உயரத்து உறுப்பின தாகி
உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நாற்கோ லாக
ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்
தோன்றிய அரங்கில்''-

(சிலப்பதிகாரம்-அரங்கேற்றுக் காதை
99–106 வது வரிகள்)

அரங்கம் அளக்கப் பயன்படும் கோளானது, கண்ணிடை ஒரு சாண்கொண்ட மூங்கிலைக் கொண்டு, மனிதர் ஒருவரின் பெருவிரல் இருபத்து நான்கு கொண்ட அளவில் ஒரு கோல் நறுக்கினர். அதுவே அளவு கோலாகும்.

எட்டு அணுக்கள் கொண்டது ஒரு தேர்ந்துகள். எட்டு தேர்ந்துகள் கொண்டது ஒரு இம்மி. எட்டு இம்மிகள் கொண்டது ஒரு எள். எட்டு எள் கொண்டது ஒரு நெல். எட்டு நெல் கொண்டது ஒரு பெருவிரல். இவ்வகை அளவு முறையினையே பண்டைக்காலத் தமிழர் பயன்படுத்தினர்.

சிலப்பதிகாரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் அரங்கின் அகலம் ஏழு கோலாகவும், நீளம் எட்டு கோலாகவும், குறட்டின் உயரம் (அடைக்கல்) ஒரு கோல் ஆகவும் அமைத்து அரங்கின் மேற்பகுதியில் பலகை பதித்து அதற்கும் தூண்களின் மேல் பாவிய உத்தரப்பலகைக்கும் இடையே நான்குகோல் உயரம் இருக்கச் செய்து அரங்கத்தினுள் செல்லவும், வெளியேறுவதற்கும் இரண்டு வாயில்கள் அமைத்துத் தூண்களின் நிழல்கள், ஆடும் இடத்தில் (நாயகப்பத்தியில்) விழாமல் ஒளிவிடும் (மாண்சுடர் காந்தும்) நிலை விளக்குகளை ஏற்றினர்.

**காட்சியமைப்பு**

மூன்று வகையான திரைகள் பண்டைக்காலந்தொட்டு உபயோகத்திலிருந்து வந்தன. அவையாவன:

- **ஒருமுக எழினி (ஒருபடம்)**– ஒருபக்கமாகச் சுருக்கிக் கட்டப்பெற்ற திரையாகும். (இவ்வகைத் திரைகள் இன்றளவிலும் கூத்து மேடை. சென்னை மாநகரின் சில நாடகக் குழுக்களாலும் சிற்றூர்கள் மற்றும் பயிற்று முறை நாடக மேடைகளிலும் பயன்படுத்தப்பெற்று வருகின்றன.
- **பொருமுக எழினி**– ஒரு திரை இரண்டாகப் பிரிக்கப்பெற்று ஒன்றோடொன்று சேரவும், பிரிக்கவும் கூடியதாக அமைந்த திரையாகும். (இவ்வகைத் திரைகள் தமிழில் ,,தட்டி'' என அழைக்கப்படுகின்றது. மதுரை, கோவை ஆகிய பெருநகரங்களிலுள்ள பயிற்றுமுறை நாடகக்

குழுக்கள் மற்றும் அரங்க அமைப்பாளர்கள் போன்றவர்களால் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

- **கரந்து வரல் எழினி**– மேற்கட்டிலிருந்து கீழே விரிந்து விடவும் பின்னர் சுருக்கிக் கொள்ளவும் கூடியதாகத் தொங்கும் திரையாக அமையப் பெற்றிருக்கும் திரையாகும்.

“தோற்றிய அரங்கில் - தொழுதனர் ஏத்த
பூதரை எழுதி, மேல்நிலை வைத்து;
தூண் நிழல் புறப்பட, மாண்விளக்கு எடுத்து, ஆங்கு
ஒருமுக எழினியும், பொருமுக எழினியும்,
கரந்துவரல் எழினியும், புரிந்துடன் வகுத்து – ஆங்கு
ஓவிய விதானத்து, உரை பெறு நித்திலத்து
மாலைத்தாமம் வளையுடன் நாற்றி,
விருந்துபடக் கிடந்த அரும் தொழில் அரங்கத்து”
(சிலப்பதிகாரம் - அரங்கேற்றுக் காதை 106 – 113 வரிகள்)

ஏன எழினியின் அமைப்பு பற்றி சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இடைக்காலத்தில் தோற்றம் பெற்ற “பெருங்கதை” என்னும் நூலில், அரங்கத்தில் தொங்க விடப்படும் ஏனைய திரைச்சீலைகளைப் பற்றி பின்வருமாறு விளக்கம் தரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

“கொடியும் மலரும் கொள் வழி எழுதிப்
பிடியும் களிறும் பிறவும் இன்னவை
வடிமாண் சோலை யொடு வகைபெற வரைந்து”

என உஞ்சைக்காண்ட வரிகளான 63 – 65 ஆகியனவற்றில் விளக்கங்கள் உள்ளன. திரைச்சீலைகளினைத் தொடர்ந்து பண்டைத்தமிழர் சித்திர விதானம் விரித்து, முத்து மாலைகள், பூமாலைகளினை வளைவாகத் தொங்கவிட்டு நாடக அரங்கத்தினை அலங்கரித்தனர்.

**பயன்படுத்தப்பட்ட முறை**

இன்று காணப்படும் நாடக மேடைகளில், காட்சி ஒன்றில் நாடக நடிகரின் வீட்டின் “உள்ளே” செல்லுவதற்கு மேடையின் வலதுபுறம் மூலமாகவும் “வெளியே” செல்வதென்றால் மேடையின் இடதுபுறத்திலும் செல்வது வேண்டும். இவ்வகை விதியினை சிலப்பதிகாரத்தில் உள்ள இப்பாடல் வரிகளில் காணலாம்.

“இயல்பினின் வழா அ இருக்கை முறைமையின்
குயிலுவ மாக்கள் நெறிப்பட நிற்ப

வலக்கால் முன்மிதித்து ஏறி, அரங்கத்து
வலத்தூண் சேர்தல் வழக்கு எனப் பொருந்தி
இந்நெறி வகையால் இடத்தூண் சேர்ந்த
தொல்நெறி இயற்கைத் தோரிய மகளிரும்''
(சிலப்பதிகாரம் - அரங்கேற்றுக்காதை 129 – 134 ஆம் வரிகள்)

என வரும் இப்பாடல் வரிகள் குயிலுவர் (யாழ், குழல், இடக்கினி போன்ற கருவிகளினை வாசிப்பவர்கள்) நிலையிடம் ஒரு கோல் என்ற ஒழுங்குப்படி தொழிலாளர் நின்றனர். அனைத்தும் ஒழுங்கானதும், மாதவி வலக்காலை முன் வைத்துப் பொருமுக எழினியுள்ள வலத்தூண் பக்கம் சேர்ந்தாள். ஒருமுக எழினியுள்ள இடத்தூண் பக்கம் தோரிய மடந்தையர் என்ற ஆடி மூத்தவர்; நாட்டியத்திற்குத் துணை செய்பவர், மாதலி வந்தேறியபடியே வலக்காலை முன் வைத்தேறி வந்து நின்றனர்'' என இப்பாடல் வரிகள் விளக்குகின்றன.

**நடிப்பும் - இசையும்**

''இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து
பலவகைக் கூத்தும் விலக்கினால் புணர்ந்து
பதினோர் ஆடலும், பாட்டும், கொட்டும்,
விதிமாண் கொள்கையின் விளங்க அறிந்து – ஆங்கு
ஆடலும், பாடலும், பாணியும், தூக்கும்
கூடிய நெறியின் கொளுத்தும் காலை –
பிண்டியும், பிணையலும், எழில் கையும், தொழில்கையும்
கொண்டவகை அறிந்து, கூத்து வரு காலை
கூடை செய்த கை வாரத்துக் களைதலும்
பிண்டி செய்த கை ஆடலில் களைதலும்,
ஆடல் செய்த கை பிண்டியில் களைதலும்
குரவையும் வரியும் விரவல செலுத்தி
ஆடற்கு அமைந்த ஆசான் - தன்னோடும்''
(சிலப்பதிகாரம் - அரங்கேற்றுக்காதை 12 – 15 வரிகள்)

இப்பாடல் வரிகளின் பொருட்களாவன பின்வருமாறு,

**அரங்க அமைப்பு வகை**

அரங்கத்தின் வடிவங்களின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது,

- வட்ட அரங்கு
- திறந்தவெளி அரங்கு

- படச்சட்ட அரங்கு
- முக்கோண அரங்கு
- சதுர அரங்கு
- செவ்வக அரங்கு

அரங்கு எனப்படுவது கலைக்குழுவால் நிகழ்த்துக்கலைகளை காட்சிப்படுத்துவதற்கான தளம். இத்தளம் ரசிப்பவர்களின் உள்ளத்திடை பொதுவாக இரு கூறுகளைக் கொண்டுள்ளது. முதலாவது பார்வையாளர்களுக்கு உண்மையிலேயே தங்கள் முன் நிகழும் காட்சியாகவும், இரண்டாவது கலைஞர்கள் எடுத்தாளும் கதை, வரலாறு, நிகழ்வு சார்ந்த கற்பனையான நிகழ்ச்சியைக் காட்டும் கற்பனைத்தளமாகவும் திகழ்கிறது.

அரங்கேற்றக் கலைகளைகளின் காட்சிகள் பார்வையாளர்களுடன் நேர்காணல்கள், சைகைகள், உரைநடை, வசனம், திரைக்கதை, பாடல்கள், இசை மற்றும் நடனம் மூலம் தொடர்புகொள்வதாக அமைந்திருக்கும். பார்வையாளர்களின் அனுபவத்தை இன்னும் சிறப்பாக்க அவ்விடத்தின் கலை, ஒலி, ஒளி அரங்க வடிவமைப்பு போன்றவை மெருகேற்றப்படுகிறது.

கதை கூற விழையும் மனிதனுடைய இயல்பு காரணமாக மிகப் பழங்காலத்திலேயே அரங்கு உருவாகிவிட்டது எனலாம். தொடக்க காலத்தில் இருந்தே அரங்கு சமய சடங்கு, சமூகக்கூடம், அரசவை என பல வடிவங்களை எடுத்து வந்திருக்கிறது. இதற்காக, பேச்சு, நடிப்பு, இசை, நடனம் போன்றவற்றையும், நிகழ்த்து கலைகள், காட்சிக் கலைகள் போன்றவற்றிலிருந்து பல கூறுகளையும் பெற்று ஒரே கலை வடிவமாக ஆக்கியது.

நாடகம் சார்ந்த அனைத்தையும் ஒரே இடத்தில் இணைத்து தற்போதைய நிகழ்வாக நிகழ்த்திக்காட்டுவதற்கு பயன்படும் ஒருங்கு பெற்ற மேடை அரங்கு எனலாம். அரங்கத்தில்நடைபெறும் நாடகத்தின் நடிப்பு, அரங்க அமைப்பு உள்ளிட்ட கலைகளைப் பற்றி அறிய உதவும் இயல் அரங்கியல் எனப்படுகிறது.

**களம்**

இடம் (கூடுமிடம், ஒரு செயல் நடக்குமிடம்). (திவாகர நிகண்டு)

தேர்தல்களம் - தேர்தல் நடக்குமிடம்.

ஆடுகளம் - விளையாடுமிடம்.

பூக்களம் - பூக்களால் வடிவமைக்கப்பட்ட இடம்.

நெற்களம் - காவலுழவர் களத்தகத்துப் போரேறி. (முத்தொள்.)

சபை - களனஞ்சி (குறள், 730)

யாகசாலை - யூபநட்ட

வியன்களம் - பலகொல் (புறநா. 15, 21)

போர்க்களம் - ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய (புறநா. 2, 15)

**ஒளி - ஒலி போல்வன**

விழாக்காலங்களில் பயன்படுத்தப்படும் மத்தாப்புகள் மற்றும் பட்டாசுகளும் பல்வேறு வண்ண ஒளி மற்றும் ஒலியையும் உருவாக்குகின்றன, இந்த நிகழ்வுகள் அனைத்தும் வேதிவினைகளால் நடைபெறுகின்றன.

**ஒலி உருவாதல்**

நாம் பாடும் பொழுது மற்றும் பேசும்பொழுது ஒலியை உருவாக்குகிறோம், இசைக் கருவிகள் இசைக்கும் பொழுதும், இரும்பு, காப்பர், மற்றும் அலுமினியம் போன்ற உலோகங்களைத் தட்டும் பொழுதும் ஒலியைக் கேட்கிறோம்.

இதே போல, சில வேதிவினைகளும் ஒலியை உருவாக்குகின்றன. விழாக்களில் மற்றும் தீபாவளிக் கொண்டாட்டத்தில் வெடிகளைப் பற்ற வைக்கும்போது என்ன நடைபெறுகிறது? வெடிகளில் உள்ள வேதிப்பொருள்கள் வினைபுரிந்து வெடித்து ஒலியை உருவாக்குகின்றன.

ஜிங்க் மற்றும் மெக்னீசியம் போன்ற உலோகங்கள் நீர்த்த அமிலங்களுடன் வினைபட்டு ஹைட்ரஜன் வாயுவை வெளிவிடுகின்றன. இந்த ஹைட்ரஜன் வாயு எளிதில் தீப்பிடிக்கும் தன்மை கொண்டதால் அது காற்றில் உள்ள ஆக்சிஜனுடன் வினைபுரிந்து „பாப்‟ என்ற ஒலியை உருவாக்குகிறது.

**ஓரங்க நாடகங்களை படைக்கத் துண்டுதல்:**

சில்லென்ற காற்றுக் குளிரைத் தர, கைகள் அனிச்சையாய் தலையணையடியைத் துழாவியது. கையில் தட்டுப்பட்ட ரிமோட்டை இயக்கி ஏசியை அணைத்தேன். தூக்கம் முற்றாகக் கலைந்திருந்தது. என்ன செய்வது? திரும்பவும் தூங்க முயல்வதை தவிர, வேறு என்ன செய்ய முடியும்? போர்வையை இழுத்து மூடிக்கொண்டு தூங்க முயன்றேன். எவ்வளவோ முயன்றும் தூக்கம் வரவில்லை.

மனம் பழைய நினைவுகளை அசை போடத் தொடங்கியது. நினைவுதெரிந்து, பள்ளிக்கு சென்ற நாட்களில், தூக்கம் தொலைந்ததே இல்லை. மாடு கத்தும் சத்தம் கேட்டோ வாசலில் யாராவது அழைக்கும் குரல் கேட்டோ தான் என் தூக்கம் கலையும். அதுவும் ஆறரை மணிக்கு மேல் தான். அந்த நாட்கள் எவ்வளவு நிம்மதி!. “நிம்மதி“ என்பதன் அர்த்தம் புரியாமல் அதை அனுபவித்த நாட்கள் முதன்முதல் நான் தூக்கம் தொலைத்த இரவு, என் தாத்தா இறந்த தினம் என்றே நினைக்கிறேன்.

விடியற்காலையிலோ, இரவிலோ, தூக்கத்தில் திடீர் என்று எழுந்ததெல்லாம் நான் அவளைப் பார்த்த பின்புதான். “மல்லிகா” என் வாழ்க்கைக்கு மணம் சேர்த்தவள் எனது கல்லூரி பருவத்தில் அறிமுகமானவள். “அது தான் காதலா” என்றெல்லாம் தெரியாது திடீரென்று தூக்கத்தின் இடையே அவள் எனது அருகில் நிற்பதாய் தோன்றி எழுந்திருக்கிறேன்.

அதன் பின் தூக்கம் வராமல் சிறிது நேரம் புரண்டுக் கொண்டிருப்பேன். பின் கதையோ, கவிதையோ வாசிக்கத் தொடங்குவேன். மறுநாள், கல்லூரியில் தூங்கி விழுந்து கெமிஸ்ட்ரி ப்ரொ.ஃபஸரிடம் திட்டு வாங்கி உள்ளேன். இப்போதும் மனம் பாரதியின் கவிதை படிக்க வேண்டியது. ஏனோ மனம், “நீயெனதின்னுயிர் கண்ணம்மா'' எந்த நேரமும் நின்றனைப் போற்றுவேன்” என்ற வரியின் பின்னால் சென்றது. என் கண்ணம்மாவை, என் மல்லிகாவை, நான் போற்றி இருக்கிறேனா, என யோசித்துக் கொண்டிருக்கும்போதே எதுவோ மறுபடியும் தொண்டைக்குள் அடைத்தது.

கண்விழித்தபோதே ஏதோ தொண்டையில் உருண்டது போல் இருந்தது. தண்ணீர் குடிக்கலாமா? கையெட்டும் தூரத்தில் இருந்து தண்ணீர்க் குடுவையை எடுத்தேன். பாதிக்குமேல் காலியாகி இருந்தது. மெதுவாகக் குடிக்க ஆரம்பித்தேன். விழுங்குவதற்கு கஷ்டமாக இருந்தது. ஏதோ அடைப்பது போல் ஒருவேளை இதுதான் துக்கம் தொண்டையை அடைப்பதோ என்று தோன்றியது. புன்சிரிப்புடன் குடுவையை மேசை மேல் வைத்தேன்.

மனம் பின்னோக்கிச் சென்றது. எனது பள்ளிப்பருவத்தில் நினைவில் கொள்ள வேண்டிய சம்பவங்கள் என்றெல்லாம் எதுவுமே நடந்ததில்லை. காலை முதல் வீட்டில் ஏதாவது வேலை இருக்கும். பள்ளி முடிந்து வந்ததும், சிறிது நேரம் விளையாடலாம். பின்பு அம்மாவுக்கு உதவியாக, மாடுகளை ஓட்டி வந்து தொழுவத்தில் அடைப்பது, அவற்றுக்கு வைக்கோல் பிரித்துப் போடுவது என வேலை. பின் கொஞ்ச நேரம் வீட்டுப் பாடங்களைச்செய்து விட்டுச் சாப்பிட்டு விட்டுத் தூங்க வேண்டியது தான்! இது தான் அன்றாடம் நடக்கும். படித்தேன் அரசு வேலை கிடைத்தது அதைச் சொல்லி பெண் தேட, மல்லிகாவே எனக்கு மனைவியாக அமைந்தாள்.

என் கல்லூரிப் பருவத்திலேயே, அவளிடம் எனக்கு ஒரு ஈர்ப்பு இருந்தது. ஆனால் வெளிப்படுத்தியதே இல்லை. படிப்பு முடிந்து வேலை கிடைக்கும் வரை, இரண்டு வருடங்கள் நான் அதே ஊரில்தான் இருந்தேன். அப்போதும் மல்லிகாவிடம் எதுவும் பேசியதில்லை. எனக்குப் பெண் தேடும் போது மல்லிகாவின் ஜாதகமும் வர, நான் சந்தோஷம் அடைந்தேன். திருமணமான பின், அவள் என்னை அதிகம் கவர்ந்தாள். எப்போதும் அவளிடம் இருக்கும் புன்முறுவல் நடனமாடும் லாவகத்துடன்

சமையல் அறையில் அங்கும் இங்கும் ஓடியாடி வேலை செய்வது இரண்டு குழந்தைகள் பிறந்தும் உடம்பைப் பேணிய தன்மை மல்லிகாவைக் கண்டு அதிசயித்து இருக்கிறேன். ஆனால், என்றுமே அவளிடம் சொன்னதில்லை.

காலிங்பெல் அடிக்கும் சத்தம் கேட்டது. ஜெயந்தி வந்துவிட்டாள் என்று நினைக்கிறேன். வீட்டு வேலையில் உதவும் பெண். இன்னும் சற்று நேரத்தில் எனக்குத் தேநீர் வந்துவிடும். ஜெயந்தி தான் எடுத்து வருவாள் மனம் தேநீரை எதிர்பார்க்க தொடங்கியது.

மல்லிகா இருந்தவரை, காலையில் கா.ஃ.பி தான். மல்லிகா போடும் கா.ஃ.பிக்கு ஒரு தனிச் சுவை. ஃ.பிரஷ்ஷாக டிகாக்ஷன் எடுத்து தான் கா.ஃ.பி தயாரிப்பாள். “ஐயா” ஜெயந்தியின் குரல். “எப்படி இருக்கீங்க? நல்லா தூங்குனீங்களா?” கேட்டுக்கொண்டே, கையில் கொண்டு வந்திருந்த தண்ணீர் பாட்டிலை மேசையில் மாற்றி வைத்தாள். தேநீரை என் கையில் கொடுத்தாள். சரசரவென்று அறையை சுத்தம் செய்யத் தொடங்கினாள்.

எனக்கு பேஸ்ட், பிரஷ், வாஷிங்பௌல் எல்லாம் கொண்டு வந்து தர, நான் படுக்கையில் அமர்ந்தபடி பிரஷ் செய்தேன். “வேறு எதுவும் தேவையா, ஐயா?” என்று என்னை பார்த்தாள். “இல்லமா” என்றிட மின்னல் வேகத்தில் மறைந்து போனாள். கதவை லேசாகத் திறந்து வைத்து இருப்பாள். இது எனது வேண்டுகோள். இனி நர்ஸ் வரும்வரை நான் எல்லோரது உரையாடலையும் கேட்டுக்கொண்டே இருப்பேன். மனதுக்கு ஏற்றவாறு கற்பனைக் காட்சிகளையே அமைத்துக் கொள்வேன். இது ஒருவித பொழுதுபோக்கு.

மல்லிகா இறப்பதற்கு முன்பு வரை நான் தான் குடும்பத்தலைவன். அதிகாரத்துடன் அந்த வீட்டில் வளைய வந்தவன். அவளின் இழப்பு எனக்கு பெரிய சாபம். அவள் இறந்த இரண்டாம் வாரம், எனது கால் செயலிழந்து.

“அப்பா” கௌதமின் குரல். காலை கடன்கள் முடிந்ததும் என்னை வந்து பார்த்து விடுவான். இந்த இரண்டு வருடங்களில் இது ஒரு முறை கூடத் தவறியதில்லை. ஒருநாள் எனது மருமகளின் ஆதங்கம் கூட, எனக்கு கேட்டது. “உங்கள் தங்கை வெண்ணிலாவை வரச் சொல்லிவிட்டு, நாம் ஒரு வாரம் எங்காவது போய் வரலாமே”. எனக்கு கேட்க வேண்டும் என்று தான் பேசி இருப்பாள் என நினைக்கிறேன். ஆனால் கௌதமிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. அவன் பேசவில்லையா? அல்லது பேசியது எனக்கு கேட்க வில்லையா, என்று தெரியவில்லை.

“என்னப்பா? ஒரு மாதிரி இருக்கீங்க?” கௌதம் குரல் மீண்டும் என் நினைவைக் கலைத்தது.

"ஒன்றும் இல்லை தம்பி".

என் தலை வாரி விட்டான். முகத்தைத் துடைத்து விட்டான்.

"ஏதாவது வேண்டுமாப்பா? புத்தகங்கள் வாங்கி வரவா?"

"என்னால் அதிக நேரம் படிக்க முடிவதில்லை, தம்பி. இப்பத்தான் போன்லயே வாசிக்கிறேனே.., எழுத்த பெரிசாக்கி வாசிக்க, வசதியா இருக்கு."

"சரிப்பா. உடம்பு நல்லா தானே இருக்கு? முகம் ஒரு மாதிரி இருக்கே,"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லப்பா. கொஞ்சம் சீக்கிரம் முழிச்சுக்கிட்டேன். அதான்"

"சரிப்பா. நான் கௌம்புறேன். ஏதாவது பிரச்சினை என்றால் உடனே போன் பண்ணுங்க!"

"சரிப்பா..."

மீண்டும் தொண்டையில் ஏதோ அடைத்தது. இடது தோள்பட்டை வலிப்பது போலிருந்தது. ஹார்ட் அட்டாக்கோ... இருந்தால் தேவலை. என்னதான் குடும்பத்தினர் பாசமாக இருந்தாலும், இந்த தனிமை ஒரு சிறைதான். ஹார்ட் அட்டாக் ஆக இருந்தால் இதிலிருந்து ஒரு விடுதலை.

"சார்", குரல் கேட்டு விழித்தபோது தான் தெரிந்தது, யோசித்தபடியே தூங்கியிருக்கிறேன். "மணி ஒன்பதரை ஆயிடுச்சு சார். மாத்திரை சாப்பிட்டு தூங்குங்க" என்று சொல்லிக்கொண்டே நர்ஸ் மாத்திரை கொடுத்தான். தண்ணீர்க் குடிக்கவும் மாத்திரை விழுங்கவும் சிறிது கஷ்டமாக இருந்தது.

மாத்திரை விழுங்கியதும் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன். "தம்பி நீ சாப்பிட்டியா?" "இல்ல சார். இன்னைக்கு நான் விரதம்" என்றவன், "என்ன சார் ஆச்சு? ஏன் ஒரு மாதிரி பேசுறீங்க?" என்றான். "அப்படியா, நல்லா தான் இருக்கேன்." வார்த்தையை முடிக்கும் முன் வாய் கோணியது.

நர்ஸ் என் தவிப்பை உணர்ந்து இருப்பான் போல.

சிரிக்க முயன்றேன். அவன் பதட்டமாய் பிபி டெஸ்ட் செய்தான். ஒரு டேப்லட் எடுத்து என் வாயில் போட்டான். ஏதோ சொன்னான். எனக்கு காதில் விழவில்லை. கன்னத்தில் தட்டினான். பின் யாருக்கோ ஃபோன் செய்தான். கௌதமை அழைத்திருப்பானோ? அல்லது ஆம்புலன்ஸா? அவனிடம் ஒரு பரபரப்பு தெரிந்தது. எமன் எனக்கு விடுதலை தர வருகிறானா? சென்ற முறை போல இவன் என்னை மீண்டும் மீட்டு விடுவானோ?? "தம்பி, வேண்டாம். எனக்கு விடை கொடு. இந்த இரண்டு வருட ஓரங்க நாடகம் முடியட்டும்" எனது வலுவிழந்த குரலின் வலி யாருக்கும் கேட்டதாகத் தெரியவில்லை.

**தொகுப்புரை:**

- ❖ சுவையின் அடிப்படையில் தோன்றியது நாடகம் என்பது அறியப்பட்டது. நாடகம் மற்றும் கூத்து பற்றி அறியப்பட்டது.
- ❖ 20 –ம் நூற்றாண்டின் நாடக வகைகள் மற்றும் தமிழில் தோன்றிய நாடக நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- ❖ நாடக மாந்தர்கள், நாடக உத்திகள், கரு, அரங்க அமைப்பு வகை, நாடகக் களம், ஒலி – ஒளி அமைத்தல் போன்றவையும் விளக்கபட்டுள்ளன.
- ❖ தமிழ் பயிலும் மாணவர்கள் நாடகம் இயற்றி நடிக்கவும், ஓரங்க நாடகம் படைக்கவும் கற்றுத்தரப்பட்டது.

**தன்மதிப்பீட்டு வினாக்கள்:**

1. நாடகச் சுவைகள் எத்தனை வகைப்படும்?
   அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8 விடை: ஈ
2. அரசர்கள் காண வேண்டிய நாடக வகை எது?
   அ) வேத்தியல் ஆ) பொதுவியல் இ) இன்பவியல் ஈ) ஓரங்க நாடகம் விடை: அ
3. கீழ்க்கண்டவற்றில் மு.வ வின் நாவல் எது?
   அ) சிவல்லா ஆ) உயிரோவியம் இ) கரித்துண்டு ஈ) வேலைக்காரி விடை: இ
4. எழினிகள் எத்தனை வகைப்படும்?
   அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4 விடை: இ
5. இரண்டு திரைகள் ஒன்றுசேர்வது போன்ற எழினி
   அ) ஒருமுக எழினி ஆ) பொருமுக எழினி
   இ) கரந்துவரல் எழினி ஈ) கொடிமுகஎழினி விடை: ஆ

**குறுவினாக்கள்**

1. நாடகத்தின் தோற்றம் - விளக்குக.
2. நாடகத்தின் வகைகளை விளக்குக.
3. நாடக அமைப்பு – விளக்குக.
4. ஒலி - ஒளி உருவாதல் - விளக்குக.
5. ஓரங்க நாடகம் என்றால் என்ன?

**நெடுவினாக்கள்**

1. நாடக வகைகளை எ.கா. உடன் விவரி?
2. நாடக மாந்தர்கள் யாவர்?
3. கதைப்பின்னல் வகைகளைக் கூறி விளக்குக.
4. நாடகக் கரு அமைப்பதை விளக்குக.
5. ஓரங்க நாடகம் ஒன்றை அமைக்க.

**பார்வை நூல்கள்**

1)தமிழ் நாடகத் தோற்றமும் வளர்ச்சியும் - ஆறு.அழகப்பன்,அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

2)கோ.இளையபெருமாள் - தமிழில் பிழையின்றி எழுதுவது எப்படி - வானதிப்பதிப்பகம்,சென்னை-17

**இணையதள முகவரி**

1)Tamil E-Books Downloads – tamiebookdownloads.blogspot.com

# அலகு - 5

**நோக்கங்கள்**

- ❖ கட்டுரையின் இலக்கணம் மற்றும் தனித்தன்மைகளை மாணவர்கள் அறியச் செய்தல்.
- ❖ கட்டுரையின் அமைப்பு மற்றும் மொழிநடையைக் கற்பித்து, மாணவர்களைக் கட்டுரை எழுதத் தூண்டுதல்.
- ❖ கட்டுரை வகைகள் மற்றும் திறனாய்வு வகைகளை மாணவர்களுக்குக் கற்பித்தல்.
- ❖ மாநில அளவிலான போட்டித் தேர்வக்ளுக்கு மாணவர்களைத் தயார் செய்தல்.

**அறிமுகம்**

இலக்கியம் என்பது குறிக்கோள் உடையது விழுமிய கருத்துக்களை எடுத்துரைப்பது. படிப்போர் உளங்கொள்ளுமாறு அமைத்து எழுதப்படுவதாகும். கலைப்பிரிவுகளுள் இலக்கியப் பிரிவும் ஒன்றாகும். ஒவ்வொரு கலைக்கும் வடிவம் பொருள் என இரண்டு உண்டு.

எப்பொருள் பற்றி எழுதப்பட்டவையாயினும் கருத்தை வெளியிடும் நிலையில் சிறந்த மெய் அமைப்புப் பெற்றவை என்று புகழப்படும் சிறந்த நூல்களே இலக்கியம் என்று ஒரு சாரார் கூறுவர். இங்கு முருகியல் தகுதியே அடிப்படையாகக் கருதப்படுகின்றது.

இதற்கு மாறாக மனிதகுல முன்னேற்றத்துக்கு ஆக்கஞ் சேர்க்கும் வகையில் அமையும் படைப்புகளே இலக்கியமென்று மற்றொரு சாரார் கூறுவர்.

இக்கேள்விக்கு விடையளித்தல் எளிய செயலன்று. எமர்சன் ,,உயரிய எண்ணங்களின் பதிவே இலக்கியம் என்கிறார்'

''இலக்கியம் என்பது வாழ்வைப் பற்றிய விமர்சனம்''என்று மத்தேயூ அர்னால்டும், "இலக்கியம் என்பது வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவதும் விளக்குவதும் ஆகும்'' என்று சி.டி.வின்செஸ்டரும் கூறுகின்றார்.

ஒரு நல்ல இலக்கியம் எனில் நிலைப்பேற்றுத் தன்மையை உடையதாயும் ஆசிரியரின் தனி ஆளுமையைக் காட்டுவதாயும் இருக்கலாம்.

இன்று எழுதப்படும் பொதுவுடைமைக் கவிதைகள் எல்லாம் பிரச்சாரங்களே என்கின்றனர். பிரச்சாரமில்லாத கலை, இலக்கியங்களே இல்லை எனலாம். ஏதோ ஒரு கருத்தைப் பிரச்சாரம் செய்யத்தான் கலை இலக்கியங்கள் எழுகின்றன.

இலக்கியமானது வடிவம் நோக்கிச் சிலவகையாகவும், பொருள் நோக்கிச் சிலவகையாகவும், புலவர்தம் மனநிலை பற்றி வேறு சில வகையாகவும் பாகுபாடு செய்யப்படுகிறது.

முதல் பாகுபாடு பாட்டு, உரைநடை என அமைகின்றது இலக்கிய வகைகளுள் பாட்டே மிகத் தொன்மையானது ஆகும். கவிதையாலேயே அனைத்து அறிவுத்துறை நூல்களும் சங்க காலத்தில் சொல்லப்பட்டன. உரைநடை என்பது பிற்காலத்திலேயே வளர்ந்தது.

உரைநடை வளர்ந்த பிறகு அனைத்து அறிவுத் துறைகளும் உரை நடையிலேயே எழுதப்படலாயின. அதன்பிறகே நாடகம், கதை முதலியன பாட்டிலிருந்து பிரிந்து உரைநடை வடிவம் பெற்றன.

**உரைநடையும் கட்டுரையும்**

கற்பனை என்பது நெடுங்காலம் வரையில் செய்யுள் வடிவில் புலப்படுத்தக் கூடியதாகவே இருந்தது. அதனாலேயே காவியம் போன்றவை வளர்ந்து பெருகின. உரைநடை வளர்ந்தபின் உரைநடை வாயிலாகவும் கற்பனையை அமைத்துப் புலப்படுத்த முடியும் என்பது விளங்கிவிட்டது. அதனால் உருவான பிரிவுகள்தாம் நாவலும் சிறுகதையும்.

பிறகு ஒரு பொருளைப் பற்றிய கருத்தினைச் சொல்வதற்குக் கட்டுரை வடிவம் ஏற்பட்டது.

உரைநடையில் கற்பனை வளர்ந்த வேகமான வளர்ச்சியைக் காட்டுவன நாவலும் சிறுகதையும் ஆகும்.

உரைநடையில் அறிவுக் கூறுகள் வளர்ந்த வேகமான வளர்ச்சியைக் காட்டுவன கட்டுரை ஆகும்.

**கட்டுரையின் தனித்தன்மை**

கதைகளைப் படிப்பது போன்று கட்டுரைகளை அனைவராலும் படிக்க முடியாது. இதுவே கட்டுரையின் தனித்தன்மையாகும். கதைகேட்டல், முடித்தல் எனும் மரபிற்கு மீறிக் கருத்துக்களைப் படித்தல் என்பது கடினமானதாகும். படிப்பறிவுள்ள எல்லோருமே கட்டுரைகளைப் படிப்பதில்லை. நாளிதழ் வாங்குபவர்கள் அனைவரும் தலையங்கத்தை, கூற இதழ் வாங்குபவர்கள் அனைவரும் தனிக்கட்டுரைகளைப் படிப்பதில்லை.

இருபதாம் நூற்றாண்டில் படைப்பிலக்கியத்துள் ஒன்றாகவே கட்டுரையும் கொள்ளப்படுகிறது.

**கட்டுரை எழுதும் போது கவனிக்க வேண்டியவை**

மாணாக்கர், கட்டுரை எழுதும்போது கவனிக்க வேண்டியவற்றை நாம் இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று முன்பு செய்வன; இரண்டு அன்று செய்வனவாகும்.

அதாவது, மாணாக்கர் கட்டுரை எழுதப் புகும் முன்னரே செய்ய வேண்டுவனவற்றை இப்பகுதி எடுத்துக்காட்டுகிறது இதனையும் நாம் இரண்டாகப் பகுக்கலாம்.

(அ) பொருள் சேர்ப்பு

(ஆ) பயிற்சி.

கட்டுரை எழுதுவதற்குத் தேவையான பொருள்களைத் தேடி வைத்துக் கொள்ள வேண்டும்.

மாணாக்கர் பொது நூல்களைப் படிப்பதோடு கட்டுரைக்குத் தேவையான நூல்கள், இதழ்கள், ஆய்வுக்கட்டுரைகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் ஆகியவற்றையும் படிக்கவேண்டும். அப்படிப் படித்தால் தான் அறிவு விரிவடையும். ஒரு பொருள் குறித்த செய்திகள் பலவும் நமக்குத் தெரிந்திருந்தால்தான் கட்டுரை எழுதும்போது சில செய்திகள் விடுபட்டாலும் கட்டுரையினை எழுதமுடியும்.

நூல்களில் படித்து அறிய முடியாத பல செய்திகளை நாம் பொதுக் கூட்டங்கள், இலக்கியக் கூட்டங்கள் ஆகியவற்றில் கலந்து கொண்டு கேட்டுப் பயன் பெறலாம்.

இப்போது வானொலியில் பல இலக்கிய நிகழ்ச்சிகள் ஒலி பரப்பாகின்றன. அதனையும் மாணாக்கர் கேட்கலாம். வாய்ப்பிருப்பின் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளையும் கேட்டுப் பயன் பெறலாம்.

படித்தும் கேட்டும் அறியமுடியாத சில செய்திகளை நாம் உற்றுக் கவனித்தல் மூலம் பெற முடியும். இம்முறைகளை ஆய்வுப் பணிக்கு மிகவும் இன்றியமையாததாகும். எடுத்துக்காட்டாக, தெருக்கூத்து பற்றி ஒரு கட்டுரை எழுத வேண்டுமாயின் ஆய்வாளன் தெருக் கூத்தொன்றினைக் கவனித்தே ஆகவேண்டும் அப்போது தான் கட்டுரை எழுத முடியும்.

தேர்வில் (அ) தேவைப்படும் போது கட்டுரை எழுதிக் கொள்ளலாம் எனச் சோம்பி இருத்தல் கூடாது. ஏதேனும் தலைப்பைத் தாமே தேர்ந்து, அதுபற்றி கட்டுரை எழுதிப் பழகுதல் வேண்டும். பயிற்சி இருப்பின் தேர்வில் கட்டுரையை சிரமம் இன்றி எழுதலாம்.

கருத்துக்களைக் கால முறைப்படியும் தர்க்க முறைப்படியும் தொகுத்தல் வேண்டும். பிறகு அவற்றைப் பகுத்தல் வேண்டும். தலைப்பை மையமிடும் கருத்துக்களை எடுத்துக் கொண்டும் பிறவற்றை நீக்கியும் விடல் வேண்டும்.

பிறகு அக்கருத்துக்களை எல்லாம் நல்ல சொற்றொடர் அமைப்பில் நயமாகக் கட்டுரையாக எழுதுதல் வேண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் விதத்தில் கட்டுரை இருத்தல் வேண்டும்.

நிறுத்தற்குறிகள் சொற்றொடரின் பிரிவிற்கும், பொருட் தெளிவிற்கும் இன்றியமையாதவை.

**காற்புள்ளி இடவேண்டிய இடங்கள்**

1.1 பொருள்களைத் தனித்தனியே குறிப்பிடும் போது (எ.டு) அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றே பண்டைத் தமிழரின் உறுதிப் பொருள்களாம்.

1.2 அடுத்தடுத்து ஒரே எழுவாய்க்குரியப் பயனிலைகள் வரும்போது;

(எ.டு) சீதையைப் பிரிந்த ராமன் அழுதான், பதறினான், சோர்ந்தான், விழுந்தான், சோகத்தின் உச்சக் கட்ட வெளிப்பாடுகள் இவை.

1.3 எச்சச் சொற்றொடரின் போது:

(எ.டு) மக்கள் வாழ்நாள் வரவரக் குறுகி வருவதானும் இன்றியமையாது கற்கவேண்டிய அறிவியல் துறைக்கே காலம் போதாமையானும், அறிந்த பொருள்களையே குறிக்கும் பல்வேறு மொழிச் சொற்களைக் கற்றல் மொழியாராய்ச்சியாளர்க்கன்றிப் பிறர்க்குப் பெரும்பயன் படாமையானும், உலக மொழியாகிய ஆங்கிலத்தை ஒருவர் எங்ஙனமும் கற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தலானும், ஆங்கிலமும் தாய்மொழியும் ஆகிய இருமொழிகளைக் கற்றலே, இக்காலத்திற்குப் போதியதாகும்.

1.4 பெயருக்குப் பின்னர் பெற்ற பட்டங்களைப் பிரித்துக் காட்டும்போது:

பேராசியர், டாக்டர், ரா.சீனிவாசன், எம்.ஏ.எம்.லிட்., பி.எச்டி.

1.5 முகவரி எழுதும் போது: இயக்குநர், புதுவை மொழியில் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், 101 – சி, சவரிராயலுத் தெரு, புதுச்சேரி – 605 001.

1.6 இணைப்புச் சொற்களின் போது:

(எ.டு)

அன்றியும், கதைமாந்தரைப் பற்றி ஆசிரியர் விளக்கிக் கூறுவதால் கற்பவரின் நெஞ்சில் போதிய உணர்ச்சி ஏற்படாது.

1.7 விளிச் சொற்கள்

(எ.டு)

ஐயா, என்னை மன்னியுங்கள்.

அம்மா, எனக்குச் சோறிடு.

1.8 இணை மொழிகளின் போது:

(எ.டு)

நல்லவன், கெட்டவன், செல்வன் ஏழை, இளைஞன் முதியவன், சிறியவன் பெரியவன் என்ற வேறுபாடு கூற்றவனுக்கில்லை.

1.9. இடையில் பொருள் விளக்கும் போது:

(எ.டு)

ஹோமர், இலியட் எனும் காவியத்தின் ஆசிரியர், இன்றும் அறிஞர்களிடையே புகழப்பெறுபவராகவேத் திகழ்கிறார்.

1.10 வாக்கியத்திற்குள் மேற்கோள் வரும்போது:

(எ.டு)

‘‘அன்பே சிவம்’’, என்றார் திருமூலர்.

1.11 நூற்பாவைக் குறிப்பிடும் போது:

(எ.டு)

தொல்காப்பியம் 135.

1.12 தேதியைக் குறிப்பிடும்போது:

(எ.டு)

19, டிசம்பர், 1987.

2.1 புணர் வாக்கியம்.

(எ.டு)

இக்காலத்து நாவலாசிரியர் சிலர் முற்காலத்தில் இருந்திருப்பின், காவியப் புலவர்களாக இருந்திருப்பர் அதுபோலவே இக்காலத்துச் சிறுகதை ஆசிரியர்கள் சிலர் பழங்காலத்தில் வாழ்ந்திருப்பின், தனிப்பாட்டுக்கள் பல பாடும் கவிஞர்களாக இருந்திருப்பர்.

2.2 கருத்தொக்க பல இடங்களைத் தொகுத்துக் கூறும் போது:

(எ.டு)

பிறை தொழப்படுதல்,‘‘தொழுது காண் பிறை’’ (குநற். 178);

‘‘மகளிர் உயர்பிறை தொழூஉம்’’ (அகநானூறு. 239);’’

அப்பிறை, பதினெண் கணனு மேத்தவும் படமே’’ (புறநானூறு,9– 10);

‘‘குழவித் திங்கள் இமையவர் ஏத்த’’ (சிலம்பு – 38 – 39).

3.1 சிறு தலைப்பைக் காட்டும்போது:

(எ.டு)

குற்றியலுகரம்:

3.2 நூலின் பகுதியைக் காட்டும்போது:

(எ.டு)

சிலப்பதிகாரம், 2; 38 – 39.

3.3 ஒப்பிட்டுக் காட்ட வரும் பெருங்கூட்டு வாக்கியத்தைப் பிரித்துக் காட்டும் போது:

(எ.டு)

கல்வி வெள்ளத்தாலழியாது; நெருப்பால் வேகாது; திருடரால் திருடப்படாது; பிறர்க்குக் கொடுக்க நிறையும்: செல்வமோ வெள்ளத்தாலழியும்; நெருப்பிலே வேகும்; திருடரால் திருடப்படும்; பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்க குறையும்.

4.1 தலைப்பின் முடிவின் போது.

(எ.டு)

களவியல்.

4.2 வாக்கிய இறுதியின் போது.

(எ.டு)

தமிழில் அடிவரையறையை ஒட்டிப் பாகுபாடு செய்யும் முயற்சி இருந்தது.

4.3 சொல் குறுக்கம்.

(எ.டு)

தொல், சொல்.

236 கி.மு. 700

வினாப் பொருளையும் ஐயப்பொருளையும் காட்ட இக்குறி உதவுகிறது.

வினாக்குறி: அது என்ன?

ஐயக்குறி: அது பாம்பா! இல்லை கயிறா!

கட்டுரையின் போது இடையிடையே படிப்பவரை உட்படுத்திச் சுவைசேர்க்கவும் இக்குறி பயன்படும்.

(எ.டு)

இனி,,,ஒப்புரவறிதல்‛‛ என அதிகாரமிட்ட தெய்வப் புலவர் கருத்து யாது? பரிமேலழகர் கூறிய ‚‚உலக நடையினை அறிந்து செய்தல்'' என்பதில்,,,உலகநடை‛‛ என்னுந் தொடர்க்கு ,,உலகத்தின் நடைபேறு‛‛; என்று பொருள் கொள்ளுதலே வள்ளுவனார் திருவுள்ளத்துக்கு ஏற்றதாகும். என்னை?

வியப்பிடைச் சொல்லுக்குப் பின்பு இக்குறி வரும்.

(எ.டு) ஆகா!

‚‚என்றே இதன் பெருமை!'' என்றான்.

7.1 நேர்க்கூற்று வாக்கியத்தில்,

“நான் நாளை வரமாட்டேன்,” என்றான் முருகன்.

கட்டுரையில் இடையிடையே அழகிய சொற்றொடர்களையும், மரபுத் தொடர்களையும் பயன்படுத்தல் வேண்டும். அவ்வாறு செயின் கட்டுரை படிப்போருக்கு அலுப்பூட்டாது மகிழ்வூட்டும்.

தமிழில் எண்ணற்ற அழகிய சொற்றொடர்கள் உள்ளன மாணாக்கர் அவற்றைத் தொகுத்துத் தாம் எழுதும் கட்டுரையில் பொருத்தமான இடத்தில் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக சில சொற்றொடர்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

முத்தமிழின் இனிமை

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்

ஆற்றொழுக்காய் அருந்தமிழ் உரையாற்றும் அண்ணா

முக்கனியின் சுவை

மரபுத் தொடர்கள் என்பவரை அந்தந்த மொழி பேசும் மக்கள் சமூகத்துக்கு மட்டுமே பொதுவான தொடர்களாகும். பிறமொழி பேசும் மக்கள் சமூகம் இம்மரவுத் தொடர்களைப் புரிந்து கொள்ளுதல் சிரமமானது ஆகும்.

ஆயினும் தமிழில் கட்டுரை எழுதும் மாணாக்கர் தம் கட்டுரையில் நிறைய மரபுத் தொடர்களை ஆளாவிடினும் ஓரிரண்டையாவது பயன்படுத்தலாம்.

பூசி மெழுகினான்

அரிச்சந்திரனுக்கு அடுத்த வீட்டுக்காரன்

சிவலோக பதவி அடைந்தான்

உவமைகள் கருத்தைத் தெளிவு படுத்த உதவும். இடங்கருதி இவைகளைப் பயன்படுத்தினால் நயம் மிகும்.

கடலில் கரைத்த பெருங்காயம் போல

காக்கை உட்காரப் பனம்பழம் வீழ்ந்த கதை போல

அத்திப்பூ பூத்தாற் போல

பசுமரத்தாணி போல

பேய் அறைந்தாற் போல

ஊமை கண்ட கனவு போல

சதையும் நகமும் போல

**பலவகைக் கட்டுரைகள்**

(1) எச்சமயத்தைப் பற்றி எழுதப் போகிறோமோ அச்சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள்.

(2) அச்சமயத்தோடு நெருங்கிய தொடர்புள்ள பிறசமயங்களின் கொள்கைகள்

(3) சமயத்தின் தோற்றம், வளர்ச்சி, இடையீடுகள்

(4) சமயக் குரவர்கள்.

(5) சமய இலக்கியங்கள்

(6) கடவுள் ∴ கடவுள்கள்

(7) வழிபாடு, கோவில், தலங்கள்

(8) புராணங்கள், இதிகாசங்கள்

(9) நாட்டுப்புற நம்பிக்கைகள்

(10) சமயத்தின் செல்வாக்கு.

மேற்கண்ட செய்திகள் அனைத்தும் தொகுத்துக் கண்ட பிறகுதான் கட்டுரை எழுதுதல் வேண்டும்.

சமயக் கட்டுரை எழுதுவதில் உள்ள சிக்கல் சமயத் தொடர்பான சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருதலேயாகும். எடுத்துக்காட்டாக பதி பசு பாசம் என்பதற்கு விளக்கம் தருதல் எளிதன்று. மும்மலங்கள் எவை என்று கூறி விளக்கம் தருதல் எளிதன்று.

ஆகவே சமயக் கருத்துக்களோடு ‘‘சமயமொழியின்’’ கூறுகளையும் கற்று அறிதல் வேண்டும்.

மேலும் இப்பிறவியிலேயே தலவரலாற்றுக் கட்டுரைகளும் அடங்கும். தலம் பற்றிய வரலாறு வரலாற்றுப் பிரிவுகள் அடங்காத எனின் அ∴து அடங்கும் எவ்வாறு எனின் சமயக் கட்டுரையில் சமயக்கருத்துக்கள் அதிகம் எனில் சமயக் கட்டுரையகவும் வரலாற்றுக் கருத்துக்கள் அதிகம் எனில் வரலாற்றுக் கட்டுரையாகவும் கொள்ளப்படும்.

ஞாயிறு, திங்கள், மாமழை முதலிய இயற்கைக் கூறுகளைக் கடவுளாகக் காண்பதும், வழிபடுவதும் பழந்தமிழர் மரபு என்பதைச் சிலப்பதிகாரம் காட்டும். அதைப்போலவே இராமலிங்கரும் பேராளிப் பொருளில், சிற்றம்பலத்தில் நடமாடும் ஒளிப்பிழம்பில் கடவுள் தன்மையைக் காண்கின்றார்.

‘‘அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை’’

என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டார்.

**இலக்கியக் கட்டுரை**

இலக்கியக் கட்டுரை எனும்போது இங்குப் பாராட்டுமுறையில் எழுதும் கட்டுரையே பொருளாகும். இலக்கியம் எது, இலக்கிய வகைகள், இலக்கிய வரலாறு, இலக்கியப் பயன் முதலியன இப்பிரிவுள் அடங்கும். ஓர் இலக்கியத்தைப் பற்றிய கட்டுரைக்கு,

(1) யாப்பு – சந்தம் - உடை இயல்பு

(2) இலக்கிய நயம்.

(3) சொல் நயம்.

(4) கற்பனை நயம், அணிநலம்.

(5) உவமை, உருவகம் முதலிய அணிகள்.

(6) நடை நலம்.

(7) சொல்லியிருக்கும் முறை.

(8) நோக்கு.

ஆகிய செய்திகள் பற்றிய அறிவு வேண்டும்.

இலக்கியக் கட்டுரை எனும்போது ‘‘திருக்குறள் பற்றிய பொது அறிமுகக் கட்டுரை’’,‘‘புதுக்கவிதை – ஒரு பார்வை’’ என்பது போல்தான் அமையும்,‘‘திருக்குறளின்பொதுவுடைமைக் கருத்துக்களும் காரல் மார்க்ஸ்ஸின் கம்யூனிசமும்’’ – என அமைப்பது ஒப்பீட்டுத் திறனாய்வுக் கட்டுரை ஆகும்.

எனவே இலக்கியம் பற்றிய பொது அறிமுகம், சொல்லாட்சித்திறன், நயமுரைத்தல், புதுப்பொருள் உரைத்தல் ஆகியனவே இப்பிரிவுள் அடங்கும்.

வரலாற்று நோக்கில் இலக்கிய வகைகளின் தோற்றமும் - வளர்ச்சியும் என்பதும் இப்பிரிவுள் அடங்கும். எடுத்துக்காட்டாகத் ‘‘தூது இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்’’ எனக் கட்டுரை எழுதலாம். தொல்காப்பியர் கூறும் ‘‘ஆற்றிடைக் காட்சி உறழத்தோன்றிய’’ எனும் நூற்பாவில் இருந்து இன்று வந்துள்ள தூது நூல்கள் வரை ஆய்வு செய்து எழுதலாம்.

மேலும் தொகுத்தும் பகுத்தும் தருவதும் இப்பிரிவுக்குள் அடங்கும்,‘‘தமிழ் நாவல்கள் தொகுப்பும் பகுப்பும்’’ எனும் தலைப்பில் இதுவரை வந்துள்ள நாவல்களைத் தொகுத்து அவற்றை வரலாற்று நாவல்கள், சமூக நாவல்கள், துப்பறியும் நாவல்கள், பொழுதுபோக்கு நாவல்கள் என வகைப்படுத்திக் காட்டலாம்.

## சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. தமிழரின் தனிப்பெரும் செல்வம். தேனிலே சேர்த்திழைந்த தித்திக்கும் தீஞ்சொல்லால், சீர்மையுடன், இனிமையுடன், எளிமையுடன், செறிவுடன் அமைந்தது. தமிழகத்தின் எம்மருங்கும், யாவராலும், போற்றிக்கொள்ளப்படும். ஒப்பற்ற உயர்தனிக் காப்பியம் இது. தன் சுவைநயத்தால் சிலப்பதிகாரம் தமிழர் தம் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட பான்மையினைப் பாரதியார்,

''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்
மணியாரம் படைத்த தமிழ்நாடு''.

என்று பாடுகின்றார். இந்நூல் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவப்பெற்றதால் முத்தமிழ்க் காப்பியம் என்றும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் வழங்கப்படுகின்றது. இக்கட்டுரையில் சிலப்பதிகாரம் எழுந்த காரணம், நூலின் அமைப்பு, நூலின் சிறப்புப் பற்றிக் காண்போம்.

## நூலின் சிறப்பு

அரங்கேற்றுக் காதையில் வரும் செய்திகளால், ஆடலாசிரியன், இசையாசிரியன், கவிஞன், தண்ணுமையாசிரியன் குலாசிரியன் என்போர் இயல்புகளை அறிய முடிகின்றது. இந்திரவிழவூரெடுத்த காதையில் காவிரிபூம்பட்டினத்தின் சிறப்பையெல்லாம் அறிகின்றோம். கானல் வரியில் தமிழின் விழுமிய பெற்றினை எடுத்து விளக்கும் பல அழகிய பாடல்கள் அமைந்துள்ளன. கானல் வரிப்பாடல் கோவலனின் வாழ்வில் முக்கியத் திருப்பு முனையாக விளங்குகிறது.

''தம்முடைய தண்ணளியும் தாமுந்தம் மான்றேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்
அம்மென் இணர அரும்புகாள்! அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்:''

என்று தலைவியின் கூற்றாய் அமைந்த பாடல் இதற்குத் தக்க சான்றாகும்.

இந்திரவிழவூரெடுத்த காதை, கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என்பவற்றில் முறையே மருதம், நெய்தல், பாலை, முல்லை, குறிஞ்சி ஆகிய திணைகளும், கூத்து பாட்டு விழா முதலிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. வஞ்சிக்காண்டம் தமிழர் தம் புறத்திணைக்குரிய செய்திகளான காட்சி, கால் கோள், நீர்ப்படை, நடுகள் முதலியவற்றைப் புலப்படுத்தி நிற்கின்றது.

## திறனாய்வுக் கட்டுரை

இன்று இலக்கியக் கல்வி என்பதே திறனாய்வுக் கல்வியாகத்தான் இருக்கிறது. எனவே இலக்கியம் படிக்கும் மாணாக்கர் திறனாய்வுத் துறையிலும் வல்லுநராக இருத்தல் அவசியமாகிறது.

இலக்கியத் திறனாய்வுக் கட்டுரை எழுதப் புகும்முன் எம்முறைத் திறனாய்வைக் கையாளப் போகின்றோம் என்பதை மாணாக்கர் முடிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

1. விளக்கமுறைத் திறனாய்வு
2. உளவியல் முறைத் திறனாய்வு
3. சமூகவியல் முறைத் திறனாய்வு
4. வரலாற்று முறைத் திறனாய்வு
5. ஒப்பீட்டுத் திறனாய்வு
6. மூலபாடத் திறனாய்வு
7. விதிமுறைத் திறனாய்வு
8. மார்க்கியத் திறனாய்வு

முதலிய ஏதேனும் ஒரு முறையை மாணாக்கர் முன்னரே தேர்ந்தெடுத்துக் கொள்ளல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, மார்க்சிய நோக்கில் தி ஜானகிராமனின் படைப்புகள் என்று கட்டுரை எழுத வேண்டியிருந்தால், முதலில் மார்க்ஸியக் கோட்பாடுகளை மாணாக்கர் கற்று அறிய வேண்டும். மார்க்ஸியக் கோட்பாடுகளை இலக்கியங்களில் எப்படிப் புகுத்தித் திறனாய்வது என்று அறிய வேண்டும். பின்னர் ஜானகிராமனின் படைப்புகள் மார்க்ஸியக் கோட்பாட்டுக்கு ஒத்துப் போகின்றதா அல்லது முரண்படுகிறதா எனக் காணல் வேண்டும். முடிவினை உண்மையாகத் துணிந்து கூறவேண்டும்.

திறனாய்வு என்பது இன்று அறிவியலின் ஒரு துறையாகவே இருக்கிறது. அறிவியல் மனப்பாங்குடன் செய்யும் திறனாய்வு சிறக்கும். முடிவுகள் எப்போதும் எவராலும் எங்கும் சரிபார்த்து அறியக்கூடிய விதத்தில் அமையும். மாணாக்கர்கள் கீழ்கண்ட நூல்களைப் பார்க்க வேண்டும்.

1. இலக்கியத் திறனாய்வு - சி.அ. மறைமலை
2. இலக்கியத் திறனாய்வியல் - தா.ஏ. ஞானமூர்த்தி
3. இலக்கியமும் திறனாய்வும் - க. கைலாசபதி
4. இலக்கியத்திறன் - டாக்டர். மு.வ

இந்நூல்கள் ஒரு இலக்கியத்தை எப்படித் திறனாய்வு நோக்கில் அணுக வேண்டும் என்பதைச் சொல்கின்றன. இந்நூல்களை பயின்றபின் திறனாய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல்களைப் பயில வேண்டும்.

ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்

நாவல் திறனாய்வு

(நாவல் ஆசிரியர்: தமிழவன்)

நவீன நாவல் எழுத்து ஐரோப்பாவில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்டது. ஜேம்ஸ் ஜாய்ஸ் (ஆங்கில எழுத்தாளர்), மார்ஸல் புரூஸ் (பிரெஞ்ச் எழுத்தாளர்) ப்ரான்ஸ் காப்கா (ஜெர்மன் எழுத்தாளர்) ஆகிய மூவரே நாவல் என்பது நவீனமாவதற்குக் காரணமானவர்கள். நாவலில் இன்னும் மொழிரீதியான பரிசோதனைகளைச் செய்து பார்த்தவர்களாக ஹெர்மன் ப்ரோக்ஸ் மற்றும் ராபர்ட் ம்யுசில் ஆகியோரைச் சேர்த்துக் கொள்ளலாம். இவர்கள் கொண்டு வந்த மாற்றம் இதுதான்.

நாவல் திட்டவட்டமாக வேறு எதையும் கூறத்தேவை இல்லை. நாவல் என்பது கதை சொல்வதற்கான ஓர் உத்தி. இதுதான் நவீன நாவல் பற்றிய கருத்து.

17, 18 ஆம் நூற்றாண்டுகளில் நாவல் என்ற வடிவம் ஐரோப்பாவில் தொடங்கி காலத்தில் முக்கியமான எழுத்தாளர்கள் பலர் இவ்விதத்திலேயே செயல்பட்டார்கள். இவர்கள் கதை சொல்லுதல் என்ற இடத்தில் இருந்துதான் தொடங்குகிறார்கள். இவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த ஐரோப்பியர் சமுதாயம் பெரும்மாற்றங்களை அடைந்தபோது, கதை சொல்லுபவன் காணாமல் போனான். அதை இவர்கள் எழுத்தால் ஈடு செய்தார்கள்.

பொதுவாகத் தொல்கதைகள் இயற்கையையும் கலாச்சாரத்தையும் இணைக்கின்றன என்று க்ளாட் லெவிஸ்ட்ராஸ் என்கிற பிரெஞ்சு அறிஞர் கூறுகிறார். தொல்கதைகளில் இயற்கையின் அம்சங்களான விலங்குகள், பறவைகள், தாவரங்கள் மனிதர்கள், ஆகியவை பல்வேறு வடிவுகளுக்கு மாறுகிறார்கள். மனிதர்கள் வனதேவதையுடன் நட்புக் கொள்கிறார்கள்.

எந்த ஒரு கலாச்சாரமும் தொல்கதை போன்ற வரலாற்றைத் தனக்கே கதையாகச் சொல்லிக் கொள்வதுண்டு. அந்த கலாச்சாரத்தின் கூட்டுமானத்தை வெளிக்காட்டுவதாக அக்கதை அமைந்து விடுகின்றது.

அதுபோலவே தன்னிடமுள்ள கதையையும் மீண்டும் ஒரு கலாச்சாரம் சொல்லிப் பார்ப்பதும் உண்டு. சான்றாக, லத்தீன் அமெரிக்க எழுத்தாளரான ஜோர்ஜ்லூயி போர்ஹேவின் சிறு கதையில் வரும் நாயகன் ஏற்கனவே, மிகைல்

செர்வாண்ட்ஸ் எழுதிய டான் கெஹாட்டேவின் கதையை எழுதிப் பார்க்கிறான். வார்த்தைக்கு வார்த்தை அச்சாக இருக்கும் அந்தக் கதை அவனுக்குப் புதிய அர்த்தத்தைக் கொடுக்கிறது. லத்தீன் அமெரிக்காவின் இலக்கிய வரலாறே மீண்டும் செர்வாண்டஸின் கதையை திருப்பி எழுதுவதுதான் என்பதாக இங்கு உணர்த்தப்படுகிறது. இப்படி ஏற்கனவே நமக்குத் தெரிந்த (சொல்லப்பட்ட) தமிழ்நாட்டு இந்திய மனிதனின் கதையைத்தான் இங்குப் படிக்கப்போகிறோம். இவர்களை நீங்கள் மன அளவில் மற்றும் எழுத்தளவில் நமது கலாச்சாரத்தில் எங்கோ சந்தித்திருக்கலாம் இப்படிச் சந்தித்த பல பாத்திரங்கள் இங்கு வருகிறார்கள். ஜானுடைய கனவில் முத்துப்பிள்ளைவெளவாலாய்த் தொங்குகிறார். கன்னி மாரியின் வீட்டில் உள்ள விசித்திர செம்புக்குக் கட்டுப்பட்டவராய் இருக்கிறார். ராசப்பன்.... ஜானின் ஆண்குறியைப் பார்க்காத சிறுமியின் கற்பு புகழுக்குரியதாகிறது. கிராமத்தின் எல்லையோரத்தில் வாழும் கறுப்பு ஜனங்களின் ஆவி புராதனக் குடிமகனான முத்துப்பிள்ளையின் ஆவியுடன் இணைகிறது... கர்ப்பிணி ஒருத்திக்கு குழந்தை பிறப்பதற்காக ஜோக் அடிக்கிறார்கள்... அந்த கிராமமே கனவுகளின் செழிப்பில் லயித்து நாள் கணக்கில் சிரித்துக் கொண்டிருக்கிறது. மீசைக்காரனான ஒரு கம்யூனிஸ்ட் மனம் வெம்பித் தான் சாரைப் பாம்பின் ஜாதி எனக் கூறி, ஒரு நாள் குளத்தில் பிணமாக மிதக்கிறான்... மலைகளுக்கப்பால் ஆட்சி செய்யும் மனிதர்கள் தேர்தலின் போது கழுத்தில் பட்டையுடன் புகழ்பாடி ஜயஸ்தம்பம் நாட்ட விழைக்கிறார்கள்.

எல்லைப்புற ஜனங்கள் செய்யும் புரட்சியில் ரத்தப்பலி கொடுக்கப்படுகிறது. அப்போது முத்துமாரியைக் கிழிந்த சட்டைக்காரர்கள் சங்கிலியில் பிணைத்து சாட்டையால் அடிக்கிறார்கள். ஜானின் தாத்தாவோ சீட்டு விளையாடிக் கொண்டிருக்கிறார். ஊர் ஜனங்கள் மறதியால் பிடிக்கப்பட்டு ராசப்பனைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். லதாவும் வாத்தியாரும் ஒருவர் வாயை ஒருவர் பொத்திக் கொள்கிறார்கள்.

நாவலின் பாத்திரங்கள் திடீரென்று நுழைந்து திடீரென்று காணாமல் போகிறார்கள். தேரையாகவோ, வெளவாலாகவோ, மரமாகவோ, ஓணானாகவோ ஆகிவிடுகிறார்கள். சிலர் காலத்தைத் தாண்டி வாழ்ந்து கொண்டு தமது உறுப்புகளில் அருவருக்கத்தக்க மாற்றங்களை அடைந்து விடுகிறார்கள் இப்படியிப்படி.

இந்த நாவலின் களம் இடரீதியானது. எனவே பிற தமிழ் நாவல்களைப்போல ஒரே, நேர்க்கோட்டில் செல்லாமல், முக்காலங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு குழம்பிச் செல்கிறது. கதை சொல்பவரும், கதை சொல்லும்

முறையில் ஏகப்பட்ட மாற்றங்களை நிகழ்த்திக் கொண்டே போகிறார். நாவல் பல தளங்களில் விரியும்போது கதைக்குள், கதைக்குள் கதையாக அது விரைகிறது.

நாவலில் கையாளப்படும் நூற்றுக்கணக்கான உபமானங்களும் முழுக்க முழுக்க இடரீதியானவைதான் (மனமாகிய பாலைவனம், காலமாகிய பேரண்டப்பட்சி, கோபமாகிய ராஜநாகம்).

இவ்வாறாகச் செல்லும் நாவல் மொழித்திமிர் ஜாதிவம்சத்திமிர், தேர்தல், அரசியல், மதம், காதல், கம்யூனிசம், புரட்சி, வர்க்கப்பலி, தேசிய மெத்தனம் என்று எதை வேண்டுமானாலும் தொட்டுவிட்டுத் தாவித்தாவிச் செல்கிறது. இதில் எது ஒன்றும் நாவலின் (Theme)என்ற அந்தஸ்தைப் பெற முடியாது. ஏனென்றால் நாவல் என்பது ஒரு கதம்ப உரைநடை, நவீன இசை, ஓவியத்தைப் போல இதில் பல முகங்கள் மூலம் பல குரல்கள் கேட்கின்றன. கலாச்சாரத்தில் இன்று ஒலித்துக்கொண்டு இருக்கும் அதீதமான குரல்களே அவை, அவற்றில் எதை வேண்டுமானாலும் பற்றிக் கொண்டு ஒரு வாசகன் தனக்கான இலக்கை அடையலாம்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று ஒரு பழமொழி வழக்கில் உண்டு. ஆனால் இன்று நிலை மாறிவிட்டது. திருமணங்கள் வரதட்சணையால் நிச்சயிக்கப்படுகின்றன. மருத்துவராக இருக்கும் மாப்பிள்ளைக்கு ஒரு இலட்சம், பொறியியலாளராக இருக்கும் மாப்பிள்ளைக்கு 75 ஆயிரம்; கல்லூரி விரிவுரையாளர் எனில் 50ஆயிரம் என மாப்பிள்ளைகளுக்குக் கணக்குப் பார்த்து பணம் தரவேண்டியதாக உள்ளது. இவ்வரதட்சணையால் ஏற்படும் கொடுமைகளை இனிக் காண்போம்.

வரதட்சணைச் சிக்கலினால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் மத்தியதர வகுப்பினரே. பணக்காரர்களுக்கு இதனால் பாதிப்பேதும் இல்லை தொகை ஒரு பணக்காரரிடம் இருந்து இன்னொரு பணக்காரருக்கு இடம் மாறுகிறது. அதில் வெள்ளையில் பாதி; கருப்பில் பாதி! இதனால் இழப்பு இருவருக்கும் இல்லை. வரதட்சணைக் கொடுப்பவர் லாபத்தில் இழப்பும் வாங்குபவர் லாபத்துடன் இதுவொரு லாபமாக அடைகின்றார்.

பெரும்பாலும் பள்ளி ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், சிறிய கடை முதலாளிகள் என்றோரைக் கொண்டது மத்தியதர வகுப்பு குடும்பமாகும். மேலும் இக்குடும்பங்கள் கூட்டுக்குடும்ப முறையில் வாழ்கின்றன. இவர்கள் வாங்கும் ஊதியம் அன்றன்றைய சாப்பாட்டுக்கே சரியாகி விடுகிறது. சேமிப்பு என்பது இவர்களுக்குக் கனவாய் போய் விடுகிறது. அலுவலகங்களில் அனைத்து வேலைகளையும் இவர்களே செய்வதால் இவர்கள் மிகவும் (Tension) அடைகிறார்கள். தம் மிகை உணர்ச்சிகளை

வடிகாலாக்குவதற்கு வேறு வழி இல்லாததால், பல பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இதுவே இவ்வகுப்புக் குடும்பங்களின் நிலை.

இன்றைக்குத் திருமணம் என்பது ஏதோ வியாபாரத்துக்கு மாடுபிடிப்பதுபோல சந்தை விஷயமாகிவிட்டது. பஜ்ஜியும் காபியும் சாப்பிட்டுவிட்டு, பெண்ணின் கழுத்து அழகாக இருக்கிறதே; பத்துப் பவுன் சங்கிலி போடுவீர்கள் அல்லவா? என்பதாகவே திருமண முன்னேற்பாடுகள் அமைகின்றன. பெண்களின் விருப்பத்தை யாரும் கேட்பதில்லை. அவளுக்கு மனசு இருப்பதாகவே யாரும் நினைப்பதில்லை, பேரங்கள் பேசி முடிக்கப்பட்டுவிட்டால், பெண் மணப்பெண்ணாகித் தலையை நீட்ட வேண்டியதுதான்.

செம்புலப்பெயல் நீர்போல அன்புடைய நெஞ்சம் கலக்கும் காதல் வாழ்க்கை இப்போது மிகவும் குறைவாகி விட்டது. காரணம் பொருளாதாரச் சிக்கலே வீட்டினரைப் பகைத்துக் கொண்டு வேறாகக் காதலனுடன் காலியுடன் வாழ்வது என்பது இன்றைக்கு மிகவும் சிக்கலாகி விட்டது. எனவே கணக்குப் பார்க்கும் காதலே அதிகமாகிவிட்டது. உண்மைக் காதல் விதிவிலக்காகி விட்டது.

இந்த சூழ்நிலைகளை உட்கொண்ட இனி வரதட்சணைக் கொடுமையை நோக்குவோம். திருமணம் செய்துதான் ஆகவேண்டுமா? இக்கேள்விக்கு விடை சொல்வது எளிதன்று. ஆனால் படிப்பறிவோ பொருளாதார உரிமையோ இல்லாத பெண் 18 வயது வரை தாய் தந்தையருடன் வாழ்கிறாள். அவளுடைய வாழ்க்கையில் திருமணம் என்பதே திருப்பமாக அமைகின்றது. புதிய சூழலில், புதியவர்களோடு வாழத் தொடங்குகிறாள். 42 ஆண்டுகள் தன் கணவன், தம் குழந்தைகள் என வாழ்கிறாள். படிப்பறிவு இருப்பின் அவள் வேலைக்குச் செல்வாள். புதிய வாழ்க்கைமுறை அவளுக்குக் கிட்டும். பொருளாதார உரிமை இருப்பின் காலம் முழுமையும் அவள் திருமணம் இன்றி வாழக்கூடும். ஆனால் இரண்டுமே பெற்றிராத பெண்களுக்குப் புதுத்திருப்பமாக அமைவது இப்போது திருமணம் மட்டுமே!

திருமணம் எனும் திருப்பத்திற்காகப் பெண்கள் 18 வயது முதல் காத்திருக்கின்றனர். மனசுக்குள் ஓராயிரம் கற்பனைகளோடு காத்திருக்கின்றனர். உரிமையற்ற அவர்கள் வாழ்வில் கற்பனைக்கு இடமேது?

‘‘விழிகள்
நட்சத்திரங்களோடு
உறவாடினாலும்
விரல்கள் என்னவோ
சன்னல் கம்பிகளோடுதான்’’

இதுதான் பெண்களில் எல்லை. கம்பிகளை உடைத்து நட்சத்திரத்தைப் பிடிக்க முடியாத நிலை. தந்தையாலோ அண்ணனாலோ மிகுந்த தொகையை வரதட்சணையாகக் கொடுக்க இயலாத நிலையில் வயதானவர்களுக்கு இரண்டாந்தாரமாகக் கொடுக்கப்படுகிறார்கள்; அல்லது மிகக்குறைந்த வருவாய் உள்ளவனுக்குத் திருமணம் செய்துவைக்கிறார்கள்.

எதுவுமே செய்ய வழியில்லாத நிலையில் 25, 30 என்று வயதாகும் வரை காத்திருக்கின்றனர் பெண்கள் ''முதிர் கன்னிகள்'' எனும் சொற்றொடர் தரும் வேதனை நெஞ்சைப் பிழிகிறது.

''முதிர் கன்னிகள்'' எனும் சொற்றொடர் தரும் வேதனை நெஞ்சைப் பிழிகிறது. எப்படியோ சரிகட்டித் திருமணம் நடந்துவிடுகிறது. பெண் புகுந்த வீட்டில் வாழ்கிறாள். அங்குமட்டும் அவளுக்கு வாழ்க்கை இனிக்கிறதா என்ன? போட்டு வந்த நகைகள் பொன்னால் ஆனதுதானா என்ற சோதனை; குறைவாக வரதட்சிணை கொடுத்து இருந்தால் குத்தலாகப் பேச்சு; போய் இன்னும் வாங்கி வா என்னும் விரட்டல்; இப்படி புகுந்த வீட்டிலும் வாழ்வு நரகமாகவே அமைகிறது பெண்களுக்கு!.

வரதட்சணைக் கொடுமையின் உச்சக்கட்டமாக நாம் ''ஸ்டவ் வெடிப்பது'' என்பதைத்தான் சொல்ல முடியும். மருமகளைக் கொன்று விட்டால், மகனுக்கு இன்னொரு பெண் பார்க்கலாம்; அதனால் இன்னொரு முறை வரதட்சணையாகப் பெருந்தொகை கிடைக்கும் என்ற ஆசையில் மாமியார், மாமனார், கணவன் மூவரும் கூட்டு சேர்ந்து ''மருமகளை'' எரித்துவிடுகின்றனர். கடந்த சில ஆண்டுகளில் ''ஸ்டவ் வெடிப்பு'' சம்பவங்கள் அதிகமாகி உள்ளன.

தனக்குத் திருமணம் செய்து கொடுக்கப் பெற்றோர் பட்ட துன்பங்களை நினைத்துத் தனக்குப் பெண் குழந்தையே வேண்டாம் என நினைக்கிறாள் மனைவியாகிய பெண். அப்படியும் மீறி இயற்கையின் விதியால் பெண் குழந்தை பிறந்தால் பிறந்த நிமிடத்திலேயே அப்பெண் குழந்தையைக் கொன்று விடுகிறாள். சிசுக்கொலையும் சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. நகரங்களில் வசிக்கும் பலர் 2 ½ மாதக்கருவாக இருக்கும்போதே என்ன குழந்தை என்பதை மருத்துவமனையில் சோதனை செய்து அறிந்து கொள்கின்றனர்; பெண் எனில் உடனேயே கருக்கலைப்பு செய்கின்றனர்.

வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் குற்றம் என அரசு சட்டம் போட்டிருக்கிறது. ஆனால் சட்டம் மட்டுமே இச்சிக்கலைத் தீர்த்துவிடாது. மக்களின் மனதில் ஒரு மாறுதல் வரவேண்டும். காதல் திருமணங்களுக்குச் சமூகத்தில் அங்கீகாரம் வரவேண்டும். காதலித்துத் திருமணங்கள் செய்து கொள்வோருக்கு அரசு உதவ வேண்டும். மேலாக, வரதட்சணை வாங்க மாட்டேன் என்று ஆண்களும்

வரதட்சணை கேட்பவனைத் திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று பெண்களும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

கட்டிலறைக்கும் சமையலறைக்கும் ஓடிஓடியே பெண்களுக்கு வாழ்க்கை அலுத்து விடுகின்றது. இந்நிலை மாற வேண்டும். ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் அனைவருக்கும் கல்வியறிவும் தொழிலறிவும் கற்றுத்தரப்பட வேண்டும். தனியாக வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் துணைவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெண்களே பெற வேண்டும்.

**இலக்கணக் கட்டுரை**

இலக்கணக் கட்டுரை எழுதுதல் இருவகையில் அமையும். ஒன்று இலக்கண நூல்களைப் பற்றிய கட்டுரை, மற்றொன்று இலக்கணக் கூறுகளைப் பற்றிய கட்டுரை.

(அ). இலக்கண நூல்கள் பற்றிய கட்டுரைக்கு.

1. நூல் எழுதப்பட்ட காலம்.
2. நூலின் நாவல் பொருள்
3. முந்தைய இலக்கண மரபில் இருந்து மாறுபடும் தன்மை.
4. விதிமுறை இலக்கணமா? விளக்க முறை இலக்கணமா?
5. அந்த நூலின் செல்வாக்கு.

(ஆ). இலக்கணக் கூறுகள் பற்றிய கட்டுரைக்கு.

1. சான்றுகளைத் திரட்டல்; நூல்களில், மக்கள் பேச்சு வழக்கில் கல்வெட்டில், சுவடிகளில் இருந்து திரட்டல்.
2. சான்றுகளைத் தொகுத்துப் பகுத்து ஆய்தல்.
3. ஆய்வு ஆடிவைத் தெளிவாக்குதல்.

சான்றாகக் கள் - பன்மை விகுதி – ஓர் ஆய்வு என எடுத்துக் கொண்டால் தொல்காப்பியர் - கள் பற்றிக் கூறுவது, அவர் கூறியதற்கு மாறாக திருக்குறளில் - கள் விகுதி உயர்திணைப் பன்மைக்கு வருவது, இன்றைய வழக்கில் கூடுதல் பன்மை விகுதியாக வருவது போன்ற தரவுகளைத் திரட்டிப் பகுத்து ஆய்ந்து கட்டுரையை எழுதுதல் வேண்டும்.

இலக்கணம் என்பது மொழியை வரம்பிட்டுக் காக்க எனினும் மொழி மாற்றத்திற்குள்ளாகும்போதெல்லாம் இலக்கணமும் மாற்றத்திற்குள்ளாகும். இதனை மாணாக்கர் உணரல் வேண்டும்.

## மொழி நடை

தொல்காப்பியர் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தம் நூலை யாத்திருந்தாலும் இன்றைய மொழியியல் அடிப்படையில் தம் நூலை அமைத்திருப்பது மிகவும் வியப்பிற்குரியதாகும். எழுத்ததிகாரத்தைத் தொடரிலக்கண ஆய்வு முறையிலும், வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்ட வேற்றுமையிலக்கண முறையிலும் தொல்காப்பியர் அமைத்துள்ளார். ஏகாதிபத்தியத்தின் மேல்நிலை அலகுகள் வேற்றுமைப் பொருளிலும் அவ்வழிப்பொருளிலும் வரும் தொடர்களே ஆகும். பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் அவற்றின் இடைநிலை அலகுகளாம் சொல்லதிகாரத்துள் கிளவியாக்கம், கீழ்நிலை அலகுகளாம் சொல்லதிகாரத்துள் கிளவியாக்கம், வேற்றுமையில், வேற்றுமை மயங்கியல்விளிமரபு ஆகியவை தொடரியலுக்கும் பெயரியல், வினையியல், இடையியல் ஆகியவை சொல்லியலுக்கும் உரியியல் பொருளியலுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்றன. பொருளதிகாரம் தமிழுக்கே உரித்தானதாகும்.

## அறிவியல் கட்டுரை

இன்றைய அறிவியல் வளர்ச்சி அளவிடற்கரியதாகும். சந்திரனில் கால்பதித்த மனிதன் செவ்வாய் முதலிய பிற கிரகங்களிலும் கால்பதிக்க முயல்கின்றான். இயந்திர மனிதனை தாம் செய்யும் வேலைகள் அனைத்தையும் அவ்வியந்திரங்களை உற்பத்திச் செய்து செய்ய வைக்கிறான். சமுதாய முன்னேற்றத்திற்குத்தான் அறிவியல் பயன்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கக் கூடாது.

அறிவியல் வளர்ச்சியியை வரலாற்று ரீதியில் அமைத்துக் கட்டுரையை எழுதக் கீழ்க்கண்ட செய்திகளைச் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

1. மனித குல வரலாற்றில் கலை, அறிவியலின் மூலாதாரங்கள்.
2. சமயம் அறிவியல் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது.
3. முதல் அறிவியல் அறிஞர்கள் சமயவாதிகளால் துன்புறுத்தப்பட்டனர் என்ற செய்திகள்.
4. உற்பத்தியும் நுகர்வும் அறிவியலை வளர்த்தது.
5. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சி, நீராவி, எஞ்சின், நூற்பு எந்திரம், இரும்புத் தொழிற்சாலை, நிலக்கரி சுரங்கம் ஆகியவற்றை வளர்த்தது.
6. தமிழகத்தில் காலனிய ஆதிக்கத்தால் அறிவியல் இறக்குமதி செய்யப்பட்டது.

7. அறிவியல் இன்று அழிவுச் சக்திக்கும் பயன்படுவது. இனி ஒரு அறிவியல் கண்டுபிடிப்பின் வரலாறையோ அல்லது தொழில் நுட்பச் செய்தியினையோ எழுதப் புகுவோர் சேகரிக்க வேண்டிய செய்திகள்.

1. அந்த அறிவியல் கண்டுபிடிப்பு ஏற்படக் காரணங்கள்.
2. அக் கண்டுபிடிப்போடு தொடர்புடைய பிற கண்டுபிடிப்புகள்.
3. கண்டுபிடித்த விஞ்ஞானி, அவரின் உழைப்பு.
4. காலந்தோறும் அக்கண்டுபிடிப்பு வளர்ந்து வரும் விதம்.
5. மாறுபட்ட விதிகள், கருத்துக்கள்.
6. அக்கண்டுபிடிப்பால் மனித சமூகத்திற்கு ஏற்படும் ஆக்க அழிவு விளைவுகள்.

**அறிவியல் தமிழ் நடை**

அறிவியல் கட்டுரைக்கென தனிவகைத் தமிழ் நடையைப் பின்பற்ற வேண்டும். வழக்கமான இலக்கிய நடை உதவாது.

1. இலக்கியத்துக்கு உணர்ச்சி பூர்வமான நடை இருக்கலாம் ஆனால் அறிவியலுக்கு கருத்து ரீதியான விளக்க தடையே உதவும்.
2. அறிவியலில் கருத்துக்கே முதலிடம்.
3. சிறிய தொடர்களில், நேரிடையாகப் பொருளைச் சொல்ல வேண்டும்.
4. தமிழ்க் கலைச்சொற்களுக்குப் பக்கத்திலேயே அடைப்புக் குறிகள் ஆங்கிலச் சொல்லை தரவேண்டும்.

**நல்ல அறிவியலின் கட்டுரைகள்**

மாணாக்கர் இன்று வருகின்ற கலைக்கதிர், விஞ்ஞானச்சுடர், கூரியர் போன்ற அறிவியல் இதழ்களைப் படிக்க வேண்டும். மேலும் தினமணி இதழில் வருகின்ற அறிவியல் கட்டுரைகளையும் படிக்க வேண்டும். அப்போதுதான் அன்றன்றைய அறிவியல் வளர்ச்சி பற்றிய அறிவு கிடைக்கும்.

வானொலியில் ஒலிபரப்பாகும் அறிவியல் நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் அறிவியல் நிகழ்ச்சிகளையும் கேட்க வேண்டும்.

பொ.நா. அப்புஸ்வாமி, ஆர்.கே. விசுவநாதன், என்.கே. இராமச்சந்திரன், சுஜாதா போன்றோரின் எளிய தமிழில் அமைந்த அறிவியல் நூல்களைப் படித்து இயன்றால் குறிப்பெடுத்து வைத்துக் கொள்ளலாம்.

**கட்டுரை அமைப்பு**

செய்திக் கதைகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளில் தகவல்களை வழங்குவதற்கு பத்திரிகையில் உள்ள கட்டுரை கட்டமைப்புகள் பல்வேறு வடிவங்களை உள்ளடக்கியது. இந்த கட்டமைப்புகள் ஒரு எழுத்தாளரின் வேண்டுமென்றே

விருப்பத்தை மட்டுமல்ல, தலையங்க வழிகாட்டுதல்கள் அல்லது கதையின் உள்ளார்ந்த கோரிக்கைகளுக்கான பதிலையும் பிரதிபலிக்கின்றன.

சில எழுத்தாளர்கள் இந்த கட்டமைப்புகளை உணர்வுபூர்வமாக கடைபிடிக்கவில்லை என்றாலும், அவர்கள் பெரும்பாலும் தங்கள் எழுத்து செயல்முறையுடன் பின்னோக்கிச் சீரமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மாறாக, மற்றவர்கள் தங்கள் கதை உருவாகும்போது உணர்வுபூர்வமாக ஒரு பாணியைப் பின்பற்றலாம் அல்லது வெளியீட்டாளர் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் முன் வரையறுக்கப்பட்ட கட்டமைப்புகளை கடைபிடிக்கலாம்.

**பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதத் துண்டுதல்**

- அறிமுகம்
- ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுப்பது
- 400 தலைப்புகள் எழுதுதல்
- 50 வாதக் கட்டுரைத் தலைப்புகள்
- 100 தூண்டக்கூடிய கட்டுரை தலைப்புகள்
- ஒரு அறிமுகம் எழுதுதல்
- கட்டமைப்பு மற்றும் அவுட்லைனிங்
- கட்டுரைகளின் வகைகள்
- திருத்துதல் மற்றும் மேம்படுத்துதல்
- ஆறு தூண்டுதல் கட்டுரை தலைப்புகளின் விளக்கப்படம்
- சிந்தனைகோ

வற்புறுத்தும் கட்டுரைகள் வாதக் கட்டுரைகள் போன்றது , ஆனால் அவை கொஞ்சம் கனிவாகவும் மென்மையாகவும் இருக்கும். வாதக் கட்டுரைகள் நீங்கள் ஒரு மாற்று பார்வையைப் பற்றி விவாதிக்கவும் தாக்கவும் வேண்டும், அதே சமயம் வற்புறுத்தும் கட்டுரைகள் உங்களிடம் நம்பக்கூடிய வாதம் இருப்பதாக வாசகரை நம்ப வைக்க முயற்சிக்கின்றன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நீங்கள் ஒரு வக்கீல், எதிரி அல்ல.

வற்புறுத்தும் கட்டுரையை எழுதுவதற்கு, உங்கள் வாசகர்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் ஒரு தலைப்பை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு விஷயத்தில் தீர்வு காண்பதற்கு முன், வலுவான மற்றும் மிகவும் ஈர்க்கக்கூடிய வாதத்தை உருவாக்க உதவும் ஒன்றைக் கண்டறிய சில விருப்பங்களை ஆராயவும்.

உங்கள் மூளைச்சலவை செயல்முறையைத் தூண்டுவதற்கான சாத்தியமான தூண்டுதல் கட்டுரை தலைப்புகளின் பட்டியல் கீழே உள்ளது. இந்தப்

பட்டியலிலிருந்து ஒரு தலைப்பை நீங்கள் தேர்வு செய்யலாம் அல்லது உங்கள் சொந்த யோசனையை உருவாக்க உத்வேகமாக அதைப் பயன்படுத்தலாம்.

ஒரு தூண்டுதல் கட்டுரையின் முக்கிய கூறுகள் வற்புறுத்தும் பேச்சு தலைப்புகளின் பட்டியலைப் பார்க்கும் வகுப்பறையில் மாணவர்களின் வற்புறுத்தும் பேச்சு தேர்ச்சிக்கான ஈர்க்கும் தலைப்புகள்

**அறிமுகம்:** இது உங்கள் கட்டுரையின் தொடக்கப் பத்தி. இது வாசகரின் கவனத்தை ஈர்க்கப் பயன்படும் ஹூக் மற்றும் அடுத்த பகுதியில் நீங்கள் விளக்கும் ஆய்வறிக்கை அல்லது வாதம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது .

**உடல்:** இது உங்கள் கட்டுரையின் இதயம், பொதுவாக மூன்று முதல் ஐந்து பத்திகள் நீளம். ஒவ்வொரு பத்தியும் உங்கள் ஆய்வறிக்கையை ஆதரிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு தீம் அல்லது சிக்கலை ஆராய்கிறது.

**முடிவு:** இது உங்கள் கட்டுரையின் இறுதிப் பத்தி. அதில், நீங்கள் உடலின் முக்கிய புள்ளிகளைச் சுருக்கி அவற்றை உங்கள் ஆய்வறிக்கையுடன் இணைப்பீர்கள். வற்புறுத்தும் கட்டுரைகள் பெரும்பாலும் பார்வையாளர்களுக்கு இறுதி வேண்டுகோளாக முடிவைப் பயன்படுத்துகின்றன.

வற்புறுத்தும் கட்டுரையை எப்படி எழுதுவது என்பதைக் கற்றுக்கொள்வது, வணிகம் முதல் சட்டம் வரை ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு வரையிலான துறைகளில் மக்கள் ஒவ்வொரு நாளும் பயன்படுத்தும் இன்றியமையாத திறமையாகும். ஆங்கில மாணவர்கள் எந்த திறன் மட்டத்திலும் ஒரு வற்புறுத்தும் கட்டுரையை எழுத ஆரம்பிக்கலாம். கீழே உள்ள 100 இப்போது பார்க்கவும்: சிறந்த தூண்டுதலான கட்டுரை தலைப்புகளுக்கான 12 யோசனைகள் தொடக்க தலைப்புகள்.

- குழந்தைகள் நல்ல மதிப்பெண்களுக்கு ஊதியம் பெற வேண்டும்.
- மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் குறைவாக இருக்க வேண்டும்.
- பனி நாட்கள் குடும்ப நேரத்திற்கு சிறந்தவை.
- எழுத்தாற்றல் முக்கியமானது.
- நீளமான முடியை விட குட்டையான கூந்தல் சிறந்தது.
- நாம் அனைவரும் நம் காய்கறிகளை சொந்தமாக வளர்க்க வேண்டும்.
- எங்களுக்கு இன்னும் விடுமுறை தேவை.
- வேற்றுகிரகவாசிகள் இருக்கலாம்.
- இசை வகுப்பை விட ஜிம் வகுப்பு முக்கியமானது.
- குழந்தைகள் வாக்களிக்க வேண்டும்.

- விளையாட்டு போன்ற கூடுதல் நடவடிக்கைகளுக்கு குழந்தைகள் பணம் பெற வேண்டும்.
- பள்ளி மாலையில் நடக்க வேண்டும்.
- நகர வாழ்க்கையை விட நாட்டு வாழ்க்கை சிறந்தது.
- கிராமப்புற வாழ்க்கையை விட நகர வாழ்க்கை சிறந்தது.
- நம்மால் உலகத்தை மாற்ற முடியும்.
- ஸ்கேட்போர்டு ஹெல்மெட் கட்டாயமாக இருக்க வேண்டும்.
- ஏழைகளுக்கு உணவு வழங்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு வேலைகளைச் செய்வதற்குக் கூலி கொடுக்க வேண்டும்.
- நாம் சந்திரனை நிரப்ப வேண்டும் .
- பூனைகளை விட நாய்கள் சிறந்த செல்லப்பிராணிகளை உருவாக்குகின்றன. இடைநிலை தலைப்புகள்
- வீடுகளில் குப்பை கொட்டுவதற்கு அரசு கட்டுப்பாடு விதிக்க வேண்டும்.
- அணு ஆயுதங்கள் வெளிநாட்டு தாக்குதலுக்கு எதிராக ஒரு பயனுள்ள தடுப்பு ஆகும்.
- பதின்வயதினர் பெற்றோர் வகுப்புகளை எடுக்க வேண்டும்.
- பள்ளிகளில் ஆசாரம் கற்பிக்க வேண்டும்.
- பள்ளி சீருடை சட்டங்கள் அரசியலமைப்பிற்கு முரணானது.
- அனைத்து மாணவர்களும் சீருடை அணிய வேண்டும்.
- அதிக பணம் ஒரு மோசமான விஷயம்.
- உயர்நிலைப் பள்ளிகள் கலை அல்லது அறிவியலில் சிறப்புப் பட்டங்களை வழங்க வேண்டும்.
- பத்திரிகை விளம்பரங்கள் இளம் பெண்களுக்கு ஆரோக்கியமற்றசமிக்ஞைகளை அனுப்புகின்றன.
- ரோபோகால்லிங் தடைசெய்யப்பட வேண்டும்.
- 12 வயது குழந்தை பராமரிப்பதற்கு மிகவும் சிறியது.
- குழந்தைகள் அதிகமாக படிக்க வேண்டும்.
- அனைத்து மாணவர்களும் வெளிநாட்டில் படிக்க அனுமதிக்க வேண்டும்.

- 65 வயதைக் கடந்த ஆண்டு ஓட்டுநர் சோதனைகள் கட்டாயமாக இருக்க வேண்டும்.
- வாகனம் ஓட்டும் போது செல்போன் பயன்படுத்தக்கூடாது.
- அனைத்து பள்ளிகளிலும் வன்கொடுமை விழிப்புணர்வு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். ➢ கொடுமைப்படுத்துபவர்களை பள்ளியிலிருந்து வெளியேற்ற வேண்டும்.
- கொடுமைப்படுத்துபவர்களின் பெற்றோர் அபராதம் செலுத்த வேண்டும்.
- பள்ளி ஆண்டு நீண்டதாக இருக்க வேண்டும்.
- பள்ளி நாட்கள் பின்னர் தொடங்க வேண்டும். ➢ பதின்வயதினர் தங்கள் உறக்க நேரத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- உயர்நிலைப் பள்ளிக்கு கட்டாய நுழைவுத் தேர்வு இருக்க வேண்டும்.
- பொதுப் போக்குவரத்து தனியார் மயமாக்கப்பட வேண்டும்.
- செல்லப்பிராணிகளை பள்ளியில் அனுமதிக்க வேண்டும்.
- வாக்களிக்கும் வயதை 16 ஆக குறைக்க வேண்டும். ➢ அழகுப் போட்டிகள் உடல் தோற்றத்திற்கு மோசமானவை. ➢ ஒவ்வொரு அமெரிக்கரும் ஸ்பானிஷ் பேச கற்றுக்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு புலம்பெயர்ந்தவரும் ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ள வேண்டும்.
- வீடியோ கேம்கள் கல்வியாக இருக்கலாம்.
- கல்லூரி விளையாட்டு வீரர்களின் சேவைக்கு ஊதியம் வழங்க வேண்டும்.
- எங்களுக்கு ஒரு இராணுவ வரைவு தேவை . ➢ தொழில்முறை விளையாட்டுகள் சியர்லீடர்களை அகற்ற வேண்டும்.
- பதின்வயதினர் 16 வயதிற்குப் பதிலாக 14 வயதில் வாகனம் ஓட்டத் தொடங்க வேண்டும்.
- ஆண்டு முழுவதும் பள்ளி ஒரு மோசமான யோசனை.
- உயர்நிலைப் பள்ளி வளாகங்களில் போலீஸ் அதிகாரிகள் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

- சட்டப்படி மது அருந்தும் வயதை 19 ஆக குறைக்க வேண்டும்.
- 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பேஸ்புக் பக்கங்கள் இருக்கக்கூடாது.
- தரப்படுத்தப்பட்ட சோதனைகள் அகற்றப்பட வேண்டும்.
- ஆசிரியர்களுக்கு அதிக ஊதியம் வழங்க வேண்டும்.
- உலக நாணயம் ஒன்று இருக்க வேண்டும்.

**துணுக்குகள்**

இதழியலில் துணுக்குகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன என்பதை அறிகின்றோம். துணுக்கு என்பதன் பொருள் விளக்கத்தை இனிக் காணலாம்.

**துணுக்கு - விளக்கம்**

சிறிய செய்தி என்ற பொருளில்தான் துணுக்கு என்ற சொல் வந்தது. அதாவது நறுக்குத் தெறித்தாற்போல் சிறியதாகச் சொல்லுவதாகும். இதற்குத் துக்கடா, நறுக், டிப்ஸ், கடி என்ற மற்ற பெயர்களும் உண்டு. துணுக்குகள் இதழியலில் முக்கியப் பங்கு பெறுகின்றன. நடந்து முடிந்த, நடக்கின்ற, நடக்கப் போகின்ற தீவிரச் செய்திகளை மட்டுமே படித்துக் கொண்டிருப்பதில் மனிதர்களுக்கு அலுப்பும் சலிப்பும் வந்துவிடும். அதனால் இதழ்களில், இதழ்களை விரிய வைத்துச் சிரிக்க வைக்கும் பகுதிகளும் தேவை. ‘வாய் விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்’ என்பர்.

‘இடுக்கண் வருங்கால் நகுக’ என்கிறார் வள்ளுவர். எத்தகைய சிந்தனைக்குரிய கருத்தையும் நகைச்சுவையுடன் கூறலாம். அதுமட்டுமன்றிப் பெரிய பெரிய செய்தியாக வாசிப்பதைவிடச் சின்னச் சின்னச் செய்திகள், கருத்துகள், குறிப்புகள் இவற்றைப் படிப்பதில் வாசகர்கள் ஆர்வமாக இருப்பார்கள். அதனால் சிறிய செய்தி என்ற பொருளில்தான் ‘துணுக்கு’ என்ற பெயர் வந்தது. ‘துக்கடா’ என்று கூட முன்பு ஆனந்த விகடன் போன்ற இதழ்களில் சின்னச் சின்னச் செய்திகள் கட்டம் கட்டி வருவதுண்டு. மக்கள் மனத்தில் செய்தித்தாள் படிக்கும் ஆர்வத்தை இவை வளர்க்கின்றன. அத்துடன் நிறையச் செய்திகளை அறிந்து கொள்ளவும் இவை பயன்படுகின்றன.

**கதைத் துணுக்குகள்**

துணுக்குகளில் சின்னச் சின்னக் கதை சார்ந்த துணுக்குகள், தொடர்கதை சார்ந்த துணுக்குகள் ஆகியன வருகின்றன. சிறுவர் இதழ்களில், சிறுவர் மலரில் இவை மிகுதி.

**படத்துணுக்குகள்**

1894இல் 'நியூயார்க் வேல்டு' என்ற இதழில் 'மஞ்சள் பையன்' (Yellow முனை) என்ற பெயரில் வெளிவந்த துணுக்குப் பகுதி உலகப் புகழ்பெற்றதாகக் கூறுவர். பிற்காலத்தில்இப்பகுதியே 'மிக்கி மௌஸ்','டோனால்டு டக்' போன்ற தலைப்புகளில் புகழ் பெற்றதாகத் தெரிகிறது.

தமிழில் விக்கிரமாதித்தன் கதை, சிந்துபாத், அம்புலிமாமா கதைகள், சிண்டு பிண்டு- இதுபோன்ற பல, படங்களுடன் துணுக்குகள் போல் கதை வடிவில் வருகின்றன. பல காலங்கள் தொடர்ந்து இவை வருவதும் உண்டு. இவை குழந்தை இலக்கியங்களாகக் கருதப்படுவதற்கு ஏற்றவை எனலாம்.

**துணுக்குகளில் படங்கள்**

துணுக்குகளின் வெற்றிக்கு அடிப்படையாக அமைவன அவற்றில் போடப்படும் படங்கள் எனலாம். துணுக்குகளில் உள்ள கருத்துக்கும், நகைச்சுவைக்கும் ஏற்றாற்போல் படங்கள் வரையப்படுகின்றன. சீரான ஓவியமாக இல்லாமல், பார்த்தவுடனேயே சிரிப்பு வரவழைக்கும் கோணல்களுடனும், பல கோணங்களுடனும் படங்கள் அமையும். 'ஆனந்த விகடன்' இத்தகைய நகைச்சுவைப் படங்களாலேயே வெற்றி பெற்றது எனலாம்.

படங்கள், மக்கள் விரைவாகக் கருத்துகளைப் புரிந்து கொள்ளவும், சிரித்து மகிழவும் துணைபுரிகின்றன. படம் வரையும் ஆற்றல் மிக்க கலைஞர்கள் பல்வேறு வாய்ப்பினைப் பெறுகின்றனர். இதழ்களில் படங்கள் வரைவதற்கென்றே பணியமர்த்தப்பட்டவர்களும் உண்டு. அத்துடன் புதிது புதிதாக வாய்ப்புப் பெறுகின்றவர்களும் உள்ளனர்.

**துணுக்குத் தோரணம்**

தோரணம் என்றால் தொடர்தல் என்று பொருள். தொங்குதல் என்ற பொருளும் உண்டு. துணுக்குகளைத் தொடர்ச்சியாக, நான்கு அல்லது ஐந்து சேர்ந்தாற்போல் தொடுத்து வெளியிட்டால் அதனைத் துணுக்குத் தோரணம் என்பர். இதழ்களில் ஒரே பக்கத்தில் இங்ஙனம் வெளியிடுவதால் இதழ்களில் இடம் மிச்சப்படுகிறது.

அத்துடன் ஒரே நேரத்தில் நிறையச் செய்திகளைப் படிப்பவர்கள் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. தோரணத்தில் இடம் பெறும் துணுக்குகளிடையே கருத்துத் தொடர்பு இருக்கலாம், இல்லாமலும் போகலாம். ஆனால் ஒவ்வொரு துணுக்கும் ஒரு புதிய செய்தியாக மக்களைப் போய்ச் சேருவதாக இருக்க வேண்டும்.

**நகைச்சுவைகள்**

சிரிப்பும் மகிழ்ச்சியும் கூடிய உணர்வை தூண்டும் கலைவடிவங்களை நகைச்சுவை (comedy கிரேக்கம் - பொருள்: கிராமிய கேளிக்கை) எனலாம். நகைச்சுவை மன இறுக்கம் மன உளைச்சல் போன்றவற்றிலிருந்து மீண்டு ஆரோக்கியமான உடல் மன நிலையைப் பேண உதவும். நவரசங்களில் ஒன்றான நகைச்சுவை, ஒருவராலோ அல்லது குழுவினராலோ மேற்கொள்ளப்படும் சொல், செயல், காட்சி, நினைவூட்டல் மூலம் நகைச்சுவை உணர்வைத்தூண்டி மகிழ்ச்சியைப் பெருக்குகிறது. நகைச்சுவை ஆற்றலை குழந்தைகள் பெற்றொரிடமிருந்து பிறந்த 16 மாதங்களிலேயே கற்றுக் கொள்கின்றனர்.

**தமிழர் நகைச்சுவை சிறப்பு**

"இடுக்கண் வருங்கால் நகுக" (குறள் 621), எனும் குறள் துன்பங்களைக் களையும் மருந்தாக நகைச்சுவை உணர்வு மேலோங்கியிருத்தலை உணர்த்தும். மற்றெம் மொழிகட்கு மில்லாத சொல்லாடல் நகைச்சுவை தமிழுக்கே உரிய சிறப்பாகும்.

**தமிழ் இலக்கியத்தில் நகைச்சுவை**

**வஞ்சப்புகழ்ச்சி**

முதன்மைக் கட்டுரை: வஞ்சப்புகழ்ச்சி அணி போற்றுவார் போல் தூற்றல் வஞ்சப் புகழ்ச்சியாகும். தமிழரின் சொல்லாடல் சான்றாக, ஔவையார் தொண்டைமானின் ஆயுதக்கிடங்கிற்கு போய்,

"அதியமானிடம் எல்லாம் முனை மழுங்கிய கத்தி தான் இருக்கிறது நீ எத்தனை பளபளப்பாய் வைத்திருக்கிறாய்" எனக் கூறி, அதியமான் அடிக்கடி போரில் ஈடுபடுபவன், தொண்டைமான் போருக்குப் போவதில்லை என்ற உண்மையை வஞ்சப் புகழ்ச்சியில் உணர்த்தினார்.

**புரட்சிக் கவிஞரின் இருண்ட வீடு**

சமுதாய வாழ்வியல் சீர்திருத்தங்களை, எளிய முறையில் நகைச்சுவை உணர்வுடன் கையாளப்பட்ட கவிதை நூல் இருண்ட வீடு, சான்றாக,

"பிட்டுக் காரி தட்டினாள் கதவையே
திட்டென்று கதவைத் திறந்தான் பெரியவன்
பிட்டையும் வடையையும் தட்டில் வாங்கினான்
பெட்டி மீதில் இட்டுட் கார்ந்தான்
ஆவலாய் அவற்றை அருந்தத் தொடங்கினான்

நாவில் இடுகையில், நடுவயிறு வலித்தது
வெளிக்குப் போக வேண்டுமென் றுணர்ந்தான்
வடையின் சுவையோ விடேன்விடேன் என்றது
கொல்லை நோக்கிச் செல்லவும் துடித்தான்.
மெல்லும் வடையை விழுங்கவும் துடித்தான்
வில்லம்பு போல மிக விரை வாக
நடுவிற் கிடந்த நாயை மிதித்துப்
படபட வென்று பானையைத் தள்ளிக்
கன்றின் கயிற்றால் கால்தடுக் குற்று
நின்ற பசுவின் நெற்றியில் மோதி
இரண்டு பற்கள் எங்கேயோ போட்டுப்
புரண்டெழுந் தோடிப் போனான் கொல்லைக்கு!" ஜ2ஸ- பாவேந்தர் பாரதிதாசன்

## கவிதையில் நகைச்சுவை

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, ஒரு சமயம் சிரங்குகள் தொல்லையால் வேதனையுற்றார். பல மருந்துகள் போட்டும் சிரங்குகள் ஆறாமல் இருந்தன. அந்த வேதனையைத் தாங்க முடியாமல் அவதிப்படும் சமயத்தில், சில நகைச்சுவைப் பாடல்களைப் பாடினார். அப்படி அவர் பாடிய நகைச்சுவைப் பாடல்களில் ஒன்று:

முத்துப் பவழம் முழுவயிரம் மாணிக்கம்
பத்தியொளி வீச பதக்கமெல்லாம் - சித்தன்
சிரங்கப்ப ராயன் சிறியேன் எனக்குத்
தரங்கண்டு தந்த தனம்.

## சொற்பொழிவுகளில் நகைச்சுவை

சொற்பொழிவுகளில் சில சொற்பொழிவாளர்கள் நகைச்சுவையான செய்திகளைச் சொல்வதுண்டு. நகைச்சுவை சொற்பொழிவாளர்களில் திருமுருக கிருபானந்த வாரியார் முக்கியமானவர் ஆவார். அவருடைய சொற்பொழிவுகள் ஆன்மீகச் சொற்பொழிவுகளாக இருப்பினும் அவற்றையும் நகைச்சுவையாகச் சொல்லும் திறன் அவரிடம் அதிகமாக இருந்தது.

## சிலேடைச் சொற்களில் நகைச்சுவை

சிலேடைச் சொற்களில் நகைச்சுவையாகப் பேசுவது ஒரு தனித்திறன் ஆகும். சொற்பொழிவாளர் கி. வா. ஜகன்னாதன் சிலேடையாகப் பேசுவதில் மிகவும்

வல்லவர் ஆவார். இவருடைய சிலேடைப் பேச்சுக்களில் அதிகமாக நகைச்சுவை கலந்திருக்கும்.

**நகைச்சுவை வடிவங்களும் உத்திகளும்**

**துணுக்குகள்**

துணுக்குகள் தமிழ் இதழ்களில் பிரபலமானவை. பொதுவாக இரண்டு பேருக்கிடையே இடம் பெறும் சிறு உரையாடலாக, நையாண்டித்தனமான ஓவியத்துடன் இருக்கும்.

தந்தை: "இதுவரை எத்தனை இலையான் அடித்தாய்"? மகள்: "மூன்று அப்பா. இரண்டு ஆண் ரூ ஒரு பெண்."

தந்தை: (திகைப்புடன்) "ஆண், பெண் என்று எப்படிக் கண்டு பிடித்தாய்"? மகள்: "பியர் போத்தலின் மேல் இரண்டு இருந்தன. ரெலிபோன் மேல் ஒன்று இருந்தது" கடி

**எ.கா**

அமைச்சர்: இதென்ன அரசே போரே நிகழாத போது தங்களுக்கு விழுப்புண்ணா?

அரசர்: இல்லை அமைச்சரே! அரியாசனத்திலே தடுக்கிக் கீழே விழுந்ததால் ஏற்பட்ட புண் ... அதனால் "விழுப்புண்" என்றேன். (நன்றி ஆனந்த விகடன், 7-3-82).

வானொலியில் தொலைபேசி வழி நேயர் விருப்பத்தில் ஒரு உரையாடல்..... "ஹலோ வணக்கம்!" "வணக்கம்! சொல்லுங்க..." "வணக்கம்தான் சொல்லிட்டேனே எத்தனை தடவை சொல்றது?" "அதில்லைங்க" "எது இல்லை?" "சரி நீங்க எங்க இருந்து பேசறீங்க?" "போன்ல இருந்துதான் பேசறேன்" "சரி என்ன பாட்டு வேணும்?" "சினிமா பாட்டுதான்" "சரி எந்த படத்துல இருந்து?" "சினிமா படத்துல இருந்துதான்" "அய்யோ!" என்று தலையில் அடித்துக்கொண்ட அந்த நிகழ்ச்சித் தொகுப்பாளர் அன்றோடு அந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டார்.ஜ4ஸ

நையாண்டி பரிகாசம்

வன்மையாக நகையுணர்வைத் தூண்டல்,

**எ.கா.**

இப்புத்தகத்தை படிக்காதவர்கள் பாராட்டுகிறார்கள்!

இப்புத்தகம் அபாரம் போங்க!

"எப்பவும் 200 மில்லி போட்ட மாதிரி ஆடிக்கொண்டே இருந்த என் வீட்டு மேஜையின் காலின்

கீழ் புத்தகத்தை

வைத்தேன் சொன்னால் நம்பமாட்டீர்கள் மேஜை ஆடுவது நின்று விட்டது முப்பது வருடமாக
ஆ(ட்)டிக் கொண்டிருந்த
பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட்டது.
இன்னும் இது மாதிரி பல உபயோகமான புத்தகங்களை எழுதுங்கள்.” -- ராமன், தெனாலி
புத்தி ஜீவிதம் - ஜோர்ஜ் இ. குர்ஷ்சோவ்

இவர்கள் ஏன் தோண்டுகின்றார்கள் என்பது பற்றி இவர்களைத் தவிர வேறு யாருக்கும் அக்ககறை இருக்காது.
அது பற்றிய கவலை கிஞ்சித்தேனும் இல்லாமல்...ஓலச்சுவடிகளையும் நாட்டார் பாடல்களையும் தோண்டும் போது
புராதன நெருஞ்சி முள் அகப்படும். (“சங்க காலத்தில் செருப்பு“), இன்னும் தோண்ட துருப்பிடித்த இரும்பு வளையம் கிட்டும். (“புறநானூற்றில் பரத்தையர் அணிகலங்கள்“), தோண்டிக் கொண்டே போக...தோண்டிய தோண்டலில் பூமியின்மறுபக்கத்தில் தென்கிழக்காசியாவில் வெளியே வந்தும் “சாவகத்தில் தொந்தமிழன் விழுமியங்கள்“.

- கிராமியக்கலையில் நகைச்சுவை
- வில்லுப்பாட்டு
- பாவைக் கூத்து
- கோமாளி கூத்து
- நகைச்சுவை விடுகதைகள்
- ஏனைய நகைச்சுவை வடிவங்கள்
- மிகைப்படுத்துதல்
- விகடம் - போலிக் குரல் (அ) நடித்தல்
- பரோடி - நையாண்டிப் போலி
- கோமாளித்தனம்
- கேலிக்கூத்து
- கடி, யோக்ஸ் சொல்லல்
- இரட்டை அர்த்தம்
- கேலிச்சித்திரம்
- அறுவை

- சீசன்
- அனுபவ நகைச்சுவை
- ஊடகங்களில் நகைச்சுவை
- நகைச்சுவைத் தமிழ் அலைவரிசைகள்
- காமெடித்திரை
- சிரிப்பொலி
- நகைச்சுவைத் தமிழ் இதழ்கள்
- சிரித்திரன்
- சுவைத்திரள்
- நகைச்சுவை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
- மீண்டும் மீண்டும் சிரிப்பு
- கலக்கப் போவது யாரு
- அசத்தப் போவது யாரு
- லொள்ளு சபா
- சொல்லுங்கண்ணே சொல்லுங்க
- டாடி எனக்கு ஒரு டவுட்டு
- குட்டிச் சுட்டீஸ்
- நகைச்சுவை தொலைக்காட்சி தொடர்கள்
- மௌலியின் பிளைட்-172
- மேல் மாடி காலி, டாப் டக்கர் - கோவை அனுராதா
- ரமணி ரமணி
- சின்ன பாப்பா பெரிய பாப்பா
- நகைச்சுவைத் தமிழ் எழுத்தாளர்கள்
- ஆர். மகாதேவன்
- கு. ஞானசம்பந்தன்
- தேனி. எஸ். மாரியப்பன்
- கிரிஜா மணாளன்
- நகைச்சுவை நாடக ஆசிரியர்கள்
- கிரேசி மோகன் - சாக்லேட் கிருஷ்ணா, மாது ௨2
- எஸ். வி. சேகர் - காதுல பூ
- ஒய். ஜீ. மகேந்திரன்
- காத்தாடி ராமமூர்த்தி

- நகைச்சுவைப் பேச்சாளர்கள்
- புளியங்குடி க.பழனிச்சாமி
- சாலமன் பாப்பையா
- திண்டுக்கல் ஐ .லியோனி
- தென்கச்சி கோ. சுவாமிநாதன்
- திரைப்படத்தில் நகைச்சுவை

**முதன்மைக் கட்டுரை**

**தமிழ்த் திரைப்படத்தில் நகைச்சுவை**

தமிழ் திரைப்படங்கள் தொடக்க காலத்திலிருந்தே ஒரு சுயமான, வளமான நகைச்சுவை பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குகின்றன. தமிழ்த் திரைத்துரையில் நகைச்சுவை தமிழ் மரபுகளை பெரும்பாலும் பிரதிபலித்திருக்கிறது.

**உலக நகைச்சுவை நடிகர்கள்**

- சார்லி சாப்ளின்
- ஜாக்கி ஜான்
- ரோவன் அட்கின்சன் - மிஸ்டர் பீன்

**உரையாடல்கள்**

உரையாடல் (conversation) என்பது ஒருவர் மற்றவருடன் கலந்து பேசிக் (உரை) கொள்வதைக் குறிக்கும். உரையாடலின் போது ஒருவருக்கொருவர் அளவளாவி, பேசி, கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். எழுத்து வழியாக செய்திப் பரிமாற்றம்நடந்தால், அதுவும் உரையாடல் என்றே வழங்கும். உரையாடல் என்பது குமுகாயத்தில் ஒரு ,ன்றியமையாத திறனாகக் கருதப் படுகின்றது. ஒரு மொழியைக் கற்கும் போது, அதில் உரையாடல் செய்வது எவ்வாறு என்பதையும் கற்றுக்கொள்ளல் வேண்டும்.

உரையாடல் பகுப்பாய்வு என்பது சமூகவியலில் ஒரு ஆராய்ச்சிப் பிரிவாகும். ,தில், மனிதர்கள் எவ்வாறு ஒருவருக்கொருவர் அளவளாவிக் கொள்கின்றனர், அந்த அளவளாவுதல் அமைப்பு, அமைப்பாண்மை ஆகியன எவ்வாறு உள்ளன என்பன பற்றி விரிவாக அலசப் படுகின்றது.

**வரையறை**

ஆசிரியர் மாணவி உரையாடல், சைமர் கல்லூரி உரையாடல் என்றால் என்ன என்று தெளிவான விளக்கங்கள் எதுவுமில்லை. உரையாடலில் குறைந்தது இரண்டு பேர் பேசிக் கொள்வார்கள் என்று மட்டும் கூறலாம ஆனால், எது உரையாடல் இல்லை என்று கூற முடியும். வணக்கம் சொல்லிக் கொள்வது, மேல் நிலையில்

உள்ளவர்கள் கீழ் நிலையில் உள்ளவர்களைப் பார்த்து இடும் கட்டளைகள் ஆகியன உரையாடல்கள் ஆகா. மிகக் குறுகிய தலைப்புகளைப் பற்றிப் பேசுவதும் உரையாடல் ஆகாது.

தார்ன்பரி என்பவர் உரையாடலைப் பற்றி, "உரையாடல் என்பது மனிதர்கள் செய்கின்ற ஒரு பேச்சுத் தொழில் (வினை). தங்களுக்குள் ஒரு உறவு முறையை ஏற்படுத்திக் கொள்ள இந்த வினையைச் செய்கின்றனர். இது முறை சாரா, செவ்வொழுங்கான வினை. உரையாடலின் போது, உரையாடுபவர்கள் எந்த சட்ட முறைகளையும் பயன் படுத்துவதில்லை. பேசுவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒப்பான வாய்ப்பு கிடைக்கிறது" என்று கூறுகிறார்.

உரையாடல் எந்த சட்ட முறைகளையும் பின் பற்றுவதில்லை என்று சொன்ன போதிலும், நடத்தை நெறி கருதி, அங்கங்கே உள்ள பண்பாட்டு முறைகளைப் பின் பற்றியே ஆக வேண்டி இருக்கும். உரையாடல் ஒரு கூட்டு முயற்சியாக இருப்பதால், அது தொடர்பான சட்ட முறைகள் இன்றியமையாதவையாக ஆகின்றன. இந்த சட்ட முறைகளை மீறும் போது, உரையாடல் தொடர முடியாமற் போகும். சட்ட முறைகளை மீறாமல் இருக்கும் வரை, உரையாடல் தொடர்ந்து நடக்க ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கலாம்.

ஒரு சில நேரங்களில், கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள, உரையாடலே உகமமான பரிமாற்றக் கருவியாகும். ஆனால், உரையாடலில் ஒரு சில சிக்கல்கள் இருக்கின்றன. எடுத்துக் காட்டாக, பேசுவது அனைத்தும் நினைவில் இருந்து மறைந்து கொண்டே போய்விடும் அவற்றை மீண்டும் நினைவில் கொண்டு வந்து பார்ப்பது கடினம். இது போன்ற தேவைகள் எதேனும் இருப்பின், எழுத்து வழி உரையாடல் செய்வது நல்லது. கருத்துப் பரிமாற்றம் விரைவாக நடக்க வேண்டுமாயின், பேச்சு வழி உரையாடல் செய்வது சரியாக இருக்கும்.

**வகைப்பாடு**

உரையாடலைப் பல வகைகளாகப் பிரிக்கலாம்.

**கதைத்தல்**

கதைத்தல் என்பது உரையாடலில் ஒரு பகுதி ஆகும். கதைத்தலின்போது, முரண்பாடுகள் ஏதேனும் தோன்றுமாயின், உடனே பேசப்படும் கருப்பொருள் மாறுகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு கதைத்தலில் கடவுள் நம்பிக்கை என்பது கருப்பொருளாக இருந்தால், ஒருவர் தான் கூறுவதைத்தான் மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுவது இல்லை. அப்படிச் செய்தால் அது கதைத்தல் ஆகாது.

**கதைத்தலின் கருப்பொருள்**

கருப்பொருளை வைத்துக் கதைத்தலைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

**தற்சார்பு கருப்பொருள்**

கதைத்தலில் ஒருவர் தம்முடைய சொந்த கருத்தைக் கருப்பொருளாக முன் வைப்பார். இதனால், அவருக்கு அந்தப் பொருளைப் பற்றிப் புரிதலும் தெளிவும் பிறக்க வாய்ப்பு இருக்கின்றது.

**மெய்ச்சார்பான உண்மைக் கருப்பொருள்**

இது போன்ற கருப்பொருட்கள் கதைத்தலில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வலிமை பெற்றது. மற்றவர்களைப் பற்றிய கருப்பொருள் இது மற்றவர்களைப் பற்றி (குறிப்பாக கதைத்தலில் பங்கு கொள்ள வர இயலாதவர்களைப் பற்றி) பேசுவதைக் குறிக்கும். அவர்களைப் பற்றிய குறை நிறைகளை அவர்கள் இல்லாது போது உரையாடுவது, வெட்டிப் பேச்சு (''கிசு கிசு'') போன்றவை ,தில் அடங்கும்.

**தன்னைப் பற்றிய கருப்பொருள்**

இதில் ஒருவர் தன்னுடைய நிறை குறைகளைக் கருப்பொருளாக வைத்துக் கதைத்தலைத் தொடங்குவார். மற்றவர்கள் கவனம் தன் மீது திரும்ப வேண்டும் என்ற உள்நோக்கத்தோடும், இதைச் செய்யலாம்.

கதைத்தல் பெரும்பாலும் ஒரே நேரத்தில் பல கருப்பொருட்களைக் கொண்டதாக இருக்கின்றது. அதனால், ஒரு கதைத்தல் எந்த பிரிவைச் சார்ந்ததென்று கூற முடியாது.

**உரையாடல்கள்**

பொதுவாகவே, பெண்கள் அதிகம் பேசுபவர்கள் என்ற எண்ணம் பலருக்கு இருக்கின்றது. ஆனால், மத்தாயசு என்பவரின் ஆய்வின் படி, உரையாடலில் (அமெரிக்காவில்) ஆண்களும் பெண்களும் ஒரே அளவான சொற்களையே பயன் படுத்துகின்றனர் என்று தெரிகின்றது. அதாவது, இரு பாலரிலும், ஒவ்வொருவரும் நாளென்றுக்கு சராசரி 16,000 சொற்கள் பயன் படுத்துகின்றனர்.

ஒரு உரையாடலாக இருந்தால், அதன் கருப் பொருளைத் தன் பக்கம் இழுக்க வேண்டியுள்ளது. அமெரிக்காவில், மற்றவர்கள் கவனத்தை ஈர்க்க, தான்-முதல் உரையாடல் என்பதை ஒரு கருவியாகப் பலர் பயன் படுத்துகின்றனர் என்பது தெர்பரின் கருத்து. இது நண்பர்கள் நடுவிலும், குடும்பங்களிலும் நடப்பதைக் காணலாம் என்கிறார் தெர்பர்.

**செயற்கை அறிவுத்திறன் உரையாடல்**

செயற்கை அறிவுத்திறன் என்பது கணிப்பொறிகளை, செயற்கை முறையில், மனிதர்களைப் போல எவ்வாறு அறிவுத் திறன் உள்ளவையாக ஆக்குவது என்பதைப் பற்றி ஆராயும் ஒரு பொறியியல் பிரிவு ஆகும். ஒரு கணிப்பொறி ஒரு மனிதருடன் மற்றொரு மனிதரைப் போலவே உரையாடும் திறன் ,ருக்குமானால், அந்தக் கணிப்பொறி மனிதனுக்கு ,ணையான அறிவு உள்ளதாகக் கருதப்படும். ,ங்கு, அறிவுத் திறனை அளப்பதற்கு உரையாடல் திறனே ஒரு அளவுகோலாக மொழியப் பட்டுள்ளது என்பது கவனிக்கத் தக்கது.

**தன்னோடு-தான் உரையாடல்**

ஒருவர் தன்னோடு உரையாடிக் கொள்வது ஒரு சில நேரங்களில் நன்மையைத் தரும். ,தனால், ஒருவர் தன் சிக்கல்களைத் தீர்க்கும் வழிகளைக் காண்பதுடன், தன்னைச் சூழ்ந்துள்ள துயரம் தரும் ''மயான'' அமைதியையும் கலைக்க முடியும் என்றும் கருதப்படுகின்றது.

**ஊடகங்களில் உரையாடல்**

உரையாடல்கள் ஊடகங்களில் மிகப் பேரளவில் ,ன்று நடை பெறுகின்றன. உரையாடல்களின் உட்கருத்துக்கள், உரையாடுவதற்கான நேரம், ஆகியன ஏற்கனவே குறிப்பிடப் பட்டு, பிறகு உரையாடல்கள் நிகழ்த்தப் படுகின்றன. புதிய தலை முறை, விஜய் டி.வி. ஆகிய தொலைக் காட்சி அலை வரிசைகள் பல உரையாடல்களை நடத்தி வருகின்றன.

**உரையாடலின் நன்மைகள்**

தன்னை மற்றவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு.
கருப்பொருளை நன்கு தெரிந்து கொள்ளல்.
கூடிய தன்னம்பிக்கை.
பணி செய்யும் அலுவலகத்தில் உரையாடலினால் வரும் பயன்.
தன்னைப் பற்றிய அக்கறை கொள்ளல்.
மற்றவர்களுடன் நல்ல உறவுமுறை

**இதழ்களுக்கு எழுதத் துண்டுதல்**

- நாளிதழ்கள்
- பருவ இதழ்கள்
- நாளிதழ்கள்

ஒவ்வொரு நாளும் செய்திகளுடன் வெளிவரும் செய்தித் தாள்கள் நாளிதழ்கள் என்று அழைக்கப் பெறுகின்றன. இவை நாள்தோறும் வெளியாகும் நேரத்தைக் கொண்டு இரு வகையாகப் பகுக்கப்படுகின்றன. அவை

- காலை நாளிதழ்
- மாலை நாளிதழ்
- காலை நாளிதழ்கள்

ஒவ்வொரு நாளும் காலை நேரத்தில் வெளியாகும் நாளிதழ்கள் காலை நாளிதழ்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை இரவில் அச்சிடப்பட்டு காலை நேரத்தில் விற்பனைக்கு வருகின்றன. இந்த நாளிதழ்களில் முதல் நாள் நடைபெற்ற பல செய்திகள் அதிகம் இடம் பிடிக்கின்றன.

**மாலை நாளிதழ்கள்**

ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் வெளியாகும் நாளிதழ்கள் மாலை நாளிதழ்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை பகலில் அச்சிடப்பட்டு மாலை நேரத்தில் விற்பனைக்கு வருகின்றன. இந்த நாளிதழ்களில் முதல் நாள் மதியத்திற்குப் பின் நடைபெற்ற பல செய்திகள், சில காலை நேரச் செய்திகள் போன்றவை இடம் பிடிக்கின்றன.

**பருவ இதழ்கள்**

குறிப்பிட்ட கால அளவைக் கொண்டு வெளியாவன பருவ இதழ்கள் எனப்படுகின்றன. வாரம், மாதமிருமுறை, மாதம், காலாண்டு, அரையாண்டு, ஆண்டு எனும் கால அளவைக் கொண்டு வெளியாகும் இதழ்கள் அனைத்தும் பருவ இதழ்களாகும். இவை வெளியாகும் கால அளவைப் பொறுத்து இவ்வாறு வகைப்படுத்தலாம், அவை

- வார இதழ்
- மாதமிருமுறை இதழ்
- மாத இதழ்
- காலாண்டு இதழ்
- அரையாண்டு இதழ்
- ஆண்டு இதழ்
- வார இதழ்கள்

ஒரு வாரத்திலுள்ள எல்லா நாள்களின் செய்திகளையும் கொண்டு ஒரு நாள் வெளிவருவது வார இதழ்கள் எனப்படுகின்றன. வார இதழ்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படும் இதழ் முக்கியத்துவம் பெறுகின்றது.

அவ்வாரத்தில் நடந்த நிகழ்வுகள், ஒவ்வொரு தரப்பினருக்குமான சிறப்புப் பகுதிகள் (பெண்கள், சிறுவர்கள்) ஒவ்வொரு துறைக்குமான சிறப்புப் பகுதிகள் (அரசியல், அறிவியல், தொழினுட்பம்) எனப் பல்வேறு அம்சங்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படும் இதழில் உண்டு.

**உள்ளடக்கப் பகுப்பு**

இதழ்களில் இடம் பெற்றிருக்கும் செய்திகள், படைப்புகள் அடிப்படையில இதழ்களைப் பல வகைகளில் பிரிக்கலாம்.

- இலக்கிய இதழ்
- அரசியல் இதழ்
- கவிதை இதழ்
- சிறுவர் இதழ்
- அறிவியல் இதழ்
- மருத்துவ இதழ்
- கல்வி இதழ்
- பெண்கள் இதழ்
- தொழில் இதழ்
- வணிக இதழ்
- விளையாட்டு இதழ்
- செய்தி இதழ்
- சோதிட இதழ்
- சமய இதழ்
- திரைப்பட இதழ்
- புலனாய்வு இதழ்
- புதின இதழ்
- பொழுதுபோக்கு இதழ்
- இசை இதழ்
- தலித் இதழ்கள்

**தன்மைப் பகுப்பு**

இதழ்கள் யாரை வாசகர்களாகக் கொண்டு வெளியிடப்படுகின்றன என்ற தன்மையின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

தரமான இதழ்கள் - பொருள் நிறைந்த தகவல்களைக் கொண்டு புலமைமிக்கவர்கள் படிக்கக்கூடிய வகையில் உள்ள இதழ்கள்.

மக்கள் இதழ்கள் - அனைத்து வகையான மக்களும் எளிதாகப் படிக்கக் கூடியதாக உள்ள அனைத்து இதழ்கள்.

நச்சு இதழ்கள் - படிக்கின்றவர்களின் மனத்தைப் பாதிக்கக் கூடிய செய்தி, கதை, கட்டுரைகளைக் கொண்ட இதழ்கள்.

இவை “மஞ்சள் இதழ்கள்” என்றும் சொல்லப்படுகின்றன.

**தொகுப்புரை:**

- கட்டுரையின் இலக்கணம், உரைநடை மற்றும் கட்டுரைக்கான வேறுபாடுகள், கட்டுரையின் தனித்தன்மைகள் கட்டுரை எழுதும்போது பின்பற்ற வேண்டிய கடமைகள் விளக்கப்பட்டன.
- கட்டுரையில் பின்பற்றப்படவேண்டிய மொழிநடை, கட்டுரை அமைப்பு, இலக்கிய நயம், சொல் நயம், கற்பனை நயம், நடைநலம், நோக்கம் அனைத்தும் அறியப்பட்டன.
- திறனாய்வு என்பதன் விளக்கம், திறனாய்வு நூல்கள், திறனாய்வு வகைகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளது.
- துணுக்குகள் - விளக்கம், கதைத் துணுக்குகள், படத் துணுக்குகள், துணுக்குகளில் படங்கள் - தோரணம், நகைச்சுவைகள் - அறியப்பட்டன.
- மேடைப் பேச்சுகள், நகைச்சுவையுடன் பேசுதல், உரையாடல் விளக்கம், நன்மைகள், இதழ்கள், இதழ்களின் வகைகள் அனைத்தும் விளக்கப்பட்டன.

**தன்மதிப்பீட்டு வினாக்கள்:**

1. இலக்கியக் கட்டுரைக்கு தேவைப்படுவது
   அ) வரலாறு ஆ) நகைச்சுவை இ) சொல்நயம் ஈ) விளக்கம்
   விடை: இ
2. இலக்கியத் திறன் நூலின் ஆசிரியர் யார்?
   அ) மு.வ ஆ) கு.ப.ரா. இ) க.கைலாசபதி ஈ) மறைமலை
   விடை: அ
3. இலக்கணக் கட்டுரை எத்தனை வகைப்படும்?
   அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4 விடை: ஆ
4. கதைத்தல் என்பது ---------------------- ஒரு பகுதி ஆகும்.
   அ) நகைச்சுவை ஆ) துணுக்கு
   இ) விளம்பரவியல் ஈ) நாடகவியல் விடை: அ
5. Journalism என்பது -------------
   அ) இதழியல் ஆ) ஊடகவியல்
   இ) கரந்துவரல் எழினி ஈ) கொடிமுகஎழினி விடை: ஆ

**குறுவினாக்கள்**

1. இலக்கியக் கட்டுரை – வரையறு.
2. திறனாய்வுக் கட்டுரை என்றால் என்ன?.
3. இலக்கணக் கட்டுரை – வரையறு.
4. துணுக்குகள் என்றால் என்ன?
5. ஏதேனும் 5 பருவ இதழ்களைக் கூறுக.

**நெடுவினாக்கள்**

1. திறனாய்வு வகைகள் யாவை?
2. கட்டுரையில் தலைப்புகள் அமைக்கும் பாங்கினை விவரி.
3. மேடைப் பேச்சில் நகைச்சுவை விளக்குக.
4. துணுக்குகளின் பரிணாமங்களை விவரி.
5. இதழ்களின் தோற்றம் வளர்ச்சியினை விவரிக்கவும்.

**பார்வை நூல்கள்**

1)டாக்டர்.பொற்கோ - தமிழில் நாமும் தவறில்லாமல் எழுதலாம்,பூம்பொழில் வெளியீடு,சென்னை - 20

2)அகிலன் - படைப்புக்கலை,தமிழ்ப்புத்தகாலயம்,சென்னை

**இணையதள முகவரி**

1)https://www.tamilvu.org/courses/degree/p204/p2043/html/p20435l1.htm

2)https://www.tamilvu.org/ta/courses-degree-p204-p2041-html-p2041115-30598